கலைஞானம்

# சினிமா சீக்ரெட்

பாகம் 5



# சினிமா சீக்ரெட் பாகம் - 5

*கலைஞானம்*

# சமர்ப்பணம்

 

எனக்கு ஏழு வயதாகியிருந்தபோது, நான் கட்டபொம்மன் நாடகம் பார்த்துவிட்டு வந்து 'என்னடா... என்னடா... கட்டபொம்மா... எந்நேரம் பார்த்தாலும் கத்திச்சண்டை...' என்ற பாடலை ஒரு குச்சியைக் கையில் எடுத்து சுழட்டியவாறு பாடிக் கொண்டே ஒரு நாற்காலியிலிருந்து மற்றொரு நாற்காலிக்கு குதிக்க... கால் தடுமாறி நாற்காலியும் சாய்ந்து என் கீழ் உதட்டில் வெட்டிவிட்டது. உடனே என் தாய் பேச்சியம்மாள், அடுப்புக்கரித்துண்டை நொறுக்கி உப்புக்கல்லையும் நசுக்கி உதட்டுக்கு கட்டுப் போட்டார். அப்போது என் தந்தை முத்தையா

வந்து விபரம் கேட்க, நடந்ததை என் தாய் சொல்ல... 'இவன் வருங்காலத்தில் ஒரு புலவனாக வருவான்' என்றார். என் தாயும் 'அப்படியா' என்று மகிழ்ச்சியில் கட்டி அணைத்து முத்தமிட்டார்.
இன்று அவர்கள் லட்சியக்கனவு நிறைவேறியது. சினிமா உலகில் நானும் ஒரு கலைஞன் ஆனேன் என்பதை நினைத்து இந்நூலை என் பெற்றோர்களுக்கு அன்பு காணிக்கையாக்குகிறேன்.

-கலைஞானம்

# முன்னுரை

என் சினிமா வாழ்க்கையின் முக்கியமான திருப்புமுனை உருவானது நான் சின்னப்ப தேவரிடம் இணைந்த பிறகுதான்.

'சினிமா சீக்ரெட்' தொடரில் ஆரம்பத்திலிருந்தே நான் பலப் பல அரிய விஷயங்களை எழுதி வந்தாலும், தேவரைப் பற்றி எழுத ஆரம்பித்த பிறகு ரொம்பவே சூடு பிடித்தது.

என் பெருமதிப்பிற்குரிய தேவர் குறித்த இந்த தகவல்களுடன் இத்தொடரை நிறைவு செய்கிறேன்.

தொடரை நான் எழுத ஆரம்பித்த நாள் முதல் இன்றுவரை அரிய ஆலோசனைகளைக் கூறி ஆதரவளித்து அரவணைத்து வரும் அன்புச் சகோதரர் நடிகர் சிவக்குமார் அவர்களுக்கு என் முதற்கண் நன்றி.

விடாமல் தொடர்ந்து 'சினிமா சீக்ரெட்' தொடரை வாசித்து, ஆதரவும் அன்பும் காட்டிவரும்.. கோவை இய.கோ.கோ.சுப்ரமணியம், கோவை வேணுகோபால், கோவை இராம.வெங்கடேஷ், வீரகேரளம் ஈஸ்வர், மேட்டுப்பாளையம் மனோகர், கோவை இராமமூர்த்தி, 'சக்தி மசாலா' சகோதரி சாந்தி துரைசாமி, சகோதரி இளம்பிறை மணிமாறன், தம்பி 'கலைப்புலி' எஸ்.தாணு, நடிகர் ராஜ்கிரண், திருச்சி சிவா எம்.பி., சகோதரி திலகவதி ஐ.பி.எஸ்., கோவை 'முருகனின் அடிமை' எஸ்.மனோகரன், தலைமையாசிரியர் (ஓய்வு) மாங்குடி ராஜகுரு, நங்கநல்லூர் கோபால்ராவ், கும்பகோணம் கல்யாணசுந்தரம், பட்டுக்கோட்டை சௌந்தர், அரக்கோணம் விஸ்வநாதன், விழுப்புரம் அண்ணாதுரை, திண்டுக்கல் கணேசன், கூடன்குளம் ஆசிரியர் ஹரிகோபாலகிருஷ்ணன், அரசியல் கட்டுரையாளர் தமிழ்தாசன், அம்பாசமுத்திரம் மோகன், மதுரை பத்மநாபன், மதுரை பேராசிரியர் ஜோதிராமகிருஷ்ணா, அமெரிக்கா-நியூயார்க் ஷண்முகம், துபாய் இராமலிங்கம், ஜுபிடர் பிக்ஸர்ஸ் எம்.எஸ்.காசி, ஜுபிடர் பிக்ஸர்ஸ் ஹபிபுல்லா, பரங்கிமலை பிரபு, ஓசூர் தங்கதுரை, அரும்பாக்கம் துரை,

தேனி தமிழாசிரியர் சீனிவாசன், கமுதி தமிழாசிரியர் முகமது மீரா, லண்டன் முகமது, தேனி டாக்டர் செல்லமுத்து, நெல்லை டாக்டர் தமயந்தி, தாம்பரம் திருமதி ராம்லட்சுமி, பழனி சித்தநாதன் விபூதி பழனிவேல், பழனி நிருபர் ராகவன், மதுரை தொழிலதிபர் பி.ஆர்.பி., ஈரோடு மணி அய்யர், பாரீஸ்-பிலாகிஷ் தீவு ஸ்ரீதர் மற்றும் என்மீது அளவில்லா அன்புகாட்டி வரும் வாசகப் பெருமக்கள் அனைவருக்கும் தலைவணங்கி என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'சினிமா சீக்ரெட்' தொடரின் நூல் வடிவத்திற்கு அணிந்துரை வழங்கி, என் மனம் கனிந்துருக வைத்த கண்ணியமிக்கவர்கள்....

நடிகர் சிவகுமார், டைரக்டர் பாரதிராஜா, டைரக்டர் கே.பாக்யராஜ், டைரக்டர் ஆர்.பார்த்திபன், எழுத்தாளர் மேலாண்மை பொன்னுசாமி, எழுத்தாளர் பட்டுக்கோட்டை பிரபாகர், இயக்குநர் திலகம் கே.எஸ்.கோபாலகிருஷ்ணன்... யாவருக்கும் எனது அகலா அன்பின் பணிவைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த 21 மாதங்களாக 'நக்கீரன்' வாசகர்களுடன் பயணித்த எனது அனுபவம் அலாதியானது. எனது கலையுலக அனுபவங்களை தொடர் மூலம் பகிர்ந்துகொள்ள வாய்ப்பளித்த நக்கீரன் ஆசிரியர் தம்பி நக்கீரன்கோபால் அவர்களுக்கும், நான் தெரிவித்த விஷயங்களை அழகுற தொகுத்து வழங்கிய தம்பி இரா.த.சக்திவேலுக்கும் மற்றும் நக்கீரன் ஆசிரியர் குழுவினருக்கும், 'நக்கீரன்' புகைப்படக் கலைஞர் தம்பி எஸ்.பி.சுந்தருக்கும், தொடரின் சம்பவங்களுக் கேற்ற பழைய புகைப்படங்களை வழங்கிய தம்பி ஞானம் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சூழ்நிலையும், சந்தர்ப்பமும் அமைந்தால் மீண்டும் 'நக்கீரன்' மூலம் வாசகப் பெருமக்களை சந்திக்க விரும்புகிறேன்.

நன்றி!

-கலைஞானம்

சென்னை.

கைபேசி எண் : 96770 61186

# பதிப்புரை

## *சரித்திரம் பேசும்!*

**கா**ல எந்திரத்தில் ஏற்றி பின்னோக்கி அழைத்துச் சென்று, சம்பந்தப்பட்டவர் களை, அவர்கள் சம்பந்தப்பட்ட சம்பவங்களை நேரில் பார்த்த பிரம்மையை, உண்டாக்கியது அய்யா கலைஞானத்தின் 'சினிமா சீக்ரெட்' தொடர். அதிலும் சினிமா சம்பவங்கள் என்றால் மேலும் மேலும் கண்கள் அகலவிரியும். அந்த சினிமா சங்கதிகளை, அதன் சீக்ரெட்டுகளை தொடராக எழுத வேண்டும் என்ற யோசனை நக்கீரன் ஆசிரியர் குழுவில் ஓடிய போது, எங்களின் யோசனைக்கு யோசனை சொன்னவர் அண்ணன் கலைப்புலி எஸ்.தாணு. ஆம் அவர் தான், 'அந்தக் காலத்திலிருந்து இந்தக் கால சினிமா சங்கதிகள் வரை எழுதணும்னா அதுக்கு சரியான ஆளு அய்யா கலைஞானம் தான்' என்ற அருமையான யோசனை சொன்னார் தாணு. அண்ணன் தாணுவின் சிபாரிசு தப்பாது என்பதை நிரூபித்தது தான் அய்யா கலைஞானம் நக்கீரனில் எழுதிய சினிமா சீக்ரெட்.

அறிந்த முகங்களைப் பற்றி அறியாத தகவல்களுடன் 168 இதழ்களில் மெகா தொடராக எழுதி நக்கீரன் வாசகர்களை பரவசத்தில் ஆழ்த்திவிட்டார் அய்யா கலைஞானம். நெருப்பாற்றில் நீந்தி நக்கீரன் சந்தித்த சோதனைகள், பாசிஸ ஜெயலலிதாவின் அடக்கு முறை ஆட்சியில் நக்கீரன் மீது போடப்பட்ட அக்கிரம வழக்குகள், தம்பி சிவசுப்பிரமணியன் மீது போடப்பட்ட பொய் வழக்குகள், உச்சகட்டத் தாண்டவமாக என் மீது போடப்பட்ட பொடா வழக்கு, நக்கீரன் மீது ஏவப்பட்ட அரச பயங்கரவாதம் இதைப் பற்றியெல்லாம் நக்கீரனில் 236 இதழ்களில் 'யுத்தம்' தொடராக எழுதினேன். ரத்தமும் சதையுமான அந்த சரித்திர சாதனைத் தொடருக்குப் பின் அதிக இதழ்களில் இடம் பிடித்தது 'சினிமா சீக்ரெட்' தொடர் தான்.

சினிமா பற்றிய, சினிமாக் கலைஞர்கள் பற்றிய தொடராக இருந்தாலும் கொஞ்சமும் ஒப்பனை இல்லாத உண்மைகளை சொல்லியிருந்தார் அய்யா கலைஞானம். அவர் சொல்லிய உண்மைகளுக்கு, அலங்காரமில்லாத, ஆர்ப்பாட்டமில்லாத எளிய வார்த்தைப் பூச்சு கொடுத்து அழகுற மின்ன வைத்தவர் தம்பி இரா.த.சக்திவேல். நக்கீரன் சினிமாப் பகுதியில் வரும் எழுத்துக்கள் அனைத்தும் முதன்மைத் துணையாசிரியரான தம்பி சக்தி வேலுடையவை. சினிக்கூத்து வார இதழ், சினிக்கூத்து மாத மிருமுறை இதழ் ஆகியவற்றின் அட்டை டூ அட்டை அனைத்தும் அவரது உழைப்பு. அயராத உழைப்பு, வசீகரிக்கும் எழுத்து நடைதான் தம்பி சக்திவேலின் சிறப்பு. கிட்டத்தட்ட ஒன்றரை ஆண்டுகளுக்கும் மேலாக அய்யா கலைஞானத்துடனேயே பயணித்து, அவரின் எண்ணங்களை உள்வாங்கி, நக்கீரன் வாசகர்களுக்கு, இன்னும் சொல்லப் போனால் சினிமா பிரபலங்களுக்கே அருமையான புதையலைக் காண்பித்தவர் தம்பி சக்திவேல்.

மதுரை மாவட்டத்தின் ஒரு சின்ன கிராமத்திலிருந்து, இரண்டாம் வகுப்பு வரை மட்டுமே படித்துவிட்டு, சென்னைக்கு வந்து சினிமாவில் சேர்ந்து எடுபிடி, ஆபீஸ்பாய், டிரைவர், புரொடக்ஷன்பாய் என படிப்படியாய் வந்து புரொடியூஸரானவர் அய்யா கலைஞானம்.

# ஐந்தாம் பாகமான இதில்...

கலைஞானத்தின் அண்ணன் கவி கே.பி.காமாட்சி சுந்தரம் சாராயத்துக்கு அடிமையாகி, அவரது குடும்பத்தையே இந்தப் பாழாப்போன குடி விழுங்கிய கதையைப் படித்ததும் இப்போது டாஸ்மாக்கால் சீரழியும் குடும்பங்கள் தான் நம் கண் முன்னே நிழலாடுகிறது. அதே போல் 'திருவிளையாடல்', 'தில்லானா மோகனாம்பாள்' போன்ற காலத்தால் அழியாத காவியங்களைப் படைத்த இயக்குனர் ஏ.பி.நாகராஜனின் நன்றியுணர்வைப் படித்தால் 'சினிமாவில் இப்படியுமா' என ஆச்சர்யப்படத் தோன்றுகிறது. தன்னை வளர்த்து ஆளாக்கிய நாடகக் கம்பெனி முதலாளி ரெங்கசாமி ரெட்டியாரின் குடும்பம் ஒரு வேளை சோற்றுக்கே வழியில்லாமல் கஷ்டப்பட்டதைக் கேள்விப்பட்டு, ரெங்கசாமி ரெட்டியாருக்கு ஓட்டல் வைத்துக் கொடுத்த மாபெரும் மனிதாபிமானத்தைப் படித்ததும் உடம்பெல்லாம் புல்லரிச்சுப் போச்சு. மனுஷனாப் பொறந்தா நன்றியுணர்ச்சி, விசுவாசம், பழசை மறக்காமை இதெல்லாம் வேணும் என்பதற்கு உதாரணம் ஏ.பி.என்.

கலைஞானத்தை நடிகனாக்கிய கே.பாக்யராஜ், அவருக்கு காலமறிந்து செய்த உதவி, எம்.ஜி.ஆர். பத்மனாபனுக்கு ரஜினி செய்த உதவி என இந்த ஐந்தாம் பாகத்தில் நன்றிகளின் ஊர்வலத்தை நடத்தியுள்ளார் அய்யா கலைஞானம். எம்.கே.டி.பாகவதர் காலத்திலிருந்து இப்போதைய விஜய் வரை சினிமாவின் நுணுக்கத்தை, வெற்றி-தோல்வி தரும் படிப்பினையைத் தரும் பாடப்புத்தகம் போல் வழங்கியிருக்கிறார் அய்யா கலைஞானம் என்றால் அது மிகையில்லை.

இந்தத் தொடர் நக்கீரனில் வெளி வரும் போது, படிக்கத் தூண்டும் விதமாக பக்கங்களை அழகுற வடிவமைத்த, நக்கீரனின் முதன்மை வடிவமைப்பாளர் தம்பி குரு, சினிமா சீக்ரெட்டின் ஐந்து பாகங்களையும் புத்தகமாக வடிவமைத்த தலைமை வடிவமைப்பாளர் தம்பி துரை.கணேசன், அவருக்கு உறுதுணையாக இருந்த தம்பிகள் ராஜேந்திரன், தாணு ஆகியோருக்கும் ஐந்து பாகங்களுக்கும் அட்டைப்படம் வடிவமைத்த தம்பி ஆர்.சி.மதிராஜுக்கும் பாராட்டுக்கள். அதே போல் தொடருக்கேற்ற பொருத்தமான சினிமா புகைப்படங்களை மின்னல் வேகத்தில் கொடுத்து உதவிய தம்பி 'ஸ்டில்ஸ்' ஞானம் அவர்களுக்கு நன்றியும் பாராட்டுக்களும்.

சரித்திரம் பேசும் சினிமா சீக்ரெட் தொடரின் வெற்றிக்கும் சரி, தனி புத்தகங்களாக வெளிவந்து வெற்றிகரமான விற்பனையைத் தொட்டதற்கும் சரி வாசகப்பெருமக்களாகிய நீங்கள் கொடுத்த பேராதரவு, பெருத்த வரவேற்பு இவைதான் என்பதில் எந்த சந்தேகமுமில்லை. ஐந்து பாகங்களையும் வாங்கி வாசியுங்கள், ரகசியத்தை அனைவருக்கும் சொல்லுங்கள்.

-என்றென்றும் உங்கள்

நக்கீரன் கோபால்

# ஐந்தாம் பாகத்தில் உள்ள சிறப்பம்சங்கள்!

ரயிலில் பாட்டுப் பாடி சில்லறை சேகரித்த சோக அனுபவம்

டி.ஆர். ராஜகுமாரியுடன் நான் டூயட் பாடிய அனுபவம்

'பராசக்தி' பட பூசாரி... கவி.கே.பி. காமாட்சி சுந்தரத்தின் குடும்பத்தில் உண்டான ரணகளம்

வறுமை வாட்டியெடுத்த கவி.கே.பி. காமாட்சியின்

இறுதிக்காலம்

தேவர் மற்றும் சிவாஜியுடனான பாரதிராஜாவின் அனுபவம்

பாரதிராஜாவுடன் எனது கலைப்பயணம்

ஜெயகாந்தனுடன் எனது அனுபவம்

உருகி அழுத இளையராஜா... உடைந்தது நாதஸ்வரம்

கே.பாலசந்தருடன் எனது அனுபவம்

எம்.ஜி.ஆரின் வெறி பிடித்த பக்தர்

கனல் கக்கிய ரஜினி

மீனாவின் அம்மா சிரித்தார்... ஸ்ரீதேவியின் அம்மா கோபப்பட்டார்...

மீனா, ஸ்ரீதேவி விஷயத்தில் நான் சொன்னதே நடந்தது

விஜய் படத்துக்கு என் கதை

கே.எஸ். ரவிக்குமாருடனான எனது அனுபவம்

டைரக்டர் ஏ.பி.நாகராஜன் என்னிடம் சொன்ன அவரின் உருக்கமான வாழ்க்கைச் சம்பவங்கள்

சாண்டோ சின்னப்ப தேவரின் கனவுகள்

# திரை வரலாற்றின் இனிய பொக்கிஷம்!

பேராசிரியை இளம்பிறை மணிமாறன்
**(ஆன்மிக இலக்கிய பேச்சாளர்)**



**க**லையுலகிலும் இலக்கிய வானிலும் தனக்கென தனி முத்திரையோடு வலம்வரும் அண்ணன் சிவகுமார் அவர்கள் மூலமாக ஆற்றல்மிகு அய்யா கலைஞானம் அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அதன் தொடர்ச்சியாக 'நக்கீரன்' இதழில் அவர்கள் எழுதிவந்த 'சினிமா சீக்ரெட்' கட்டுரைகளைத் தொடர்ந்து படித்து வந்தேன். இதிகாசங்களையும், இலக்கியங்களையும், மேனாட்டு நல்லறிஞர்

சாத்திரங்களையும் மட்டுமே அறிந்திருந்த எனக்கு, இது ஒரு புதிய அனுபவமாய் அமைந்தது.

'சினிமா' என்னும் கனவு பூமியின் கண்ணீர்த் துளிகளையும், பூச்சரங்களையும், வெற்றிச் சிகரங்களையும் எழுத்து வடிவில் தரிசிக்கத் தொடங் கினேன். மக்களை மகிழ வைத்ததோடு, அவர்களைச் சிந்திக்கவும் தூண்டிய திரையுலகச் சிற்பிகள் கடந்து வந்த பாதை -மேற்கொண்ட சவால்கள் -ஏற்றுக்கொண்ட தியாகங்கள் அனைத்தையும் இயல்பாக எதார்த்தமாக -அனுபவ முத்திரைகளாக தன் எழுத்துக்களில் அய்யா கலைஞானம் அவர்கள் உணர்வுபொங்க வழங்கியுள்ளார். கலைஞானம் அவர்கள் பதிவு செய்துள்ள அனைத்தும் திரையுலக வரலாற்றின் இனிய பொக்கிஷங்கள்.

# ஆன்மாவை மீட்டெடுக்க உதவும்!

-ஜி.திலகவதி

ஐ.பி.எஸ். (ஓய்வு)



லைஞானம் ஒரு விந்தை, ஒரு பொக்கிஷம், ஒரு களஞ்சியம், கலையுலகின் தகவல் மையம். அன்றைய சினிமாவையும் சினிமா

க உலகையும் போலவே இன்றைய சினிமா உலகையும் நன்கறிந்தவர். முன்னைப் பழமைக்கும் பின்னைப் புதுமைக்கும் பெயர்த்தும் அப்பெற்றியராக இருப்பவர்.

தமிழ்த் திரையுலகின் முந்தைய தலைமுறைகளின் மூத்த முன்னோடிகளுடன் இணைந்து பணியாற்றியவர் ஐயா கலைஞானம் அவர்கள். அந்தக்கால திரைப் பிரபலங்களுடனான தமது அனுபவங்களையும் அந்தப் பிரபலங்களின் வாழ்வில் நிகழ்ந்த சில சுவாரஸ்யங்களையும் திரு.கலைஞானம் நேர்மையுடனும், நேர்த்தியுடனும் எடுத்துச் சொல்வதே இந்நூல். நக்கீரன் இதழில் திரு.கலைஞானம் **168** அத்தியாயங் களில் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு இது.

தொழில்நுட்ப வளர்ச்சிகள் இல்லாதிருந்த அக்காலத்தில் கலைஞர்கள் தங்கள் ஈடுபாடு மற்றும் கடின உழைப்பினால் எப்படி சினிமாவில் பிரமிக்கத்தக்க சாதனைகளைப் படைத்தார்கள், எவ்வளவு மேன்மை யான மனிதர்கள் அன்றைய திரையுலகின் அகவாழ்வைப் பிரகாசமாக வைத்திருந்தார்கள். விசுவாசம் என்ற சொல்லுக்கு இலக்கணமாகத் திகழ்ந்த வெற்றியாளர்கள், வெற்றி மகுடங்களால் தலைக்கனத்திற்கு ஆளாகாத அதிசயங்கள் என்றிவ்வாறான மனித விழுமியங்களை இந்நூல் நெடுக தரிசிக்கலாம்.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்வதானால் இயக்குநர் ஏ.பி. நாகராஜன் குறித்து திரு.கலைஞானம் எழுதிய கட்டுரைகளைச் சொல்லலாம். இளம் வயதில் அநாதரவாக இருந்த ஏ.பி.என். னுக்கு அடைக்கலம் தந்து தம் மகனைப் போன்றே பாவித்து வளர்த்தவர்கள் ஒரு பெரிய மனிதரும், அவரது துணைவியாரும் ஆவர். வியாபாரம் நொடித்துப் போய் அந்தத் தம்பிகளும் அவர்களின் மகனும் வறுமையின் கோரப்பிடியில் சிக்கியதைக் கேள்விப்படுகிறார் ஏ.பி.என். அப்போது அவர் தமிழ் சினிமாவின் முன்னணி இயக்குநர். அவரும் (அந்தக் குடும்பத்திற்கு ஏற்கனவே அறிமுகமான) நடிகர் திலகம் சிவாஜி கணேசனும் சேர்ந்து அந்தப் பெரியவருக்கு தங்களது செலவில் பிரதானப் பகுதியில் ஹோட்டல் தொடங்கிக் கொடுக்கிறார்கள். அதைக் கொண்டு அந்தக் குடும்பம் தலையெடுத்து தழைத்துவிட்டது.

அதிர்ஷ்டம் இருந்தால் யாரும் பணக்காரராகிவிட முடியும். ஆனால் மனிதர்க்கு அவசியமான அடிப்படைப் பண்பாகிய நன்றியுணர்வு இருந்தால் மட்டுமே பெற்ற வெற்றியும் உற்ற மேன்மையும் இறுதிவரை

நிலைத்து நிற்கும் என்பதற்கு உதாரணமாக ஏ.பி.நாகராஜனின் அழியாப் புகழை நம்மால் அறிந்துகொள்ள முடிகிறது.

நல்லதையே பேசி, நல்லதையே எண்ணி, நல்லவர்களுடனே பழகி நல்லவர்க்கு உதாரணமாக வாழும் கலைஞானம் அவர்கள் எழுதிய நூலும் நல்ல நூலாகத்தானே இருக்க முடியும்.

தமிழ் சினிமாவைத் தொழில்நுட்பத் தரத்தில் உலக சினிமாவின் உச்சத்தரத்துக்கு கொண்டு போனால் மட்டும் போதாது... தமிழ் சினிமா கலைஞர்களின் தொலைந்துபோன ஆன்மாவை மீட்டெடுத்தல் முக்கியம். அதற்கு இளைய தலைமுறையை இந்தப் புத்தகம் ஆற்றுப்படுத்தும் என்பது திண்ணம்.

# என் கதைகளில், தயாரிப்புகளில்
## அறிமுகமானவர்கள் பட்டியல்

## நட்சத்திரங்கள் :

ரஜினிகாந்த்

(கதாநாயகனாக - படம்: பைரவி)

கமல்ஹாசன்

(குழந்தை நட்சத்திரமாக இருந்த கமல் வாலிபனாக ஆனதும் மறு அறிமுகம். படம் : குறத்தி மகன்)

கீதா (படம் : பைரவி)

ஜெய்சித்ரா (படம் : குறத்தி மகன்)

வாணிஸ்ரீ (படம் : காதல் படுத்தும் பாடு)

சுருளிராஜன் (படம் : காதல் படுத்தும் பாடு)

எஸ்.எஸ்.சந்திரன் (படம் : காதல் படுத்தும் பாடு)

மாதவி (படம் : புதிய தோரணங்கள்)

சொப்னா (படம் : நெல்லிக்கனி)

'ராஜபார்ட்' உடையப்பா

(படம் : தாய் வீட்டு சீதனம்)

கோவிந்தா (படம் : லவ் 86 - இந்தி)

கண்ணன் (எஸ்.எஸ்.ஆரின் மகன்- இரண்டாவது

நாயகன் படம் : காக்கைச் சிறகினிலே)

முத்துமாணிக்கம் (எஸ்.எஸ்.ஆரின் தங்கை மகன்- இரண்டாவது நாயகன் படம் : செல்லக்கிளி)

நாகராஜசோழன் (கேரக்டர் ஆர்ட்டிஸ்ட்,

படம் : எதிர்வீட்டு ஜன்னல்)

# இயக்குநர்கள்

எம்.பாஸ்கர் - (படம் : பைரவி)

எஸ்.எஸ். தேவதாஸ் - (நடிகை தேவிகாவின் கணவர், படம் : வெகுளிப்பெண்)

கே.எம்.பாலகிருஷ்ணன்- (நடிகர் குமரிமுத்துவின் அண்ணன். படம் : ஆறு புஷ்பங்கள்)

பனசை மணியன் - (படம் : நீதிக்கு ஒரு பெண்)

# பாடலாசிரியர்கள்

கவிஞர் சிதம்பரநாதன் - (படம் : பைரவி)

அருப்புக்கோட்டை தவசுமணி-

(படம் : இளஞ்ஜோடிகள்)

# பின்னணிப் பாடகர்கள்

சீர்காழி சிவசிதம்பரம் -

(படம் : மிருதங்க சக்கரவர்த்தி)

சந்திரபோஸ் - (படம் : ஆறு புஷ்பங்கள்)

# புகைப்படக் கலைஞர்கள்

'ஸ்டில்ஸ்' ரவி - (படம் : பைரவி)

வெள்ளைச்சாமி - (படம் : புதிய தோரணங்கள்)

நடராஜன் - (படம் : செல்லக்கிளி)

## படத் தொகுப்பாளர்கள்

கௌதமன் - (படம் : புதிய தோரணங்கள்)

வெள்ளைச்சாமி - (படம் : புதிய தோரணங்கள்)

## நான் அறிமுகம் செய்த தயாரிப்பாளர்கள்

என். சகுந்தலா

டி.என். வெங்கட்ராமன்

முருகன் கலைஞானம்

பி.மகாலட்சுமி

பி.கோப்பெருந்தேவி

என்.ஜான்ஸிராணி

## நான் அறிமுகம் செய்த மூலக்கதையாசிரியர்

புஷ்பவல்லி கலைஞானம் -

(படம் : புதுப்பட்டி பொன்னுத்தாயி)

## என் வாழ்க்கை மீது அக்கறை காட்டியவர்கள்

கவி. கே.பி.காமாட்சி சுந்தரம்

கவிஞர் சுரதா

எழுத்தாளர் ஏ.எஸ்.முத்து

நான் ஒரு கலைஞன் ஆவதற்கு அன்பும், அக்கறையும் காட்டிய, காட்டிவருபவர் என் அண்ணன் ஆர்.எம். கிருஷ்ணசாமி.

# நான் திரைக்கதைகளில் பங்கேற்ற இயக்குநர்கள்- தயாரிப்பாளர்கள்

சாண்டோ சின்னப்ப தேவர்

கே.எஸ்.கோபாலகிருஷ்ணன்

ஜோஸப் தளியத் (சிட்டாடல் ஸ்டுடியோ)

ஏ.பீம்சிங்

எஸ்.தியாகராஜன்

(சின்னப்ப தேவரின் மாப்பிள்ளை)

மதுரை திருமாறன்

முக்தா சீனிவாசன்

எம்.எஸ்.காசிவிஸ்வநாதன்

விசு (என்கிற) விஸ்வநாதன்

வி.சி. குகநாதன்

பாரதிராஜா

பாக்யராஜ்

ஆர்.வி.உதயகுமார்

பி.வாசு

கலைமணி

கே.ராஜேஷ்வர்

பார்த்திபன்

கோகுல கிருஷ்ணன்

மற்றும் பலர்...

# என் கதைகளில், படைப்பில் பங்குபெற்ற பிரபலங்கள், நட்சத்திரங்கள்

நடிகர் திலகம் சிவாஜிகணேசன்

ஜெமினிகணேசன்

எம்.என்.நம்பியார்

ஜெய்சங்கர்

சிவகுமார்

ரவிச்சந்திரன்

முத்துராமன்

ராதாரவி

நாகேஷ்

கராத்தே மணி

ஸ்ரீகாந்த்

வி.கே.ராமசாமி

தேங்காய் சீனிவாசன்

சோ ராமசாமி

பாலாஜி

மேஜர்சுந்தர்ராஜன்

சுதாகர்

கே.ஏ.தங்கவேல்

கார்த்திக்

சுரேஷ்

எஸ்.வீ.சேகர்

ஆர்.எஸ்.மனோகர்

சிலோன் மனோகர்

நிழல்கள் ரவி

வெண்ணிற ஆடைமூர்த்தி

விசு (எ) விஸ்வநாதன்

வி.எஸ்.ராகவன்

டைரக்டர் கே.விஸ்வநாத் (சங்கராபரணம்)

பார்த்திபன்

காகா ராதாகிருஷ்ணன்

எஸ்.ஏ.அசோகன்

கிருபானந்த வாரியார்

விஜயகுமார்

நெப்போலியன்

சங்கிலிமுருகன்

கிருஷ்ணம்ராஜ் (தெலுங்கு)

நாகபூஷணம் (தெலுங்கு)

ராஜநளா (தெலுங்கு)

கலைச்செல்வி ஜெயல-தா

கே.ஆர்.விஜயா

சுஜாதா

மனோரமா

ராதா

விஜயசாந்தி

தேவிகா

கனகா

ராஜசுலோசனா

எஸ்.வரலட்சுமி

சி.ஐ.டி. சகுந்தலா

ஸ்ரீப்ரியா

ஸ்ரீவித்யா

ஒய்.விஜயா

ஜெயந்தி

ஜெயா

சுலக்ஷணா

சுகுமாரி

சச்சு

சுந்தரிபாய்

அம்பிகா

லட்சுமி

ராதிகா

மேஜிக் ராதிகா

தீபா

வசந்தா

('இரவும் பகலும்' அறிமுகம்)

சூரியகலா

காந்திமதி

எஸ்.என்.லட்சுமி

வெண்ணிறஆடை நிர்மலா

மஞ்சுளா

ஜமுனா (தெலுங்கு)

ஜெயப்பிரதா (தெலுங்கு)

கிருஷ்ணகுமாரி (தெலுங்கு)

# இயக்குநர்கள்

ஜோசப் தளியத் (சிட்டாடல் ஸ்டுடியோ)

கே.எஸ். கோபாலகிருஷ்ணன்

ஏ.பீம்சிங்

கே.சங்கர்

பி.வாசு

முக்தா சீனிவாசன்

மதுரை திருமாறன்

எஸ்.எஸ். தேவதாஸ் (தேவிகா கணவர்)

எம்.பாஸ்கர் (பைரவி டைரக்டர்)

கர்ணன்

என்.கே.விஸ்வநாதன்

பி.ஆர்.சோமு

ஆர்.சி. சக்தி

கே.எஸ்.ரவிகுமார்

இராம.நாராயணன்

முரசொலி கே.சொர்ணம்

தாசரி நாராயணராவ் (தெலுங்கு)

# பாடலாசிரியர்கள்

கவிஞர் கண்ணதாசன்

கவிஞர் வாலி

புலவர் புலமைப்பித்தன்

ஆலங்குடி சோமு

முத்துலிங்கம்

பிறைசூடன்

கங்கைஅமரன்

# இசை அரசர்கள்

எம்.எஸ்.விஸ்வநாதன்

கே.வி. மகாதேவன்

இளையராஜா

சங்கர்-கணேஷ்

வி.குமார்

டி.ஆர்.பாப்பா

# பாடியவர்கள்

டி.எம்.சௌந்தரராஜன்

கே.ஜே.யேசுதாஸ்

எஸ்.பி.பாலசுப்ரமணியம்

பாலமுரளிகிருஷ்ணா

மலேசிய வாசுதேவன்

மனோ

பி.சுசீலா

எஸ்.ஜானகி

எல்.ஆர்.ஈஸ்வரி

வாணிஜெயராம்

# வசனம் எழுதியவர்கள்

ஏ.எல்.நாராயணன்

'வியட்நாம் வீடு' சுந்தரம்

ஏ.எஸ்.பிரகாசம்

தூயவன்

பனசை மணியன்

# டான்ஸ் மாஸ்டர்கள்

தங்கப்பன்

கமலஹாசன் (உதவி டான்ஸ் மாஸ்டர்)

சுந்தரம் (பிரபுதேவா தந்தை)

விமலா (படம் : இளஞ்ஜோடிகள்)

# ஸ்டண்ட் மாஸ்டர்கள்

சங்கர்

மாதவன்

ஹயாத்

# என் நாடகங்களில் தலைமை தாங்கியவர்கள்

'கலைவாணர்' என்.எஸ்.கிருஷ்ணன்

டி.ஏ.மதுரம்

எம்.ஏ.வேணு ('சம்பூர்ண ராமாயணம்' படம் எடுத்த

தயாரிப்பாளர்)

எஸ்.ஏ.நடராஜன் ('மந்திரிகுமாரி' படப் புகழ்)

# நாடகங்களில் என்னுடன் நடித்தவர்கள்

'குலதெய்வம்' ராஜகோபால்

காகா ராதாகிருஷ்ணன்

கவி கே.பி.காமாட்சி சுந்தரம்

வி.எம். ஏழுமலை

எஸ்.ஏ.நடராஜன் (மிட்டாதாரர்)

கே.தவமணி தேவி (இலங்கைக் குயில், -ஆரவல்லி சூரவல்லி, வனமோகினி போன்ற படங்களில் நடித்துப் புகழ்பெற்ற தமிழ் சினிமாவின் முதல்கவர்ச்சிக்கன்னி)

'கண் திறந்தது' ராமநாதன் (மனோரமாவின் கணவர்)

# நான் நடித்த படங்கள்

*துணை நடிகராக...*

கோகிலவாணி

தெனாலிராமன்

செல்லப்பிள்ளை

வெறும் பேச்சல்ல

# முக்கிய கதாபாத்திரமாக...

கே. பாக்யராஜின் 'இது நம்ம ஆளு'

பெரிய இடத்து மாப்பிள்ளை

சிறப்புத் தோற்றத்தில்...கோபுர வாசலிலே

பார்த்திபனின் 'கதை-திரைக்கதை-வசனம்-இயக்கம்'

# அம்மம்மா...!

'ராஜபார்ட் ரங்கத்துரை' படத்தில் அண்ணன் சிவாஜி பாடும் சோகப் பாடல் ஒன்று உயிரையே உருக்கிவிடும். அதிலும் சிவாஜியின் வேதனை கலந்த நடிப்பு கண்ணீரை வரவழைத்துவிடும். 'அம்மம்மா தம்பி என்று நம்பி...' எனத் தொடங்கும் அந்தப்பாடல்.
இந்தப் பாடல் காட்சியில் சிறு வயது சிவாஜியாக நடிக்கும் சிறுவன் வறுமையால் ரயிலில் தர்மம கேட்பான்.

இந்தப் பாடல் வருவதற்கு முன்பே என் வாழ்க்கையில் நடந்த சம்பவம்தான் அது. என்றாலும் இந்த பாடலைக் கேட்ட பிறகு அந்த சம்பவம் என் வாழ்க்கையில் நான் மறக்க நினைத்தாலும் மறக்க முடியாத ஒரு சம்பவமாகிவிட்டது. அது சாதாரண சம்பவம் அல்ல... இருப்பதா? இறப்பதா? என்கிற நிலையை ஏற்படுத்திய சம்பவம்தான்.

1958-ல் நான் 'அம்பாள் டாக்கீஸ்' தயாரிப்பு நிறுவனத்தில் டிரைவராகவும், புரொடக்ஸன் ஸைடிலும் வேலை பார்த்துக்கொண்டிருந்தேன். வேலையின் ஊடே நாடகங்களையும் நடத்திக் கொண்டிருந்த நேரத்தில்....

கர்நாடக மாநிலம் கோலார் தங்க வயலிலும், பெங்களூ ரிலும் தலா ஒரு நாடகம் நடத்த வேண்டும் என கேட்டு வந்தார்கள் நாடக காண்ட்ராக்டர்கள். அதற்கு ஒப்புக்கொண்டு சிறிய அட்வான்ஸூம் வாங்கிவிட்டேன்.

'மந்திரிகுமாரி', 'மனோகரா', 'மோகினி' படப்புகழ் 'நடிகமணி' எஸ்.ஏ.நடராஜன் அவர்களை நாடகங்களுக்கு தலைமை ஏற்க பேசி ஒப்பந்தம் செய்துவிட்டேன்.



நாடகத்தின் இரண்டு ஹீரோக்களில் நானும் ஒருவன். என்னுடன் நாடகக்குழுவைச் சேர்ந்த 18 பேர்களும் கோலார் போய்ச் சேர்ந்தோம். அந்தக் குழுவில் 5வயது, 7 வயது குழந்தைகள் இருவரும் உண்டு.

12.04.1958-ல் கோலார் தங்க வயலில் 'இருப்பதா? இறப்பதா?' நாடகத்தை சிறப்பாக நடத்தி முடித்தோம்.

ஆனால் பேசினபடி எங்களுக்கு பணம் தரவில்லை காண்ட்ராக்டர்.

'நாளைக்கி பெங்களூரில் நாடகம் நடக்கும்போது இடைவேளையிலேயே உங்களுக்கு செட்டில்மெண்ட் பண்ணீடுறோம்' என சமாதானம் சொன்னதால், வேனில் பெங்களூர் வந்து சேர்ந்தோம்.

பெரிய கொட்டகையில் 13.04.1958-ல் 'தங்கமணி' நாடகம் நடந்தது. இடைவேளையின் போது காண்ட்ராக்டரிடம் பணம் கேட்டேன்.

'டிக்கெட் கலெக்ஸன் சில்லறையா சேர்ந்திருக்கு. எண்ணிக் கிட்டு இருக்காங்க. நாடகம் முடிஞ்சதும் கொடுத்திடுறோம்' என்றார் காண்ட்ராக்டர்.

சம்மதித்து நாடகத்தை முடித்தோம்.

காண்ட்ராக்டர் இருவரையும் காணவில்லை. எங்களுக்கு பதட்டம் கலந்த குழப்பம்.

நாடகம் பார்ப்பதற்காக குடும்பத்துடன் வந்திருந்த பிரபல புரவி நாட்டியக் கலைஞர் சுந்தரமூர்த்தியிடம் 'பிரபல கவிஞர் கவி கே.பி.காமாட்சிசுந்தரம் அவர்களின் ஒன்றுவிட்ட சகோதரர்தான் கலைஞானம்' என யாரோ சொல்லிவைக்க... சுந்தரமூர்த்தி என்னைச் சந்தித்தார்.

"நீங்க கவி காட்சி தம்பிங்கிறாங்களே? உண்மையா?" எனக் கேட்டார்.

காண்ட்ராக்டர் விட்டுவிட்டுப் போய்விட்ட கவலையில் 'ஆமாம்' என்பதுபோல் தலையை மட்டும் ஆட்டினேன்.

"ஏன் ஒருமாதிரி இருக்கீங்க?" எனக் கேட்டார்.

நடந்ததைச் சொன்னேன். பெங்களூரில் செட்டிலான தமிழ்க் கலைஞரான சுந்தரமூர்த்திக்கு இரக்கம் சுரந்தது.

"நாடகக் கலைஞர்களுக்கு எப்போதும் இப்படி ஒரு சாபக்கேடு இருக்கத்தான் செய்யுது. கவலைப்படாதீங்க.... சாப்டீங்களா?" எனக் கேட்டார்.

'இல்லை' என தலையாட்டினோம். தன்னுடன் வந்தவரிடம் "இவங்களையெல்லாம் என் வீட்டுக்கு அழைச்சிட்டு வந்திடுங்க" எனச் சொல்லிவிட்டு கிளம்பினார்.

சுந்தரமூர்த்தியின் வீட்டுக்குச் சென்றோம். ஹோட்டலி லிருந்து எங்கள் குழுவினருக்கு தலா நான்கு இட்லியும், ஒரு தம்ளர் டீயும் வரவழைத்துக் கொடுத்தார்.

"நம்ம தமிழ்நாட்டுல இருந்து வந்திருக்க உங்களுக்கு ஏதோ என்னால் முடிஞ்ச உதவி" என்றவர்... "காலைல 4-30 மணிக்கு பெங்களூர்ல இருந்து மெட்ராஸுக்கு பாஸஞ்சர் ரயில் போகுது. அதில் உங்களுக்கெல்லாம் டிக்கெட் எடுத்துக் கொடுத் திடுறேன். இப்பவே நீங்க ரயிலடிக்கும் போய், பாஸஞ்சர் வரும் ஃபிளாட் ஃபாமில் காத்திருங்க" என ஏற்பாடு செய்து அனுப்பிவைத்தார்.

'பசி தீர்த்த வள்ளல் மட்டுமல்ல... பயணத்துக்கும் ஏற்பாடு செய்த உங்க குடும்பம் நல்லா இருக்கணும்' என மனசார வாழ்த்தினேன். ரயில் நிலையம் வந்து சேர்ந்தோம்.

காத்திருந்த நேரத்தில் கையில் இருந்த சில்லரைகளை வைத்து டீ சாப்பிட்டுவிட்டோம்.

அதிகாலை 4 மணிக்கு ரயில் வந்தது. ஏறி அமர்ந்தோம். 4.30க்கு கிளம்பியது.

முன்பெல்லாம் மெட்ராஸில் குப்பை அள்ள கார்ப்ப ரேஷன் ஆட்கள் மாட்டு வண்டியைத்தான் பயன்படுத்து வார்கள். அந்த மாடுகள் குப்பைத் தொட்டியைப் பார்த்தால் அந்த இடத்தில் நின்றுவிடும். அதுபோல எந்த ரயில் நிலையத்தைப் பார்த்தாலும் பாஸஞ்சர் ரயில் நிற்க ஆரம்பித்துவிட்டது. முதலமைச்சர்களோ... ராஜாக்களோ வந்தால் மற்றவர்கள் ஓரங்கட்டுவது மாதிரி... பிற ரயில்களுக்கு வழி விடுவதற்காக நிற்கும்.

இப்படி நின்று நின்று வந்த ரயில் ஒரு ஸ்டேஷனில் நீண்ட நேரம் நின்றுவிட்டது.

மதியம் ஒரு மணி ஆகிவிட்டது. குறித்த நேரப்படி ரயில் இந்நேரத்துக்கு மெட்ராஸ் போயிருக்க வேண்டும். எதிர்பாராதவிதமாக தாமதம்.

எல்லோருக்கும் பசியெடுத்தது. பாத்ரூமில் இருந்த குழாயில் தண்ணீரைக் குடித்து வயிறு நிரப்பியபடி வந்தோம்.

மூன்று மணியாகிவிட்டது. குழுவில் இருந்த இரண்டு குழந்தைகளும் பசி பொறுக்க முடியாமல் அழ ஆரம்பித்து விட்டது. பெரியவர்களாலும் பசி பொறுக்க முடியவில்லை. ஆனாலும் பெரியவர்கள் என்பதால் அழவில்லை. ரயில் நின்ற ஸ்டேஷனில் ஹோட்டலோ, ஊரோ இல்லை. இருந்தாலும் வாங்க காசும் இல்லை.

நாடக மேற்பார்வையாளர் நாகராஜனை அழைத்து “என்ன செய்யலாம்?'' என யோசனை கேட்டேன்.

''இந்நேரம் நாம வீடுகளுக்குப் போயிருக்கணும். அதை கணக்குப் பண்ணித்தான் சுந்தரமூர்த்தி நம்மை இந்த ரயிலில் அனுப்பிவச்சார். ஆனா... இப்படி வசமா மாட்டிக்கிட்டோம். அடுத்து வர்ற ஸ்டேஷனில் ஏதாவது வாங்கிச் சாப்பிட்டு பசியாறணும். ஆனா கைல காசில்லை. இதுக்கு ஒரே வழி... மியூஸிக் பார்ட்டிய வாசிக்கச் சொல்லுங்க. 'இருப்பதா? இறப்பதா?' நாடகத்துக்கு பாடின சோகப்பாட்டை பாடச் சொல்லுங்க. நாம ரெண்டு பேரும் கூச்சப்படாம கைல துண்டை ஏந்துவோம்'' என்றார்.

எனக்கும் அது சரியாகப்பட்டது.

பாட்டைக் கேட்ட பயணிகள் கண் கசிந்தபடி எங்கள் துண்டுகளில் தங்களால் முடிந்த சில்லறையை போட்டனர்.

பாட்டு முடிய... ரூட்டும் கிளியர் ஆக... ரயில் கிளம்பியது.

இரண்டு பேர்கள் வசூலித்த சில்லறையும் ஒன்று சேர்த்து வைத்துக் கொண்டார் நாகராஜ்.

மெட்ராஸுக்கு சில ஸ்டேஷன்கள் முன்பாக ஒரு ஸ்டேஷனில் வண்டி நின்றது. ஓடிப்போய் கிடைத்த பஜ்ஜி, போண்டாக்களை வாங்கி வந்தார்.

ஆளுக்கு ரெண்டாக தின்றோம்.

“மீதி எவ்வளாவு சில்லறை இருக்கு?'' என மியூஸிக் பார்ட்டி ஆட்கள் கேட்டனர்.

''ஏன்?'' என நான் கேட்டேன்.

''சென்ட்ரல் ஸ்டேஷன் போனதும் ஆர்மோனியப் பெட்டி, தபேலாவை ரிக்ஷாவுலதான் எடுத்துட்டுப் போகணும். அதுக்கு சில்லறை வேணுமே'' என்றனர்.

''நாகராஜா... நாகராஜா..'' என குரல் கொடுத்தேன்.

அருகில் இருந்தவர்கள்... 'சார் அவரைக் காணோமே' என்றனர்.

“''அடடா... ரயிலை மிஸ் பண்ணீட்டாரே'' என நாங்கள் பதற... ஒருவர் மட்டும் நமட்டுச் சிரிப்பு சிரித்தார்.

''அவரு 'இப்படியே எங்க ஊருக்கு போயிடுறேன்'னு இறங்கீட்டாரு'' என்றார்.

அதிர்ச்சியாக இருந்தது. அந்த காண்ட்ராக்டரே தேவலையே’ என ஆளாளுக்கு நாகராஜை திட்டினர்.

''நாகராஜாவாச்சே அதான்... இப்படி விஷத்தை கக்கீட்டுப் போயிருச்சு' என நானும் நினைத்துக் கொண்டேன்.

சென்ட்ரல் வந்து சேர்ந்தோம். ஒருவரிடம் ஒருவர் சொல்லிக் கொள்ளாமல் கூட அவரவர் வீடுகளுக்கு ஓட்டமெடுத்தோம்.

இது இன்றளவும் என் வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவம்.

# பணம் தராததால் கிளம்பிய நடிகை!

உசிலம்பட்டி பகுதியில் ஒரு கிராமத்தைச் சேர்ந்தவர் சி.சி.சாமி. சென்னையில் தங்கி படித்துக்கொண்டிருந்த அவர்... நானும் உசிலம்பட்டி ஏரியாக்காரன் என்பதால் என்னை வந்து சந்தித்தார். தான் எழுதி வைத்திருந்த 'எம்.எல்.ஏ' என்ற நாடகத்தை என்னிடம் படித்துக் காட்டினார். கதை நன்றாகவே இருந்தது. 'இந்த நாடகத்தை அரங்கேற்றம் பண்ணணும்' என்றார்.

நான் 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்கிற நாடகத்தை எங்க ஊர் எழுமலையில் அரங்கேற்ற ஏற்பாடுகள் செய்துவரும் இந்த நல்ல நேரத்தில்தான் நீங்க வந்திருக்கீங்க. ரெண்டு நாடகத்தையும் எங்க ஊர்லயே அரங்கேற்றம் பண்ணுவோம். ஆகும் செலவில் பாதியை நீங்க ஏத்துக்கணும்'' என்றேன். சம்மதித்தார் சாமி.

**29.09.1958-**ல் நாடகத்தை அரங்கேற்ற அப்போதே தேதி குறித்தோம்.

சாமி சென்ற சிறிது நேரத்தில் என்னுடைய நாடகக் குழுவைச் சேர்ந்த இருவருடன் நடிகை சண்முகசுந்தரி வந்தார். அவரிடம், ஊரில் நாடகம் போடப்போவது குறித்து விபரம் சொன்னேன்.

''சினிமா நடிகர்கள் இல்லாம பெங்களூர்லயும், கோலார் தங்கவயல்லயும் நாடகம் போட்டதாலதான் பெரிசா வசூல் இல்ல. உங்க ஊர்ல நடத்துற நாடகத்துக்காவது சினிமா ஸ்டார்கள போடுங்க'' என்றார்.

''நாடகத்துக்கு தலைமை ஏற்க வழக்கம்போல எஸ்.ஏ.நடராஜனை கூட்டி வந்திடுறேன். ஒரு நாடகத்தில் ‘பராசக்தி' புகழ் நகைச்சுவை அட்சயபாத்திரம் அங்கமுத்துவை போட்டுடலாம். இவங்க ரெண்டு பேருக்கும் நான் பொறுப்பு. கதாநாயகியா நடிக்க ஒரு சினிமா நடிகை இருந்தா நல்லா இருக்கும். ஆனா... யார் வருவா?'' என்றேன்.

''அண்ணே... தவமணிதேவி எனக்கு நல்ல தோழி. அவரை நான் கூட்டி வந்திடுறேன்'' என்றார் சண்முகசுந்தரி.

''உடனே அவங்களை பார்த்துப் பேசி டேட்ஸ் வாங்கிடுங்க'' என சண்முகசுந்தரியை அனுப்பி வைத்தேன்.

'தாயிற் சிறந்த கோயிலுமில்லை... தந்தை சொல்மிக்க மந்திரமில்லை' உட்பட பல பாடல்களைப் பாடிய... நடிகையாகவும் இருக்கிற டி.கே.கலாவின் அம்மாதான் சண்முகசுந்தரி.

'வனமோகினி', 'ஆரவல்லி சூரவல்லி', 'ராஜகுமாரி' உள்ளிட்ட பல படங்களில் நடித்துப் புகழ்பெற்றவர்... கவர்ச்சிக்கன்னி... இலங்கைக்குயில் கே.தவமணிதேவி.

'வனமோகினி' படத்தில் டார்ஜான் பாணியில் உடையணிந்து நடித்தார். அது கவர்ச்சியின் உச்சமாக திகழ்ந்தது. அதே காலகட்டத்தில் 'கச்ச தேவயானி' படத்தில் காட்டில் வாழும் ஒரு மகரிஷியின் மகளாக நடித்தார் டி.ஆர்.ராஜகுமாரி. அவரின் உடையும் கச்சைகட்டி, கவர்ச்சியாக இருக்கும். இவர்கள் இருவரின் உடையும் கவர்ச்சியாக இருந்தாலும் ஆபாசமில்லாமல் இருக்கும்.



இவர்கள் இருவரையும் பார்ப்பதற்காக இளைஞர்கள் மட்டுமல்ல... வயோதிகர்கள் கூட்டமும் திரையரங்குகளில் மிக அதிகமாக இருக்கும்.

தமிழ்நாட்டு ஆண்களையே தங்களின் அழகால் கிறங்கடித்து, தமிழ் சினிமாவின் முதல் கவர்ச்சிகன்னிகளாக கே.தவமணிதேவியும், டி.ஆர்.ராஜ குமாரியும் திகழ்ந்தனர். நான் எனது 15 வயதில் இவர்களின் அழகால் அசந்திருக்கிறேன்.

'28 வயதில் நான் நாடகத்தில் ஹீரோவாக நடிக்க... எனக்கு ஜோடியாக தவமணிதேவியா? அவர் மட்டும் நடிக்க ஒப்புக்கொண்டால்... இதைவிட என் பிறப்பிற்கு விமோச்சனம் தேவையில்லையே' என எனக்குள் நான் பரபரத்துக் கொண்டிருந்தபோது... மின்னல் வேகத்தில் திரும்பி வந்தார் சண்முகசுந்தரி.

"போன காரியம் ஓகேவா?"

“நிச்சயமா நம்ம நாடகத்துல... நடிக்கிறாங்க. நாளைக்கே வந்து கதை சொல்லச் சொல்லீட்டாங்கண்ணே"

"நிஜமாவா?"

"ஆமாண்ணே... அவங்களுக்கு கதை சொல்லும்போது அவங்களுக்கு நிறைய ஸீன் இருக்கிற மாதிரி சொல்லுங் கண்ணே" என்றார்.

மறுநாள்...

தவமணிதேவியைச் சந்தித்து கதையைச் சொன்னேன்.

"கதை ஓ.கே." என்றார்.

நாடகத்தில் 'நான் ஹீரோ' என்பதைச் சொன்னால் ‘ஹீரோயினாக நடிக்க மறுத்து விடுவாரோ...’ என தயங்கித் தயங்கி பயந்து, “நான்தான் ஹீரோ" என மெல்லிய குரலில் சொன்னேன்.

என்னைப் பார்த்து சின்னப் புன்னகை பூத்துவிட்டு “சரி... ஓ.கே... கதையில் டூயட் வருதா?" எனக் கேட்டார்.

'ஆமாம்' என்பதுபோல் தலையை ஆட்டினேன்.

"அப்படின்னா... ஒரு கண்டிஷன்" என்றார்.

அதிர்ச்சி கலந்த ஆவலுடன் அவரையே பார்த்தேன்.

"டூயட் பாடி ஆடுறதா இருந்தா... நீங்க என் கன்னத்தைக் கிள்றதோ, கட்டிப் பிடிக்கிறதோ கூடாது" என்றவர்... கூடவே ஒரு சலுகையை அறிவிப்பது போல... "வேணும்னா... நீங்க என் கையோட கை சேர்த்துக்கிட்டு எப்படி வேணாலும் ஆடலாம்... பாடலாம்" என்றார்.

என் உடம்பெல்லாம் மின்சாரம் பாய்ந்தது போல இருந்தது. 'அட... இதைவிட வேறென்ன வேண்டும்?' என ஆயிரம் படங்களில் நடித்துவிட்ட மகிழ்ச்சியை எனக்குத் தந்தது.

"என்ன நான் சொல்றது சரிதானே?" என்றார்.

"சரிங்க... சரிங்க" என்பதுபோல் தொடர்ந்து தலையை ஆட்டினேன்.

"ரொம்பவும் தலையை ஆட்டாதீங்க. கழுத்து சுளுக்கிக்கப் போகுது"'என கேலியாய் சிரித்தவர், "நாடகத்துக்காக தனியா பாட்டு எழுதியிருக்கீங்களா?" எனக் கேட்டார்.

"இல்லை"'என்றேன்.

அருகே இருந்த சண்முகசுந்தரி "சினிமாப் பாட்டை சேர்த்துக்கலாம்னு ஐடியா இருக்கு" என்றார்.

"என்ன பாட்டு?"

"இவரோட அண்ணன் கவிகாமாட்சி எழுதி "பராசக்தி'யில வந்த "புதுப் பெண்ணின் மனதைத் தொட்டுப் போறவரே" பாட்டை சேர்த்துக்கலாம்" என்றார் சண்முகசுந்தரி.

"நாளைலருந்து நாடக ரிகர்ஸலை என் வீட்லயே வச்சுக்கலாம்" எனச் சொல்லி எங்களை அனுப்பிவைத்தார் தவமணிதேவி.

"எப்பேர்ப்பட்ட நடிகையோட டூயட் பாடப் போறமே"என என் கால்கள் காற்றில் நடந்தன.

மறுநாள்...

ரிகர்ஸலுக்காக தவமணிதேவியின் வீட்டுக்குச் சென்றோம்.

"புதுப் பெண்ணின் மனதைத் தொட்டுப் போறவரே"என சண்முகசுந்தரி பாட ஆரம்பித்தார்.

தவமணிதேவி நளினமாக ஆடியபடியே "என் கைகளைப் பிடிச்சுக்கிட்டு சுத்தி வாங்க கலைஞானம்" என்றபடி கையை நீட்டினார்.

நானும் லேசாக மூவ்மெண்ட் கொடுத்தபடி அவரின் கைகளைப் பற்றினேன். ஆனால் கூச்சம் வந்து தடுத்தது. அவரின் கையைப் பிடிக்கவில்லை.

"என்னாச்சு?"என்பதுபோல ஆடியபடி பார்வையாலேயே கேட்டார்.

''வேண்டாம்மா. நான் ஸ்டேஜ்லயே உங்களோட டூயட் பாடிக்கிறேன்'' என்றேன்.

என் கூச்சத்தைப் புரிந்துகொண்ட தவமணி "இப்படி இருந்தா... நாடகம் கிழிஞ்சது போ'' என தமாஷாகச் சொன்னார்.

தவமணி நடிக்கும் 'எம்.எல்.ஏ.' நாடகத்தை 29.09.1958- தேதியும், 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' நாடகத்தை 30.09.1958-ந் தேதியும் எங்கள் ஊரான எழுமலையில் நடத்துவதாக அறிவித்து, 28.09.1958 அன்று வேன் மூலமாக அதிகாலையிலேயே சென்னையிலிருந்து கிளம்பினோம். தவமணி, அங்கமுத்து மற்றும் எஸ்.ஏ.நடராஜன் ஆகிய மூவரும் ஒரு கார் மூலம் கிளம்பினார்கள்.

இரவு உசிலம்பட்டியை அடைந்தோம். மூவரையும் அங்குள்ள கெஸ்ட்ஹவுஸில் தங்க வைத்துவிட்டு, நாங்க எல்லோரும் நாடக கொட்டகைக்கு வந்து சேர்ந்தோம்.

'எம்.எல்.ஏ.' நாடக கதாசிரியர் சாமி, சொன்னபடி பாதிச் செலவுத் தொகையை கொடுத்துவிட்டார். அதை நாடக முன்னேற்பாடு மற்றும் பயணச் செலவுகளுக்கு பயன்படுத்தி விட்டேன். டிக்கெட் வசூலை எடுத்துக்கொண்டு போய் கொடுத்தால்தான் உசிலம்பட்டியில் தங்கியிருக்கும் நட்சத்திரங்கள் வருவார்கள்.

நாடக கொட்டகை அமைத்தவரிடமே டிக்கெட் விற்பனை பொறுப்பையும் கொடுத்திருந்தேன். நான் சென்னையில் கலைஞானமாக இருந்தாலும், எங்களின் ஊருக்கும் உறவுக்கும் நான் பாலகிருஷ்ணன்தானே.

''எங்க பாலு நாடகத்தப் பார்க்க வந்த எங்ககிட்டயே டிக்கெட் கேட்குறியா?'' என முரட்டுத்தனமாக டிக்கெட் எடுக்காமலே உறவுகள் உள்ளே வந்துவிட்டது. இதுவரை ஆன வசூல் கொட்டகை போட்ட செலவுக்கும், ஜெனரேட்டர் செலவுக்கும் சரியாகிவிட்டதாக சொல்லிவிட்டனர்.

பணம் வராது எனத் தெரிந்த நிலையில்... தாங்கள் வந்த காரிலேயே உசிலம்பட்டியில் இருந்தபடியே சென்னை கிளம்பிவிட்டார்கள் மூவரும்.

காமாசோமாவென 'எம்.எல்.ஏ.' நாடகத்தை அரங்கேற்றி னோம்.

நாடகம் முடிந்ததும் கலைஞர்கள் என்னைச் சூழ்ந்துகொண்டு பணம் கேட்டார்கள்.

"நாளைக்குப் போடுற நாடகத்தையும் முடிச்ச பிறகு... ஊர்ல கடன் வாங்கியாவது கொடுத்துடுறேன்'' என்றேன்.

சமாதானம் ஆவதுபோல் தலையாட்டியவர்கள்... மறுநாள் மதியம்வாக்கில் என்னிடம் சொல்லாமல் வேனை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள்.

இந்தச் சூழ்நிலையில், நான் எதிர்பாராத திருப்பம் ஒன்று நடந்தது.

# கைகொடுத்த பொய்!

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' நாடகத்தை இரவு நடத்தி முடித்ததும் 'பேசியபடியான சம்பளத்தை கடன் வாங்கியாவது தருகிறேன்' என நான் சொன்னதை ஏற்பதுபோல் தலையாட்டிவிட்டு, நான் என் வீட்டுக்குப் போயிருந்த நேரத்தில் வேனை எடுத்துக் கொண்டு என்னிடம் சொல்லாமல் கிளம்பிவிட்டார்கள்.
மாலையில்... தகவலறிந்து நான் ஓடிவந்து பார்த்தபோது... கொட்டகையில் யாருமே இல்லை.

சென்னையிலிருந்து வாகனங்களில் வரும் கலைஞர்கள் மதுரை ரயில் நிலயம் எதிரே மங்கம்மா சத்திரத்தில் வாகனங்களை நிறுத்திவிட்டு, மதுரையைச் சுற்றிப் பார்த்து விட்டு, அதிகாலையில் சென்னைக்கு கிளம்புவது வழக்கம். அதனால் அங்கு சென்று அவர்களை பிடித்துவிடலாம் என்றால் எங்கள் ஊரிலிருந்து மதுரை போகும் கடைசி பஸ் கிளம்பிவிட்டது.

இரவெல்லாம் தூக்கமில்லை. அதிகாலையில் முதல் பஸ்ஸில் ஏறி மங்கம்மாசத்திரம் சென்று வேன் நிற்கிறதா... எனத் தேடினேன். இல்லை. சத்திரத்து பியூனிடம் விசாரித்தேன். 'அவங்க கிளம்பிப் போயிட்டாங்க' என்றார்.

அதிர்ச்சி, பதட்டம், அசதி என்னை அமுக்கியது.

'பெங்களூரில் நம்மள அம்போனு விட்ட நாடக காண்ட்ராக்ட்டரை கண்டபடி திட்டினோம். இப்போ நாமளே அந்தத் தப்பை செஞ்சிட்டோமே' என நொந்துபோன நான் அங்குமிங்கும் அலைந்தேன்.



அவசரத்தில் அண்ணனிடம் காசும் வாங்கவில்லை. ஊருக்கு போக வேண்டும் என்கிற பிரக்ஞையும் இல்லாமல் இருந்ததில் இரவு பத்து மணியாகிவிட்டது. பசி வயிற்றைக் கிள்ளியதும்தான் சகஜ நிலைக்கு வந்தேன்.

'ஊருக்குப் போக இனி காலையில்தான் பஸ். கண்டக்டரிடம் கடன் சொல்லி ஊரில் போய் கொடுத்துவிடும் நடைமுறை இருப்பதால் டிக்கெட் காசுக்கு கவலையில்லை. சாப்பிடாமல் பட்டினியாக இருந்துவிடலாம். ஆனால் ஒரு இரவு எங்கே தங்குவது?' என்கிற கவலை அதிகரித்தது. என் அக்கா வீடு நினைவுக்கு வந்தது. (15 வயது சிறுமியாக இருந்த என் அக்கா வீராயி இரண்டாம்தாரமாக மதுரைக்கு வாக்கப்பட்டு வந்ததையும், அக்காவுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்ததையும், வறுமையில் எங்க குடும்பம் பாதிக்கப்பட்டதால் அக்கா என்னை தன் வீட்டுக்கு அழைத்து வந்ததையும், மாமா என்னை அடித்து உதைத்ததைப் பொறுக்க முடியாமல் அக்கா என்னை அழைத்துக்கொண்டு எங்கள் ஊருக்கு வந்ததையும், அப்போது ஊரில் பிளேக் நோயால் பாதிக்கப்பட்டு அக்கா இறந்ததையும் ஏற்கனவே நான் விலாவாரியாகச் சொல்லியிருக்கிறேன்.)

'அக்கா மகள் புஷ்பவல்லியை தாய்மாமன் என்கிற உரிமையில் பார்க்கப்போகிற சாக்கில் இன்று இரவு மாமா வீட்டில் தங்கிட

வேண்டியதுதான்' என முடிவு செய்து, முனிச்சாலையில் இருந்த வீட்டுக்கு வந்தேன்.

இப்போது மாமா மூன்றாம்தாரமாக சகோதரி அழகியமீனாவை திருமணம் செய்து நான்கு பிள்ளைகளுடன் வசித்துவந்தார். என் அக்கா மகள் புஷ்பவல்லியும் வயதுக்கு வந்து அந்த வீட்டில் இருந்தாள்.

'வணக்கம் மாமா' என்றேன்.

அவர் பதில் மரியாதை செய்யவில்லை. இருக்கிற சூழலில் நானும் அதை எதிர்பார்க்கவில்லை. ஆனாலும் மாமா முணுமுணுத்தார். அவருக்கு நாடகக்காரர்களைப் பிடிக்காது. அந்தக் காலம் முதல் இந்தக் காலம் வரை நாடகக்காரர்களுக்கு யாரும் பெண் கொடுக்கமாட்டார்கள். அப்படியே தப்பித் தவறி ஏதாவது ஒரு காரணத்திற்காக கொடுத்தால்தான் ஆச்சு. அந்தக் கடுப்பில், 'ஏன் இவன் இங்க வந்திருக்கான்?' என மனைவியிடம் ஜாடையாகக் கேட்டார் மாமா.

"ஆமா நீங்க மெட்ராஸ்ல இருக்கீகளாம்ல... அங்க என்ன செய்றீக?" எனக் கேட்டார் சகோதரி.

எம்டன் குண்டவிட பெரிய குண்ட போட்டாத்தான் நைட்டு இங்க தங்க முடியும் என முடிவு செய்தேன். "அம்பாள் டாக்கீஸ்ங்கிற சினிமா தயாரிக்கிற கம்பெனியில வேலை பாக்குறேம்மா"

"எம்புட்டு சம்பளம் தர்றாக?"

அப்போது நான் மாதம் 35 ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தேன். இருந்தாலும் "மாசம் நூறு ரூவா தர்றாக"என்றேன்.

படுத்துக் கிடந்த என் மாமா மகன்கள் படக்கென எழுந்தனர்.

100 ரூபாய் என்பது 1958-ல் மிகப்பெரிய தொகையாச்சே.

விழிகளை அகட்டி என்னைப் பார்த்த மாமா, "எம்புட்டு நாளா இம்புட்டு சம்பளம் வாங்குறாப்ல" எனக் கேட்டார்.

"ஆறுமாசமா... மாமா"

"அப்புடியா? ரொம்ப சந்தோஷம். என்ன மாப்ள... வந்ததுலருந்து நின்னுக்கிட்டே இருக்கீகளே..." என்றவர், "பரவால்ல... இருக்கட்டும் மாமா" என நான் சொன்னதை காதில் வாங்காமல்... "ஏலேய் பயலுகளா... மேல கிடக்குற மடக்கு கட்டுல எடுத்துப் போடுங்கடா. மாமா நின்னுக் கிட்டிருக்கறது தெரியல" என்றார்.

''நான் கீழயே படுத்துக்கிறேன் மாமா'' என 'இன்று இரவு இங்கதான் தங்கல்' என்பதை சூசகமாகச் சொன்னேன்.

''கட்டிலு எதுக்கு இருக்கு. அதுல படுங்க'' என்றபடி... மகன்கள் இறக்கிக் கொடுத்த மடக்கு கட்டிலை விரித்துப் போட்டு, ''உட்காருங்க மாப்ள'' என்றார்.

''டேய் பசங்களா... சிந்தாமணி டாக்கீஸ் பக்கத்துல இருக்க பிரியாணிக் கடையில நான் சொன்னேன்னு சொல்லி நல்ல பிரியாணியா வாக்கிக்கங்கடா. சுக்கா வறுவல் இருந்தா சூடா ரெண்டு பொட்டலம் வாங்கிக்கங்க'' என்றவர் என் பக்கம் திரும்பி ''மாப்ள முட்ட சாப்பிடுவீகள்ல?'' எனக் கேட்டார்.

வார்த்தையில் சொன்ன பிரியாணிக்கும், சுக்காவுக்கும் எச்சி ஊறியது. பசியில் காது ரொம்பவே அடைத்தது. 'சாப்பிடுவேன் மாமா' என்றேன்.

'ஓடுங்கடா... பிரியாணி, சுக்கா வறுவல், முட்ட...' மறந்துராம வெரசா வாங்கிக்கிட்டு வாங்க'' என்றார்.

எல்லா ஐட்டமும் வந்தது. திருப்தியாகச் சாப்பிட்டேன். பசி அடங்கியது. '''பொய் சொல்லி போஜனம்கிறது இது தானோ?' என நினைத்துக் கொண்டாலும் பொய் சொன்னதால் தூக்கம் வரவில்லை. 'எப்படா விடியும்?' என இருந்தேன்.

அதிகாலை நான்கு மணி.

சொல்லாமல் கூட ஜெட் வேகத்தில் கிளம்பி வந்து எங்கள் ஊருக்குப்போகும் பஸ்ஸில் ஏறி உட்கார்ந்தேன்.

வீட்டுக்கு வந்து அண்ணனிடம் 'மாமா வீட்டுக்குப் போனேன்' என்பதை மட்டும் சொல்லிவிட்டு, செலவுக்குப் பணம் வாங்கிக்கொண்டு அன்று இரவே சென்னைக்குக் கிளம்பினேன்.

இரண்டு மாதம் கடந்த நிலையில்... ஊரிலிருந்து கல்யாணப் பத்திரிகை தபால் மூலம் வந்திருந்தது.

''யாருக்கு கல்யாணம்? முக்கியமானவங்கன்னா ஊருக்குப் போகணுமே... காசு ரெடி பண்ணணுமே'' என எனக்கு நானே பேசிக்கொண்டபடி கல்யாணப் பத்திரிகையை பிரித்துப் பார்த்தேன்.

அது என்னோட கல்யாணப் பத்திரிகை.

குஷியும், குழப்பமுமாய்... பத்திரிகையினூடே என் அண்ணன் எழுதியிருந்த கடிதத்தைப் படித்தேன்.

'உனக்கும் புஷ்பவல்லிக்கும் கல்யாணம். உன் எதிர்காலத்தை கருத்தில்கொண்டே நாங்கள் கூடிப்பேசி இந்த முடிவை எடுத்திருக்கோம். உடனே புறப்பட்டு வந்துவிடு' என கடிதத்தில் இருந்தது.

என் முதலாளி சுந்தர்ராம அய்யரிடம் விஷயத்தைச் சொல்லி அட்வான்ஸ் கேட்டேன்.

350 ரூபாய் கொடுத்தார். அதை வாங்கிக்கொண்டு ஊருக்கு வந்து அண்ணனிடம் கொடுத்தேன். அண்ணன் அதனுடன் 150 ரூபாய் சேர்த்துப் போட்டார்.

500 ரூபாயில் மதுரை மீனாட்சியம்மன் கோவிலில், ஆரவாரமாக, அமர்க்களமாக, உறவினர்கள் புடைசூழ 21.01.1959-ல் எனக்கும், புஷ்பவல்லிக்கும் திருமணம் நடந்தது.

35 ரூபாய் சம்பளம் வாங்கிக்கொண்டு 100 ரூபாய் சம்பளம் என 65 ரூபாய் பொய் சொன்னதன் விளைவு... திருமணமாகி வந்த மறு மாதமே பத்து ரூபாய் வாடகை கொடுக்க முடியாமல், அடமானம் வைப்பதற்காக 'அந்த மூக்குத்தியை கழட்டிக் குடு' என்றேன் மனைவியிடம்.

"ஏன்?"”

"வாடகை குடுக்கணும்"

"அப்ப உங்களுக்கு நூறு ரூபா சம்பளமில்லையா?"

'இல்லை' என்பதாக தலையாட்டினேன்.

வெறுப்பான என் மனைவி "மகராசன் நீ, நூறு ஆயுசுக்கு நல்லா இருப்ப" என்றார்.

"நான் எப்படி வேணாலும் இருந்துட்டுப்போறேன். மூக்குத்தியக் குடு" என வாங்கிப் போய் அடகு வைத்து வாடகை கட்டினேன். நான்கு பெண் குழந்தைகள், இரண்டு ஆண் குழந்தைகளைப் பெற்றோம்.

பேரன், பேத்திகள் 13 பேர்கள், கொள்ளுப்பேரன் பேத்திகள் 7 பேர்கள் என தனி நாடு கேட்கிற அளவுக்கு... அம்புட்டு கூட்டமாகிவிட்டது.

சீக்கிரமே ஃபேமிலி மாநாடு நடத்திட வேண்டியதுதான்.

கவி.கே.பி.காமாட்சி சுந்தரம் குறித்து நான் ஏற்கனவே, என் ஆரம்ப கால சென்னை வாழ்க்கையை ஒட்டி பல விஷயங்களைச் சொல்லியிருக்கிறேன்.

அவருக்கு இல்வாழ்க்கை எப்படி அமைந்தது? அவரின் இறுதிக் காலம் எப்படி இருந்தது?

மிகவும் உணர்ச்சிமயமான அந்தச் சம்பவங்களைச் சொல்கிறேன்.

# திருமண மேடையைத் தீர்மானித்த நாடக மேடை!

எனது ஒன்றுவிட்ட சகோதரரான கவி கே.பி.காமாட்சி சுந்தரம் குறித்து நான் ஏற்கனவே பல விஷயங்களை உங்களுடன் பகிர்ந்திருக்கிறேன்.
நாடக உலகின் முன்னோடியும், நடிகர் எம்.கே.ராதாவின் தந்தையுமான கந்தசாமி முதலியாரின் நாடகக் கம்பெனியில் செல்வாக்கான ஹீரோவாக திகழ்ந்தவர். மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியிலிருந்து விலகிய எம்.ஜி.சக்கரபாணியும், எம்.ஜி.ஆரும் கந்தசாமியின் கம்பெனியில் சேர வந்தபோது சில காரணங்களால் கந்தசாமி முதலியார் நிராகரிக்க... இருவரையும் தனது செல்வாக்கால் கம்பெனியில் சேர்த்துவிட்டவர் காமாட்சி.

'புது பெண்ணின் மனதைத் தொட்டுப் போறவரே... உங்க எண்ணத்தைச் சொல்லிவிட்டுப் போங்க', 'ஓ ரசிக்கும் சீமானே', 'தேனூறும் வண்டு மாமலரைக் கண்டு', 'சிற்பி செதுக்காத பொற்சிலையோ', 'உன்னை உன் கண் ஏமாற்றினால் என்மேல் கோபம் உண்டாவதேன் டடடா டடா...' உள்ளிட்ட எழுபதுக்கும் மேற்பட்ட காலத்தால் அழியாமல் ஒலிக்கும் பாடலை எழுதியவர். 'பராசக்தி' படத்தில்' கோவில் பூசாரியாக நடித்தும் புகழ்பெற்றார்.

காமாட்சி இறந்தபோது... அவரின் உடலை எம்.ஜி.ஆரும், கலைவாணரும் வீட்டிலிருந்து சுடுகாடுவரை சுமந்துவந்தனர். இதையெல்லாம் விலாவாரியாக ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். மேலும் பல விஷயங்களை இப்போது பகிர்ந்து கொள்கிறேன்.



நாடகங்களில் சுமார் ஆயிரம் பாடல்களைப் பாடிய அனுபவத்தால்தான் கவிஞராக உருவெடுத்தார் காமாட்சி.

அறிஞர் அண்ணா கதை-வசனம் எழுதிய 'ஓர் இரவு' படத்தில் காமாட்சி எழுதிய பாடல் ஒன்று அவரின் சமத்துவ சிந்தனைக்கு சாட்சி.

'என்ன உலகமடா இது ஏழைக்கு நரகமடா

தன்னலப் பேய்களுக்கே இது தங்கச் சுரங்கமடா

கட்டத்துணியின்றி மக்கள் கந்தலாடை பொறுக்குகின்றார்

மொட்டைக்கதவு ஜன்னலெல்லாம் பட்டாடை போர்த்துகின்றார்

பானையில் கஞ்சியின்றி மக்கள் பட்டினியால் வாடு கின்றார்

வீணர்கள் தின்று மிஞ்சி வீதியிலே போடுகின்றார்...'

....இப்படியாக ஏழைகள் நிலையை பாட்டில் வைத்தார் காமாட்சி.

சாராயம் குடிக்கும் பழக்கம் மட்டும் அவரிடம் இல்லாமல் இருந்திருந்தால் ஆயிரம் பாடல்களை எழுதியிருப்பார். ஆனால் அந்தக் கொடுப்பினைதான் அவருக்கும் இல்லை... நமக்கும் இல்லாமல் போய்விட்டதே.

கந்தசாமி முதலியாரின் நாடகக் கம்பெனி மெட்ராஸுக்கு இடம் பெயர்ந்து, வால்டாக்ஸ் ரோடு ஒற்றைவாடை தியேட்டருக்கு வந்து சேர்ந்து நாடகங்களை நடத்திக்கொண்டிருந்தது.

நாடகக் கலைஞர்கள் பலரும் சந்திக்கக் கூடிய இயற்கையான பிரச்சினை... ''மகரக்கட்டு உடைதல்' எனும் குரல் உடையும் நிகழ்வுதான்.

மகரக்கட்டு உடைவதால் அதுவரை பாடி நடித்த கலைஞர்களால் பாட முடியாது. நாடக உலகிலிருந்து விலகி, வேறு வேலைக்குப் போய்விடுவார்கள். நடிப்புலகில் இருந்து விலக விரும்பாதவர்கள் துணை நடிகர்களாக காலம் தள்ளுவார்கள். காமாட்சிக்கும் அப்படி ஒரு நிகழ்வு ஏற்பட்டது. கதாநாயகனாக, பாட்டுத் திறத்துடன் வளைய வந்தவருக்கு மகரக்கட்டு உடைந்தது.

இதனால் மனமுடைந்தவர் இரவெல்லாம் தூங்காமல்... மிக அதிகாலையில் பெட்டிப் படுக்கையுடன் நாடகக் கம்பெனியைவிட்டு புறப்பட்டுவிட்டார். காமாட்சி இப்படி ஒரு முடிவை எடுப்பார் என தன் அனுபவத்தில் கண்டு வைத்திருந்த கந்தசாமி முதலியார் இதைக் கவனித்துவிட்டார்.

"என்ன காமாட்சி? எங்கே பயணம்?"

"என் சொந்த ஊரான மதுரைக்கே போலாம்னு கிளம்பிட்டேன்"

"நீ எதனால் இப்படி ஒரு முடிவை எடுத்திருக்கேனு தெரியும். எக்காரணம் கொண்டும் நீ என்னை விட்டுப் போகவேண்டாம். நம்ம கம்பெனியில் நாடகம் நடத்துவதில் ஒரு புதுமையைக் கொண்டுவர முடிவு செய்திருக்கேன். ஸ்ரீமுருகன் டாக்கீஸ்ல ஒரு இங்கிலீஷ் படம் ஓடுது. நீ எல்லாரையும் கூட்டிக்கிட்டுப் போய் அந்தப் படத்தைப் பார்த்திட்டு வா. அதிலுள்ள சில விஷயங்களை மட்டும் எடுத்துக்கிட்டு கதை செய்து, சமூக நாடகம் நடத்துவோம். அதற்கு முன்பாக, உன்னோட பாகவதர் முடியை வெட்டிட்டு கிராப் வைத்துக்கொள்''’எனச் சொல்ல...

முதலாளி சொன்னபடி செய்தார் காமாட்சி.

அந்த இங்கிலீஷ் படத்தில் வில்லன் வாயில் இருக்கும் சிகரெட்டை ஹீரோ சவுக்கால் சுண்டி இழுத்து தன் கையில் வரவைப்பான். இந்த ஸீன் ஹைலைட்டாக இருந்தது. நாடகத்திலும் இந்த ஸீனை வைக்க முடிவு செய்ததால் நிறைய பயிற்சி எடுத்து ஸ்டைலாக சவுக்கால் சிகரெட்டை எடுக்கப் பழகிவிட்டார் காமாட்சி.

'முதல் சமூக நாடகம்' என மெட்ராஸ் முழுக்க விளம்பரம் செய்யப்பட்டதால் நாடகம் பார்க்க முதல்நாளே கட்டுக்கடங்காத கூட்டம்.

முன்வரிசையில் அமர்ந்து நாடகத்தை ரசித்துக்கொண்டி ருந்தார் தனவந்தர் நடேச முதலியார்.

சிகரெட்டை லாவகமாக சவுக்கால் எடுக்கிற காட்சியை... காமாட்சி செய்தபோது... நாடக கொட்டகையே கரகோஷத்தால் அதிர்ந்தது.

காமாட்சி நடிப்பில் அசந்துபோன நடேச முதலியார் தன் அருகே இருந்தவரிடம் ‘ஹீரோவா நடிக்கிறவரு முதலியார் சாதியா?' எனக் கேட்க... நாடகம் பார்க்கிற சுவராஸ்யத்தில் இருந்த அந்த நபர் 'ஆமாம்' என்பதுபோல தலையாட்டி விட்டார்.

நாடகம் முடிந்ததும் மேடையேறிய நடேச முதலியார், தன் கழுத்தில் கிடந்த தங்கச் சங்கிலியை கழற்றி, காமாட்சியின் கழுத்தில் அணிவித்துவிட்டு 'நீ நம்ம சாதியாமே! நம்ம ஆளு இப்படி நடிக்கிறதில் எனக்குப் பேரானந்தம். நாளைக்கே என் வீட்டில் உனக்கு விருந்து' எனச் சொல்ல...

'நாம அகமுடைய தேவராச்சே. முதலியார்னு நினைச்சு தங்கச் சங்கிலியப் போட்டுட்டாரே' என யோசித்த காமாட்சி, 'ஐயா உங்க வீட்ல விருந்து சாப்பிடனும்னா எங்க முதலாளிகிட்ட அனுமதி கேட்கணும்' என்றார்.

கந்தசாமி முதலியாரும் அனுமதியளித்தார்.

அதன்படி காமாட்சி, தன் நாடக நண்பர்கள் மூவருடன் விருந்துக்குச் சென்றார். சாதாரண விருந்தல்ல... அமர்க்களமான விருந்து.

நடேச முதலியார், தன் தம்பி சுப்பிரமணிய முதலியாரிடம் "தம்பி... இந்தப் பையனுக்கு என் பொண்ணு ஆண்டாளை கொடுக்க முடிவு செஞ்சிருக்கேன். ‘சம்மதமா?னு அந்தப் பையன்கிட்ட கேட்டுச் சொல்"’என்று சொல்ல...

"என் அண்ணனுக்கு ஒரே மகள் ஆண்டாள். அதோ... அந்தப் பொண்ணுதான். மகளை உங்களுக்கு கட்டிக் கொடுக்க அண்ணன் விரும்புறார். எனக்கும் இதில் சந்தோஷம். நீங்க என்ன சொல்றீங்க?" எனக் கேட்க...

"ஐயா நீங்க நினைக்கிற மாதிரி நான் முதலியார் இல்லை. அகமுடையதேவர்" என காமாட்சி சொல்லிவிட்டார்.

அங்கு கனத்த மௌனம் நிலவியது. பிறகு...

"அதனால என்ன காமாட்சி? முதலியாரும், அகமுடையாரும் ஒண்ணுதான். நீ வேணும்னா பச்சையப்பன் கல்லூரிக்குப் போய்ப் பாரு. 'அகமுடைய முதலியார் பச்சையப்பன் கல்லூரி' னுதான் அங்க போட்டிருக்கும்" என நடேச முதலியார் சொன்னார்.

"என் அண்ணன் சொல்றது உண்மைதான். இப்போ உங்களுக்கு சம்மதம்தானே?" என சுப்பிரமணிய முதலியார் கேட்க... தயக்கத்துடன் சம்மதித்தார் காமாட்சி.

காமாட்சியிடம் அவரின் குடும்பத்தைப் பற்றி விசாரித்தனர்.

"மதுரை எங்க ஊர். நான் குடும்பத்துக்கு மூத்தவன். தம்பிகள் ரெண்டுபேர். ஒரு சகோதரியும் உண்டு. ஏழ்மையான குடும்பம். அதனால்தான் சிறுவயதிலேயே ஊரைவிட்டு வெளியேறி நாடகக் கம்பெனியில் சேர்ந்துவிட்டேன். இதற்குமேல் சொல்லிக்கொள்ளும்படி எதுவுமில்லை" என்றார் காமாட்சி.

"எங்க பெற்றோர் ரத்னசபாபதி முதலியார்-லட்சுமி யம்மாள். பூர்வீகம் ஆற்காடு. ரொம்ப வசதியான குடும்பம். நான்கு பிள்ளைகள். அண்ணன் நடேச முதலியார். ரெண்டாவது நான். இளையவன் குமரகுரு அர்த்தநாரீஸ்வரர் மாதிரி (திருநங்கை). ஒரு தங்கை. எங்க குடும்பத்தில் நான் மட்டுமே படித்தவன். என் அண்ணன் மனைவி தனலட்சுமியம்மாள். அவர்களின் ஒரே மகள் ஆண்டாள். என் மனைவி நாகரத்தினம்மாள். எங்கள் மகள் கோகிலாம்பாள். வெள்ளைக்கார துரைமார்கள் எங்களுடன் நெருங்கிய நட்பு பாராட்டினர்.

எங்களுக்கு ஏகப்பட்ட நிலபுலன் இருந்தது. மெட்ராஸ், மெரீனா கடற்கரையோரம் எங்களுக்கு சொந்தமாக 16 ஏக்கர் நிலம் இருந்தது. அங்கே கல்வி நிறுவனம் கட்டுவதற்காக வெள்ளையர் அரசு அந்த இடத்தைக் கேட்டது. உடனே அதை தானமாக எழுதிக் கொடுத்துவிட்டோம். (புகழ் பெற்ற ராணிமேரிக் கல்லூரி அமைந்துள்ள இடம்) எங்களுக்கு தேவையான வசதிகள் இருக்கு. இருந்தும் என் அண்ணன் உங்களுக்கு தன் பெண்ணை கட்டிக்கொடுக்க விரும்புவது ஏன்னா... அவர் ஒரு கலைப்பிரியர். உலகப் புகழ்பெற்ற அறிவுக் களஞ்சியம் எனப்பட்ட ஷேக்ஸ்பியர் இறந்தபோது, அவர் உடலை தேவாலயத்தில் புதைக்க எதிர்ப்பு கிளம்பியது. 'நம்மைப் போன்ற பிரபுக்கள் இறந்தால் புதைக்கப்படும் இடத்தில், கேவலமான நாடகத் தொழில் செய்யும் ஷேக்ஸ்பியரை புதைக்கக்கூடாது' என எதிர்ப்பு வந்ததாம். இதை துரைமார்கள் எங்களிடம் சொல்லியிருக்காங்க. நாடகக் கலைஞர்களுக்கு எல்லா இடத்திலும் பெரிய மரியாதை இருப்பதில்லை. ஆனாலும் உங்களை மருமகனாக்கிக் கொள்ள அண்ணன் விரும்புவது நீங்க செய்த பாக்கியம்" என சுப்பிரமணிய முதலியார் சொன்னார்.

காமாட்சி-ஆண்டாள் திருமணம் நடந்தது.

குடும்பத்தில் உண்டான ரணகளம்.

# சாமியாரான கவிஞர்!

தனவந்தர் நடேச முதலியாரின் விருப்பத்தின் பேரில் அவரின் மகள் ஆண்டாளுக்கும், கவி கே.பி.காமாட்சி சுந்தரத்திற்கும் திருமணம் நடந்தது. மாமனாரின் வீட்டிலேயே தன் குடும்பத்தையும் நடத்தி வந்தார் காமாட்சி. ஒரு வருடத்திற்குள்... ஏதோ ஒரு வியாபாரத்தில் நொடித்து நடேச முதலியாரின் சொத்துக்கள் போய்விட்டன. அடுத்த கொஞ்ச நாட்களில் மாரடைப்பால் காலமானார் நடேசமுதலியார்.
கர்ப்பிணி மனைவி, மாமியாருடன் வாடகை வீட்டில் குடியேறினார் காமாட்சி. சென்னையில் குடும்பம் நடத்துவது ரொம்ப சிரமமாகவே இருந்தது.

மதுரையில் இருக்கும் தன் பெற்றோரைப் பார்த்து நடந்ததைச் சொல்லி 'உங்களுக்குத் தெரியாம திருமணம் செய்து கொண்டதற்காக மன்னியுங்கள்' என கேட்க முடிவு செய்த காமாட்சி, தன் மாமியாரை நண்பர் ஒருவரின் வீட்டில் விட்டுவிட்டு, ஒன்பது மாத கர்ப்பிணி மனைவியை அழைத்துக் கொண்டு மதுரை சென்றார். கூடவே ஆண்டாளுக்கு அண்ணன் முறையுள்ள தனபால் முதலியாரையும் அழைத்துச் சென்றார்.

வீட்டுக்கு வந்த காமாட்சியை வாசலிலேயே நிறுத்தினார் அவரின் கோபக்கார அப்பா.

"யார்ரா இந்தப் பொண்ணு?"

"என்னோட மனைவி. பேரு ஆண்டாள். பெரிய செல்வந்தரோட மகள். இப்போ குடும்பம் நொடிச்சுப் போச்சு. இவளோட அப்பா இறந்துபோயிட்டார்."

"வாயை மூடுடா கழுத. என் தங்கச்சி மகள ஒனக்கு கட்டி வைக்கணும்னு ரெண்டு வருஷமா கட்டிக்காத்து வச்சிருக்கேன். கல்யாணச் செலவுக்கு என் தங்கச்சி ரெண்டாயிரம் ரூபா கொடுத்துச்சு. அதை வச்சு, நம்ம வீட்டுமேல இருந்த கடனை அடைச்சேன். உன்னை நம்பித்தானடா

இம்புட்டும் செஞ்சேன். இப்போ வேறு சாதிக்காரிய கூட்டிவந்து 'இவதான் என் பொண்டாட்டி'ங்கிறியே? அந்த முதலியார் மக வேணவே வேணாம். கொண்டுபோய் அவங்க வீட்டுல விட்டுட்டு வந்துடு. பரதேசிப்பய மகள கூட்டி வந்துட்டு கதையா அளக்கிற?'' எனச் சொல்லியபடி முதலியார் சாதியைப் பற்றியும் கடுமையாக திட்டித் தீர்க்க...

பொறுமையிழந்தார் தனபால் முதலியார்.

'தேவரே... நாக்க அடக்கிப் பேசுங்க. ஆற்காடு ரத்ன சபாபதி முதலியார் பேரைச் சொன்னாலே மக்கள் கையெடுத்து கும்பிடுவாங்க. அவ்வளவு பேரானவரு ஆண்டாளோட தாத்தா. மெட்ராஸ்ல காலேஜ் கட்டுறதுக்காக 16 ஏக்கர் நிலத்தை வெள்ளைக்காரனுக்கே தானமாத் தந்தவரு' (குயின் மேரீஸ் காலேஜ்) எனச் சொல்ல...

'அதான் இப்போ பிச்சை எடுக்க விட்டுட்டாரா பொசகெட்ட முதலி' என காமாட்சியின் அப்பா எகத்தாளம் பேச...

இருவரும் அடித்து உருள ஆரம்பித்துவிட்டார்கள். அவர்களை விலக்கிவிடப் போன காமாட்சியை அடிப்பதற்காக காமாட்சியின் அப்பா பலமாக கையை ஓங்கினார். காமாட்சி விலகிக் கொள்ள... பின்னால் நின்றிருந்த ஆண்டாளின் மீது அந்த அடி பலமாகப்பட்டது.

ஒன்பது மாத கர்ப்பிணியான ஆண்டாள் அடி பொறுக்கமாட்டாமல் சுருண்டு விழுந்து அலறியபடி மூர்ச்சையானார்.



பதறிப்போன காமாட்சி, மனைவியை மடியில் கிடத்தி தேற்றினார். அப்பாவை நோக்கி மிகக் கோபமாக... “நீயெல்லாம் ஈவு இரக்கமில்லாத

மிருகம். வாயும் வயிறுமா வந்தவள சாதியச் சொல்லி கேவலப்படுத்திட்டியே. செத்தாலும் ஒங்க முகத்துல முழிக்கமாட்டேன். இந்த மதுர மண்ணையும் மிதிக்கமாட்டேன்'' எனச் சொல்லிவிட்டு மனைவியை அழைத்துக் கொண்டு சென்னைக்குப் புறப்பட்டார் காமாட்சி.

சில நாட்களில் ஆண்டாளுக்கு பெண் குழந்தை பிறந்தது. அடுத்த சில நாட்களில் ஆண்டாள் இறந்துபோனார்.

காமாட்சி தன் தலையில் இடி விழுந்ததுபோல உணர்ந்தார். பித்துப் பிடித்தவராக மாறி... அன்று முதல் சாராயம் குடிக்க ஆரம்பித்தவர், அந்த சாராயம் தன் உயிரை எடுக்கும்வரை குடிப்பதை நிறுத்தவேயில்லை.

குழந்தைக்கு சரஸ்வதி என பெயரிட்டு மாமியார் தனலட்சுமி அம்மாள் வளர்த்து வந்தார். சரஸ்வதி பெரிய மனுஷி ஆகிவிட்டாள்.

'மருமகன் இப்படியே பித்துப் பிடிச்ச மாதிரி இருந்தா நாளைக்கி சரஸ்வதிக்கு மாப்பிள்ளை கிடைப்பதில் சிக்கல் வருமே' என கவலைப்பட்ட தனலட்சுமி அம்மாள், ‘மருமகனுக்கு இன்னொரு கல்யாணம் பண்ணி வச்சா மறுபடி பொறுப்பா வந்திடுவார்’ என முடிவு செய்து, ஒரு தாயின் மனநிலையில் மருமகனுக்கு பெண் தேடினார்.

வேலூர் மாவட்டம் காவேரிப்பாக்கத்திலுள்ள அய்யம்பேட்டைசேரி என்கிற கிராமத்தைச் சேர்ந்த கண்ணம்மா என்கிற தன் உறவுக்காரப் பெண்ணைப் பேசி திருமணம் செய்து வைத்தார்.

கண்ணம்மாவுக்கு ஊரில் அரை ஏக்கர் நிலம் இருந்தது. அதில் விவசாயம் செய்துவந்தார். காமாட்சியும் அந்த ஊரிலேயே தங்கினார்.

காமாட்சி-கண்ணம்மா தம்பதிக்கு முதல் குழந்தை ஊனமாகவும், ஊமையாகவும் பிறந்தது. மல்லாந்து படுத்த நிலையிலேயே இருக்கும் அந்தக் குழந்தை. அதை பராமரிக்கவே கண்ணம்மாவுக்கு பொழுது சரியாக இருந்தது. அடுத்து பாண்டியன் என்கிற மகனும், கண்ணகி என்ற மகளும் பிறந்தனர்.

குடும்பத்தைக் கவனித்துக்கொண்டு கண்ணம்மா ஊரிலேயே இருக்க... காமாட்சி மெட்ராஸ் வந்து கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணனின் நாடகக் கம்பெனியில், பாடல் எழுதுவதுடன், நாடக மேற்பார்வையாளராகவும் வேலை செய்துவந்தார். என்.எஸ்.கே.வுக்கு அனைத்து ஆலோசனைகளையும் வழங்கி குருநாதராகவே இருந்தார் காமாட்சி.

இந்தச் சமயம்... தியாகராஜ பாகவதரும், என்.எஸ். கே.வும் லட்சுமிகாந்தன் கொலை வழக்கில் சம்பந்தப் படுத்தப்பட்டு சிறைசென்றனர்.

எஸ்.வி.சகஸ்ரநாமம் கதை-வசனம் எழுதிய ‘பைத்தியக் காரன்' நாடகத்தை என்.எஸ்.கே.வின் மனைவி டி.ஏ.மதுரம் நடத்தி வந்தார். என்.எஸ்.கே.வின் சிறைவாசம், காமாட்சியை கவலை கொள்ள வைத்தது. அதனால் அய்யம்பேட்டைசேரி கிராமத்திற்கே வந்துவிட்டார்.

மனம் வெறுத்து, காவி உடுத்தி, நீண்ட தலைமுடி வளர்த்து, சாமியாராகவே மாறிவிட்டார். ஊருக்கு வெளியே இருந்த ஆலமரத்தடியில் புலித்தோலில் அமர்ந்து தவம் செய்துவந்தார்.

சிறையிலிருந்து வெளியே வந்த என்.எஸ்.கே. "எங்க... காமாட்சி அண்ணனைக் காணோம்?" என விசாரித்தபோது... “அவரு சாமியாராகிட்டார். மனைவியோட கிராமத்தில் இருக்கார்" எனச் சொன்னார்கள்.

பதறிப்போய் காரை எடுத்துக்கொண்டு அய்யம்பேட்டை சேரிக்கு வந்தார்.

அடையாளம் தெரியாத அளவுக்கு மாறிப்போயிருந்த காமாட்சியைக் கண்டு திடுக்கிட்டார்.

"என்னண்ணே.. இது கோலம்?"

"தம்பி... நீ ஜெயிலுக்குப் போனதால் என்னால் அந்த துயரத்தை தாங்க முடியவில்லை. குடும்ப கஷ்டம் வேற. என் மூத்த தாரத்து மகள் சரஸ்வதிக்கு மாப்பிள்ளை அமைஞ்சிருப்பதாகவும் நகை செய்ய பணம் வேணும்னும் என் மாமியார் வந்து சொல்லீட்டுப் போனாங்க. பிச்சைக்காரனான என்னால் பதில் சொல்ல முடியல. உனக்குத் தெரியும் தம்பி... என் மாமனார் குடும்பம் காலேஜ் கட்ட 16 எக்கர் நிலத்தை தானம் பண்ணுச்சு. ஆனா... அவரோட பேத்திக்கு ஒரு பவுனு போட முடியல. வாழ்க்கையே வெறுத்துப் போச்சு. அதான்... சாமியார் ஆகிட்டேன்."

"அண்ணே... நீங்க கவிஞர். கவலைப்படக்கூடாது. 'பைத்தியக்காரன்' நாடகத்தை நான் படம் எடுக்கப்போறேன். நீங்கதான் பாட்டெழுதணும். இப்ப என்கூட மெட்ராஸ் வர்றீங்க'''என காரில் காமாட்சியை ஏற்றிக்கொண்டு காவேரிப்பாக்கம் வந்த என்.எஸ்.கே., அங்கே சலூனில் காமாட்சிக்கு முடிவெட்டச் செய்து, காவி உடையை கழற்றி வீசச்

சொல்லிவிட்டு, புத்தாடை வாங்கிக் கொடுத்து அணியச் செய்தார். மறுபடி தோற்றத்தில் ஜம்மென்று ஆனார் காமாட்சி.

அய்யம்பேட்டைசேரியில் உள்ள காமாட்சியின் மனைவி, குழந்தைகளுக்கு புதுத்துணியும், பலகாரங்களும் வாங்கிக்கொண்டு வீட்டுக்கு அழைத்துவந்தார் என்.எஸ்.கே.

அதை கண்ணம்மாவிடம் கொடுத்துவிட்டு, குடும்பச் செலவுக்கு பணமும் கொடுத்துவிட்டு காமாட்சியை மெட்ராஸுக்கு அழைத்துச் சென்றார் என்.எஸ்.கே.

'பைத்தியக்காரன்' படம் தயாரிக்கப்பட்டது. காமாட்சி ஒரு பாட்டு எழுதினார். படம் வெற்றி பெற்றது.

அடுத்து... அறிஞர் அண்ணாவின் கதை-வசனத்தில், இரட்டை இயக்குநர்கள் கிருஷ்ணன் -பஞ்சு இயக்கத்தில் ''நல்லதம்பி''படத்தை எடுத்தார் என்.எஸ்.கே.

''இந்தப் படத்தில் நானும் மதுரமும் இந்திரலோகம் சென்று 'தமிழ்நாட்டில் மதுவை ஒழித்துவிட்டோம். இந்திரலோகத்தில் மதுவை ஒழிக்கணும்' என பிரச்சாரம் செய்வோம். இதற்கு நீங்க ஒரு பாட்டு எழுதணும். இந்திரனாகவும் நடிக்கணும்'' என என்.எஸ்.கே., சொல்ல... அதன்படியே பாட்டு எழுதி, நடிக்கவும் செய்தார் காமாட்சி.

'நல்லதம்பி' படமும், அந்த பாடலும் சக்கைப்போடு போட்டன.

'குடிச்சுப் பழகணும்

படிச்சுப் படிச்சு சொன்னாலும்

பாழும் கள்ளை நீக்கி -பாலை

குடிச்சுப் பழகணும்'

-என்கிற அந்தப் பாடல் காமாட்சிக்கு பெரும் புகழைத் தேடித்தந்தது.

இந்தச் சமயத்தில்தான் 'பராசக்தி'யில் பூசாரியாக நடிக்கும் வாய்ப்பும், 'புதுப் பெண்ணின் மனதைத் தொட்டு', 'ஓ ரசிக்கும் சீமானே' பாடல்களை எழுதும் வாய்ப்பும் காமாட்சிக்கு வந்தது. 'எதிர்பாராதது', 'ஓர் இரவு' படங்களுக்கு பாட்டெழுதினார். கண்ணதாசன் கதை-வசனம் எழுதிய 'நானே ராஜா' படத்திற்கும் பாட்டெழுதினார்.

பணம் வரவர... அதையெல்லாம் குடித்துக் குடித்தே அழித்துக்கொண்டிருந்தார் காமாட்சி.

வறுமை என்கிற புயலில் சிக்கிச் சுழன்ற கவிஞனின் கண்ணீர் தருணங்கள்...

# மரணத்தில் தள்ளிய வறுமை!

'மெட்ராஸில் இருந்தாத்தான் பாட்டெழுத வாய்ப்பு வரும். பாட்டெழுதினால்தான் பணம் வரும். பணம் வந்தால்தான் சாராயம் குடிக்க முடியும்.' இதற்காகவே... இரண்டாம் தாரமான கண்ணம்மாவும், குழந்தைகளும் இருக்கும் அய்யம்பேட்டைசேரி கிராமத்திற்குச் செல்லாமல் மெட்ராஸிலேயே தங்கினார் கவி கே.பி.காமாட்சிசுந்தரம். பாமா என்கிற பிராமணப் பெண்ணும், அனாதையான பாமாவுக்கு உதவியாக குப்பம்மாள் என்ற பாட்டியும் வீடுகளில் சமையல் வேலை செய்துவந்தனர். அப்படித்தான் காமாட்சியின் வீட்டிலும் சமையல் வேலை செய்தனர். ஒரு கட்டத்தில் அந்த இருவரும் காமாட்சியின் வீட்டிலேயே தங்கவேண்டி வந்தது. தாலி கட்டாமலே பாமாவுக்கு வாய்மொழியாக உறுதிமொழி கொடுத்து மூன்றாம் தாரமாக்கிக்கொண்டார் காமாட்சி. ஒரு பெண் குழந்தை பிறந்தது. மணிமேகலை என பெயரிட்டனர்.
தி.நகர் துக்காராம் தெருவில் வசித்து வந்தனர். வீட்டு வாடகை தர முடியாமல், வறுமையில் சிரமப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில்தான்... 1953-ல் நான் காமாட்சியை சந்தித்தேன்.

('மதுரை மண்ணையே மிதிக்கமாட்டேன்னு வைராக்கியமா இத்தனை வருஷம் இருந்தேன். இத்தனை வருஷத்துக்குப் பின்னாடி என் சொந்தம் என்னை தேடி வந்திருக்கா?'' என வியந்து என்னை வரவேற்ற காமாட்சி, அடுத்த நிமிஷமே என் கை விரலில் கிடந்த மோதிரத்தை வாங்கி அடகு வைத்ததையும், இப்போது தி.நகர் போலீஸ் ஸ்டேஷனாக இருக்கும் இடத்தில் அப்போது புதர் மண்டியிருந்ததையும், அங்கே சென்று சாராயம் வாங்கி வர என்னை அனுப்பியதையும், ஏவி.எம். ஸ்டுடியோவில் நடிகர் திலகம் சிவாஜியிடம் என்னை சுட்டிக்காட்டி 'கணேசா... நடிப்புல உன்னை வின் பண்றதுக்கு என் தம்பி பாலகிருஷ்ணன் வந்திருக்கான்' என அறிமுகப்படுத்தியதையும், ''நாடோடி மன்னன்''படத்தில் ஒரு பாட்டெழுதுவதற்காக எம்.ஜி.ஆர் வரச் சொன்ன போது, காமாட்சி

குடித்துவிட்டுப் போனதையும், குடிப்பவர்களை ஒருபோதும் அங்கீகரிக்காத எம்.ஜி.ஆர்., காமாட்சியை திருப்பி அனுப்பியதையும்... ஏற்கனவே நான் விலாவாரியாகச் சொல்லியிருக்கிறேன்.)

அப்போதெல்லாம் உயர் ஜரிகை வேலைப்பாடுடைய பட்டுச்சேலை, பட்டு வேஷ்டிகளை அடமானம் வைக்கிற பழக்கம் இருந்தது. தன் முதல் மனைவி ஆண்டாளை காமாட்சி மணந்தபோது... அவரின் மாமனார் நடேச முதலியார் காமாட்சிக்கு விலை மதிப்புள்ள கல்யாண பட்டு வேஷ்டி வாங்கிக் கொடுத்திருந்தார். எந்த வறுமையிலும் அதை அடகு வைக்காமல் பொக்கிஷம் போல் பாதுகாத்து வந்தார் காமாட்சி.

ஒருநாள்...

அரிசி வாங்க காசில்லாமல் "அந்த பட்டு வேஷ்டியை அடகு வைக்கலாம்" என பாமா சொல்ல... ஆத்திரமான காமாட்சி, பாமாவை அடித்து நொறுக்கிவிட்டார்.

"இதை என் ஆண்டாள் நினைவா வச்சிருக்கேன். எக்காரணம் கொண்டும் நான் சாகும் வரைக்கும் இந்த வேஷ்டியை அடமானம் வைக்கவோ, விற்கவோ கூடாது" என திட்டவட்டமாகச் சொல்லிவிட்டார் காமாட்சி.



இந்நிலையில்... காமாட்சி, ஆண்டாள் தம்பதியின் மகளான சரஸ்வதி, தன் கணவனுக்கு வருமானம் இல்லாததால் மூன்று குழந்தைகளுடன் அப்பாவின் வீட்டுக்கு வந்துவிட்டார். இந்த வீட்டில் இடமில்லாததால் தி.நகர் கண்ணம்மா பேட்டை சுடுகாட்டுக்கு எதிரே புறம்போக்கு நிலத்தில் இருந்த ஒரு குடிசை வீட்டில் சரஸ்வதி வாடகைக்கு குடியேறினார்.

காசிருந்தால் அரிசி வாங்கி சமைப்பதும், இல்லாவிட்டால் மளிகைக் கடையில் பொறி கடலையும், அச்சு வெல்லமும் வாங்கிச் சாப்பிட்டுவிட்டு நீராகாரம் குடிப்பதும் காமாட்சி வீட்டு வழக்கமாக இருந்தது. ஒருநாள்... குழந்தை மணிமேகலைக்கு உணவு இல்லை. பசியால் அழுதது. தனக்கு யாரோ பரிசாக கொடுத்திருந்த தம்புரா இசைக்கருவியை தூக்கி என்னிடம்

கொடுத்த காமாட்சி "வீட்ல விக்கிறதுக்கு வேற எதுவும் இல்ல. இதை வித்துட்டு வா" எனச் சொன்னார்.

'மெட்ராஸுக்கு வந்து கொஞ்சநாள்தான் ஆகுது. எங்கே போய் விற்பது?' என்கிற தயக்கத்துடன் தம்புராவை தூக்கிக்கொண்டு நடந்தே தேனாம்பேட்டை வந்தேன். அங்கு எனக்குப் பரிட்சயமான ஒரு துணை நடிகர் இருந்தார். 'மைலாப்பூர் போனா அக்ரஹாரத்தில் விற்கலாம்' என அவர் சொன்ன ஆலோசனையைக் கேட்டு நடந்தே மைலாப்பூர் வந்தேன்.

தம்புரா விற்பனைக்கு என்பதை தெரிந்துகொண்ட ஒருநபர் ஒரு பிராமணர் வீட்டுக்கு என்னை அழைத்துச் சென்றார்.

அவர்களுக்கு தம்புராவை ரொம்பப் பிடித்துவிட்டது.

"என்ன விலை சொல்றீங்க?" எனக் கேட்டார் அந்த தம்புராவை வாங்கிவிடுவதில் ஆர்வமாக இருந்த பெண்மணி.

தம்புராவைப் பத்தியே எனக்குத் தெரியாது. அதோட விலை என்னன்னு எப்படித் தெரியும்? இருந்தாலும் சமாளித்த படி 'நீங்களே ஒரு நியாயமான விலை கொடுத்திடுங்க' என்றேன்.

"எங்க பாட்டு வாத்தியார் சாயங்காலம் ஆறு மணிக்கு வருவார். வந்ததும் அவர்கிட்ட கேட்டு அவர் சொல்ற விலையை கொடுத்துடுறோம். நீங்க சாயங்காலம் வாங்க" என்றனர்.

இப்போது பகல் ஒரு மணி.

அதுவரை என்ன செய்வது?

தம்புராவை தூக்கிக்கொண்டு மீண்டும் தி.நகருக்கு நடையைக் கட்டினேன்.

இசை என்பது கேட்பதற்குச் சுகமானதுதான். அதே சமயம் ஒரு இசைக் கருவியை, பட்டினி வயிற்றுடன் எம்புட்டு நேரம்தான் தூக்கிச் சுமக்க முடியும்?

ஆனாலும் இருக்கிற சூழலை நினைத்து சிரமப்பட்டு சுமந்தேன்.

குடும்பமே என்னை எதிர்பார்த்திருந்தது.

தம்புராவுடன் நான் போய் நின்றதும் அதிர்ச்சியும், சலிப்பும் வந்தது அவர்களுக்கு.

நான் நடந்த விஷயங்களைச் சொன்னேன்.

"பாலு... நீ மறுபடி அங்க போ. என்ன விலை கொடுத்தாலும், பேரம் பேசாம வாங்கிக்கிட்டு வா. வரும்போது பாப்பாவுக்கு ஓட்டல்ல ஏதாவது சாப்பிட வாங்கிட்டுவா'' என்றார் காமாட்சி.

மறுபடி தம்புராவுடன் பாத யாத்திரை கிளம்பினேன்.

சோதனைமேல் சோதனையாக இரவு ஒன்பது மணிக்குத்தான் பாட்டு வாத்தியார் வந்தார்.

தம்புராவை வாங்கி மீட்டியவர் முகம் சுளித் தார்.

"இது பச்சைத் தம்புரா'' என்றார்.

அவர் என்ன சொல்கிறார் என்பது எனக்கும் புரியவில்லை. தம்புராவை வாங்குவதற்கு ஆசையுடன் இருந்த அந்த பெண்மணிக்கும் புரியவில்லை.

"தம்புராவோட மேல்பகுதி நல்லா காயவச்சு பக்குவப் படுத்தப்பட்ட மரப்பட்டையில செய்யணும். ஆனா... சரியா காய வைக்காம, பக்குவப்படுத்தாம செஞ்சிருக்கா. இந்த தம்புராவுக்கு நாதம் கட்டவே கட்டாது. இதை வாங்கினாலும் வேஸ்ட்டுண்ணா'' எனச் சொல்லிவிட்டார்.

தம்புராவை தூக்கிக்கொண்டு நடந்தேன். அப்போது இரவு பத்து மணி. கபாலீசுவரர் கோயிலைப் பார்த்து அழுதேன். "அந்தக் குழந்தைக்குக் கூட எதுவும் வாங்க முடியாமப் போச்சே கடவுளே''என நொந்தபடி நடந்தேன்.

வீடு வந்து சேர்ந்தபோது இரவு 12 மணி.

"அண்ணே...'' என கலங்கியபடி நடந்ததைச் சொன்னேன்.

"அந்த தம்புராவை இப்படிக் கொடு'' என்றார்.

கொடுத்தேன்.

தலைவாசல் பக்கமிருந்த சிமெண்ட் திண்ணையில் ஓங்கி அடித்தார். தம்புரா சுக்குச்சுக்காக சிதறியது.

ஆத்திரமும், கோவமுமாக இருந்த அவரை எப்படி கட்டுப்படுத்துவதென்று யாருக்கும் தெரியவில்லை. கட்டுப்படுத்தும் தைரியமும் இல்லை.

அதிகாலை ஐந்து மணியிருக்கும்...

ஹார்ட் அட்டாக்கில் துடித்தார் காமாட்சி. பாமாவின் அலறல் கேட்டு ஓடிவந்த பக்கத்துவீட்டு சலவைத் தொழிலாளர் குடும்பத்தைச் சேர்ந்த சீதா நிலமையை உணர்ந்து, தனக்குத் தெரிந்த ஒருவரின் டாக்ஸியை வரவழைத்து, பாமா கையில் இரண்டு ரூபாயும் செலவுக்குக் கொடுத்து "பெரிய ஆஸ்பத்திரியில சேர்த்திடுங்க" என அனுப்பிவைத்தார்.

டாக்ஸியில் ஏற்றி ஆஸ்பத்திரிக்கு கொண்டு வந்தோம்.

ஆஸ்பத்திரி வாசலில் இறங்கியதும், காமாட்சியை கைத்தாங்கலாகப் பிடித்துக்கொண்டு அழைத்துச் சென்றார் பாமா.

'ஒண்ணுக்குப் போகணும்' என காமாட்சி ஜாடையில் சொல்ல... அங்கிருந்த தூண் மறைவிற்கு அவரை அழைத்துச் சென்று அமர வைத்தார் பாமா.

நீண்ட நேரமாகியும் காமாட்சி எழுந்திருக்கவில்லை.

உட்கார்ந்த நிலையிலேயே காமாட்சி என்கிற பெரும் கவிஞன் உயிரைவிட்டிருந்தான்.

# காலம் செய்த கோலம்!

சென்னை பெரிய ஆஸ்பத்திரியின் நுழைவு வாயிலுக்குள் ஒரு தூண் மறைவில் சிறுநீர் கழிக்க அமர்ந்த கவி கே.பி.காமாட்சி, அமர்ந்த நிலையிலேயே இறந்துபோனார். நாங்கள் பதறிப்போனோம்.
டிரெய்னிங் டாக்டர் ஒருவர் அந்த வழியாக வந்தார். அவர் எங்களின் பதட்டத்தைப் பார்த்து விசாரித்தார். விஷயத்தைச் சொன்னோம்.

காமாட்சி இறந்துவிட்டதை உறுதிசெய்த அவர்... பாமாவிடம் குடும்ப சூழ்நிலை குறித்து விசாரித்துவிட்டு, ''மயக்கமா இருக்காருன்னு சொல்லி சமாளிச்சிட்டு வீட்டுக்கு கொண்டுபோகப் பாருங்க. இல்லேன்னா... போஸ்ட்மார்ட்டம் அது, இதுனு நிறைய ரூல்ஸ் இருக்கு'' எனச் சொல்லிவிட்டுப் போனார்.

பக்கத்து வீட்டு தீபா கொடுத்த இரண்டு ரூபாயில் ஒரு ரூபாயை என்னிடம் கொடுத்த பாமா, ''பஸ்ல ஏறி வீட்டுக்குப் போங்க. 'நான் சாகிறவரைக்கும் அந்த பட்டு வேஷ்டிய அடமானம் வைக்கக்கூடாது'னுதான சொன்னாரு. இப்பத்தான் அவரே இல்லியே. அந்த பட்டு வேஷ்டியை வித்து, ஒரு டாக்ஸி பிடிச்சுக்கிட்டு வாங்க. அதுவரைக்கும் நான் இவரை மடியில போட்டு 'மயக்கமா இருக்காருன்னு சொல்லி சமாளிச்சிக்கிறேன்'' என்றார்.

அதன்படியே செய்தேன். காமாட்சி உடலை ஏற்றிக் கொண்டு வீட்டுக்கு வந்தோம். அதன் பிறகுதான் சினிமாக் காரர்களுக்கு தகவல் அனுப்பினேன்.

எம்.ஜி.ஆரும், என்.எஸ்.கிருஷ்ணனும் பாடையின் முன்பக்கத்தை தூக்க... வீ.கே.ராமசாமியும், கே.ஆர். ராமசாமியும் பின் பக்கத்தைத் தூக்க... நால்வரும் காமாட்சியின் உடலை கண்ணம்மா பேட்டை சுடுகாடுவரை சுமந்துகொண்டு வந்தனர்.



கவி.கே.பி.காமாட்சிசுந்தரம்
-முதல் மனைவி
ஆண்டாள் மகள் சரஸ்வதி

இதையும், சுடுகாட்டில் வைத்து "காமாட்சி அண்ணன் கடன் வச்சிட்டுப் போயிருக்காரா?" என எம்.ஜி.ஆர் என்னை விசாரித்துவிட்டு, மறுநாள் என்னை சத்யா ஸ்டுடியோ சென்று ஆயிரம் ரூபாய் வாங்கிக்கொள்ளச் சொன்னதையும், அதன்படி நான் அந்தப் பணத்தை வாங்கி வந்து காமாட்சியின் கடனை அடைத்ததையும் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்.

காமாட்சியின் மூத்ததாரத்து மகள் சரஸ்வதி, கண்ணம்மா பேட்டை சுடுகாட்டின் எதிரே ஒரு புறம்போக்கு குடிசையில் வாடகைக்கு குடியிருந்தாரல்லவா...

ஒரு சமயம்... கார்ப்பரேஷன் அதிகாரிகள் ஆக்கிர மிப்புகளை அகற்றியபோது, சரஸ்வதி குடியிருந்த குடிசையும் அகற்றப்பட்டது.



ஆண்டாளின் சித்தப்பா -சுப்பிரமணிய முதலியாரின் மகளின் மகன், பிரபல ஜோதிடர் ஜானகிராமன். (சென்னை எம்.எம்.டி.ஏ. காலனியில் வசிக்கிறார்.)

ஒரு பெரும் கவிஞரின் மகள்.... ராணிமேரி கல்லூரி கட்ட 16 ஏக்கர் நிலத்தைத் தானமாகத் தந்த செல்வந்தர் குடும்பத்தின் பேத்தியான சரஸ்வதியை குடிசையிலிருந்தும் விரட்டியது காலம். அதன்பின் அவர் போரூரை அடுத்த கோவூரில் வசித்துவந்தார். நோய்வாய்ப்பட்டு இறந்தும் போனார்.

எனது ஒன்றுவிட்ட சகோதரரான அண்ணன் காமாட்சி, காதல் பாடல்களுடன் ஏழைகளின் நிலையையும் தன் பாட்டில் வைத்தவர். கம்யூனிஸ சிந்தனைகளும் அவரின் பாடல்களில் மிளிர்ந்தன.

அண்ணன் கடைசியாக எழுதிய ஒரு பாடல் பதிவாகாமலேயே போனது.



கவி கே.பி.காமாட்சி
-இரண்டாம் மனைவி
கண்ணம்மா பேரன்
பன்னீர்செல்வம்.
(காவேரிப்பாக்கம் அருகில்
அய்யம்பேட்டை சேரியில்
வசிக்கிறார்.)

அந்தப் பாடல் அடிக்கடி என் நினைவில் வரும். காற்றில் அரங்கேற்ற மாகாத அந்தப் பாடலை இங்கே அச்சில் அரங்கேற்ற விரும்புகிறேன்.

முத்தை கண்டவர்கள் உழைப்பவனின் வேர்வையை மதிப்பதில்லை... என்கிற பொருளுடன் கூடிய அந்தப் பாடலின் பல்லவி இதுதான்...

'நித்தம் நித்தம் உழைத்தே -தொழிலால்

நிம்மதி இல்லையடா -நம்

சக்தி குறைந்தது அல்லால்

எள்ளத்தனை இன்பம் உண்டோ

முத்தை கடலில் கண்டார் -வியர்வை

முத்தை உடலில் காணார்

ரத்தினம் என்பதெல்லாம் -தொழிலன்

ரத்தத் துளிகள் அன்றோ

நித்தம் நித்தம் உழைத்தே

நிம்மதி இல்லையடா...'



**1975**-ல் மைலாப்பூர் காரணீஸ்வரர் கோயில் தெருவில் நான் வசித்துக்கொண்டு, தேவர் ஃபிலிம்ஸ் கதை இலாகாவில் வேலைபார்த்துக் கொண்டிருந்த சமயம்...

மைலாப்பூர் தலையாரி தெருவில் பாரதிராஜா, இளையராஜா, இளையராஜாவின் அண்ணன் பாஸ்கர், மற்றும் ராஜாவின் தம்பி கங்கைஅமரன் ஆகிய நால்வரும் ஒரு சிறிய வீட்டில் வசித்துக்கொண்டு சினிமா சான்ஸ் தேடிவந்தனர்.

ஒருநாள்... பாஸ்கர் தன் கையில் டேப்ரிகார்டருடன் என் வீட்டுக்கு வெளியே என்னை எதிர்பார்த்து வெகுநேரம் காத்திருந்திருக்கிறார். நான் கம்பெனிக்குச் செல்லும் அவசரத்தில் வெளியே வந்தபோது... எனக்கு வணக்கம் செலுத்திய பாஸ்கர், 'கலைஞானம் அண்ணே... நீங்க நம்ம பக்கத்துக்காரர் (ஊர்க்காரர்)னு கேள்விப்பட்டோம். என் தம்பி இளையராஜா மதுரை மாவட்டம் முழுக்க நாடகங்களுக்கு இசையமைச்சு... புகழ் பெற்றவன். தம்பிக்காக சான்ஸ் தேடித்தான் நான் உங்ககிட்ட வந்திருக்கேன். இந்தப் பாட்டைக் கேளுங்க''’என டேப்பை ஆன் பண்ணி ஓடவிட்டார்.

முழுப்பாடலையும் கேட்டுவிட்டு "ரொம்ப நல்லா இருக்கு'' என்றேன்.

"நீங்க தேவர் ஃபிலிம்ஸில் எங்களுக்கு சிபாரிசு பண்ணினா வந்து வாசித்துக் காட்டுறோம்'' என்றார்.

என்னை அவசரமாக அழைத்துச் செல்ல கம்பெனி கார் வந்துவிட்டது. காரில் ஏறிக்கொண்ட நான் "தம்பி... சந்தர்ப்பம் பார்த்து தேவர்கிட்ட அழைச்சிட்டுப் போறேன்" எனச் சொன்னேன்.

கார் கிளம்பிவிட்டது.

அப்போது பாஸ்கர்... 'இப்படி கம்பெனி கார் வந்து நம்மையும் அழைச்சிட்டுப் போகும் காலம் வராமலா போகும்?' என நினைத்தாராம்.

(இதை பின்னாளில் என்னிடம் பாஸ்கர் சொன்னார்)

பெட்ரோல் பங்க்கில் வேலைசெய்துகொண்டே, பாரதிராஜா சினிமாவில் டைரக்டராக வாய்ப்புத் தேடிவந்தார்.

இதே காலகட்டத்தில் தயாரிப்பாளர் கே.ஆர்.ஜியின் கம்பெனியில் நான் கதை சொன்னபோது அங்கே பாரதிராஜாவைப் பார்த்தேன்.

நான் கதை சொல்லிவிட்டுக் கிளம்பும்போது... என் பின்னாலேயே வந்த பாரதிராஜா, தன்னை சுய அறிமுகம் செய்துகொண்டு நான் சொன்ன ஒரு காட்சியை வியந்து பாராட்டினார்.

இந்தச் சமயம் கதாசிரியர் ஆர்.செல்வராஜ், தயாரிப்பாளர் பஞ்சு அருணாச்சலத்திடம் இளையராஜாவை அறிமுகம் செய்துவைக்க... செல்வராஜின் கதையான ‘"அன்னக்கிளி"’ படத்தில் இளையராஜாவுக்கு வாய்ப்புக் கொடுத்தார்.

14.05.1976 அன்று 'அன்னக்கிளி' வெளியாகி சக்கைப்போடு போட்டது.

தமிழகமெங்கும் இளையராஜாவின் புகழ் உச்சத்தில் உலாவர ஆரம்பித்தது.

1977 டிசம்பரில் எனது முதல் தயாரிப்பான ‘"பைரவி'க்கு இசையமைக்க ராஜாவைத் தேடிச் சென்றேன்.

ரெக்கார்டிங் தியேட்டரில் பாடல் பதிவு நடந்து கொண்டிருந்தது.

"தம்பி வர்ற வரைக்கும் இப்படி உட்காருங்க" என பாஸ்கர் என்னை காத்திருக்கச் சொன்னார்.

'எப்படியும் ராஜாவை ஒப்பந்தம் செய்துவிட வேண்டும்' என்ற ஆவலில் காத்திருந்தபோது நினைத்தேன்...

‘இரண்டு ஆண்டுகளுக்கு முன்... இதே பாஸ்கர், இளையராஜாவிற்கு வாய்ப்புக் கேட்டு என்னுடைய வீட்டுக்கு வெளியே காத்திருந்தார்.

இப்போ... இளையராஜாவைப் பார்ப்பதற்காக நான் வெகுநேரம் காத்திருக்கிறேன்.... இதுதான் காலச் சக்கரத்தின் மாற்றங்களோ...' என நினைத்து இதை படிப்பினையாக எடுத்துக்கொண்டு... இன்றுவரை என்னைப் பார்க்க யார் வந்தாலும் மரியாதையாகப் பேசி அனுப்பி வருகிறேன்.

ரெக்கார்டிங் முடிந்து ராஜா வெளியே வந்தார். வணக்கம் வைத்தேன். சிரித்தும் சிரிக்காத முகத்துடன் பதில் வணக்கம் வைத்தார் ராஜா.

''வர்ற ஜனவரியில் நான் சொந்தப் படம் ஆரம்பிக்கிறேன். அதுக்கு நாலு பாட்டு வேணும். நீங்க பிஸியா இருப்பது தெரியும். இருந்தாலும் பாட்டோடு பாட்டாய் எனக்கு நாலு பாட்டு...'' என்றதும் 'சரிங்கண்ணே' என்றார்.

இளையராஜா சிரித்தால் குழந்தை போலிருக்கும்,. சினந்தால் விசுவாமித்திரர். இரண்டும் கலந்திருந்த நேரத்தில் கால்ஷீட் வாங்கி வந்துவிட்டேன்.

அன்று முதல் இன்றுவரை என் மீது 'அண்ணன்' என்கிற பாசத்துடன் பழகி வருகிறார் ராஜா.

(ராஜா குறித்து நான் ஏற்கனவே பல விஷயங்களைப் பகிர்ந்திருக்கிறேன். இனியும் நிறைய விஷயங்களை அடுத்தடுத்து சொல்கிறேன்.)

பாரதிராஜா 1977-ல் 'பதினாறு வயதினிலே' என்கிற படத்தைத் தந்தார். அது தமிழ் சினிமா உலகத்தையே உலுக்கியெடுத்துவிட்டது. பட்டணத்துக் கதைகளையே பார்த்துப் பார்த்து சலித்துப் போயிருந்த நேரத்தில், முழுக்க முழுக்க மண்வாசனையுடன், கோவணம் கட்டியவனை ஹீரோவாகக் காட்டி புகழின் உச்சத்துக்கே போய்விட்டார் பாரதிராஜா.

'ஏயப்பா... பாரதிராஜா' என அவரை அண்ணாந்து பார்த்தே நடந்து ஆக்ஸிடெண்ட்டில் சிக்கினார்கள் பலரும்.

# கலை உலகப் பிரம்மா!

சின்னப்ப தேவரண்ணன், பாரதிராஜாவின் வெற்றியைப் பார்த்து பிரமித்தார்.

"ஏண்டா கலைஞானம்... யாரப்பா அந்த பாரதிராஜா? 'பதினாறு வயதினிலே' படம் பார்த்தேன். அட என்னாப்பா இது? இப்படி ஒருத்தன் தமிழ்நாட்டுல இருக்கானா? நாமளும் அந்தப் பையனை வச்சு படம் எடுக்கலாமே?" என்றார்.

"நாளைக்கு நான் பாரதிராஜாவை கூட்டிட்டு வர்றேன்ணே" என்றேன்.

மறுநாள் பாரதிராஜாவைச் சந்தித்தேன்.

அந்த 'கிளி'க் கண்களால் என்னை வியந்து பார்த்துவிட்டு வீட்டுக்குள் அழைத்துச் சென்றார்.

டைரக்டர் கிருஷ்ணன் நாயரிடம் பாரதிராஜா அஸிஸ்டெண்ட்டாக இருந்தபோது, பாரதிராஜாவின் திருமணத்தை தயாரிப்பாளர் கே.ஆர்.ஜி. நடத்திவைத்தார்.

நியூ உட்லேண்ட்ஸ் ஹோட்டலில் திருமண வரவேற்பு நடந்தபோது 'வருங்கால இயக்குநரே!' என ஒரு வாழ்த்தை நான் எழுதிக் கொடுத்தேன். அந்த வாழ்த்து நிறைவேறிய மகிழ்ச்சி என்னை வரவேற்றதில் தெரிந்தது.

என்னுடன் கிளம்பி தேவரின் அலுவலகத்திற்கும் வந்தார்.

தேவரிடம், பாரதிராஜா ஆசிர்வாதம் பெற்றார்.

"ஏம்ப்பா... எனக்கு ஒரு படம் பண்ணித்தர முடியுமா?" எனக் கேட்டார்.



"உங்கள மாதிரி கதை பண்ண எனக்குத் தெரியாதுங்க. நான் ஏதோ... செடி, கொடி, ஆறு, மண்வாசனைனு எடுக்குறவன்" என மறைக்காமல் தனது மறுப்பை பணிவுடன் காட்டினார் பாரதிராஜா.

"அடப்போப்பா.. பொழைக்கத் தெரியாதவனா இருக்க. உனக்கு என்ன வேணும்னு சொல்லு. வீடு வேணுமா? நிலபுலன் வேணுமா? யோசனை பண்ணிச் சொல்லப்பா" என மீண்டும் பாரதிராஜாவை ஆசிர்வதித்து அனுப்பினார் தேவர்.

தேவருடன் அறிமுகம் ஏற்பட்டதை ஒரு பாக்யமாக கருதி எனக்கு நன்றி சொல்லி விடைபெற்றார் பாரதிராஜா.

வெற்றிமேல் வெற்றி பெற்று பாரதிராஜா புகழின் உச்சத்தில் உலா வந்துகொண்டிருந்த நேரத்தில்... 'மண்வாசனை' படத்திற்கு க்ளைமாக்ஸ் பண்ணுவதற்காக என்னை அழைத்தார். அந்த நேரத்தில்... ஏன் இப்போதும்தான்... எனக்கு ஒரு பேர் உண்டு. 'கதையில் எங்கே ஓட்டை இருந்தாலும் கலாய் (ஈயப்பூச்சு) பூசிவிடுவார் கலைஞானம்' என என்னை

அழைப்பார்கள். இது பாரதிராஜாவுக்கும், தயாரிப்பாளர் சித்ரா லட்சுமணனுக்கும் தெரிந்தே என்னை அழைத்தார்கள்.

கதையைக் கேட்ட ஒருமணி நேரத்திற்குள்... ஒரு இந்திப் படத்தை மேற்கோள் காட்டி 'மண்வாசனை' க்ளைமாக்ஸிற்கு வழி வகுத்துவிட்டேன்.

தொடர்ந்து 'புதுநெல்லு புதுநாத்து' படத்தின் கதையிலும் சில ஸீன்களுக்காக என்னை அழைத்தார். க்ளைமாக்ஸ் அமைப்பதில் எனக்கும், பாரதிராஜாவுக்கும் இடையே சண்டை வந்துவிட்டது. கடுமையான கருத்து வேறுபாடுதான்.

அந்தப் படத்தில் என் பங்கும் இடம்பெற்றது.

பாரதிராஜாவிற்கு கிடைத்த புகழ் இதுவரை வேறு யாருக்கும் கிடைக்கவில்லை. அவரின் உதவியாளர்கள்தான் பெரும்பாலும் இன்றும் தமிழ் சினிமாவில் அவர் பாணியைக் கையாண்டு வெற்றிபெற்று வருகிறார்கள்.

பாரதிராஜாவின் படைப்பாற்றலை வியந்த கே.பாலசந்தர் "பாரதி எனக்கு இளையவராகிவிட்டார். இல்லையென்றால் அவர் கால்களில் விழுந்து வணங்குவேன்" என்றார்.

கலையுலக வசிஷ்டர் வாயாலேயே இப்படி புகழப் பெற்ற பாரதிராஜாவுக்கு வேறு பட்டமும், புகழும் வேண்டுமா என்ன?

புதுமுகங்களைப் படைப்பதில் பாரதிராஜா ஒரு கலையுலக பிரம்மா.

பதினாறு வயதினிலே படத்தில் கதாசிரியர் கலைமணி, உதவி இயக்குநராக கே.பாக்யராஜ், ஆர்ட் டைரக்டர் கமலசேகர், டாக்டர் வேஷத்தில் சத்யஜித், பாடலாசிரியராக கங்கைஅமரன் (செந்தூரப்பூவே' பாடல்)

கிழக்கே போகும் ரயில் படத்தில் ராதிகா, சுதாகர், விஜயன், ஜனகராஜ் ஆகிய நட்சத்திரங்கள். சிகப்பு ரோஜாக்கள் படத்தில் வசனகர்த்தா கே.பாக்யராஜ், நடிகை வடிவுக்கரசி, நடிகை ரஜினி, நடிகர் கிருஷ்ணமூர்த்தி. புதியவார்ப்புகள் படத்தில் ஹீரோவாக பாக்யராஜ், ரதி அக்னிஹோத்ரி, வாகை சந்திரசேகர், கே.கே.சௌந்தர், உஷா ராஜேந்தர், காஜா ஷெரிப் ஆகிய நட்சத்திரங்கள். நிறம்மாறாத பூக்கள் படத்தில் ஹீரோவாக விஜயன். கல்லுக்குள் ஈரம் படத்தில் விஜயசாந்தி, அருணா ஆகிய நட்சத்திரங்கள். நிழல்கள் படத்தில் 'நிழல் கள்'ரவி, ராஜசேகர்,

ரோஹிணி ஆகிய நட்சத்திரங்கள், கேமரா மேனாக பி.கண்ணன், பாடலாசிரியராக கவிஞர் வைரமுத்து.

டிக் டிக் டிக் படத்தில் கதாசிரியராக மணிவண்ணன், அதே படத்தில் பின்னணிப் பாடகியாக லதா ரஜினிகாந்த் அறிமுகம். அலைகள் ஓய்வதில்லை படத்தில் கார்த்திக், ராதா, தியாகராஜன், கமலா காமேஷ் ஆகிய நட்சத்திரங்கள். காதல் ஓவியம் படத்தில் ஹீரோவாக கண்ணன். மண்வாசனை படத்தில் பாண்டியன், ரேவதி. ஒரு கைதியின் டைரி படத்தில் வில்லனாக மலேசியா வாசுதேவன். முதல் மரியாதை படத்தில் ரஞ்சனி, தீபன். கடலோரக் கவிதைகள் படத்தில் ராஜா, ரேகா. என்னுயிர் தோழன் படத்தில் பாபு, ரமா.

புதுநெல்லு புதுநாத்து படத்தில் நெப்போலியன், சுகன்யா, இளவரசு. 'கிழக்குச் சீமையிலே' படத்தில் கதாசிரியர் ரத்னகுமார், 'கருத்தம்மா' படத்தில் பெரியார்தாசன், ஸ்ரீதேவியின் தங்கை மகேஸ்வரி, ராஜஸ்ரீ. கொடிபறக்குது' படத்தில் வில்லனாக மணிவண்ணன். வேதம்புதிது' படத்தில் கதாசிரியராக கண்ணன். நாடோடித்தென்றல்' படத்தில் ரஞ்சிதா. 'பொம்மலாட்டம்' படத்தில் காஜல் அகர்வால்.லட்சுமி மூவிமேக்கர்ஸ் முரளிதரன் தயாரித்த கண்களால் கைது செய்'படத்தில் ஹீரோவாக வசீகரன், ஹீரோயினாக பிரியாமணி. தாஜ்மஹால் படத்தில் ஹீரோவாக மனோஜ் (பாரதிராஜாவின் மகன்), ஹீரோயினாக ரியா சென்... இப்படி பாரதிராஜாவின் அறிமுகங்களை இன்னும் பட்டியலிட்டுக்கொண்டே போகலாம்.

நடிகர்திலகம் சிவாஜியை வைத்து 'முதல் மரியாதை' என்கிற அற்புதமான படத்தைத் தந்தார் பாரதிராஜா. இந்தப் படத்தின் கடைசிநாள் படப்பிடிப்பு முடிந்ததும், படத்தின் தயாரிப்பு நிர்வாகி ஒருவரிடம் "படம் ரொம்ப ஹேப்பியா முடிஞ்சது" என சிவாஜி சொல்ல... அந்த நிர்வாகி சிரித்திருக்கிறார்.

"ஏண்டா சிரிக்கிற?" என சிவாஜி கேட்க...

"அய்யா... இந்த டைரக்டரோட குணம் எப்படின்னா.... முழுப்படத்தையும் எடுத்து முடிச்சிட்டு போட்டுப் பார்ப்பாரு. அவர் நினைச்ச மாதிரி வரலைன்னா... வேற யாரையாவது வச்சு எடுப்பாரு" எனச் சொல்ல... கலையை உயிராக நேசிக்கும் அற்புதக் கலைஞன் சிவாஜியிடம் ஒருவித பதட்டம்.

பாரதிராஜாவிடம் வந்தார். "எப்பா ராசா... படம் பார்த்திட்டு நல்லா இல்லேன்னா வேற நடிகனைப் போட்டு எடுப்பியாமே? அப்படியெல்லாம் செஞ்சிராத. உனக்கு திருப்தி வரலைன்னா சொல்லு. நீ எவ்வளவு நாள் கால்ஷீட் கேட்டாலும் தர்றேன்" எனச் சொல்லிவிட்டுப் போனார்.

பாரதிராஜா அழுதேவிட்டார்.

"அவர் எவ்வளவு பெரிய சிகரம். அவர்கிட்டப் போய் ஏதேதோ சொல்லீருக்கானே எந்த ராஸ்கலோ?" என வேதனைப்பட்டார் பாரதிராஜா.

கண்ணன் என்கிற புத்திசாலி எழுத்தாளரின் ஓரங்க நாடகம்தான் 'வேதம் புதிது'.'இது ஐந்து ஸீன்கள் மட்டுமே கொண்ட கதை. ஆனால் அந்த ஐந்து ஸீன்களுக்குள் ஆயிரமாயிரம் முற்போக்கான கருத்துக்கள் இருப்பதை அறிந்த பாரதி ராஜா, அந்தக் கதையை படமாக்க முடிவு செய்து, அவருக்கு நெருக்கமான எழுத்தாளர்களிடம் கதையைச் சொல்லி, "இந்தக் கதைக்கேற்ப திரைக்கதை எழுதணும்" என்றார்.

"இது சிறுகதை மாதிரி இருக்கு. இதை சினிமாக் கதையா மாத்துறது சிரமம்" எனச் சொல்லிவிட்டார்களாம்.

இந்நிலையில் நான் ஏதோ ஒரு காரியமாக பாரதிராஜா வைச் சந்தித்தபோது... "வேதம் புதிது"கதையைச் சொல்லிவிட்டு, "இதை சினிமாவுக்கு ஏற்ப மாற்ற முடியுமா?" எனக் கேட்டார்.

"முடியாதுனு எதுவுமே இல்லை. அதுவும் சினிமாக் கதை என்பது திருக்குறளோ, சிலப்பதிகாரமோ இல்லையே... மாற்றி எழுதினால் குற்றமாகிவிடுமோ என்று நினைக்க. இது கற்பனைக் கதை. எதையும் சுவை குறையாமல் எழுதினால் மக்கள் ரசிக்கத் தயாராகவே இருக்கிறார்கள்" என்றேன்.

"அப்படின்னா நீங்க எழுதிக்கொடுங்க. எழுதி முடிக்க எத்தனை நாள் வேணும்?"

"எத்தனை நாளா? நாளைக்கு காலைல வந்து என்கிட்ட முழுக்கதையையும் கேட்கலாம்"

"சரி இப்பவே கிளம்புவோம்" என, தனக்கே உரிய பாணியில் சிரித்த பாரதிராஜா, என்னை அழைத்துச் சென்று பாம்குரோவ் ஹோட்டலில் 55-ஆம் எண் அறையில் தங்க வைத்துவிட்டுச் சென்றார்.

கதாசிரியர் கண்ணன் உண்டாக்கிய டென்ஷன்.

பாரதிராஜாவின் கடுங்கோபம்.

# அனல் கக்கிய பாரதிராஜா!

'சிறுகதையாக மட்டுமே மாற்ற முடியும். திரைக்கதை பண்ணமுடியாது' என கதாசிரியர்கள் சொல்லிவிட்ட நிலையில் 'வேதம் புதிது' நாடகக் கதையை என்னிடம் கொடுத்தார் பாரதிராஜா.
'ஒரே ராத்திரியில் எழுதிவிடுகிறேன்' என நான் சொன்னதையடுத்து பாம்குரோவ் ஹோட்டலில் எனக்கு ரூம் போட்டுக் கொடுத்துவிட்டு கிளம்பினார் பாரதிராஜா.

'இந்தக் கதைக்கு எந்தெந்த காட்சிகள் சரியா வரும்?' என இரவு முழுக்க விழித்திருந்து... சிந்தித்து ஒவ்வொரு காட்சியையும், ஒவ்வொரு வரியில் எழுதினேன். திரைக்கதையின் ஒவ்வொரு காட்சிகளையும் இப்படி வரிவரியாக எழுதுவது தான் எனது பழக்கம். அப்படி நான் எழுதும் எழுத்துக்களும் எனக்கு மட்டுமே புரியும். காரணம்... நான் படிக்காதவன்.

அறுபது காட்சிகள் வரை எழுதி முடித்துவிட்டுத்தான் படுத்தேன்.

மறுநாள் காலை 11 மணியிருக்கும்....

பாரதிராஜா தன் உதவியாளர்கள் மற்றும் 'வேதம் புதிது' கதாசிரியர் கண்ணன் ஆகியோருடன் அறைக்கு வந்தார்.

'தேவரே... என்ன எழுதி வைத்திருக்கிறீர்கள்?' எனக் கேட்டார்.

உளுந்து மூட்டையை கிழித்துக் கவிழ்த்ததுபோல் அறுபது காட்சிகளையும் மளமளவென கொட்டினேன்.



பாரதிராஜாவின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

'கலைஞானம்... உம்மால்தான் இப்படியெல்லாம் கதை சொல்ல முடியும்' என வானளாவப் பாராட்டிவிட்டு, தன்னுடன் வந்தவர்களின் முகங்களைப் பார்த்தார்.

அத்தனைபேரும் மங்காத சிரிப்புடன் 'பிரமாதமாக இருக்கிறது சார்' என்றார்கள்.

ஆனால் கதாசிரியர் கண்ணன் மட்டும் 'இவர் சொன்ன ஸீன்கள்ல ஒரு ஸீன் என் கதைக்கு பொருந்தாது சார்' என கோபமாகச் சொன்னார்.

பாரதிராஜாவுக்கு வந்ததே ஆத்திரம்...

''புடுங்கி.... மூணு மாசமா இந்தக் கதையை வச்சுக்கிட்டு போராடிக்கிட்டிருந்தோம். நாலு ஸீனுக்கு மேல் நகரவேயில்ல. இப்போ இந்த மனுஷன் என்ன பாடுபட்டு இத்தனை ஸீன்களை ரசிக்கும்படி எழுதியிருக்கார். அதைப் பாரட்ட உனக்கு அறிவில்லையே? உன் கதையுமாச்சு... நீயுமாச்சு'' எனச் சொன்னபடி கண்ணன் எழுதி

வைத்திருந்த ஃபைலை தூக்கி அறைக் கதவுகளுக்கு வெளியே வீசியவர், 'கலைஞானம்... நீங்க நாளைக்கு ஆபீஸ் வாங்க. நாம வேற கதை எழுதுவோம்' எனச் சொல்லிவிட்டு, தன் உதவியாளர்களை அழைத்துக் கொண்டு போய்விட்டார்.

ஒரு கதாசிரியனாக... இப்படியெல்லாம் நடப்பது எனக்கு சகஜமான ஒன்று

கண்ணனின் முகத்தைப் பார்த்தேன். அசடு வழிய நின்றிருந்தார். பார்க்கப் பாவமாக இருந்தது.

அவரின் கைகளைப் பற்றினேன். 'கண்ணன்... நீங்க கவலையே படாதீங்க. ஆரம்ப காலத்தில் இதுபோல சோதனைகள் வரும். உங்களுக்கு சினிமா புதுசு. யார், யார் என்னென்ன சொல்றாங்க என்பதையெல்லாம் உள்வாங்கிக்கங்க. உங்களுக்கு பிடிக்காத விஷயங்கள் இருந்தா அதை சமயம் பார்த்து பக்குவமா சொல்லுங்க. எடுத்த எடுப்பிலேயே குற்றம் காணுவதில் குறியா இருக்காதீங்க. உங்களோட 'வேதம் புதிது' கதையைத்தான் பாரதிராஜா படமாக எடுக்கப் போறார். அதற்கு நான் ஒரு யோசனை சொல்றேன். அதன்படி செய்யுங்க. இன்னைக்கு நைட் நான், பாரதிராஜாவை சமாதானப்படுத்தி, காலையில் அழைச்சிட்டு வர்றேன். நீங்க எங்கயும் போகாம ரூம்லயே இருங்க. அவர் வந்ததும் ''என்னை மன்னிச்சிடுங்க'னு அவர் கால்ல விழுந்திருங்க. மத்ததை நான் பார்த்துக்கிறேன்'' என்றேன்.

'முதல்ல நீங்க என்னை மன்னிக்கணும்' என என் கால் களைத் தொட்டுக் கும்பிட்டார் கண்ணன். ஜூனியரான அவர் சீனியரான என்னிடம் ஆசி வாங்குவதாக அதை எடுத்துக் கொண்டு ஆசீர்வதித்தேன்.

அன்று இரவு...

என் வீட்டிலிருந்து பாரதிராஜாவுக்கு போன் செய்து, அவரை சமாதானப்படுத்திவிட்டேன்.

காலையில் ஹோட்டல் அறைக்கு நாங்கள் வந்தோம்.

கண்ணன் ஓடிவந்து 'டமார்' என பாரதிராஜாவின் கால்களில் விழுந்து 'என்னை மன்னிச்சிடுங்க சார்' என்றார்.

அப்புறமென்ன... ஒத்திகை சரியாக இருந்ததால் எல்லாமே ஒத்துப்போய்விட்டது.

படத்தின் பெரும் பகுதி காட்சிகளை, நான் சொன்னதை குறிப்பிட்டுப் பாராட்டி எனக்கு நிறைய பணமும் கொடுத்தார் பாரதிராஜா.

'வேதம் புதிது' படம் மாபெரும் வெற்றி பெற்றது. அன்றுமுதல் கதாசிரியர் கண்ணன் 'வேதம் புதிது' கண்ணன் ஆனார்.

'வேதம் புதிது' கண்ணன் போல் 'கிழக்குச் சீமையிலே' படத்தின் கதாசிரியர் ரத்னகுமாரும் புதியவர்தான். ஆனால் மிகப்பெரிய புத்திசாலி, படிப்பாளி.

இவருடைய கதை எப்படி அரங்கேறியது என்றால்...

ஒருசமயம்...

ஃபிலிம் சேம்பரில் தயாரிப்பாளர்களின் உரிமைக்காக உண்ணாவிரதப் போராட்டம் நடந்தது. போராட்டத்திற்கு தலைமை தாங்கினார் பாரதிராஜா. அங்கே நானும், தம்பி 'கலைப்புலி' தாணுவும் பாரதிராஜாவின் அருகருகே அமர்ந்து உண்ணாவிரதமிருந்தோம்.

(சிலர் உண்ணாவிரதத்திற்கு வரும்போதே மூன்று வேளைகளுக்கான உணவை மூக்கு முட்ட சாப்பிட்டு விட்டுத்தான் வருவார்கள். அந்த விஷயம் நமக்கெதுக்கு.)

உண்ணாவிரதம் முடியும் தருவாயில்...

''நீங்க எனக்கு ஒரு படம் பண்ணித் தரணும்'' என பாரதிராஜாவிடம் தாணு கேட்டார்.

''போராட்டம் முடிஞ்சதும் ஆபீஸ்ல போய் பேசிக்கலாம்'' என்றார் பாரதிராஜா.

அதேபோல் இருவரும் தனியே சந்தித்து பேசும்போது பாரதிராஜா சொன்னாராம்.... "தாணு... நீங்க படப்பிடிப்பு நடக்கும்போது எல்லா விஷயத்திலும் தலையிடுவீங்கன்னு கேள்விப்பட்டேன். அப்படி என் டைரக்ஸனிலும் தலை யிட்டால் பாதியிலேயே விட்டுட்டுப் போய்விடுவேன்'' என்றாராம்.

''சிலசமயம் கத்துக்குட்டி டைரக்டர்கள்கிட்ட மாட்டிக்குவேன். அப்படிப்பட்ட சமயங்களில் சில ஆலோசனைகள் சொல்லுவேன்... அவ்வளவுதான். ஆனா உங்க விஷயத்தில்... படம் முடியிறவரை நான் உங்க பக்கமே வர மாட்டேன். நீங்க சொல்றபடியே நடந்துகொள்வேன்'' என்றாராம் தாணு.

"பணம் கொடுப்பது மட்டும்தான் உங்க வேலை. மத்த ஏற்பாடுகளை நான் பார்த்துக்கிறேன். எடுத்த வரைக்கும் படத்தைப் பார்க்கக்கூட இடையில் வரக்கூடாது. படம் முடிஞ்சதும் "ஃபர்ஸ்ட் காப்பி' உங்களுக்கு போட்டுக் காண்பிப்பேன். அதுவரை என்ன நம்பி விட்டுவிடுங்கள்" என பாரதிராஜா சொன்னாராம்.

பட வேலைகள் தொடங்கியது.

யார் நடிக்கப் போறாங்க? கதை என்ன? பாட்டு எழுதுறது யார்? இசையமைப்பது யார்?'' இப்படி எதையும் கேட்டுக்கொள்ளாமல் பணத்தை மட்டும் கொடுத்துவந்தார் தாணு.

படம் பத்தாயிரம் அடிகள் எடுக்கப்பட்ட நிலையில்...

'முக்தா'சீனிவாசனின் பிரிவியூ தியேட்டரில் படம் போட்டுக்காட்ட ஏற்பாடு செய்தார் பாரதிராஜா.

எனக்கும் அழைப்பு வந்தது.

நானும், பாரதிராஜாவும் முதல் வரிசையில் அமர்ந்து படம் பார்த்தோம்.

உதவியாளர்கள் பின்வரிசையில் அமர்ந்திருந்தனர்.

படம் போடப்பட்டது.

"ராதிகாவுக்கு மகளா நடிச்சிருக்கது யார்?" எனக் கேட்டேன்.

"ஏன் கேட்குறீங்க?"'என்றார் பாரதிராஜா.

"அந்தப் பொண்ணு நல்ல அழகு. திறமையாகவும் நடிக்குது. ஆனா... ராதிகாவுக்கு அக்கா மாதிரி இருக்கே" என்றேன்.

உடனே... பின் வரிசையில் இருந்த அஸிஸ்டெண்ட் ஒருவர் 'பக்'கென சிரித்துவிட்டார்.

உடனே பாரதிராஜா எழுந்து நின்று "யார்ரா இப்ப சிரிச்சது?" என பச்சைத் தமிழில் பாடிவிட்டார். "கெட்-அவுட்" என்றும் கத்தினார்.

ஆனால் அந்த உதவியாளர் அப்படியே சீட்டுக்குள் பம்மிவிட்டாரா... அல்லது கீழே படுத்துவிட்டாரா... என்றே தெரியவில்லை.

மறுபடி உட்கார்ந்தார் பாரதிராஜா. அவரின் கோபம் தணிந்தது.

"நீங்க இப்படி கோபப்பட்டா... உங்ககிட்ட படம் பற்றிய உண்மையான அபிப்ராயத்தை யாருமே சொல்லமாட்டாங்க" என்றேன்.

"அப்படி இல்ல தேவரே... நான் ஏற்கனவே படம் பார்த்ததும் அந்தப் பொண்ண தூக்கிட்டு வேற பொண்ண நடிக்க வைக்கணும்னு சொன்னேன். அதை அந்த மடையன் கவனிக்கலை போல. அந்த கேரக்டருக்கு இப்போ அஸ்வினிகிட்ட பேசிட்டேன்''"என்றார்.

"ராதிகாவின் மகளாக நடிக்க ரொம்ப பொருத்தமான பொண்ணு அஸ்வினி. ஆனா அந்த வேஷத்தில் ஏற்கனவே நடிச்சிருக்க பொண்ணுக்கு வேற ஏதாவது கேரக்டர் கொடுங்க'' என்றேன்.

"அது ரொம்ப நல்ல பொண்ணு. நான் சொன்னா கேட்டுக்கும்'' என்றார் பாரதிராஜா.

# தாயாருக்குப் பெருமை!

'கிழக்குச் சீமையிலே' படத்தை எடுத்தவரை போட்டுக் காட்டினார் பாரதிராஜா.

படம் பார்த்தபோது நான் சில கருத்துக்களைச் சொன்னேன்.

''ஒரே ஒரு கோழிச்சண்டை சம்பவம் மூலம் மட்டும் பகை ஏற்பட்டு குடும்பம் இரண்டானது என்றில்லாமல் அடுத்தடுத்து பகைக்கான காரண காட்சிகள் இருந்தால் நல்லா இருக்கும். குறிப்பா குடும்பச் சடங்குகள், நிறை மரக்கால், இப்படி ஒவ்வொன்றிலும் பகை வளரணும்'' என்றேன்.

(நிறை மரக்கால் என்கிற சடங்கு குறித்து வாசகர்களுக்கு சிறிது விபரமாக சொல்கிறேன்.

திடீரென ஒரு குடும்பத்தலைவன் இறந்துபோனால்... அந்தக் குடும்பம் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக உறவினர்கள் ஒவ்வொருவரும் தங்களிடம் உள்ள உணவு தானியத்தை ஒரு மரக்காலில் நிரப்பி, புதுத்துணிகளும் வைத்து, தாரை தப்பட்டையுடன் பெண்கள் தலையில் சுமந்து ஊர்வலமாக கொண்டுவந்து துக்க வீட்டில் இறக்குவார்கள். ஒருவர் அந்தப் பொருட்களை வாங்கி வீட்டில் பாதுகாப்பாக வைப்பார். இந்த தானியமும், துணிகளும் அந்த குடும்பத்தின் ஓராண்டிற்கான அடிப்படை தேவையை பூர்த்தி செய்யும். இதுவே நிறை மரக்கால்)

'இப்படிப்பட்ட சடங்கு சம்பிரதாய ஸீன்கள் மூலம் குடும்பப் பகை வருவதுபோல இருந்தா நல்லாருக்கும்' என நான் சொன்னதைக் கேட்ட பாரதிராஜா ''நீங்க சொல்ற விஷயங்கள்லாம் கதாசிரியர் ரத்னகுமாருக்கும் தெரியும். அவரு மண்வாசனையுள்ள தேவர்தான்'' என என் முதுகைத் தட்டி வாய்விட்டு சிரித்தார்.




'கிழக்குச் சீமையிலே' படம் வெளியாகி... வெற்றின் னாலும் வெற்றி... மாபெரும் வெற்றி பெற்றது. இப்படி ஒரு மண்வாசனைப் படத்தை இனி யாராலும் எடுக்கவே முடியாது. படத்தில் இடம் பெற்ற வைரமுத்துவின் வைர வரிகளுக்கு நிகராக வேறு வைரம் கிடைக்காது. 'மானூத்து மந்தையில' பாடலை எத்தனை முறை கேட்டாலும், பார்த்தாலும் திகட்டவே திகட்டாது.



படத்தின் வெற்றியால் தயாரிப்பாளர் கலைப்புலி' தாணு தரையில் நடந்தார்... ஆனால் தரையில் நடக்கவில்லை. அப்படி ஒரு மகிழ்ச்சி வெள்ளத்தில் நீந்திக்கொண்டிருந்தார்.

ஒருநாள்...

நானும், தாணுவும் உஸ்மான் ரோட்டில் காரில் எதிரெதிரே சந்தித்துக் கொண்டபோது... தாணு காரை நிறுத்திவிட்டு இறங்கி வந்தார். நானும் காரை ஓரங்கட்டினேன்.

'கலைஞானம் சார்...' என விரைந்து வந்து என் கைகளைப் பற்றிக்கொண்டார்.

"படம் எடுத்தவரைக்கும் போட்டுப் பார்த்தபோது நீங்களும் பார்த்தீங்கன்னு கேள்விப்பட்டேன். அப்போதே எனக்கு மனதில் ஒரு திருப்தி வந்திடுச்சு. டைரக்டர் மீது நான் நம்பிக்கை வச்சது குறையல. இருந்தாலும் நிறைகுறை இருந்தா டைரக்டர்கிட்ட சொல்றதுக்கு ஒருத்தர் இருக்கணுமேனு நினைச்சபோதுதான்... டைரக்டர் மதிக்கும் எழுத்தாளர் கலைஞானம் இருக்காரேனு சந்தோஷப்பட்டேன். இந்தப் படம் மூலம் நான்பட்ட கடனையெல்லாம் அடைச்சிட்டேன். டைரக்டர் பாரதிராஜாவை என் ஆயுள் இருக்கிற வரைக்கும் மறக்கமாட்டேன். அவருடன் பங்கெடுத்த உங்களையும் மறக்கமாட்டேன்" எனச் சொல்லி நெகிழ்ந்து என் கைகளில் முத்தமிட்டார் தாணு.

எனது முதல் தயாரிப்பான 'பைரவி' படத்தை வாங்கி வெளியிட்டுத்தான் விநியோகஸ்தர் ஆனார் தாணு. இன்று அவர் தயாரித்த 'கிழக்குச் சீமையிலே' வெற்றிப் படத்திலும் சிறு துரும்பளவிற்காவது நான் பங்கு பெற்றேன் என்பது எனக்குப் பெருமையே.

என்றென்றும் என்மீது அன்பு குறையாதவர் தம்பி தாணு. அவர் உருவம் மட்டுமே கருப்பு. உள்ளம்... வெள்ளை.

பாரதிராஜாவின் 'கருத்தம்மா' படத்தின் கதை துளியளவுதான். ஆனால்... திருக்குறள் போன்ற அற்புதமான படைப்பு. இந்தப் படம் ஜனாதிபதி விருதை பாரதிராஜாவுக்கு பெற்றுத் தந்தது. டெல்லியில் நடந்த விருது விழாவிற்கு தன் கிராமத்து தாயை அழைத்துச்சென்று ஜனாதிபதியிடமிருந்து தன் சார்பில் தன் தாயாரை விருது வாங்கச் செய்தார். தன்னைப் படைத்த தாயை இப்படி தன் படைப்பால் பெருமைப் படுத்தினார் பாரதிராஜா.

இந்தக் கதையின் ஆசிரியர் ரத்னகுமார். இந்தப் படத்திலும் வழக்கம்போல் என் பங்களிப்பு உள்ளது. நான் பங்களித்த ஒவ்வொரு காட்சியிலும் அக்கறை காட்டி, உணர்வுப்பூர்வமான சோகங்களைக் கொட்டியிருக்கிறேன்.

உதாரணத்திற்கு ஒரு காட்சி...

ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்த தம்பதிக்கு தொடர்ந்து பெண் குழந்தைகளாகவே பிறக்கிறது. கடைசியாகப் பிறந்த பெண்குழந்தையை... கள்ளிப்பால் கொடுத்து சிசுக்கொலை செய்யும் கிராமத்து மருத்துவச்சியிடம் கொடுத்து, கொன்றுவிடச் சொல்கிறான் தந்தை.

இப்படி ஒரு பாவத்தொழிலை வேண்டா வெறுப்பாகச் செய்யும் மருத்துவச்சி, கொல்வதற்காக குழந்தையை தூக்கிக்கொண்டு வருகிறாள்.

இதையறிந்த வெளியூர் வாத்தியார் 'இந்தக் குழந்தையை கொன்னு புதைச்சிட்டதா சொல்லிடு. எனக்கு யாருமே இல்லை. நான் இந்தக் குழந்தையை வளத்துக்கிறேன்' எனச் சொல்லி வாங்கிச் சென்றுவிடுகிறார்.

தன் குழந்தையை மருத்துவச்சி மூலம் கொன்றுவிட்டதாக அறியும் தாய்... அந்த வேதனையில் இறந்துவிடுகிறாள். குற்ற உணர்ச்சியால் பாதிக்கப்பட்ட மருத்துவச்சி, அந்த தாய் புதைக்கப்பட்ட இடத்தில் ஒரு பன்னீர்ப்பூ செடியை நட்டு வைத்துவிட்டு மன்னிப்புக் கேட்கிறாள்.

இருபது ஆண்டுகளுக்குப் பிறகு...

வாத்தியாரால் நகரத்தில் வளர்க்கப்பட்ட அந்தப் பெண்குழந்தை பெரிய பெண்ணாகி, டாக்டராகி, தான் பிறந்த ஊர் என்று தெரியாமலேயே அந்த கிராமத்திற்கு மருத்துவப் பணியாற்ற வருகிறாள்.

வாகன வசதி இல்லாத அந்த கிராமம்தான், தான் பிறந்த ஊர் என்பது தெரியாமலேயே ஒத்தயடிப் பாதை வழியே நடந்துவருகிறாள்.

இப்போது பன்னீர் பூச்செடி பெரிய மரமாகி பூக்கள் பூத்துக் குலுங்குகிறது.

தன் மகள் வருகிறாள்... என்பதை உணர்ந்துகொண்ட அந்த பன்னீர்மரம் சந்தோஷத்தில் காற்றில் ஆடுகிறது. டாக்டர் மரத்தின் அருகே வரவர... சந்தோஷ மிகுதியில் மரம் ஆடி பூக்களை அவள் மேல் சொரிகிறது. அவள் மகிழ்ச்சி பொங்க மரத்தின் அருகே வந்து மரத்தைத் தடவித் தொட்டுப் பார்க்கிறாள்.

மரம் சிலிர்த்து மேலும் பூக்களைப் பொழிகிறது.

இந்தக் காட்சியை பாரதிராஜாவிடம் சொன்ன நான்... ''இந்தக் குழந்தையை நினைத்து ஏங்கித்தானே அந்தத் தாய் செத்தாள். அவள் சமாதியில் பூத்த மரம் தாயாகி, அன்பெனும் பூக்களை மகள் மீது தூவுகிறது'' என்றேன்.

தன் விழிகளில் வழிந்த கண்ணீரை பாரதிராஜாவால் கட்டுப்படுத்த முடியவில்லை. ‘இந்தக் காட்சி பிரமாதம்' என சொல்ல வந்தவரால் சொல்ல முடியாத அளவுக்கு தொண்டை அடைத்துவிட்டது.

இந்தக் காட்சியை எடுப்பதற்காக லொகேஷன் போயாச்சு. பன்னீர்மரம் ஒன்றையும் தேடிக் கண்டுபிடித்து விட்டனர். ஆனால் சீஸன் முடிந்தநேரம் என்பதால் மரத்தில் ஒரு பூகூட இல்லை. இதனால் வேறு லொகேஷன்களில் மரத்தை தேடி இரண்டு நாட்கள் அலைந்தும் அமையவில்லையாம். இதனால் கடுப்பான பாரதிராஜா என்னை திட்டித் தீர்த்திருக்கிறார்.

"இந்தக் கதை எழுதுறவங்க... மயிரே போச்சுனு ஸீன் சொல்லிடுறாங்க. இப்போ கஷ்டப்படுறது யாராம்?" என திட்டியவர் தன் அஸிஸ்டெண்ட்டுகளிடம் "ஆர்ட் டைரக்டர்கிட்ட சொல்லி, உடனே காகிதத்தில் பன்னீர்ப் பூக்கள் செஞ்சு மரம் நிறைய தொங்கவிடச் சொல்லுங்கய்யா. நூல் தெரியாம கட்டச் சொல்லுங்க"’என மாற்று ஏற்பாடு செய்திருக்கிறார்.

அதன்படி நிஜமாக பூத்த பூக்களைப்போல் ஏற்பாடு செய்துவிட்டனர்.

படம் வெளியானபோது அந்த பன்னீர்ப் பூக்கள் காட்சியும், தாயன்பும் ரசிகர்களை அழ வைத்துவிட்டது.

இந்த பன்னீர்ப் பூக்களுக்காகப் பட்ட பாட்டை என்னிடம் சொல்லிச் சொல்லி மகிழ்ச்சியில் என்னை தலையணையால் அடித்து அன்பைப் பொழிந்தார் பாரதிராஜா... அந்த பன்னீர்மரப் பூக்களைப் போல.

இப்படி ஒரு இக்கட்டு... சின்னப்ப தேவரிடம் நான் கதை சொன்னபோதும் ஏற்பட்டது.

"அண்ணே... ஹீரோ வர்ற வழியில் பசிக்காக உணவு தேடும்போது, ஒரு மரத்துல மாங்கா கொத்துக் கொத்தா காய்ச்சுத் தொங்குதுண்ணே" என்றேன்.

'கட்’ என சவுண்ட் கொடுத்த தேவர் "அடே... கதைக்காரப் பயலே, நான் ஷூட்டிங் நடத்தும்போது மாங்கா காய்ப்பு சீஸன் முடிஞ்சிருந்தா... கொத்துக் கொத்தா மாங்கா எப்படித் தொங்கும்?" எனக் கேட்டார். ”

"அண்ணே... ஹீரோ வர்ற வழியில் பசிக்காக உணவு தேடும்போது, ஒரு மரத்துல ஒரே ஒரு மாங்கா மட்டும் தொங்குதுண்ணே" என மாத்திச் சொன்னேன்.

"இது ஓ.கே.டா கலைஞானம். எப்படியோ ஒரு டூப் மாங்கா ரெடிபண்ணி தொங்கவிட்டு ஷூட்டிங் பண்ணிடுவேன்'' என்றார்.

இதை பாரதிராஜாவிடம் நான் சொன்னபோது... "படிக்காத அந்த மனுஷன் ஹாலிவுட் ரேஞ்சுக்கு சிந்திக்கிறார்னா... அறிவுஜீவி. அது அவருக்கு கிடைச்ச பாக்யம்'' என தேவரைப் பாராட்டி வியந்தார்.

ஸ்விட்சர்லாந்தில் பாராட்டப்பட்ட பாரதிராஜாவின் டைரக்ஸன் உத்தி!

# நின்று போன படத் திட்டம்!

'இதயம் பேசுகிறது' பத்திரிகையின் ஆசிரியர் மணியன் ஸ்விட்சர்லாந்து தமிழ்ச் சங்கத்தின் விழாவிற்காகச் சென்றிருந்த போது அங்கே... பாரதிராஜாவின் கலைத் திறமையைப் பாராட்டிப் பேசியதுடன், 'வேதம் புதிது' படத்தில் ராஜா-அமலா காதல் காட்சிகளைக் குறிப்பிட்டு, குறிப்பாக கோலம் அழிகிற காட்சியைச் சொல்லி சூப்பர் டைரக்ஸன். பாரதிராஜா நம்ம தமிழ்நாட்டுக்கு பெரும் புகழ் சேர்த்து வருகிறார்'' என வியந்து மணியனிடம் தமிழ்ச் சங்கத் தலைவர் சொல்ல... சென்னை திரும்பிய மணியன் அந்த பாராட்டுகளை தன் பத்திரிகையில் எழுதிப் புகழ்ந்தார்.
மணியன் எழுதியதை நினைத்து நான் பெருமைப்பட்டுக் கொண்டேன். அந்தப் படத்திற்காக நான் சொன்ன ஸீன்களில் அதுவும் அடக்கம்.

அய்யர் வீட்டுப் பெண் அமலா. தேவர் வீட்டு வாலிபன் ராஜா. ஒருமுறை அமலா ஆற்றில் குடம் மூலம் நீர் எடுக்கும் போது, ராஜா மீன் பிடிக்க தூண்டில் போட்டு காத்திருப்பார். மீன் சிக்கியதும் தூண்டிலை சுண்டி இழுக்கையில், அமலாவின் குடத்திற்குள் மீன் விழ... அமலா அலறி கீழே விழ... ராஜா பதறி தூக்கி விட ஓடிவருவார். அதற்குள் அமலா எழுந்துவிடுவார்.

ராஜா மீனைத் தேடும்போது, அது அமலாவின் அடிவயிற்றிலிருந்து தலையை நீட்டும். படக்கென அங்கே கைவிட்டு மீனை எடுப்பார் ராஜா. அதிலிருந்து அமலாவுக்கு அடிவயிற்றில் ராஜாவின் கை ஊரும் நினைப்புதான். இப்படித்தான் இருவரிடையே காதல் ஆரம்பமாகும்.



மறுநாள்... ராஜாவை அவரின் அம்மா சரிதா, கோயிலுக்கு அழைத்து வருவார். ஒரு பெரிய உருண்டைச் செம்பை ராஜாவிடம் கொடுத்து பிள்ளையாரை குளிப்பாட்ட நீர் எடுத்து வரச் சொல்லுவார். ராஜா போனநேரம்... அமலா அங்கே வர... 'வாம்மா... ஒரு உதவி செய். நீ அய்யர்வீட்டுப் பொண்ணாச்சே... நல்லா கோலம் போடுவியே. இந்தா கோலப்பொடி. நீ கோலம் போடு, நான் பூ வாங்கிட்டு வந்திடுறேன்' என சரிதா போய்விட... அமலா தன் சேலையை வழித்து இடுப்பில் செருகிக்கொண்டு, முட்டிக்காலுக்கு மேல் வரை தெரிய... குனிந்து கோலம் போட்டுக்கொண்டிருப்பார். செம்பில் நீர் எடுத்துக்கொண்டு வந்த ராஜா, அமலாவைப் பார்த்ததும் கோயிலில் இருந்த ஒரு டமாரத்தின் மறைவில் உட்கார்ந்து, செம்பை அங்கே வைத்துவிட்டு அமலாவை ரசித்துக்கொண்டிருப்பார். அப்போது செம்பு சாய்ந்து உருண்டு அதிலிருந்து நீர் வெளியேறும். அமலா புள்ளி வைப்பதையும், நீர் ஓடி வருவதையும் மாறி மாறி காண்பிக்கப்படும். ஒரு கட்டத்தில் கோலத்தை நீர் அழிக்கும். 'ச்சே...' என ராஜா அந்த டமாரத்தில் ஓங்கி அடிக்க... அது கோயில் முழுக்க ஒலிக்கும். இருவரும் ஒருவரை ஒருவர் மாறி மாறிப் பார்ப்பார்கள். அமலா நாணிக் கோணி சிரிப்பார். இருவரிடையே காதல் முழுமையாக மலரும்.

இதுதான் ஸ்விட்சர்லாந்தில் பாராட்டுப் பெற்றது.

காஞ்சி மகாப்பெரியவரை பிராமணர்கள் எட்டு பேர் ஒரு பல்லக்கில் வைத்து தூக்கிக் கொண்டு போவார்கள். ஆங்காங்கே வைத்து வைத்து சிரமப்பட்டு தூக்கிச் செல்வார்கள். இதைப் பார்த்த நான்கு விவசாயக்

கூலிகள் 'சாமி... நீங்க அனுமதிச்சா உங்களை சுமந்துபோய் இறக்க வேண்டிய இடத்துல இறக்கிடுறோம்' என்பார்கள்.

பெரியவரும் சம்மதிப்பார்.

ஒரு பூச்செண்டை தூக்குவதுபோல எளிதாக, விரைவாக பெரியவரை உரிய இடத்தில் சேர்த்துவிட்டு, 'போயிட்டு வர்றோம் சாமி' என கிளம்பிவிடுவார்கள்.

'நாங்க எட்டு பேர்கள் சுமந்துவர சிரமப்பட்டோம். அவா நாலுபேர் ஈஸியா பூவாட்டம் உங்களைச் சுமந்து வந்திட்டாளே?' எனக் கேட்பார்கள்.

பெரியவர் கேட்டார்... “நீங்க எதுக்காக என்னை சுமந்து வந்தேள்?"

'பாத பூஜை செய்றதுக்காக'

"எதற்காக அந்த பூஜை?”

"அதனால் எங்களுக்கு பலன் கிட்டும்”

"நீங்க பலனை எதிர்பார்த்ததால் பாரம் இருந்தது. அவா எந்தப் பலனையும் எதிர்பார்க்கல. அதனால் அவாளுக்கு பாரம் தெரியலே''என்றார்.

நானும் டைரக்டர் கே.எஸ்.கோபாலகிருஷ்ணனும் 'ஆதிசங்கரர்' வாழ்க்கையை படமாக்குவது சம்பந்தமாக மகாபெரியவரை தமிழக எல்லையோர ஆந்திர கிராமம் ஒன்றில் சந்திக்கச் சென்றபோது பெரியவரின் உதவியாளர் மீனாட்சிசுந்தரம் எங்களிடம் இந்த விஷயத்தைச் சொன்னார். (இதுபற்றி ஏற்கனவே நான் மிகவிரிவாக சொல்லியிருக்கிறேன். இருப்பினும் பலனை எதிர்பார்க்காதவனுக்கு பாரம் இல்லை’என்கிற நல்ல விஷயம் இதில் இருப்பதால் திரும்பவும் சுருக்கமாகச் சொல்லியிருக்கிறேன்.)

இதை நான் பாரதிராஜாவிடம் சொன்னபோது, அதை அப்படியே 'வேதம் புதிது' படத்தில் காட்சியாக்கினார்.

என் உழைப்பிற்கு ஒரு நல்ல பலன் கிடைக்க வேண்டும் என்கிற நல்ல மனதுடன் ‘பி.கே.புரொடக்ஷன்ஸ்’ என்கிற கம்பெனியைத் துவக்கினார் பாரதிராஜா. பாரதிராஜா- கலைஞானம் என்பதன் ஆங்கில முதல் எழுத்துதான் 'பி.கே.’ என்பதன் அர்த்தம். கம்பெனிக்காக, இந்தியன் வங்கியில் கணக்குத் தொடங்கி, அதைக் கையாளும் அதிகாரத்தையும் என்னிடமே கொடுத்தார் பாரதிராஜா.

எனது கதைகளில் ஒன்றான 'தேன் சிந்துதே பூஞ்சோலை' கதையை படமாக்க தேர்வு செய்தார். டைரக்டராக ஆர்.வி. உதயகுமார் பேசப்பட்டு 50 ஆயிரம் ரூபாய் அட்வான்ஸும் கொடுக்கப்பட்டது.

இந்த நல்ல செய்தியை நான் என் குடும்பத்தாரிடம் சொன்னபோது, 'பாரதிராஜா வாழ்க!' என என் குடும்பமே கோரஸ் பாடியது.

பொள்ளாச்சியில் 'சின்னக் கவுண்டர்' படப்பிடிப்பில் இருந்த ஆர்.வி.உதயகுமாருக்கு போன் செய்து 'படத்தை எப்போது ஆரம்பிக்கலாம்?'என பேசிவிட்டு வரச்சொல்லியிருக்கிறார் பாரதிராஜா. அதனால் நீங்கள் தங்கியிருக்கும் ஹோட்டலில் எனக்கும் ஒரு ரூம் போட்டு வையுங்கள்" என்றேன்.

"நீங்க புறப்பட்டு வாங்கண்ணே... ரூம் ரெடியா இருக்கு" என்றார்.

காரில் புறப்பட்டு நள்ளிரவில் பொள்ளாச்சி போய் சேர்ந்தேன். உதயகுமார் உள்ளிட்ட யூனிட் ஆட்கள் யாருமே அந்த ஹோட்டலில் இல்லை. ஏதோ தொலைவில் ஒரு மலைப்பகுதியில் ஷூட்டிங் நடத்தப் போயிருப்பதாகவும், அங்குதான் இரண்டு நாட்கள் தங்கப்போவதாகவும்' ஹோட்டல் தரப்பில் தகவல் சொன்னார்கள்.

"எனக்கு ரூம் போட்டிருக்காங்களா?"

"இல்லை"

"இப்போ ஒரு ரூம் கொடுங்க"

"ஃபுல்லாயிடுச்சே" என்றனர்.

இன்னொரு ஹோட்டலுக்குப் போனேன். பொள்ளாச்சி மாட்டுச் சந்தைக்கு வந்தவர்கள் அப்போதுதான் காலி செய்துவிட்டுப் போயிருந்தார்கள். எங்கு பார்த்தாலும் எச்சிலும், மதுப்புட்டியுமாக சுத்தமில்லாமல் இருந்தது. எனக்கு அங்கே தங்க மனம் ஒப்பவில்லை.

'ரூம் போடச்சொல்லியும்... உதயகுமார் இப்படிப் பண்ணீட்டாரே?' என யோசித்தபடி காரிலேயே அசதியில் தூங்கிவிட்டேன். டிரைவர் என்னை பத்திரமாக சென்னைக்கு கொண்டுவந்து சேர்த்துவிட்டார்.

மறுநாள் பாரதிராஜாவிடம் நடந்ததைச் சொன்னேன்.

"ஆரம்பமே சரியில்ல. கொஞ்சநாள் நம்ம படத் திட்டத்த நிறுத்தி வைப்போம்" என நிறுத்திவிட்டார்.

இதில் யார் குற்றமும் இல்லை. படப்பிடிப்பு நடக்கும் போது டைரக்டர்கள் உலகத்தையே மறந்துவிடுவார்கள். உதயகுமாரும் அப்படித்தான், நான் வருவதை மறந்திருப்பார்.

பணத்தை முதலீடு செய்பவர் பாரதிராஜா. அவரோட மூடுக்கு ஏற்ப படத்தை நிறுத்திவிட்டார். நானும் அவசரப் படாமல் காத்திருந்திருக்கலாம். அதைச் செய்யவில்லை.

ஆக... எனக்குத்தான் கொடுப்பினை இல்லை.

வாய்ப்புத் தேடிவந்த ஒரு அழகான பெண்ணை 'தேன் சிந்துதே பூஞ்சோலை'படத்திற்கு கதாநாயகியாக்கும் முடிவுடன் அந்தப் பெண்ணை விதம் விதமாக போட்டோ எடுத்தேன். அதை பாரதிராஜாவிடம் காட்டினேன்.

'யோவ் தேவரே... போட்டோ எடுக்குற வேலையை என்கிட்ட விட்றும்' எனச் சிரித்தவர்...

அடுத்த சில நாட்களில் என்னை அழைத்து சில போட்டோக்களைக் காட்டினார். அசந்தே போனேன். நான் போட்டோ எடுத்த பெண்ணையே பாரதிராஜா தன் ரசனைக்கேற்ப... கண்கள், மூக்கு, உதடுகள்... என க்ளோஸ்-அப்பில் எடுத்திருந்தார். ஆனால்... படம் நின்றுபோனதால் அந்தப் பெண்ணை நான் அறிமுகப்படுத்த முடியவில்லை. ஆனால் பாரதிராஜா அறிமுகப்படுத்தினார்.

அந்தப் பெண்ணும் பிரபல நடிகையானார்.

அவர்... 'நாடோடித் தென்றல்' ரஞ்சிதா.

இன்றளவும் தனது படங்களை எனக்குப் போட்டுக்காட்டி அபிப்பிராயம் கேட்பார் பாரதிராஜா. அவருக்கும், எனக்குமான நட்பு ஆலமர ஆணிவேர் போல ஆழமாக இருக்கிறது. அந்த ஆணிவேரை கறையான் தின்னாமல் நாங்கள் பாதுகாப்புடன் இருக்கிறோம்.

'பாரதிராஜா என் வாழ்நாளில் எனக்கு ஒரு படம் செய்து கொடுப்பார்' என்ற நம்பிக்கையோடு விழிமேல் விழிவைத்து (கண்களுக்கு மேல் கண்ணாடி போட்டு) காத்திருக்கிறேன்.

# நானும் ஜெயகாந்தனும்!

என் கலைப்பயணத்தில் நான் அனுபவித்த உச்சபட்ச மகிழ்ச்சி... ஜெயகாந்தன் அவர்களைச் சந்தித்ததுதான்.

**1974** ஜனவரியில், அன்பழகன் என்பவரின் தயாரிப்பில், நான் கதை-வசனம் எழுதிய படம் ‘பாதபூஜை.' ஜெயலலிதாவும், பாரதியும் நடித்து வந்தனர். (பெங்களூர் பாரதி, எம்.ஜி.ஆருக்கு ஜோடியாகவும் நடித்தவர். கன்னட நடிகர் மறைந்த விஷ்ணுவர்தனின் மனைவி) ஜெயலலிதாவிடமும், பாரதியிடமும் கதை சொல்லும் வாய்ப்பும், படப்பிடிப்பின்போது பழகும் வாய்ப்பும் எனக்கு கிடைத்தது. டைரக்டர் ஏ.பீம்சிங்கின் உதவியாளர் அருணாசலம் இயக்கிவந்தார்.

நான்காயிரம் அடிகள்வரை, எடுத்த படத்தை போட்டுப் பார்த்தோம்.

"கலைஞானம் சார் சொன்ன கதையில் இருந்த விறுவிறுப்போடு படம் எடுக்கப்படலியே" என அதிருப்தி தெரிவித்தார் அன்பழகன்.

இதையறிந்த நல்ல மனிதரான டைரக்டர் அருணாசலம் 'பணம் போட்டு தயாரிக்கிற மனுஷனின் மனம் நோகக்கூடாது. நாம் இயக்குநராகும் வாய்ப்பை பிறகு தேடிக் கொள்ளலாம்' என முடிவு செய்து ஒரு யோசனைச் சொன்னார்.

"என் குருநாதர் பீம்சிங்கிடம் நிலமையைச் சொல்லி, அவரையே டைரக்ஷன் பண்ணச் சொல்லலாம்" என்றார். அன்பழகனும் ஒப்புக்கொண்டார்.

அதன்படி படத்தைப் போட்டுப் பார்த்த பீம்சிங், "எடுத்தவரை படத்தை அப்படியே தூக்கிப் போட்டுவிடுவோம். திரைக்கதையை என் பாணியில் எழுதுறேன்" என்றார்.



அன்பழகனுக்கு திருப்தி.

திரைக்கதையை ரெடி செய்த பீம்சிங் "இப்போதைய திரைக்கதைப்படி ஜெயசித்ராவும், ஜெயாவும் (வி.சி.குகநாதன் மனைவி ஜெயா) பொருத்தமாக இருப்பார்கள். ஜெயலலிதாவிடமும் பாரதியிடமும் நிலமையைச் சொல்லி 'ரிக்வெஸ்ட் பண்ணி கேட்டுக்கொள்ளுங்கள். யார் மனசும் நோகாமல் பார்த்துக் கொள்ளுங்கள். இதெல்லாம் பேசி சரி பண்ணியதும் ஷூட்டிங்கை ஆரம்பிக்கலாம்" என்றார் பீம்சிங்.

அதன்படியே நிலமையைச் சொல்லி சம்மதம் வாங்கித் தந்த பிறகு படத்தைத் தொடங்கினார்.

ஹீரோவாக சிவக்குமாரும், ஹீரோயின்களாக ஜெயசித்ராவும், ஜெயாவும் அக்கா-தங்கைகளாக நடித்தனர். 12.09.1974-ல் 'பாதபூஜை' வெளியாகி நல்ல பெயருடன் வெற்றி பெற்றது.

(அதே ஆண்டில்... 13.11.1974-ல் சிவாஜி, ஜெயலலிதா நடித்து நான் கதை எழுதிய 'அன்பைத்தேடி' படம் வெளியாகி வெற்றிபெற்று அதுவும் எனக்கு பெயர் வாங்கித் தந்த நேரமது)

'பாதபூஜை' படத்திற்கு எனக்கு 12 ஆயிரம் சம்பளம் பேசப்பட்டிருந்தது. ஆனால் பாதிதான் கொடுத்தார் அன்பழகன்.

"மீதி ஆறாயிரம் ரூபாயை தர்றது" எனக் கேட்டேன்.

"நான் தயாரிச்ச படம் மூலம் நீங்க எழுதிய வசனத்துக்காக உங்களுக்கு நல்ல பேர் கிடைச்சிருக்கே. கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக்கங்க. நான் ஒரு கதை வாங்கி வச்சிருக்கேன். அதுக்கு நீங்கதான் திரைக்கதை-வசனம்

எழுதணும். அதுக்கான ஒப்பந்தம் போடும்போது பாக்கியையும் சேர்த்து தர்றேன்'' என்றார்.

'அட்ஜஸ்ட் பண்ணிக்கங்க' என பல தயாரிப்பாளர்கள் என்னிடம் சொன்ன அனுபவம் எனக்கு பழகிப்போன ஒன்றாகி விட்டதே. அதனால் நான் அதை பெரிதுபடுத்தவில்லை.

''கதை வாங்கி வச்சிருக்கதா சொன்னீங்களே... என்ன கதை?''

தலித் ராணுவவீரன் ஒருவன் பணி ஓய்வு பெற்று ரயிலில் ஊர் திரும்பிக் கொண்டிருக்கிறான். அதே ரயிலில் ஒரு பிராமண இளம்தாய் கைக்குழந்தையுடன் டிக்கெட் எடுக்க முடியாத வறுமையில், ரயிலில் நடைபாதைப் பகுதியில் அமர்ந்து பயணிக்கிறாள். திடீரென அவள் மயக்கமுற்று சாய்ந்தாள். இறந்தும் போனாள். அடுத்த ஸ்டேஷனில் ரயில் நிற்கிறது. இளம்பெண்ணின் சடலத்தையும், கைக்குழந்தையையும் கைப்பற்றி எடுத்துச் செல்கிறது போலீஸ். கூடவே சென்ற அந்த ராணுவவீரன், சட்டப்படி அனுமதி பெற்று அந்தக் குழந்தையை தத்தெடுத்துக்கொண்டு தன் கிராமத்திற்கு வந்துவிடுகிறான்.

தான் தலித்தாக இருந்தபோதும், குழந்தையை பிராமண ஆச்சாரப்படியே வளர்த்தான். குழந்தை வளர்ந்து பெரிய மனுஷியானாள். அவளின் எதிர்காலத்தை முடிவு செய்வதில் வரும் பிரச்சினைதான் மிச்சக் கதை'' என்றார் அன்பழகன்.

''அய்யோ... அருமையான கதையா இருக்கே. யார் எழுதினது?''

''ஜெயகாந்தன்''

எனக்கு அளவற்ற மகிழ்ச்சி. அதே சமயம் நிறைய அதிர்ச்சி.

''ஏங்க... ஜெயகாந்தன் கதைக்கு நான் திரைக்கதை- வசனமா? அதற்கு எந்த வகையிலும் நான் தகுதியில்லாதவன். அவர் எழுதிய சில கதைகளைப் படிச்சிருக்கேன். அவருக்கு நிகர் தமிழ்நாட்டில் அவர்தான். கத்துக்குட்டியாட்டம் ஏதோ நான்பாட்டுக்கு திரைக்கதை எழுதி, அவர்கிட்ட அடி வாங்கிவிட திட்டம் போட்டிருக்கீங்களா அன்பழகன்?''

''அப்படியெல்லாம் அவர் கோபிக்கமாட்டார். உங்களை மாதிரி புதியவர்களை உற்சாகப்படுத்தி எழுத வைப்பார். நாளைக்கே நாம அவரை சந்திக்கிறோம்'' என்றார்.

**1974-ன் இறுதியில்...**

ஒருபக்கம் 'ஜெயகாந்தன் கதைக்கு நாம திரைக்கதை எழுதுவதா?' என்கிற பயம்... ஒருபக்கம் 'ஜெயகாந்தனை பார்க்கப்போறோம்' என்கிற ஆர்வம்.

அவரைப் பார்க்க வேண்டும்... நாலு வார்த்தையாவது பேசிவிட வேண்டும்... என்கிற எனது வெகுநாள் ஆவல் என்னை உற்சாகப்படுத்தியது. 'அண்ணே... உங்க கதைக்கு திரைக்கதை எழுதுற அளவுக்கு அறிவு எனக்கில்லை. இதை அன்பழகன் கிட்ட நீங்க சொல்லி, வேறு ஒரு திரைக்கதாசிரியரை ஏற்பாடு செய்யணும்' என அவரிடம் சொல்லிவிட முடிவும் செய்தேன்.

ஆழ்வார்பேட்டையில்... ஒரு வீட்டின் மாடிக்கு நாங்கள் சென்றபோது... ஜெயகாந்தனுடன் நான்குபேர்கள் இருந்தார்கள்.

அறையெங்கும் ஒரே புகை மண்டலம். அது என்ன புகை என்று எனக்குத் தெரியவில்லை.

அன்பழகன் என்னை ஜெயகாந்தனிடம் அறிமுகம் செய்துவைத்தார்.

"அண்ணே... நான்... வந்து...."

"என்ன வந்து...? அதான் வந்திட்டீங்களே? நீங்கதானே திரைக்கதை எழுதப் போறீங்க?" எனக் கேட்டார்.

நான் தலையசைக்காமல் அவரையே பார்த்துக்கொண்டி ருந்தேன்.

"என்ன யோசிக்கிறீங்க? எழுதிக்கிட்டு வாங்க. இப்போ போங்க"'என்றார்.

அவ்வளவுதான். ‘விட்டால் போதும்’ என மாடிப்படிகளில் தடதடவென இறங்கி ஓட்டமும் நடையுமாக வந்து, என் வீட்டுக்கு வந்த பிறகுதான் திரும்பியே பார்த்தேன்.

இரவெல்லாம் யோசனை.

"நாளைக்கு காலைல நாம மட்டும் தனியாப் போய் ஜெயகாந்தனைப் பார்த்து ‘அண்ணே... உங்க கதைக்கு என்னால எழுத முடியாதுனு சொல்லிவிட வேண்டும்' என முடிவு செய்தேன்.

அதன்படியே... மறுநாள் காலை பத்து மணியளவில் ஜெயகாந்தனைச் சந்தித்தேன்.

"அண்ணே... வணக்கம்"

சிறிது யோசனையுடன் கேட்டார்... "என்ன நீங்க மட்டும் வந்திருக்கீங்க?"

''உங்ககிட்ட தனியா சில விஷயங்களைச் சொல்லணும்''

''அப்படியா... உட்காருங்க'' என்றார்.

பட்டும் படாமலும் உட்கார்ந்தேன்.

''உங்களைப்பத்தி அன்பழகன் ஏதேதோ சொன்னார். எனக்கு புரியல. நீங்க இதுக்கு முன்ன என்ன கதை எழுதியிருக்கீங்க?'' எனக் கேட்டார்.

நாக்கு வறண்டது. எச்சிலைக் கூட்டி விழுங்கினேன்.

என் தவிப்பைப் பார்த்தவர் 'சும்மா சொல்லுங்க' என்றார்.

''முதல் படம் காதல் படுத்தும் பாடு'. அப்புறம் 'வெகுளிப்பெண், 'குறத்தி மகன்,'வாயாடி,' 'பாதபூஜை,' அன்பைத்தேடி....''

''நீங்கதான் 'குறத்தி மகன்' கதையை எழுதினீங்களா?''"

''ஆமாங்கண்ணே... கதையை நான் எழுதினேன். திரைக்கதை-வசனம் எழுதி இயக்கினார் கே.எஸ்.கோபால கிருஷ்ணன்''

''அருமையான கதை. நடிகர் எஸ்.வி.சுப்பையா என்னிடம் அந்த கதையைச் சொல்லியிருக்கார். ''குறத்தி மகன்''படத்தை எஸ்.வி.சுப்பையாதான் படமாக எடுப்பதாக இருந்தாராமே?''

''ஆமாங்கண்ணே.... முதல்ல அவர்தான் எடுப்பதா இருந்தது'' என்றேன்.

('குறத்தி மகன்' கதையை நான் முதலில் எஸ்.வி.சுப்பையாவிடம் சொன்னதையும், பிறகு அது கோபாலகிருஷ்ணனுக்கு மாறியதையும் நான் ஏற்கனவே விரிவாகத் தொடரில் சொல்லியிருக்கிறேன் என்பதை வாசகர்களுக்கு நினைவூட்டிக் கொள்கிறேன்)

''அந்தக் கதை... கீழ்த்தட்டு மக்களுக்கும் கீழே உள்ள மக்களின் கதை என்று சுப்பையா என்னிடம் சொல்லீருக்கார். எச்சில் இலைக்கு நாய்களும் போராடுகிறது, நரிக்குறவர்களும் போராடுகிறார்கள். இவர்களுக்கு விமோசனம் இல்லையா? என ஒரு நரிக்குறத்தி கவலைப்படுகிறாள். அதுதானே உங்கள் கதை?''

''ஆமாங்கண்ணே...''

''எழுத்தாளர்கள் சிலர் நாடோடிகள் பற்றியும், மலைவாழ் மக்களைப் பற்றியும் எழுதியிருக்கிறார்கள். நீங்கள் எடுத்துக் கொண்ட விஷயம் எல்லாவற்றையும்விட சிறந்த கதையம்சம்''

"நன்றிங்கண்ணே"

"ஆமா... நீங்க என்ன படிச்சிருக்கீங்க?"

"ரெண்டாம் வகுப்பு"

மீசையை முறுக்கிக் கொண்டு என்னையே பார்த்தார் ஜெயகாந்தன்.

# கோழி அடைகாத்த வாத்து முட்டை!

எனது 'குறத்தி மகன்' கதையைப் பாராட்டிய ஜெயகாந்தன் 'நீங்க என்ன படிச்சிருக்கீங்க?' என்று கேட்டார்.

"ரெண்டாம் வகுப்பு" என்றேன்.

மீசையை முறுக்கியபடி என்னையே பார்த்தார்.

"ரெண்டாம் வகுப்பு படிச்சதையும் ரெண்டே வருஷத்துல மறந்து போயிட்டேண்ணே" என்றேன்.

வாய்விட்டு சிரித்தார் ஜெயகாந்தன்.

"தினத்தந்தி பேப்பரை எழுத்துக்கூட்டி படிக்கக் கத்துக்கிட்டேன்" என்றேன்.

"உங்களை எனக்கு ரொம்பவே பிடிக்குது. சில படித்த மேதைகள் எழுதும் கதைகளைவிட, படிக்காதவர்கள் எழுதும் கதையில் எதார்த்தம் இருக்கும். அனுபவமே உயிரோட்டமாக இருக்கும்" என்றார்.

அவர் என்னைப் பாராட்டியதும் என் உடம்பு ஒரு நிலையில் இல்லாமல் களிநடனம் புரிந்தது. மகிழ்ச்சியில் நெஞ்சு அடைத்துவிடும்போல இருந்தது.

'ஜெயகாந்தன் கோபக்காரர்... அப்படி... இப்படி' என யார், யாரோ சொன்னார்கள். அந்தப் பயம்தான் அவரைச் சந்திக்கும் வரை என்னை ஆட்டிப் படைத்தது.

நான் பார்த்த ஜெயகாந்தனிடம் அவரின் எழுத்தில் மட்டுமல்ல... பேச்சிலும், செயலிலும்கூட எதார்த்தமும் குழந்தை மனமும் இருந்தது. அவர் பேசப் பேச உணர்ச்சிவசப்பட்டேன்.

நான் கதை-வசனம் எழுதிய 'பாதபூஜை' படம் எப்படிப் போகிறது?" என விசாரித்தார்.

''நல்லாவே போகிறதண்ணே''

''அதில் ஏதாவது ஒரு ஸீன் சொல்லுங்க?''

''ராகவன்-சுகுமாரி தம்பதிக்கு ஜெயசித்ராவும், ஜெயாவும் மகள்கள். 'அக்கா-தங்கை என்றால் இப்படித்தான் இருக்கணும்' என பிறர் மெச்சுவதுபோல வாழ்கிறார்கள் இரண்டு பெண்களும். அந்தச் சமயம்... ஜெயா மட்டும் வீட்டில் இருக்கும்போது ஒரு வெளியூர்க்காரர் வருகிறார். அவளிடம் குசலம் விசாரிக்கும் அந்த நபர் 'உன் வளர்ப்புப் பெற்றோர் உன்னை நல்லபடியா பார்த்துக்கிறாங்களா?'னு விசாரிப்பார்.

'என்ன இப்படிச் சொல்றீங்க?' என அந்தப் பெண் கேட்க...

''ஆமாம்மா... அவங்க பெத்த பிள்ளைக்குத்தான் இப்போ வரன் தேடுறாங்கனு கேள்விப்பட்டேன். இப்படியெல்லாம் நடக்கும் என ஏற்கனவே நான் நினைத்தேன். அதுபோலவே ஆகிப்போச்சு. அதனாலதான் மனசு பதறி உன்னைப் பார்க்க வந்தேன்"

''உங்களுக்கு ஏன் மனசு பதறணும்?"

''என்னம்மா இப்படிக் கேட்டுட்ட? ராமேஸ்வரத்தில் நீ பெற்றோரைப் பிரிந்து அழுதுக்கிட்டிருந்தபோது நான் தானம்மா உன்னை எடுத்து வளர்த்தேன். என்னால் உன்னை வளர்க்க முடியல. அப்பத்தான், இப்போ உன் பெற்றோரா இருக்கவங்க ராமேஸ்வரம் வந்தாங்க. என் நிலைமையைப் பார்த்து '''இந்தக் குழந்தையை நாங்க வளர்க்கிறோம்'னு சொல்லி உன்னை கூட்டிட்டுப் போனாங்க. அந்தச் சமயம் உனக்கு மூணு வயசிருக்கும். சரிம்மா... இதையெல்லாம் நீ மனசில போட்டு குழப்பிக்காத. என்னோட பூர்வீக வீட்டை வித்து அந்தப் பணத்தை உனக்கு கொண்டு வந்து தர்றேன்''எனச் சொல்லிவிட்டுப் போய்விடுவார்.



'அப்போ... நான் இவர்களின் சொந்த மகள் இல்லையா?' என ஜெயா மனதில் பூகம்பமே உருவாகிவிடும். மனம் வெதும்பி வீட்டின் கொல்லைப்பக்கம் வந்து உட்கார்ந்திருக்கையில்... பக்கத்து வீட்டு கொல்லைப் புறத்தில் ஒரு தம்பதி கோழிக்கும், குஞ்சுகளுக்கும் இரை போடுவார்கள். கோழி இரையைக் கொத்தி, தன் குஞ்சுகளுக்கு ஊட்டும். ஒரு குஞ்சு மட்டும் தனியாக நின்று 'மியா... மியா'னு கத்திக் கொண்டிருக்க... அந்தக் குஞ்சை கோழி கொத்தி விரட்டும். இதைப்பார்த்த பக்கத்து வீட்டுக்காரர், 'நான் அப்பவே சொன்னேன். கோழி அடை காக்கையில் அதில் வாத்து முட்டையை வைக்காதே'னு. இப்பப் பாரு... அது தன் குஞ்சு இல்லைனு தெரிஞ்சு தாய்க்கோழி கொத்தி விரட்டுது. அது... அதுக்கு தன் குஞ்சு பொன்குஞ்சுனு சும்மாவா சொன்னாங்க?''என அங்கலாய்ப்பார்.

இதையெல்லாம் கவனித்துக்கொண்டிருந்த ஜெயா மனமுடைந்து வீட்டை விட்டு வெளியேறுவார்''

இந்தக் காட்சியை நான் சொன்னேன்.

''நன்றாக இருக்கிறது. நீங்கள் என் கதைக்கு திரைக்கதை எழுதலாம்'' என்றார் ஜெயகாந்தன்.

உற்சாகமானேன். எனக்கு அதற்கு மேல் இருப்புக் கொள்ளவில்லை. ஜெயகாந்தனுக்கு வணக்கம் தெரிவித்துவிட்டு சிட்டாகப் பறந்தேன்.

என்னமோ சொல்வாங்களே... 'வசிஷ்டர் வாயால் பிரம்ம ரிஷி'னு... அதுபோல ஜெயகாந்தனிடம் நான் பெற்ற பாராட்டு மிகப்பெரிய பரிசுதான். அதிலும் நான் எதிர்பார்க்காத பரிசு. ஜெயகாந்தனின் கதையை படமாக்குவதாக இருந்த தயாரிப்பாளர் அன்பழகன், பணப்பற்றாக்குறை காரணமாக படத்திட்டத்தை கைவிட்டுவிட்டு தன் மனைவியுடன் சிங்கப்பூர் சென்றுவிட்டார்.

ஜெயகாந்தன் கதைக்கு திரைக்கதை எழுதும் பாக்கியம் அமையாமல் போனதால்... அந்த வேதனையில், அதன் பிறகு நான் ஜெயகாந்தனை சந்திக்கவேயில்லை.

பாரதிராஜா, எனது நலனுக்காக தயாரிக்க ஏற்பாடு செய்து, நின்றுபோன எனது 'தேன் சிந்தும் பூஞ்சோலை' கதையை படமாக்க முடிவு செய்தேன். 'கிழக்குச் சீமையிலே' படத்தின் மாபெரும் வெற்றியைப் பயன்படுத்திக்கொள்ளும் விதமாக அந்தப் படத்தில் நடித்த விஜயகுமார், நெப்போலியன், ராதிகா, அஸ்வினி உள்ளிட்டவர்களை ஒப்பந்தம் செய்தேன். இசை-இளையராஜா. ஒளிப்பதிவு-இயக்கம் என்.கே.விஸ்வநாதன்.

எல்லாம் சரி. படம் தயாரிக்க பணம்?

எனது ''இளஞ்ஜோடிகள்', 'ஜோதிமலர்' படங்களை இயக்கிய இராம.நாராயணனைச் சந்தித்தேன்.

படத்தின் கதையைச் சொல்லி, படத்தின் வெளியீட்டு உரிமையை அவருக்கே கொடுத்துவிடுவதாகச் சொல்லி பணம் கேட்டேன்.

பூரண சம்மதம் தெரிவித்த இராம.நாராயணன் ''அண்ணே... 'மிருதங்க சக்கரவர்த்தி' போல் கலையம்சம் உள்ள படமாக இதை எடுங்கள்'' என்றவர்... ''அதில் மிருதங்கம் வாசித்தவர் யார்?'' எனக் கேட்டார்.

உமையாள்புரம் கா.சிவராமன் குறித்து 'மிருதங்க சக்கரவர்த்தி' படம் சார்ந்த சில விஷயங்களை நான் ஏற்கனவே தொடரில் சொல்லியிருக்கிறேன். இருப்பினும் அவர் குறித்து விரிவாக சில விஷயங்களை இங்கே சொல்கிறேன்.

சிறந்த பாடகரான டாக்டர் காசிவிஸ்வநாத அய்யர்-கமலாம்பாள் தம்பதியின் மகன் கா.சிவராமன். குழந்தைப் பருவத்திலேயே கஞ்சரா வாங்கிக் கொடுத்து வாசிக்க வைத்தவர் பாட்டி சாவித்ரி அம்மையார். **17.12.1935-**அன்றுபிறந்த சிவராமன் ஐந்து வயதிலிருந்து மிருதங்கம்

கற்றுக்கொள்ள ஆரம்பித்தார். பத்து வயதில் அரங்கேற்றக் கச்சேரி செய்தார். ஆறுபாதி நடேச அய்யர், தஞ்சை வைத்தியநாத அய்யர், பாலக்காடு மணி அய்யர் மற்றும் கும்பகோணம் -சாக்கோட்டை-ரங்கு அய்யங்கார் ஆகியோர் இவரின் குரு நாதர்கள். இசைச் சக்கரவர்த்தியாக இருந்தாலும் பி.ஏ.பி.எல், எம்.எல். படித்தவர். **1981** முதல் **1986** வரை தமிழக அரசவை இசைக்கலைஞராக இருந்தவர். மத்திய அரசின் 'பத்மஸ்ரீ', 'பத்ம பூஷண்' உட்பட நிறைய விருதுகளைப் பெற்றவர். கௌரவ டாக்டர் பட்டமும் பெற்றவர்.

இசை விமர்சகர் சுப்புடுவிடம் பாராட்டுப் பெறுவதென்பது லேசுப்பட்ட விஷயமில்லை. ஒருமுறை சிவராமனைப் பார்த்த சுப்புடு, எல்லையில்லா மகிழ்ச்சியடைந்து "சிவராமன் இப்படி வாங்கோ. 'மிருதங்க சக்கரவர்த்தி'யில் நீங்கள் க்ளைமாக்ஸில் வாசித்த வாசிப்பை உலகத்தில் இனி யாராலும் வாசிக்க முடியாது. ரொம்ப ரொம்ப பிரமாதம். நீங்களும், சிவாஜிகணேசனும் க்ளைமாக்ஸ் காட்சியில் தொழில்முறை கணவன்-மனைவியாகவே மாறிவிட்டீர்கள். உங்களுக்கு என்றும் என்னோட ஆசிர்வாதம் நிறைவாக நிற்கும்'' என வாழ்த்தி யிருக்கிறார்.

அதை என்னிடம் நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்ட சிவராமன், ''கலைஞானம் சார்... 'மிருதங்க சக்கரவர்த்தி' படப்பிடிப்பு சமயம் என்னை சிவாஜி சார் 'வாத்யாரே' என்றுதான் அழைப்பார். 'வாத்யாரே... உங்க தொழிலை நான் சரியாச் செய்றேனா?' என அடிக்கடி என்னிடம் விசாரித்துக் கொள்வார். என் மகனின் பூனூல் கல்யாணத்திற்கு நண்பர் 'மேஜர்' சுந்தர்ராஜனுடன் சென்று பத்திரிகை வைத்தபோது, மகிழ்வுடன் வந்து வாழ்த்தினார். நாரத கான சபாவில் என் கச்சேரிக்கு வந்து நெஞ்சாரப் பாராட்டினார் சிவாஜி. பொதுவாக தனி ஆவர்த்தனம் வாசிக்கும்போது ரசிகர்கள் சிலர் எழுந்து போய்விடு வார்கள். ஆனால் 'மிருதங்க சக்கரவர்த்தி' படம் வந்த பிறகு தனி ஆவர்த்தனங்களுக்கு ரசிகர்கள் எழுந்து செல்வதில்லை. அந்தப் படத்தில் வாசித்ததை வாசிக்கச் சொல்லி ரசிப்பார்கள்.

என் தம்பியின் கல்யாணப் பத்திரிகை வைப்பதற்காக 'இதயம் பேசுகிறது' மணியனுடன் எம்.ஜி.ஆரின் வீட்டுக்குப் போனேன்.

''உம்ம 'மிருதங்க சக்கரவர்த்தி' வாசிப்பை ரெக்கார்ட் பண்ணி வச்சுக்கிட்டு, காரில் போகும்போது வரும்போதும் கேட்டு ரசிக்கிறார் எம்.ஜி.ஆர்.' என மணியன் சொன்னபோது எனக்கு மிக மனமகிழ்ச்சியாக இருந்தது'' என என்னிடம் தெரிவித்தார் சிவராமன்.

# இசைக்கு எம்.ஜி.ஆர் கொடுத்த சிம்மாசனம்!

# உருகி அழுத இளையராஜா!

'மிருதங்க சக்கரவர்த்தி' படத்தில் வாசித்ததற்காக தனக்கு கிடைத்த பாராட்டுகளையும், பெருமைகளையும் மிருதங்க வித்வான் 'உமையாள்புரம்' கா.சிவராமன் என்னிடம் தெரிவித்தார்.
"கலைஞானம் சார்... ஒரு ப்ரிவியூ தியேட்டரில் எம்.ஜி.ஆர். படம் பார்த்துக்கொண்டிருந்தார். நானும் அங்கே போன போது 'சிவராமன்' என அழைத்து என்னைக் கட்டி அணைத்துக் கொண்டு 'நீங்க வாசித்த நாதத்தின் இனிய ஓசை என் காதில் எப்பவும் ஒலிச்சுக்கிட்டே இருக்கு. இப்போ உங்களுக்கு என்ன வேண்டும் கேளுங்க?' என்றார்.

"உங்க அன்பு ஒன்றே போதும்" என்றேன்.

பிறகொரு சமயம்... இசைக்கலைஞர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றிற்கு அழைப்பிதழ் கொடுப்பதற்காக எம்.ஜி.ஆரைச் சந்திக்கப் போனேன். அது ஒரு செட்டிங் வேலை நடந்து கொண்டிருந்த இடம். அங்கிருந்த ஒருவரிடம் என் விசிட்டிங் கார்டைக் கொடுத்துவிட்டேன். அலட்சியமாக வாங்கிச் சென்ற அந்த நபர்... தலை தெறிக்க ஓடிவந்தார்.

"அய்யா... உங்கள நிற்க வச்சதுக்காக தலைவர் திட்டிட் டார்... வாங்கய்யா..." என அழைத்துச் சென்றார். நான் சென்று எம்.ஜி.ஆருக்கு வணக்கம் வைத்தேன்.

எனக்குப் பதில் வணக்கம் செய்த எம்.ஜி.ஆர்., அங்கே இருந்த பிரம்மாண்டமான சிம்மாசன சேரில் என்னை உட்காரச் சொன்னார்.

"நீங்க இருக்கும்போது நான் இந்தச் சேரில் உட்காரக்கூடாது" என்றேன்.

"அதற்குத் தகுதியானவர்தான் நீங்கள்" என என்னை உட்கார வைத்தார்.



''கலைஞானம் சார்... நீங்கள் கதை எழுதித் தயாரித்த 'மிருதங்க சக்கரவர்த்தி' படம் எனக்கு நிறைய பெருமைகளைத் தந்துவிட்டது'' என்றார் சிவராமன்.

நான் சிவராமனின் பெருமைகளை இராம.நாராயண னிடம் சொன்னேன்.

''நீங்க சொன்ன பிறகுதான் அவரோட பெருமைகள் தெரியுது. இவரைப் போலவே தவில் இசையில் சக்கரவர்த்தி 'வலையப்பட்டி' ஏ.ஆர்.சுப்பிரமணியம். அதேபோல நாதஸ்வர இசையரசி 'மதுரை' பொன்னுத்தாயி மிகப் புகழ்பெற்றவர். ராஜரத்தினம் பிள்ளை, ''காருகுறிச்சி' அருணாச்சலம் வரிசையில் போற்றத் தகுந்தவர் பொன்னுத்தாயி. இவரின் நாதஸ்வர நிகழ்ச்சிக்கு வரவேற்பும், வருமானமும் நிறைவாக வந்து கொண்டிருந்த நேரத்தில் இவரின் கணவர் இறந்துவிட... அதிலிருந்து நாதஸ்வரம் வாசிப்பதை நிறுத்திவிட்டார். அதுக்குப் பொன்னுத்தாயி செண்ட்டிமெண்ட்டா ஒரு காரணமும் சொன்னார்.

''நான் வாசிப்பது மங்கல வாத்தியம். வாசிக்கப் போகும் இடத்தில் 'புருஷனை இழந்த விதவைப்பெண் மங்கல வாத்தியம் வாசிக்கலாமா?'னு யாராவது சொல்லீட்டா... அது எனக்கும், என் வாத்தியத்திற்கும் களங்கமாகிப் போகும். அதனால்தான் வாசிப்பதை நிறுத்திட்டேன்''னு பொன்னுத்தாயி ஒரு பேட்டியில் சொன்னதை நான் படிச்சிருக்கேன். இப்படியான குணாதிசயத்தை வைத்து கதையை எழுதுங்க. நீங்க கேட்டுக் கிட்டபடி நான் பணம் தர்றேன்'' என்றார் இராம.நாராயணன்.

''எனக்கு முழுச் சம்மதம்தான். இருப்பினும் அவரின் அனுமதியில்லாமல் சினிமா எடுக்க முடியாது. அவரிடம் அனுமதி வாங்குகிற அளவுக்கு கால அவகாசமும் இல்லை. நீங்கள் குறிப்பிட்டவர்களை நினைவில் வைத்துக்கொண்டு வேறு கதை எழுதுகிறேன்'' என்றேன்.

இராம.நாராயணனும் ஒப்புக்கொண்டார்.

'புதுப்பட்டி பொன்னுத்தாயி' படத்தின் கதை தயாரானது. இந்தப் படத்திற்காக இளையராஜா இசையில் தவில் சக்கர வர்த்தி 'வலையப்பட்டி' சுப்பிரமணியத்தையும், அவருடன் நாதஸ்வரம் வாசித்து வரும் 'திருவிழா' ஆர்.ஜெயசங்கரையும் வாசிக்க வைக்க... அவர்களைச் சந்தித்துப் பேசி முடித்து விட்டேன்.

'திருவிழா' ஆர்.ஜெயசங்கர் பணிவும், பண்பும் மிக்கவர். நாதஸ்வரத்தில் பெரிய வித்வான். வசதியானவர் என்பதால்... முக்கியமான நிகழ்ச்சிகளில் மட்டுமே வாசிப்பார்.

புதுப்பட்டி பொன்னுத்தாயி' படத்திற்காகஇளையராஜா தலைமையில், வலையப்பட்டியாரும், 'திருவிழா' ஜெயசங்கரும் ரிக்கார்டிங் தியேட்டரில் வாசிக்கப்போவதை முன்னிட்டு பத்திரிகையாளர் களையும் அழைத்திருந்தேன். சுமார் நூறு பத்திரிகை யாளர்கள் திரண்டுவிட்டனர்.

பேரார்வத்துடன் அதே சமயம் பேரமைதியுடன் இளையராஜா உட்பட எல்லோரும் காத்திருந்தோம்.

இதையெல்லாம் கவனித்த 'திருவிழா' ஜெயசங்கர் என்ன செய்தார் தெரியுமா?

படத்திற்காக கொடுக்கப்பட்ட நோட்ஸை வாசிப்பதை விட்டுவிட்டு... இளையராஜாவின் இசையில் வந்த 'முதல் மரியாதை' படப் பாடலான 'பூங்காற்று திரும்புமா... ஏம் பாட்ட விரும்புமா' என வாசிக்க ஆரம்பித்துவிட்டார். அவர் வாசிக்க... வாசிக்க... இளையராஜா உருகிக்கொண்டிருந்தார். ராஜாவின் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் கசிந்து ஓட ஆரம்பித்தது.

வாசித்து முடித்ததும் எல்லோரும் இடைவிடாமல் கைதட்டினார்கள். சில நிமிடங்களுக்குப் பின் அமைதி ஏற்பட்டது. இளையராஜா ஜாடையாக என்னை அழைத்தார்.

''அண்ணே... திரும்பவும் ஒருமுறை அவரை வாசிக்கச் சொல்லுங்க'' என கனிந்த குரலில் எனக்கு மட்டும் கேட்பதுபோல் சொன்னார்.

இதைக் கவனித்த மற்றவர்களும் ஒன்ஸ்மோர் கேட்க... மீண்டும் வாசித்தார் 'திருவிழா' ஜெயசங்கர். கேட்டுக் கொண்டிருந்த அத்தனைபேர்களும், நாதஸ்வர ஓசையின் சுகத்தில் மகுடிக்கு மயங்கும் பாம்புபோல மயங்கித் தத்தளித்தார்கள். இளையராஜாவின் கண்ணீர் ஓய்வு பெறவேயில்லை.

தனது பாடலை மற்றொரு வித்வான் வாசிப்பதில் ஏற்பட்ட சுகத்தில் மெழுகாக உருகியிருந்தார் இளையராஜா. 'இசைக்கு இசையாத பயிரும் இல்லை... உயிரும் இல்லை' என்றார் வாரியார் சுவாமிகள். அதை அங்கே காண முடிந்தது.

இளையராஜாவின் இசையை மோகித்து, அவருக்காகவே வாசித்தார் அந்த வித்வான். அந்த வித்வானின் இசையில் மனதைப் பறிகொடுத்து மயங்கிக் கிடந்தார் இளையராஜா. இது... இரு இசைக் கலைஞர்களின் உண்மைத் தன்மையை எனக்கு உணர்த்தியது.

அடுத்து, படத்திற்கான இசையை பதிவு செய்யும் வேலைகள் தொடங்கின.

இளையராஜாவின் நோட்ஸை 'திருவிழா' ஜெயசங்கர் வாசித்துக்கொண்டிருந்தபோது... எதிர்பாராத ஒரு விபரீதம் நடந்துவிட்டது.

நாதஸ்வரத்தின் நுனியில் இருந்து, அதன் கழுத்து வரை ஊதி... ஊதி 'திருவிழா' ஜெயசங்கர் வாசித்தபோது... அழுத்தம் தாளாமல் 'படார்' என நாதஸ்வரம் வெடித்துவிட்டது.

அனைவரும் அதிர்ச்சியில் உறைந்துபோனோம்.

அதன்பிறகு அந்த நாதஸ்வரத்திலிருந்து நாதம் வரவில்லை.

"கலைஞானண்ணே... மங்கல வாத்தியம் வெடிக்கக் கூடாதே. இது நல்லதாப் படலையே" என சொல்லிவிட்டு மிகச்சோகமாக எழுந்து போய்விட்டார் இளையராஜா.

மகிழ்ச்சியின் உச்சத்தில் இருந்த அனைவரையும் இந்தச் சம்பவம் அடுத்த நிமிஷமே சோகத்தில் ஆழ்த்திவிட்டது.

'புதுப்பட்டி பொன்னுத்தாயி' படத்தை எடுத்து வெளி யிட்டேன்.

இளையராஜாவின் பாடல்கள் அனைத்துமே பிரமாதமாக இருந்தன. ராதிகா, விஜயகுமார், நெப்போலியன் என அனைவரும் சிறப்பாக நடித்திருந்தும் பலன் கிடைக்க வில்லை.

ஆமா... படம் சரியாகப் போகவில்லை.

ஒருவேளை மங்கல வாத்தியம் வெடித்தது இதன் அறிகுறியோ... என்னவோ?

எம்.ஜி.ஆர். நடித்த 'நீதிக்குத் தலைவணங்கு', சிவாஜி நடித்த 'சித்ரா பவுர்ணமி' படங்களைத் தயாரித்தவர் உமையாம்பிகை சுப்பிரமணிய செட்டியார். பிரபல விநியோகஸ்தராகவும் இருந்தார். தேவரின் ஃபைனான்ஸியர், தேவரண்ணன் மூலம் எனக்கும் பரிட்சயமானவர்.

நான் தயாரித்த 'இளஞ்ஜோடிகள்' படத்தின் மூன்று ஏரியாக்களை வாங்கி, அதை மறுவிலைக்கு விற்று நல்ல லாபம் பார்த்தார். ஆனாலும், அந்தப் பட வியாபார ஒப்பந்தப்படி எனக்கு மாதா மாதம் தவறாமல் ஒரு தொகை கொடுத்து வந்தார்.

அப்படி ஒருநாள் பணம் வாங்கப் போனபோது...

ஃபைனான்ஸ் சம்பந்தமாக தனது 18 வயது மகன் எழுதி வைத்திருந்த அன்றைய கணக்கு-வழக்கு நோட்டை வாங்கி சரி பார்த்துக்கொண்டிருந்தார் செட்டியார்.

முப்பதாயிரம் ரூபாய் வரவு எழுதப்பட்டிருந்தது. ஆனால் பணத்தை எண்ணிப் பார்த்தபோது முப்பதாயிரத்து நூறு ரூபாய் இருந்தது.

'அந்த நூறு ரூபாய் எப்படி வந்ததென தெரியவில்லை' என அந்தப் பையன் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்க... கோபமான செட்டியார், மகனை பிரம்பால் அடித்து துவைத்துவிட்டார்.

"கணக்குல பணம் குறைஞ்சாத்தான் அடிக்கணும். அதிகமாத்தானே இருக்கு. பிறகேன் பிள்ளையை இப்படி அடிக்கிறீங்க" என நான் தடுத்தேன்.

"இங்கதான் நீங்களும் தப்புப் பண்றீங்க. கடன் வாங்கினவன் சிரமப்பட்டுத்தான் கடனை அடைக்க பணம் கொண்டு வந்திருப்பான். வட்டிக்கடை வச்சிருக்க நாமதான் கணக்குல சரியா இருக்கணும். பணத்தை விட்டவன் வயிறெரிய மாட்டானா? வியாபாரக் கணக்குல ஒரு பைசா கூட இருந்தாலும் தவறு. குறைச்சலா இருந்தாலும் தவறு. கணக்கு எழுதும்போது பணம் கூடக் குறைச்சலா வர்றதை மறைக்கப் பழகுறவன், பின்னாடி திட்டமிட்டே அதைச் செய்து திருட்டுக் கணக்கு எழுத ஆரம்பிச்சிடுவான். அது, அவனோட வாழ்க்கையையே நாசம் பண்ணிடும். இந்தப் பயலுக்கு பலமுறை சொல்லியும் புத்தியில ஏறல.

இவன் கழுதை மேய்க்கத்தான் லாயக்கு'' என்றபடி மறுபடியும் மகனை அடிக்க கை ஓங்கினார். நான் தடுத்தேன்.

'நம்ம பணம் ஒரு பைசா குறையவும் கூடாது. அடுத்தவன் பணம் ஒரு பைசாவைக்கூட கூடுதலா வாங்கிடக் கூடாது'னு நினைக்கிற ஒரு நல்ல, நாணயமான வியாபாரியாக செட்டியார் என்னை வியக்க வைத்தார்.

டீ வந்தது. குடித்தேன்.

''அய்யா... அடுத்த வாரம் ஊட்டியில ஷூட்டிங். பணம் தேவைப்படுது'' என்றேன்.

''நல்லா எண்ணிப் பார்த்துக்கணும்'' எனச் சொல்லியபடி கொடுத்தார்.

'நமக்கும் அடி விழுமோ?' என யோசித்தபடி ஒன்றுக்கு மூன்று முறை எண்ணிக்கொண்டு ''சரியா இருக்கு'''என்றேன்.

பேச்சு தேவரண்ணன் பக்கம் போனது.

தேவரின் நிறைவேறாத மூன்று ஆசைகள்...!

# புலவனின் வைராக்கியம்!

''நான் சிவாஜியை வச்சு படம் எடுத்துக்கிட்டிருந்தப்போ... தேவரைப் பார்க்கப் போயிருந்தேன். அப்போ அவர் '''கலைஞானம் ஒரு முருகன் கதை சொன்னான். அதை சிவாஜியை வச்சு எடுக்கப் போறேன்'னு என்கிட்ட சொன்னார். 'அந்தப் படத்தை, நான் மூணு ஏரியாவுக்கு முன்கூட்டியே மொத்த பணமும் கொடுத்து வாங்கிக்கிறேன்'னு சொன்னேன். ஆனா... அப்புறம் அந்த முயற்சி நின்னுபோச்சு. தேவரும் இறந்திட்டாரு. அந்தக் கதையை இப்ப சொல்லமுடியுமா?''' என தயாரிப்பாளரும், ஃபைனான்ஸியருமான ''உமையாம்பிகா' சுப்பிரமணிய செட்டியார் கேட்டார்.

''தேவரண்ணனுக்கு மூணு ஆசைகள் இருந்தன. அதை நிறைவேற்ற முடியாமலேயே போய்ச் சேர்ந்திட்டார். பொய்யாமொழிப் புலவர் கதையை படமாக்குவது, புயல் சீற்றத்தால் அழிந்து கடலுக்குள் போய்விட்ட தனுஷ்கோடியை இங்கிலீஷ் பட பாணியில் எடுப்பது, அவரால் பல வசதிகள் செய்யப்பட்ட மருதமலை முருகன் கோயிலுக்கு மேலும் ஒரு வசதியாக மலையின் நடுப்பகுதியில் நூறு கார்கள் நிற்க இடமும், பக்தர்கள் தங்க இடமும், லிஃப்ட் வசதியும் ஏற்பாடு செய்வது... இந்த மூணு ஆசையும் நிறைவேத்த முடியல. முருகன் கதையை நான் தேவர்கிட்ட சொன்ன மாதிரியே உங்ககிட்ட சொல்றேன்''' என்றேன்.

''டேய் கலைஞானம்... நான் எம்.ஜி.ஆரை வச்சு நிறைய படம் எடுத்தவன். இப்போ எம்.ஜி.ஆர். முதலமைச்சர் ஆகிட்டார். சிவாஜியை வச்சு ஒரு படம் எடுக்கலாம்னு இருக்கேன். முருகன் கதையா இருந்தா சொல்லுடா''

''அண்ணே... முருகனைக் பாடவேமாட்டேன்னு சொன்னான் ஒரு புலவன்''



''என்னது... முருகனைப் பாடமாட்டேன்னானா? யார்ரா அந்த மடப் புலவன்?''

''பொறுமையா கேளுங்கண்ணே...''"

''சரிடா... சொல்லு...''"

''காளீஸ்வரியின் பக்தன் ஒருவனுக்கு பெரும் சோதனை. அம்பாளிடம் முறையிட்டு உருகிப் பாடினான். அம்பாள் அவன்முன் தோன்றி அவனுக்கு 'சிவகவி' என பெயர் சூட்டி அருள் பாலித்தாள். அதுமுதல் கவியில் வல்லவனானார் சிவகவி. சிவனையும், அம்பாளையும் தவிர தன் வாயால் வேறு தெய்வங்களைப் பாடமாட்டார் சிவகவி. அவர் சொல்வதெல்லாம் பலித்தது. ஒரு மன்னனின் மகள் அமிர்தவல்லி, அம்மை கண்டு அவதியுற... அங்கு சென்று பாடினார். அம்மை மறைந்தது. தன் மகளை சிவகவிக்கே சீரும் சிறப்பும் செய்து மணமுடித்து அனுப்பிவைத்தான் மன்னன்.

சீதனச் செல்வங்களை ஏழைகளுக்கு கொடுத்து புலவர் ஏழையானார். வறுமை, புலவனின் வீட்டை தனது தங்குமிடமாக ஆக்கிக்கொண்டது.

இந்நிலையில்... புலவரை, தன்னைப் பற்றி பாடவைக்க வேண்டும் என முடிவுசெய்த முருகன்... வயதான முருக பக்தன் வேடத்தில் சென்று... 'அய்யா புலவரே... என் அப்பன் அந்த முருகப்பெருமான் மீது ஒரு பாட்டுப் பாடு. உனக்கு நான் ஆயிரம் பொற்காசு தருகிறேன்' என்றார்.

'நீர் லட்சம் பொற்காசுகள் கொடுத்தாலும் சரி... அம்மை அப்பனைப் பாடும் வாயால், அந்த ஆண்டி சுப்பனைப் பாடமாட்டேன். கோழியைப் பாடும் வாயால் குஞ்சைப் பாடமாட்டேன்' என்றார் புலவர்.

'என் முருகனை குஞ்சு என்றா சொல்கிறீர்?' என பக்த வேஷமிட்ட முருகன் கேட்க... 'ஆமாம். என் தாய்... கோழி. அவன் குஞ்சுதான்' என புலவர் சொல்ல... 'முருகா.. இந்த புலவனின் ஆணவத்தை அடக்கமாட்டாயா?' என கேட்டபடி மறைந்தார் முருகன்.

இதையெல்லாம் கவனித்துக்கொண்டிருந்த புலவரின் மனைவிக்கு ஆத்திரம் அத்துமீறியது. 'எனது சீதனச் செல்வத்தையெல்லாம் ஏழைகளுக்கு கொடுத்து மகிழ்ந்தீர். இப்போது கால் வயிற்றுக் கஞ்சிக்கும் வழியில்லை. ஆயிரம் பொன் வாங்கிக்கொண்டு முருகனைப் பாடினால் உம் வாயென்ன வெந்தா போகும்? கர்வம் பிடித்த கவிஞனுக்கு மனைவி ஒரு கேடா?' என குமுறிவிட்டாள். மனைவியின் சுடுசொல்லை எதிர்பாராத புலவர், அம்பாள் மீது ஒரு பாடல் பாட... ஒரு பை, புலவனின் மனைவி முன் விழுந்தது. எடுத்துப் பார்த்தவள்... 'என்னங்க... பையெல்லாம் பொற்காசுகள்... வீட்டுக்குள்ள வாங்களேன்' என்றாள்.

'உனக்கு பொற்காசுகள்தானே தேவை. புருஷனல்லவே? நான் வருகிறேன்' என கிளம்பிவிட்டார் புலவர். சிறிது நேரத்தில் அந்த பொற்காசுகள் மறைந்துவிட... 'அய்யோ... முருகா... நான் தவறு செய்துவிட்டேனே' என புலம்பியபடி அவளும் வீட்டைவிட்டு வெளியேறினாள்.

சிவகவி ஒவ்வொரு ஷேத்திரங்களாகச் சென்று அம்மை அப்பனைப் பாடி பரவசப்பட்டு வந்தார். மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் பாடும்போது அங்கிருந்த சிலைகள் '"பொய்யாமொழி"என்று வாழ்த்தியது. இதனை அறிந்த பாண்டிய மன்னன், புலவருக்கு சகல மரியாதையுடன் நிறைய பொற்காசுகளும் கொடுத்தான். அந்தப் பொன்னை தன் மனைவியிடம் கொடுப்பதற்காக போனார் புலவர். வழியில் ஒரு காட்டுப் பாதையில் முருகன், ஒரு வேடனைப் போல் வந்து மறித்தான்.

'இது எனக்குச் சொந்தமான வனாந்திரம். உன்னிடம் பொற்காசுகள் இருப்பது தெரியும். அதைக்கொடு. இல்லையேல் என் அம்புக்கு பலியாவாய்' என்றான்.

'அய்யா... நான் ஏழைப் புலவன். என் மனைவிக்காக காசுகளைக் கொண்டு செல்கிறேன்' என கெஞ்ச... வேடன் வழிவிட மறுக்க... "என்னை வம்பு செய்தால் உன்னை வசை பாடி ஒழித்துவிடுவேன்"என

புலவர் சொல்ல... 'பெரிய புலவரா நீர். எங்கே என்மீது ஒரு பாட்டுப் பாடும்' என வேடன் சொல்ல... 'எதையாவது பாடித் தொலைப்போம்' என நினைத்த புலவர் 'உம் பேரென்ன?' எனக் கேட்டார்.

'முட்டை' என்றான் முருகன். 'முட்டை என்று ஒரு பெயரா?' எனக் கேட்ட புலவர்...

'பொன்போலும் கள்ளிப் பொறிபறக்கும் கானலிலே

என்பேதை செல்லற்(கு) கிசைந்தனளே -மின் போலும்

மானவேல் முட்டைக்கு மாறாய தெவவர்போம்

கானவேல் முட்டைக்கும் காடு'

எனப் பாடினார்.

'உம் செய்யுளில் சொற் குற்றம் இல்லை. ஆனால் பொருட் குற்றம் உண்டு' என்றான் வேடன். கோபமான புலவர் 'உன் வில்லுக்கும், அம்புக்கும் அஞ்சேன். பொருட் குற்றத்தைச் சொன்னால் உமக்கு நான் என்றும் அடிமை' என்றார்.

'அடிமையாக்கத்தானே வந்தோம்... காய்ந்துபோன சதுரக் கள்ளிச் செடிகள் தீப்பற்றிக் காடே எரிகிறது. அந்தக் காட்டுத் தீயில் சிறு நெருப்புக்கும் தாங்காது, வெந்து சாம்பலாகும் வேலமரத்து முள்... பேதையின் காலில் எப்படித் தைக்கும்?'

'ஒரு வேடனா என் கவியில் குற்றம் கண்டது? அய்யா நீங்கள் யார்?'

'இப்போது யாரைப் பற்றிப் பாடினீர்?'

''முட்டையைப் பற்றி'

'முட்டையிலிருந்து வருவது?''

'குஞ்சு'

'குஞ்சுக்குத் தாய்?'

'கோழி'

'கோழியைப் பற்றி பாடும் வாயால் குஞ்சைப்பற்றி பாடமாட்டேன் என்று சொன்ன புலவர் நீதானே?'

'ஆம்'

''இப்போது குஞ்சைக்கூட பாடாமல் முட்டையைப் பற்றி பாடினீரே?' வெட்கமாக இல்லையா?''

'அய்யா... நீர் சாதாரணமானவர் இல்லை. யார் என்று சொல்லுங்கள்?'

'உம் தாயின் குஞ்சு' என வேடன் வேஷம் கலைத்து முருகன் தோன்ற... 'முருகா... உன் பெருமை அறியாமல் பெரும் பிழை' செய்துவிட்டேன்'' என திருவடியில் விழுந்த புலவரைத் தொட்டுத் தூக்கி நிறுத்திய முருகன் 'பொய்யாமொழியே உமது ஆணவத்தை அடக்கி ஆட்கொள்ளவே வந்தோம். யாமே முருகன்... யாமே சிவன்... யாமே சக்தி... யாமே விஷ்ணு...' என பல உருவங்கள் காட்டிய முருகன்....'''யாமே சர்வமும். உருவம் பலவாகினும் யாம் ஒன்றே. இது உமது புத்திக்குப் புலப்படவில்லை. ஆயினும் உமது வைராக்கியத்தை மெச்சுகிறோம். உமது மொழி என்றும் பொய்யாமொழியாகவே இருக்கட்டும்' என அருளி மறைந்தான் முருகன்.

'சொப்பன வாழ்வில் மகிழ்ந்தே... சுப்பிரமண்ய சாமி உனை மறந்தேன்' என புலவர் பாடுகிறார்'''

-என கதையைச் சொல்லி அந்தப் பாடலை நான் பாடும்போது தேவரண்ணனைப் பார்த்தேன். அவர் தொண்டை அடைக்க குமுறிக் குமுறி அழுதுகொண்டிருந்தார்.

சிறிது நேரத்திற்குப் பின் அமைதியான தேவர் "''ஏம்ப்பா... இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்'''என்று கேட்டார்.

''சின்ன வயசில் டூரிங் டாக்கீஸ்ல முருக்கு விற்கையில 'சிவகவி' படத்தை பலமுறை பார்த்திருக்கேன். புலவரா எம்.கே.டி.பாகவதர் அப்படி பாடி நடிச்சிருப்பார். ஜனங்களையும் உருகி அழ வச்சிருப்பார். இது வெள்ளிவிழாப் படம். பெரியவனா ஆன பிறகு 'அபிதான சிந்தாமணி' நூலில் பொய்யாமொழிப் புலவரைப் பத்தி படிச்சிருக்கேன். சங்க காலத்திற்கும் முற்பட்டது பொய்யாமொழிப் புலவர் கதை'' என்றேன்.

''சிவாஜியை வச்சு இந்தக் கதையை எடுக்கலாம். அதுக்கான நேரம் அமையட்டும்'' என்றார் தேவர்.

''அந்த நேரம் அமையாமலே போச்சே'' என்றேன் செட்டியாரிடம்.

நீண்ட பெருமூச்சுவிட்ட செட்டியார் ''எல்லாத்துக்கும் ஒரு கொடுப்பினை வேணும்'' என்றார்.

"நான் கிளம்புறேன்"

"அந்த தனுஷ்கோடி கதை?"

"அதை இன்னொரு முறை சொல்றேங்கய்யா" எனச் சொல்லிவிட்டுக் கிளம்பினேன்.

இயக்குநர் சிகரம் கே.பாலசந்தருடனான எனது நீண்ட அனுபவம்...

# சந்தித்தேன் பாலசந்தரை!

வள்ளல் அதியமானின் ஆயுள் நீட்டிக்க ஒரு முனிவர் அரிய கரு நெல்லிக்கனி ஒன்றைக் கொடுத்தார். 'நான் அதை உண்டு அதிக நாள் வாழ்வதைவிட, புலமையாளரான ஔவையார் அதனை உண்டு நீண்ட காலம் வாழ்ந்தால், தமிழுக்கும், தமிழகத்திற்கும் பெரும் பயன் உண்டாகும்' என அந்த நெல்லிக்கனியை ஔவையாரை உண்ணவைத்தான் அதியமான். அப்படி அரிய கருநெல்லிபோல நம் கலை உலகத்திற்குக் கிடைத்த கருநெல்லி இயக்குநர் கே.பாலசந்தர் அவர்கள்.

அறிஞர் அண்ணாவின் 'வேலைக்காரி', ஸ்ரீதரின் 'எதிர் பாராதது', 'நெஞ்சில் ஓர் ஆலயம்' படங்களைப்போல் பல முற்போக்கு சிந்தனையை தன் படைப்பின் மூலம் வாரி வழங்கியவர் நம் பாலசந்தர் என்பதை நாம் மறக்கவே முடியாது. அப்பேர்ப்பட்டவருடன் பழகும் வாய்ப்பு எனக்கும் கிடைத்தது.

**1962-63-**ஆம் ஆண்டுகளின்வாக்கில் நான் சினிமாவில் கதை எழுத வாய்ப்புத் தேடி அலைந்தபோது... பாலசந்தர் எழுதிய 'மேஜர் சந்திரகாந்த்' நாடகம் பார்த்தேன். வியப்பின் உச்சத்திற்கே போய்விட்டேன். 'இப்படியும் ஒரு நாடகம் நம்மால் எழுத முடியுமா? அது சாத்தியமா? நாமும் கதாசிரியர் என்று சொல்லிக் கொள்கிறோமே... அது சரியா?' என எனக்குள் கேள்வியெழுப்பியது பாலசந்தரின் எழுத்து. பார்த்து பல நாட்கள் கடந்த நிலையிலும், அந்த நாடகத்தின் ஸீன்களும், அமைப்பும் என் நினைவிலிருந்து நீங்கவில்லை. 'என்ன இருந்தாலும் படித்தவர்கள் படித்தவர்கள்தான்' என படிக்காத நான் புலம்பித் தவித்தேன். பிறகு ஒருவாறு என்னை நானே சமாதானப்படுத்திக்கொண்டேன். காரணம்... 'புலி வாலைப் பிடித்ததுபோல் தெரிந்தோ... தெரியாமலோ சினிமாவிற்கு வந்துவிட்டோம். எப்படியும் சினிமாவில் ஒரு இடத்தைப் பிடித்தே ஆகவேண்டும். சினிமாவில் ஜெயிக்காமல் ஊருக்குத் திரும்பினால் 'மாடு மேய்க்கக்கூட இவன் லாயக்கில்லை' என ஒதுக்கிவிடுவார்கள்' என

சமாதானப்படுத்திக் கொண்டு, தொடர்ந்து முயற்சி செய்து, வெற்றியும் பெற்றேன்.

ஒருசமயம் நடிகர் குமரிமுத்துவின் அண்ணன் நம்பிராஜன் என்னிடம் ஒரு நாவலைக் கொடுத்தார். அது... பிரபல எழுத்தாளர் சுகி.சுப்பிரமணியனின் மகன் எம்.எஸ்.பெருமாள் எழுதிய 'வாழ்க்கை அழைக்கிறது' நாவல். அதை நான் படித்து முடித்தேன். அது ஒரு அற்புதமான கதையாக இருந்தது.

"எப்படி இருக்கிறது கலைஞானம்? இந்தக் கதையை படமாக எடுக்கலாமானு தயாரிப்பாளர் அரங்கண்ணல் உங்களிடம் கேட்டுவரச் சொன்னார்" என்றார் நம்பிராஜன்.

ஏற்கனவே நான் எழுதிய படங்களையெல்லாம் பார்த்து பாராட்டியவர் அரங்கண்ணல். அதன் காரணமாகத்தான் என்னிடம் அபிப்ராயம் கேட்டுவரச் சொல்லியிருக்கிறார்.

"நம்பிராஜண்ணே... இந்தக் கதை எனக்கு ரொம்பவும் பிடித்திருக்கிறது. இது குடும்பக் கதையாக இருந்தாலும்கூட இந்தக் காலத்திற்கு ஏற்றதாகவும், வரவேற்கத்தக்கதாகவும் இருக்கிறது" என்றேன்.

"அப்படின்னா... இந்தக் கதைக்கு திரைக்கதையை நீங்க ஒரு வெர்ஷனில் எழுதித் தர முடியுமா?"

"நிச்சயமா எழுதித் தர்றேன். இதில் வரும் சில ஸீன்களை சினிமாவுக்காக சற்று மிகைப்படுத்த வேண்டும். அப்படி சில மாறுதல்களுடன் எழுதித் தர்றேன். அதே நேரம் இன்னொரு ஆலோசனையையும் நான் சொல்றேன். இந்தக் கதையை எழுதிய எம்.எஸ்.பெருமாளிடம் சொன்னால் அவரே சினிமாவுக்கு ஏற்ப திரைக்கதை எழுதித் தருவாரே?"



"அரங்கண்ணலுக்கு ஏதோ... உங்கள் மேல் ஒரு நம்பிக்கை. இந்தக் கதைக்கு திரைக்கதை, வசனம் எழுதி இயக்குவதற்கு பாலசந்தரைப் பேசி முடித்துவிட்டார்."

"அப்படியா? அந்த சகலகலா வல்லவனை வைத்துக் கொண்டு என்னை திரைக்கதை எழுதச் சொல்லலாமா? நாளைக்கே நான் அரங்கண்ணலை சந்திச்சுப் பேசுறேன்" எனச் சொல்லி நம்பிராஜனை அனுப்பி வைத்தேன்.

மறுநாள்... அரங்கண்ணலைச் சந்தித்தேன்.

"வணக்கம்ணே... நீங்க படமா எடுக்கப்போற 'வாழ்க்கை அழைக்கிறது' நாவல் ரொம்ப அருமையான கதை. இதற்கு பாலசந்தரின் கைவண்ணம்தான் மிகச்சரியாக இருக்கும். குழப்பிக் கொள்ளாமல் அவரிடமே முழுப்பொறுப்பையும் ஒப்படைத்துவிட்டு, 'சிவனேனு நீங்க பூஜையறையில் இருங்க" என்றேன்.

நான் சொன்னதும் அரங்கண்ணல் சிரித்துவிட்டார்.

"இது எனக்கு ரொம்பவும் பிடித்த கதை என்றாலும், உங்களிடம் கேட்டுக் கருத்து தெரிஞ்சுக்கலாம்னுதான் நாவலை கொடுத்துவிட்டேன்" என்றார்.

அவரிடம் இந்தக் கதையில் சினிமாவுக்காக பெரிதுபடுத்த வேண்டிய காட்சிகள் என்னென்ன என்பதையும் சொல்-விட்டு வந்தேன்.

சில மாதங்கள் கழிந்த நிலையில்...

பாலசந்தரின் 'அவள் ஒரு தொடர்கதை' படம் வெளியாகி யிருந்தது. பார்த்தேன். எம்.எஸ்.பெருமாள் எழுதிய 'வாழ்க்கை அழைக்கிறது' கதைக்கு அருமையான திரைக்கதை அமைத்து படமாக்கியிருந்தார் பாலசந்தர். மிகைப்படுத்த வேண்டிய காட்சிகள் என்னென்ன என்பதை நான் தயாரிப்பாளர் அரங்கண்ணலிடம் சொல்லியிருந்தது போலவே... அந்தக் காட்சிகளை ஆயிரம் மடங்கு அருமையாக அழகாக எடுத்திருந்தார் பாலசந்தர். இதனால் பாலசந்தரின் திறமையை நான் பலரிடமும் பாராட்டி, புகழ்ந்து பேசுவதை வேலையாகக் கொண்டேன்.

**1974-ஆம் ஆண்டு ஆரம்பத்தில்....**

'பாலசந்தர் உங்களிடம் கதை இருந்தால் கேட்க விரும்புகிறார். நாளை காலையில் கார் எடுத்துக்கொண்டு வருகிறேன். தயாராக இருங்கள்' எனச் சொல்லிவிட்டுச் சென்றார் ஒரு நபர்.

'புதுமை இயக்குநரான பாலசந்தருக்கு நாம சொல்ற கதை பிடிக்குமா? பிடிக்காட்டி என்ன? அவரிடம் கதை சொன்ன பெருமையாவது நமக்கு கிடைக்குமே' என முடிவுசெய்து... இரவோடு இரவாக பாலசந்தர் ஸ்டைலுக்கேற்ப ஒரு கதையை தயார் செய்துவிட்டேன்.

காலையில் கார் வந்தது. என்னை அழைத்துச் சென்றது.

பாலசந்தரை முதன்முறையாக நேரில் சந்தித்தேன். "வணக்கம் சார்" என்றேன்.

"வாங்க கலைஞானம். உங்களை நான் அடிக்கடி நினைப்பதுண்டு. எம்.எஸ்.பெருமாள் எழுதிய 'வாழ்க்கை அழைக்கிறது' கதைக்கு எந்தெந்த இடத்தில் மெருகேற்ற ணும்னு நீங்க அரங்கண்ணல்கிட்ட சொன்னீங்களோ... அதையெல்லாம் அரங்கண்ணல் என்கிட்ட சொன்னார். அதையும் மனதில் வச்சுத்தான் திரைக்கதையை எழுதி, 'அவள் ஒரு தொடர்கதை' படத்தை எடுத்தேன். படத்துக்கு நல்லபெயர் கிடைச்சது.

அதற்காக உங்களுக்கு ஒரு தேங்க்ஸ்'''என்றவர்... 'நாம என்னதான் மெருகேற்றி படம் எடுத்தாலும், மூலக் கதையில் உயிரோட்டம் இருந்தால்தானே படைப்பு ஜெயிக்கும். அப்படி ஜீவனுடன் கதை எழுதிய எம்.எஸ்.பெருமாளுக்குத் தான் எல்லாப் பெருமையும் சேரும்' என்றவர், இன்னொரு முக்கியமான விஷயத்தையும் சொன்னார். ''நான் கதை எழுதி, எடுத்த 'அரங்கேற்றம்' படத்திற்கு விமர்சனம் எழுதிய ஒரு பத்திரிகையாளர், ''பாலசந்தரின் 'அரங்கேற்றம்' படம் எம்.எஸ். பெருமாளின் 'வாழ்க்கை அழைக்கிறது' நாவலை நினைவு படுத்துகிறது'' என எழுதிவிட்டார். நான் 'அரங்கேற்றம்' படம் எடுப்பதற்கு முன்பு 'வாழ்க்கை அழைக்கிறது' நாவல் வெளியாகியிருந்திருக்கிறது. ஆனால் அதை நான் படித்ததில்லை. 'அரங்கேற்றம்' கதை... குடும்பத்திற்காக ஒரு பெண், செய்யும் தியாகம் சம்பந்தப்பட்டது. அந்த நாவலும் அதே போன்ற கான சப்ட் கொண்டது. அதனால்தான் அந்த நாவலின் பாதிப்பில் நான் படமெடுத்திருப்பதாக அந்த பத்திரிகையாளர் கருதி விட்டார். இதன் பிறகுதான், நான் அந்த நாவலை வாங்கிவந்து படித்துவிட்டு, பெருமாளை அழைத்துப் பேசினேன்.

''இந்த நாவலை நான் முன்பே படித்திருந்தால், 'அரங்கேற்றம்' படத்தையே எடுத்திருக்கமாட்டேன். உங்க கதை ரொம்ப பிரமாதமாக இருக்கிறது பெருமாள். இந்தக் கதையையும் நானே படமாக எடுக்கிறேன்' என்று சொன்னேன். அதன்படியே 'அவள் ஒரு தொடர்கதை' படத்தை எடுத்தேன்'' என விரிவாகச் சொன்னார் பாலசந்தர்.

நான் வியப்பு விலகாமல் கேட்டுக்கொண்டிருந்தேன்.

''இப்போ நான் உங்களை வரவழைத்த விஷயத்திற்கு வர்றேன். நான் உங்களிடம் ஒரு கதை வாங்கவேண்டும் என நினைத்ததுண்டு. 'வெகுளிப்பெண்', 'வாயாடி',' 'குறத்திமகன்'... இந்த மூன்று கதைகளையும் வித்தியாசமாக எழுதியிருந்தீர்கள். அதுபோல ஒரு கதை சொல்லுங்கள்'' என்றார்.

'இறைவா... முருகா...! முதன்முதலில் புதுமையின் சிகரத்திடம் கதை சொல்லப்போறேன். அருணகிரி நாதருக்கு முதல் வரி எடுத்துக் கொடுத்து அருள்பாலித்த முருகப்பெருமானே... துணை வருக' என உள்ளூர வேண்டிக்கொண்டு கதை சொல்ல ஆரம்பித்தேன்.

மிகுந்த ரசிப்புடன் கதையைக் கேட்டுக்கொண்டிருந்தார் பாலசந்தர்.

விறுவிறுப்பாக கதையைச் சொல்லிமுடித்தேன்.

''க்ளைமாக்ஸை மட்டும் பிறகு முடிவு செய்து கொள்ள லாம் சார்'' என்றேன்.

''கலைஞானம்... நீங்கள் சொன்ன கதை ரொம்பவும் புதுமையாக இருக்கு. நீங்கள் இப்படி ஒரு கதை சொல்வீங்கனு நான் எதிர்பார்க்கவேயில்லை. குட்! இந்தக் கதை புதுமையாக இருந்தாலும் படமா எடுக்குறதில் நிறைய தொழில்நுட்ப சிரமம் இருக்கு. வெள்ளை விழிப்படலத்தில் ஒரு கருப்புப் புள்ளி இருப்பது கதையில் மிக முக்கியமாக இருக்கு. ஆனா... அப்படி நுணுக்கமா படம் பிடிப்பதற்காக கேமரா லென்ஸ் இன்னும் நம்ம நாட்டுக்கு வரலை கலைஞானம். நான் இப்போது உங்களிடம் எதிர்பார்த்தது ஒரு கிராமியக் கதையை. நீங்க எழுதின கதைகளில் கிராமியம் ரொம்ப சிறப்பா இருக்கும். அதனால்தான் உங்களை கதை சொல்ல அழைத்தேன். ஒரு கிராமியக் கதையைத்தான் இப்போது படமாக்க முடிவு செய்திருக்கேன்'' என்றார்.

''முதல்லயே இது தெரிஞ்சிருந்தா ஆயிரம் கிராமக் கதைகளை தயார் செய்திருப்பேன். உங்க பாணியில் கதை சொல்லணும்னுதான் நேத்து நைட்டெல்லாம் கண் விழிச்சு இந்தக் கதையை உருவாக்கினேன் சார்'' என்றேன்.

''பரவாயில்லை. ஒரு கிராமியக் கதையை தயார் செய்துவிட்டு என்னிடம் சொல்லுங்கள்'' என்றார்.

''சரிங்க சார்'' என விடைபெற்று வந்தேன்.

பாலசந்தரிடம் நான் சொன்னது என்ன கதை?

அந்தக் கதையை பின்னாளில் ஒருவர் திருடி படமெடுத்த தால் நான்பட்ட மனவேதனைக் கதை!

# வசதி உள்ளவனுக்கு நீதி!

இயக்குநர் கே.பாலசந்தருக்கு நான் சொன்ன கதை என்ன? கிறிஸ்தவ வாலிபன் ஜோசப்பும், இந்துப்பெண் இந்துமதியும் காதலிக்கிறார்கள். இரு குடும்பத்திலும் இந்தக் காதலுக்கு எதிராக யுத்தமே நடக்கிறது. இதனால் மனமுடைந்த ஜோசப், கால்போன போக்கில் போய்க்கொண்டிருக்கும்போது, ஒரு விபத்தில் சிக்கி இறந்துவிடுகிறான். இந்தத் துயரத் தகவல் இந்துமதியை எட்டுகிறது. 'இனி வீட்டார் சொல்லும் உறவுக்கார மாப்பிள்ளையை திருமணம் செய்வதைத் தவிர வேறு வழியில்லை' என திருமணத்திற்கு சம்மதிக்க... திருமணம் நடந்தது.

தேனிலவுக்காக சென்றிருந்த இடத்தில் பெருமழையில் சிக்கி, பேரிடியில் கணவனின் கண்பார்வை பறிபோய் விடுகிறது. அவனுக்கு மருத்துவமனையில் வேறு கண் பொருத்தப்பட்டது.

'நான் கண்ணைத் திறந்து பார்க்கும்போது முதலில் பார்ப்பது என் மனைவி இந்துமதியாக இருக்கவேண் டும்' என்றான்.

இதையறிந்து இந்துமதி மருத்துவமனைக்கு ஓடோடி வந்தாள். அங்கே... அவளுடன் படித்த பள்ளித்தோழியான நர்ஸை சந்தித்தாள்.

"இந்துமதி... இந்த உலகத்திலேயே கொடுத்துவைத்தவள் என்றால் நீதான். நீ உயிருக்குயிராய் காதலித்தவனின் கண்தான் உன் கணவனுக்கு பொருத்தப்பட்டுள்ளது. ஒரே நேரத்தில் காதலனையும், கணவனையும் பார்க்கும் பாக்கியம் உனக்குத் தான் கிடைச்சிருக்கு'' என ரகசியத்தை உடைத்த நர்ஸ்... 'உன் மேல இருக்க அன்பினால் இந்த மருத்துவ ரகசியத்தை சொல்லிட்டேன். தயவுசெய்து வேற யார்கிட்டவும் இதை சொல்லிடாத. என்னோட வேலைக்கே ஆபத்து' என கேட்டுக்கொண்டாள்.



இந்துமதி குழப்பத்துடன் கணவன் இருக்கும் அறைக்குச் சென்றாள். மருத்துவர்கள் அவனின் கண் கட்டை திறந்தனர். அவன் கண் இந்துமதியைப் பார்த்தது. அவளும் பார்த்தாள். காதலனுடைய கண்ணின் வெள்ளை விழிப்படலத்தில் ஒரு கருப்பு புள்ளி இருக்கும். அந்தப் புள்ளிதான் இந்துமதியின் கண்களுக்குத் தெரிந்தது.

காதலனே தன்னை பார்ப்பதுபோல் உணர்ந்து தலைசுற்றி விழுந்துவிட்டாள்.

ஒரே பரபரப்பு.

ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாக கற்பனை செய்து பேசிக்கொண்டார்கள்.

சில நாட்கள் கடந்த நிலையில்... முதலிரவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்துமதி மனதை திடப்படுத்திக்கொண்டாள். ‘அந்த கண்ணை இன்று நேருக்கு நேர் பார்க்கக்கூடாது' என முடிவு செய்து அறைக்குள் போனாள். மெத்தையில் தலைகுனிந்தவாறே உட்கார்ந்தாள்.

'என்ன இப்படி வெட்கப்படுற? கொஞ்சம் நிமிர்ந்து என்னைப் பாரேன்' என அவளின் தலையை நிமிர்த்தினான்.

வெள்ளைவிழியின் கருப்புப் புள்ளியைப் பார்த்தாள். அலறி விழுந்துவிட்டாள்.

குடும்பமே குழப்பத்தில் மூழ்கியது.

'செத்துப் போனவனின் கண்ணை பொருத்தியதால் அவன் பேயா வந்து பயமுறுத்துறான்' என ஆளாளுக்கு பேசினார்கள்.

இதையறிந்த நர்ஸ் தோழி, இந்துமதியைச் சந்தித்தாள்.

"ஏண்டி இப்படி மயங்கி விழுற?"

'கணவன் என நினைத்து அவர்கிட்டே போனால், அந்தக் கண்ணைப் பார்த்ததும் ஜோசப் நினைவு வருது. நினைப்பை அவன் மீது வச்சுக்கிட்டு, புருஷனோட வாழ்ந்தால்... அது புருஷனுக்கு செய்ற துரோகமாச்சே' என குமுறி அழுகிறாள் இந்துமதி.

இந்த உண்மையறிந்த கணவன், 'இந்தக் கண் இருப்பதால்தானே இந்துமதியின் மனம் அவஸ்தைப்படுது?' என வேதனைப்படுகிறான்.

'கண்ணா? பெண்ணா?' என்கிற கேள்வி அவன் மனதில் எழுகிறது."

இந்தக் கதையைச் சொன்ன நான் "க்ளைமாக்ஸை மட்டும் அப்புறமா முடிவு செஞ்சுக்கலாம் சார்" என்றேன்.

'புதுமையான கதை' என பாராட்டிய பாலசந்தர், "இப்போது நம்மிடம் இருக்கும் தொழில்நுட்பத்தில் இந்தக் கதையைப் படமாக்குவது சிரமம். நான் இப்போது ஒரு கிராமியப் படத்தை இயக்க விரும்புறேன்" எனச் சொல்லிவிட்டார்.

அதன் பிறகு பாலசந்தருக்கு கதை சொல்லும் வாய்ப்பு எனக்கு அமையவேயில்லை.

இது இப்படியிருக்க...

1997-ல்.... சன் டி.வி. ஆரம்பித்து வளர்ந்துகொண்டிருந்த நேரத்தில்... லாரன்ஸ் என்பவர் என்னிடம் பேட்டி எடுக்க வந்தார்.

"ஒரு கதை எழுத எவ்வளவு காலம் எடுத்துக் கொள்வீர்கள்?" என்று கேட்டார்.

"காலமாவது... கோலமாவது... அரைமணி நேரத்தில் ஏழு கதைகள் சொல்லிவிடுவேன்" என்றேன்.

"இப்போது சொல்ல முடியுமா?" என்றார் லாரன்ஸ்.

கேமரா ஸ்டார்ட் ஆனது. 29 நிமிடங்களில் ஏழு கதைகளைச் சொல்லி முடித்தேன். சன் டி.வி. டெக்னீஷியன்கள் அத்தனைபேரும் கைதட்டி என்னைப் பாராட்டினார்கள்.

அந்தப் பேட்டி சன் டி.வி.யில் வெளியானது. நான் சொன்ன அந்த ஏழு கதைகளில் ஏழாவது கதை... பாலசந்தருக்கு நான் சொன்ன 'காதலனின் கண் கணவனுக்கு பொருத்தப்படுதல்' கதை.

சில வருடங்களுக்குப் பிறகு....

'கண் மாற்றுக் கதை' ஒன்று படமாக வந்தது. என் உதவியாளர்களும், நண்பர்களும் "அண்ணே, உங்க கதையை அப்படியே தழுவி படமா எடுத்திட்டாங்கண்ணே" என்று சொல்லி, கதையையும், காட்சிகளையும் சொன்னார்கள். அந்தச் சமயம் நான் உடல் நலக்குறைவாக இருந்ததால் படம் பார்க்க முடியவில்லை.

அதன்பிறகு...

இந்தப் படத்தை எடுத்தவர்களிடம் சென்று "இது என் கதை" என்று சொல்ல... எனக்கு ஆதாரம் வேண்டுமே. அதனால் சன் டி.வி.யில் என்னை பேட்டி எடுத்த லாரன்ஸை போன் மூலம் தொடர்புகொண்டு "என் பேட்டியை ஒரு பிரதி எடுத்துக் கொடுங்கள்" எனக் கேட்டேன்.

"உங்களிடம் பேட்டி எடுத்ததற்குப் பிறகு எடுத்த பேட்டிகள் பல்லாயிரக்கணக்கில் இருக்கு. உங்க பேட்டியைத் தேடி எடுக்க ஏழு ஜென்மம் வேணும் சார்" எனச் சொல்லி விட்டார்.

சன் டி.வி. நிர்வாகிகளிடம் கேட்கலாம் என்றால்... அவர்கள் இருக்கும் வளர்ச்சியில் அவர்களின் கிட்டே போகமுடியாது என்பதையும் அறிந்தேன்.

'நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்

புல்லுக்கு ஆங்கே பொசியுமாம் -தொல்லுலகில்

நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு

எல்லார்க்கும் பெய்யும் மழை'

என்று ஔவையார் பாடினார்.

நல்ல ஒரு கதையை திருடியவர் காட்டில் மழை பெய்யும்போது, அதை யாரால் தடுக்க முடியும்? அவர்களாவது வாழட்டும் என்று இறைவனிடம்

விட்டுவிட்டேன்.

அந்த கண் மாற்றுக் கதையை தழுவி எடுக்கப்பட்ட படம் எது என்பதையோ... எடுத்தவர் யார் என்பதையோ... நான் சொல்ல விரும்பவில்லை. ஆனால் அந்தப் படம் பார்த்த ரசிகர்கள்... இந்தத் தொடரை படித்துவரும் ரசிகர்கள் நிச்சயம் அடையாளம் கண்டுகொள்வார்கள்.

பிறகொரு சமயம்... நீதிபதியான எனது ஒன்றுவிட்ட மருமகனிடம், "கதைகள் திருட்டுப் போவதைத் தடுக்க சரியான வழிமுறை இருக்கா?" எனக் கேட்டேன்.

"இல்லை மாமா. உங்களைப் போல மனசாட்சி உள்ளவன், அல்லது உங்களுக்குச் சமமான நிலையில் இருப்பவன் உண்மையை ஒப்புக்கொண்டு முடிந்த மட்டும் கதைக்கு பணம் கொடுத்துவிடுவான். உங்களைவிட பல மடங்கு அந்தஸ்து உள்ளவன், தனது செல்வாக்கைப் பயன்படுத்தி உங்களை ஜெயித்துவிடுவான். கதையைப் பறிகொடுத்த உங்களைப் போன்றவர்களையே குற்றவாளியாக்கி, மானநஷ்ட வழக்கும் போடுவான். அதனால் சம்பந்தப்பட்டவர்களிடம் நீங்க நேரில் பேசி, முடிந்தவரை பணத்தைப் பெற முயற்சிப்பதுதான் நல்லது" என்றார்.

"நீதிபதியான நீங்களே இப்படிச் சொன்னால் எப்படி?"

"என்ன செய்றது? வசதி உள்ளவனுக்கு சிலசமயம் நீதி வளைந்து கொடுக்குது. நல்லவன் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காகத்தான் சட்டப் புத்தகம் இருக்கு. ஆனால் சில கறையான்கள் சட்டப் புத்தகத்திலேயே ஓட்டைகள் போட்டுவிடுகிறதே" என வேதனைப்பட்டார்.

அந்த நீதிபதி இப்போது காலமாகிவிட்டார்.

அந்த நீதிபதி சொன்ன வேதனை வார்த்தைகளிலிருந்து நான்கு வரிகள் எனக்கு எழுதத் தோன்றியது...

சட்டப் புத்தகத்தை வெளிச்சத்தில்தான் படிக்கிறார்கள். ஆனால் சில தீர்ப்புகள் இருட்டாகவே இருக்கிறது!'

மீண்டும் கே.பாலசந்தருடனான எனது அனுபவத்திற்கு வருகிறேன்.

ஸ்ரீவித்யாவிடம் பாலசந்தர் அடித்த ஜோக்!

சிவாஜியை நடிக்க வைக்க பரிசீலிக்கப்பட்ட 'ஸ்ரீராகவேந்திரர்' வேடத்தில் ரஜினி நடித்த விபரம்!

# சினிமா ஒரு சூதாட்டம்!

என்னுடைய இருபதுக்கும் மேற்பட்ட கதைகள் படமாகி வெளியிடப்பட்ட நேரமது.... 1977-ஆம் ஆண்டின் தொடக்கத்தில்...

தயாரிப்பாளர் எஸ்.என்.எஸ்.திருமால் எனது 'ஆறு புஷ்பங்கள்' கதையை வாங்கி படமாகத் தயாரித்தார். நாயகனாக விஜயகுமார், இரண்டாவது நாயகனாக ரஜினி, ஹீரோயினாக ஸ்ரீவித்யா நடிக்க, நடிகர் குமரிமுத்துவின் இரண்டாவது அண்ணன் கே.எம்.பாலகிருஷ்ணன் இயக்கினார்.

கே.எம்.பாலகிருஷ்ணனின் அழைப்பின் பேரில் பூஜையில் பாலசந்தர் விளக்கேற்றியதும், நான் அவருக்கு மாலை அணிவித்தேன். அவர் அந்த மாலையை என் கழுத்தில் போட்டு 'கை தட்டுங்கள்' என்றார்.

பொய்கள் அற்ற கைகள் பூரித்த மனதுடன் தட்டியது. கை தட்டியவர்களெல்லாம் என் கதையில் தொழில் செய்தவர்கள். அதனால் கை தட்டலுக்கு குறைச்சல் இல்லை.

"கலைஞானம்... உங்களோட கதைகள்ல ஏதாவது ஒரு கருத்து இருக்குமே.... உங்களோட முதல் கதையான 'காதல் படுத்தும் பாடு' படத்தில் காதலின் விளைவு சொல்லப்பட்டது. 'வெகுளிப்பெண்'ணில் மூளை வளர்ச்சி இல்லாத இளம்பெண் கர்ப்பமான சிக்கலைச் சொன்னது. 'குறத்தி மகன்' நரிக்குறவ இன மக்களின் பரிதாப வாழ்க்கையையும், 'வாயாடி'யில் ஒரு வேலைக்காரி உண்மையையே பேசுவதால் வரும் பிரச்சினைகளையும் சொன்னது. இப்படி கதைக்குக் கதை வித்தியாசமா சொல்லியிருக்கீங்க. 'ஆறு புஷ்பங்கள்' என்ன கதை?" எனக் கேட்டார் பாலசந்தர்.



எனக்கு ஒரே வியப்பு. பாலசந்தர் இருக்கிற பிஸியில், என்னையும் மதித்து, என் கதைகளைப் பற்றி தெரிந்து வைத்திருக்கிறாரே...? 'கற்றாரை கற்றாரே காமுறுவர்' என்பதுபோல பாலசந்தரின் உயர்ந்த உள்ளத்தை என்னால் அறிய முடிந்தது.

"ஆறு பெண் பிள்ளைகளைப் பெற்றவர்களின் பாடுதான் கதை" என்றேன்.

அப்போது ஸ்ரீவித்யா வந்து பாலசந்தரை வணங்கிவிட்டு "ஆமாங்க சார்... கலைஞானம் சார், இந்தக் கதையைச் சொல்லச் சொல்ல நான் அழுது தீர்த்துவிட்டேன். அப்படி ஒரு செண்ட்டிமெண்ட்" என்றார்.

"நீ அழுதால், அந்தப் படம் நன்றாக ஓடும். ஆனா நீ தயாரிப்பாளர் அழாதபடி பார்த்துக்கொள்" என்றார்.

ஸ்ரீவித்யா உட்பட எல்லோரும் சிரித்துவிட்டோம்.

"சும்மா ஜோக்தான். ஸ்ரீவித்யா வெரிகுட் ஆர்டிஸ்ட்" என பாராட்டிவிட்டு விடைபெற்றார் பாலசந்தர்.

பாலசந்தர் விளக்கேற்றிய கைராசி... 'ஆறு புஷ்பங்கள்' படம் வெற்றி பெற்றது.

'சினிமா சீக்ரெட்' தொடரை படித்து வரும் வாசகர்கள் என்னை வாழ்த்துவதற்காக நேரில் வரும்போது 'என்னய்யா... இப்படி ஒரு சிறிய வீட்டில் வசிக்கிறீங்க?' என்பார்கள்.

"இதுவும் ஒத்திக்கு இருக்கும் வீடு" என்பேன்.

"ரஜினியை நீங்கதானே ஹீரோவாக்கினீங்க. சூப்பர் ஸ்டாராக வசதியுடன் இருக்கும் அவர் உங்களுக்கு காரு, பங்களானு வாங்கிக் கொடுத்திருப்பாருனு நினைச்சோமே. ஆனா நீங்க இப்படி இருக்கீங்களே" என வேதனைப்பட்டு விட்டுச் செல்வார்கள்.

அவர்களுக்காக சில விளக்கங்களைச் சொல்கிறேன்.

**1978** ஜூன் **2-**ந் தேதி 'பைரவி' படம் மூலம் ரஜினி ஹீரோவானார். பலத்த எதிர்ப்புகளையும் முறியடித்து அவரை ஹீரோவாக்கினேன். அன்றிலிருந்து ரஜினி, ஜெட் வேகத்தினையும் ஓவர்டேக் பண்ணி போய்க்கொண்டிருக்கிறார். ரஜினி இவ்வளவு பெரிய ஹீரோவாக ஆவார் என்று நினைத்து, அவரை முன்னுக்குக் கொண்டு வரவேண்டும் என்று நான் பாடுபடவில்லை. என் கதைக்கு அவர் பொருத்தமாக இருந்தார். அதனால் ஹீரோவாக்கினேன்.

'கலைஞானம்தானே நம் முன்னேற்றத்திற்கு காரணம்' என்று நல்ல நிலையில் என்னை வாழ வைப்பதும், 'கலைஞானம் இல்லேன்னா இன்னொரு ஞானம் வந்து என்னை ஹீரோவாப் போட்டிருப்பான். நம்மால் முடிந்த அளவுதான் கலைஞானத்திற்கு செய்ய முடியும்' என பத்து ரூபாய்க்கு இருபது ரூபாயாக கொடுக்கலாம் என முடிவு செய்வதும் அவரின் மனநிலையைப் பொறுத்தது. அவரைக் குறை கூற எனக்கு உரிமை இல்லை. நான் ரோட்டில் நடக்கிறேன். அவர் வீட்டில் நடக்கிறார். நடக்கிற கால்களும் நடக்கவேண்டிய காரியங்களும் நடந்துகொண்டுதானே இருக்கிறது.

ரஜினியை நான் ஹீரோவாக்கிய பிறகு, ரஜினியோ நடிப்பில் கவனம் செலுத்தி தன்னை மேம்படுத்திக்கொண்டி ருந்தார். நான் தயாரிப்பில்

கவனம் செலுத்தி, மேலும் சிலரை அறிமுகம் செய்து படங்களை எடுத்துக் கொண்டிருந்தேன்.

படத் தயாரிப்பில் லாபம் ஒரு மடங்கு வரும். நஷ்டமோ பலமடங்கு வரும். இது தயாரிப்பாளர்களுக்கே உரிய சாபக்கேடு. எம்.ஜி.ஆரை அறிமுகம் செய்த ஜூபிடர் பிக்ஸர்ஸ், ஜெமினி ஸ்தாபனம், தேவர் ஃபிலிம்ஸ் ஆகியவையும் நஷ்டத்தைப் பார்த்த நிறுவனங்களே. எம்.கே. தியாகராஜ பாகவதர், 'கலைவாணர்' என்.எஸ்.கிருஷ்ணன், டி.ஆர். மகாலிங்கம்... இந்த நட்சத்திரங்களும் படம் தயாரித்துதான் வாழ்க்கையை இழந்தார்கள். சமீபத்திய உதாரணம்... ஆஸ்கர் ஃபிலிம்ஸ் ரவிச்சந்திரன். மலை மாதிரி இருக்கும் ஏவி.எம். நிறுவனம் கூட தொடர் நஷ்டத்தால் படத் தயாரிப்பை நிறுத்திவிட்டதே.

சினிமா தொழில் ஒரு சூதாட்டம். நானும் மாட்டிக்கொண்டு விட்டேன். 'ராஜரிஷி' படம் எனக்கு பெரும் நஷ்டம் ஏற்படுத்தியது. அதனால் ரஜினியை வைத்து ஒரு படம் எடுத்து கடனிலிருந்து மீளலாம்... என்கிற ஆசையுடன், ரஜினியின் வீட்டுக்குப் போகும்போதெல்லாம், காபி கொடுத்து உபசரித்து 'கொஞ்சம் வெய்ட் பண்ணுங்க சார்' எனச் சொல்லி, கார் வரைக்கும் வந்து நின்று மரியாதையுடன் என்னை அனுப்புவார்.

'மரியாதை மளிகைக் கடைக்கு பதில் சொல்லுமா?' என்று ஒரு சொல்வழக்கு உண்டு. அது எவ்வளவு பெரிய உண்மை. இருப்பினும்... ஒரு சமயத்தில் கடன் தொல்லை தாங்கமுடியாமல், வழக்கம்போல ரஜினியைப் பார்க்க, அவரின் வீட்டுக்குச் சென்றேன்.

அங்கே ரஜினி தன் நண்பர்களுடன், ஸ்ரீராகவேந்திரர் வாழ்க்கையை படமாக்குவது சம்பந்தமாக டிஸ்கஷன் செய்துகொண்டிருந்தார்.

"ராகவேந்திரர் கதையை படமாக்கப் போறீங்களா?" எனக் கேட்டேன்.

சிரித்துக்கொண்டே 'ஆமாம்' என்றார் ரஜினி.

"ராகவேந்திரர் பற்றி எனக்குத் தெரிந்த விஷயங்களைச் சொல்லலாமா?" எனக் கேட்டேன்.

"சொல்லுங்க கலைஞானம் சார்" என்றார் ரஜினி.

ராகவேந்திரரின் வாழ்க்கைச் சம்பவங்கள் ஒன்றுகூட மிஸ்ஸாகாமல், ஆதி முதல் அந்தம் வரை அவிழ்த்து விட்டேன் பாருங்கள்... அதிலும் மிக முக்கியமான மன்னன் சுல்தானுக்கும், அந்த மகானுக்கும் இடையேயான விஷயங்களை அழுத்த மாகப் பதிவு செய்தேன்.

'அவர் என்ன பெரிய மகானா? அவர் தன் மகிமையை என்னிடம் காட்டட்டும்' என அலட்சியம் காட்டிய சுல்தான், ராகவேந்திரருக்கு வரவேற்பு கொடுத்து, ஒரு வெள்ளித்தட்டில் மாட்டிறைச்சித் துண்டுகளை நிரப்பி, மேலே பட்டுத்துணியால் மூடி 'சுவாமி... இது என் காணிக்கை. ஏற்றுக் கொள்ளுங்கள்' என்றான்.

சுவாமி அதன் மீது நீர் தெளித்துவிட்டு, பட்டுத்துணியை அகற்றச் சொன்னார். அகற்றினார்கள். என்னென்ன வகை புஷ்பங்கள் உண்டோ... அத்தனையும் இருந்தது அந்தத் தட்டில். சுல்தான், மெய்சிலிர்த்து சுவாமியின் கால்களில் சாஷ்டாங்கமாக விழுந்து, 'நான் தவறு செய்துவிட்டேன்' என கதறியழுதான்.

'நீங்கள் தவறேதும் செய்யவில்லை. உங்கள் மனதை தூய்மைப்படுத்திக் கொண்டீர்கள். இது நீங்கள் வணங்கும் இறைவன் செயலே' என்றார் சுவாமி.

அன்றிலிருந்து சுவாமிக்கு என்னென்ன தொண்டு செய்ய வேண்டுமோ... அத்தனையும் செய்தான் சுல்தான். பிருந்தாவனமும் அமைத்துக் கொடுத்தான்.

ஒருநாள்... சுவாமி ஜீவ சமாதி அடைய... சமாதியும் ரெடியானது.

'நான் சமாதியில் இருந்தாலும், 700 ஆண்டுகளுக்கு இங்கேதான் இருப்பேன்' எனச் சொல்லி, வீணை வாசித்து உருகப் பாடினார். பக்தர்களின் கண்களில் துங்கபத்ரா நதி போல வெள்ளம் வழிந்தது. சுவாமி சமாதியில் இறங்கியபோது.... 'சுவாமி..சுவாமி...' எனக் கதறி அழுதான் சுல்தான்.

அவனை அழைத்த சுவாமி 'அழாதே! மகிழ்ச்சியாக என்னை அனுப்பி வை' என்றார்.

'இங்கே உள்ள மற்ற பக்தர்கள் பாக்கியசாலிகள். நானோ துர்பாக்கியசாலி' எனச் சொல்லி மீண்டும் கதறினான் சுல்தான்.

'ஏன் அப்படிச் சொல்கிறாய்?' எனக் கேட்டார் சுவாமி.

'நீங்கள் ஜீவ சமாதி ஆனபிறகு இந்த ஆலயத்திற்குள் இந்துக்கள் வந்து தரிசிப்பார்கள். ஆனால் முஸ்லிம் ஆன என்னை அனுமதிக்கமாட்டார்களே' என்றான்.

'நீ கவலைப்படாதே. இந்த ஆலயத்தின் முகப்புச் சுவர் மீது ஒரு பீடம் கட்டு. அதில் நான் உனக்காக, நீ பார்க்கும் போதெல்லாம் காட்சி தருவேன். உன்னுடன் நான் எப்போதும் இருக்கிறேன் என்பதை மெய்ப்பிக்கவே இது' என்றார்.

இதையெல்லாம் சொல்லி, சுல்தான் கட்டிய பீடம் இன்றும் ராகவேந்திரா ஆலயத்தில் இருப்பதையும் நான் சொன்னபோது... ரஜினி உட்பட அத்தனைபேரும் மந்திரித்து விட்ட மாதிரி என்னையே பார்த்தார்கள்.

"கலைஞானம் சார்... நீங்க முதன்முதலில் 'பைரவி' படத்திற்கு எனக்கு அட்வான்ஸ் கொடுக்க வந்தபோது, ராகவேந்திரர் போட்டோவைப் பார்த்துவிட்டு "இவர் யார்?' என்று கேட்டீர்கள். 'இவர் ஒரு மகான்' என்று மட்டும் சொன்னேன். ஆனா இப்போ அவரைப் பற்றி எனக்கே தெரியாத விஷயங்களைச் சொல்றீங்களே... எப்படி?" என்றார் ரஜினி.

"நீங்கள் நடிகன்... நான் எழுத்தாளன்" என்றேன்.

"ராகவேந்திரராக யாரை நடிக்க வைக்கலாம்?"

"அண்ணன் சிவாஜியின் கண்களும், தொப்பையும் சுவாமி வேஷத்திற்கு பொருத்தமாக இருக்கும். நீங்கள் சுல்தானாக நடியுங்கள். படம் 250 நாட்களையும் தாண்டி ஓடும்"

"சிவாஜி சாரிடம் நீங்க பேசுறீங்களா?"

"நானாச்சு"

"அப்படியானால் இந்தப் படத்தை நீங்களே ஆரம்பியுங் கள்"

"இப்பவே பத்திரிகைகளுக்கு நியூஸ் கொடுத்துடுறேன்" என தரையில் கால் படாமல் பறந்து வந்தேன் காருக்கு.

பின்னாடியே ஒருவர் வந்து "சார்... உங்களை ரஜினி சார் கூப்பிடுறார்" என்றார்.

அதிரடியாய் நிகழ்ந்த மாற்றம்!

# சீறிய டைரக்டர் ஸ்ரீதர்!

'ராகவேந்திரராக சிவாஜியும், சுல்தானாக நீங்களும் நடித்தால் படம் 250 நாட்களைத் தாண்டி ஓடும்.' அண்ணன் சிவாஜியிடம் பேசுவது என் பொறுப்பு'' என்றேன்.

''அப்படின்னா... உடனே பட வேலையைத் தொடங்குங்க'' என்றார் ரஜினி.

''முதல்வேலையா பத்திரிகைகளுக்கு இப்பவே நியூஸ் கொடுத்திடுறேன்'' எனச் சொல்லிவிட்டு... உற்சாகத்தில் தரையில் கால் படாமல் பறந்து வந்தேன்.

'ராகவேந்திரா'சுவாமி படத்தை எடுத்து, கடனையெல் லாம் அடைத்துவிடுவோம். இதன்பிறகு படம் தயாரிக்கிற வேலையை விட்டுவிட்டு, கதைகள் மட்டும் எழுதி காலத்தை ஓட்டுவோம்' என்ற எனது மகிழ்ச்சி போயஸ் கார்டன் எங்கும் பொங்கி வழிந்தது.

காரின் கதவைத் திறந்தேன்.

பின்னாலேயே ஒருவர் ஓடிவந்தார்.

'கலைஞானம் சார்..., சார் கூப்பிடுறார்' என்றார்.

புரிந்துவிட்டது எனக்கு... 'எவனோ ரஜினியைக் குழப்பி விட்டுட்டானே...' என்கிற வேதனையுடன் சென்றேன்.

''கலைஞானம் சார், கொஞ்சம் பொறுத்து... நான் சொன்ன பிறகு பேப்பர்காரங்களுக்கு நியூஸ் கொடுங்க'' என்றார் ரஜினி.

''என்ன இவரு... திடீர்னு இப்படிச் சொல்றாரே... சொன்ன சொல்லு மாறினாலும் மாறிடுவாரோ? ம்... பொறுத்திருந்து பார்ப்போம்''என மனதுக்குள் நினைத்தபடி 'சரிங்க சார்' என என் தொண்டைக்கு மட்டும் தெரிகிறார்போல் ஹஸ்கி வாய்ஸில் சொல்லிவிட்டுப் புறப்பட்டேன்.



எங்கிருந்தோ 'போனால் போகட்டும் போடா'

பாடல் ஒலித்துக்கொண்டிருந்தது.

மறுநாளே.... ரஜினியே ராகவேந்திரராக நடிப்பதாகவும், பாலசந்தர் தயாரிப்பதாகவும் விளம்பரம் வந்தது.

பேச்சு மாறுவது என்பது மனித வாழ்க்கையில் தவிர்க்க முடியாத ஒரு அம்சம்தானே.

எனக்குக் கிடைக்காவிட்டாலும், பாலசந்தருக்கு கிடைத்ததில் எனக்கு மகிழ்ச்சிதான். காரணம்... ரஜினியை நடிகனாக அறிமுகம் செய்தவர் அவர்தானே. அவர் அறிமுகப்படுத்தியதால்தானே நான் ரஜினியை ஹீரோவாக அறிமுகம் செய்தேன்.

ஏவி.எம். ஸ்டுடியோவில் ஒரு செட்டில் ரஜினியின் 'வீரா' படத்தின் ஷூட்டிங் நடந்துகொண்டிருந்தது. செட்டுக்கு வெளியே ரஜினிகாந்த், மீனா, மீனாவின் அம்மா மற்றும் இருவர் உட்பட அமர்ந்து பேசிக்கொண்டிருந்தனர். அங்கே சென்ற என்னைப் பார்த்ததும், ரஜினி எழுந்து நின்று கும்பிட்டு "வாங்க கலைஞானம் சார்' எனச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே நான் உட்காருவதற்காக ஒரு சேர் வந்தது.

நான் உட்கார்ந்த பிறகே ரஜினி உட்கார்ந்தார்.

"என்ன சார் திடீர்னு...?" எனக் கேட்டார் ரஜினி.

"என்னோட "புதுப்பட்டி பொன்னுத்தாயி"ஷூட்டிங் அடுத்த செட்ல நடக்குது" என்றேன்.

உடனே தன் கட்டைவிரலை உயர்த்திக் காட்டினார்.

'நீங்க கெட்டிக்காரர். ஏதாவது ஒரு படத்தை எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்' என உற்சாகப்படுத்துவதுதான் அதன் அர்த்தம்.

ஆனால் அப்படி அவர் செய்வதற்கு காரணம்... எனக்கு மட்டுமே தெரிந்த ரகசியம்.

"எங்கே... நான் அவரிடம், 'எனக்கு ஒரு படம் நடித்துக்கொடுங்கள்' என வம்பு செய்துவிடுவேனோ?" என்று, அடிக்கடி கட்டைவிரலை உயர்த்திக் காட்டுவார்.

ஆனால் நான் எந்தக் காலத்திலும் அவரிடம் அப்படி வம்பு செய்ததில்லை.

பக்கத்தில் இருந்த மீனாவிடம், "கலைஞானம் சார்தான் என்னை முதலில் ஹீரோவாகப் போட்டு படம் எடுத்தவர்" என ரஜினி சொல்ல... மீனாவும், அவரின் அம்மாவும் ஒரு மௌனச் சிரிப்பை வெளிப்படுத்தினர்.

(இந்தச் சிரிப்பிற்குப் பின்னால் இருந்த, மீனா குறித்த ஒரு சுவாரஸ்யமான விஷயத்தைப் பிறகு சொல்கிறேன்.)

ரஜினி எதையோ சித்தித்தவாறு இருந்துவிட்டு... ''கலைஞானம் சார். உங்களுக்கு ஒரு படம் நடிச்சுத் தரணும்னு அடிக்கடி நினைக்கிறதுண்டு. ஆனா... என்னைச் சுற்றி வி.ஐ.பி. கூட்டம் அதிகரிச்சுக்கிட்டே போகுது. அந்த வேலியைத் தாண்டி என்னால வர முடியலையே'' என்றார்.

''நீங்க வளர... வளர... வி.ஐ.பி. கூட்டமும் வளர்ந்து கொண்டுதான் இருக்கும். அதை உங்களால் தவிர்க்க முடியாது. நாங்கள் உங்களைத் தூர நின்றுதான் வேடிக்கைப் பார்க்க முடியும்'' என மனதுக்குள் நினைத்துக்கொண்டேன்.

''கலைஞானம் சார்... கொஞ்சநாளாவே பல பிரச்சினைகள் வந்து என் தலையில் ஏறிக்கிட்டு நிம்மதியைக் குலைக்குது'' என்றார்.

''ரயிலில் இருக்கைக்கு மேல ஒரு வாசகம் எழுதியிருப் பதைப் பார்த்திருக்கீங்களா?'' எனக் கேட்டேன்.

'என்ன?' என்பதுபோல ரஜினி என்னையே பார்த்தார்.

''லக்கேஜை எவ்வளவு குறைத்துக் கொள்கிறோமோ... அந்த அளவுக்கு பயணம் சுகமா இருக்கும்னு எழுதியிருப்பாங்க. எல்லாத்தையும் நீங்க தலையில் இழுத்துப் போட்டுக்காம இருந்தாத்தானே மனதில் அமைதி கிடைக்கும். ஒரு திருக்குறளையும் சொல்றேன்...

யாதனின் யாதனின் நீங்கியான் -நோதல்

அதனின் அதனின் இலன்'' என்றேன்.

அவருக்கு குறளின் பொருள் புரிந்ததோ இல்லையோ... எனக்குத் தெரிந்ததைச் சொன்னேன்.

அதற்குள்... உதவி இயக்குநர் வந்து 'சார்... ஷாட் ரெடி' என்றார்.

உடனே ரஜினியும், மீனாவும் எழுந்தார்கள். நானும் விடைபெற்றுக் கொண்டேன்.

ஒரு சந்தர்ப்பத்தில்... 'பாண்டியன்' என்கிற படத்தை தன்னுடன் தொழில் செய்த பத்து பேர்களுக்காக எடுத்துக் கொடுத்தார் ரஜினி. பிறகு தன் உயிர் நண்பர்களுக்காக 'வள்ளி' என்கிற படத்தை எடுத்துக் கொடுத்தார். இப்படி ஒரு உதவும் உள்ளம் ரஜினிக்கு இருந்ததை சினிமா உலகமே பாராட்டியது.

என்னையும் சேர்த்து சினிமாவில் நஷ்டப்பட்ட, நலிந்தவர்கள் எட்டு பேர்களுக்கு ‘அருணாச்சலம்' படத்தை எடுத்துக் கொடுத்தார்.

''இந்தியாவிலேயே ரஜினிதான் இப்படி ஒரு பெருமைக்குரிய காரியத்தைச் செய்தவர்''என்று பத்திரிகைகளும், பொதுமக்களும் பாராட்டியது ரஜினிக்கு 'நவரத்ன கிரீடம்' போல அமைந்தது.

ஒருநாள்... ரஜினி வீட்டிலிருந்து எனக்கு போன் மூலம் அழைப்பு. என் வீட்டினர் மகிழ்ச்சிப் பெருக்கோடு என்னை அனுப்பி வைத்தனர்.

ரஜினியின் வீட்டுக்குச் சென்றேன். அங்கே... உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டிருந்த நடிகை பண்டரிபாய், வீ.கே.ராமசாமி, ரஜினியை வைத்து 'காளி' படம் எடுத்து நஷ்டமடைந்த ஹேம்நாத்பாபு, எம்.ஜி.ஆரின் பக்தனான மறைந்த பத்மநாபனின் குடும்பத்தினர், 'எஜமான்' படத்தில் முழு நிர்வாகம் செய்த நாகராஜன்ராஜா, ரஜினியின் அறிமுகப் படமான 'அபூர்வ ராகங்கள்' மற்றும் ரஜினி வில்லனாக நடித்த 'அவர்கள்' படங்களைத் தயாரித்த, மறைந்த 'கலாகேந்திரா' கோவிந்தராஜனின் குடும்பத்தினர் இருந்தனர்.

''கலைஞானம் சார்... இவர்களையெல்லாம் உங்களுடன் சேர்த்துக் கொள்ளுங்கள்.... ஒரு படம் எடுப்பதற்கு'' என்றார் ரஜினி.

அவர்களையெல்லாம் பார்த்து, பரிதாபப்பட்ட நான் ''ரஜினி சார், என்னிடம் மட்டும் வசதி இருந்தால், நானே இவர்களுக்கு உதவி செய்வேன்'' என்றேன்.

மகிழ்ச்சி ரியாக்ஷன் காட்டிய ரஜினி... ''இந்தப் படம் மூலம் உங்களுக்கெல்லாம் ஒரு தொகை கொடுக்கிறேன்'' என்றார்.

''அது உங்க இஷ்டம் சார்'' என்றேன்.

அனைவரும் ரஜினியிடம் விடைபெற்றுக் கிளம்பினோம்.

எட்டு பேர் லிஸ்ட்டில் இருந்த டைரக்டர் ஸ்ரீதர், படுத்த படுக்கையாக இருந்ததால் வரமுடியவில்லை என்றாலும், ஸ்ரீதருக்கு இதில் உடன்பாடில்லை என்பதுபோல எனக்கு தகவல் கிடைத்தது. அதனால் அவரது வீட்டுக்குச் சென்றேன்.

''சார்... ரஜினி படத்தின் எட்டு பங்குதாரர்களில் ஒருவராக இருக்க மறுத்துட்டீங்களாமே?'' எனக் கேட்டேன்.

உடல் நொடித்திருந்தாலும் ஸ்ரீதரின் பேச்சு கணீரென்றி ருந்தது. ''கலைஞானம்... நான் எட்டு பேர்களில் ஒருவனா மட்டுமில்ல... நூறு பேர்களில் ஒருவனாக இருப்பதானாலும் சம்மதம்தான். ஆனால், எனக்கு

ஏன் இனாமாக பணம் கொடுக்க வேண்டும்? 'அருணாச்சலம்' படத்துக்கு என்னை வசனமோ, திரைக்கதையோ எழுதச் சொல்லலாம். எதுவுமே செய்யாமல் பணம் பெறுவது சரியா? என்னோட 'இளமை ஊஞ்சலாடுகிறது' படத்தில் ரஜினி நடித்தார். தொழில் செய்ததால் அவருக்குச் சம்பளம் கொடுத்தேன். அதேபோல நானும் அவர் படத்தில் தொழில் செய்யணும். சும்மா பணம் வாங்கினா பிச்சை போட்ட மாதிரி ஆகிவிடும்'' என்றார்.

என் தலையில் செருப்பால் அடிப்பதுபோல இருந்தது. பொறி கலங்கிப்போனேன். நான் இந்தப் படத்திற்கு எதுவும் செய்யாமல்தானே ரஜினி எனக்கு பங்கு கொடுக்கிறார். ஸ்ரீதர் என்கிற தன்மானச் சிங்கம் அதன் சீற்றத்தைக் காட்டிவிட்டதே. ''ஸ்ரீதர் சார்... நீங்கள் எழுத்தாளர் இனத்திற்கே பெருமை சேர்த்துவிட்டீர்கள். நீங்கள் வாழ்க! உங்கள் தன்மானம் வாழ்க!'' என உள்ளூரச் சொல்லிக்கொண்டு விடைபெற்று வந்தேன்.

காரில் உட்கார்ந்தேன். சிறிது ஆசுவாசப்படுத்திக் கொண்டேன்.

''ரிஸ்க் எடுத்து ரஜினியை, 'பைரவி'யில் கதாநாயக னாக அறிமுகப்படுத்தியதால்தானே ரஜினி நம்மை பங்குதாரராக்கியிருக்கிறார்' என எனக்கு நானே சமாதானம் செய்துகொண்டேன்.

ஸ்ரீதருக்குப் பதில் தனது நண்பர் முரளியை பங்குதார ராக்கினார் ரஜினி.

எம்.ஜி.ஆர். மீது பத்மநாபன் கொண்ட பக்தியின் நெகிழ்ச்சியான சம்பவம்.

பத்மநாபனுக்கும் ரஜினிக்கும் என்ன சம்பந்தம்?

# எம்.ஜி.ஆரின் வெறி பிடித்த பக்தர்!

'அருணாசலம்' படத்தின் தயாரிப்பாளர்களில் ஒருவராக எம்.ஜி.ஆரின் பக்தன் பத்மநாபனின் குடும்பத்தினரை ரஜினி தேர்வு செய்தது ஏன்? ரஜினிக்கும், பத்மநாபனுக்கும் என்ன சம்பந்தம்?
இதுகுறித்து நான் எனக்குத் தெரிந்தவரையிலான விஷயங்களை மட்டும் இங்கே சொல்கிறேன்.

கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணனின் நாடக சபாவில் லைட்ஸ் அமைப்பது உள்ளிட்ட எலெக்ட்ரீஷியன் வேலையை நல்ல முறையில் செய்ததுடன், சபாவின் பாதுகாப்பு வேலைகளையும் செய்து, என்.எஸ்.கே.வின் அன்பைப் பெற்றவர்களில் மிக முக்கியமானவராக இருந்தார் பத்மநாபன். பொய், களவு, சூது... இவைகளை கனவிலும் காணாத கடமைவீரன்.

இதனை அறிந்த எம்.ஜி.ஆர்., தனது நாடகசபாவிற்கு பத்மநாபனை அழைத்து வந்து முக்கிய பொறுப்புகளை அவரிடம் ஒப்படைத்தார். அந்தப் பொறுப்புகளை அப்பழுக்கில்லாமல் செய்து முடித்து எம்.ஜி.ஆரின் அன்பிற்கும் பாத்திரமானார்.

எம்.ஜி.ஆர், வெளியூர் செல்லும்போது அவரை பாது காப்பதில் தன் உயிரை துச்சமென நினைப்பார் பத்மநாபன். தேர்தல் பிரச்சாரத்தின்போது, எந்த ஊருக்குச் சென்றாலும், எம்.ஜி.ஆருக்கு பிடித்தமான இரவு உணவை எப்பாடு பட்டேனும் செய்துகொடுப்பார். சுருக்கமாகச் சொன்னால்... எம்.ஜி.ஆருக்கு, ஜானகியம்மாள் செய்யும் பணிவிடையை விட ஒருமடங்கு மேலாக பணிவிடை செய்துவந்தார். வெளியூர்களில் தங்கும்போது... எம்.ஜி.ஆர், சாப்பிடாமல் ஒருபோதும் இவர் சாப்பிடமாட்டார். அதுபோல வெளியூர் தங்கலில் எம்.ஜி.ஆர். தூங்கும்போது, இரவெல்லாம் தூங்காமல் விழித்திருந்து பாதுகாப்பார்.



ஒருசமயம் எம்.ஜி.ஆர் பிரச்சாரத்திற்குச் சென்றபோது, திட்டமிட்டதைவிட கூடுதலான ஊர்களுக்கு செல்ல வேண்டியதாகிவிட்டது. முதல்நாள் பகலில் விடுதியில் இருந்து கிளம்பியவர் மறுநாள் பகலில்தான் வந்தார்.

வாசலிலேயே காத்திருந்த பத்மநாபன், எம்.ஜி.ஆரைக் கண்டதும்தான் நிம்மதியானார். அங்குள்ள சமையற்காரரின் உதவியுடன் எம்.ஜி.ஆருக்கு பிடித்தமான உணவுகளை தயார் செய்தார். பரிமாறும்போது... 'தலைவா... இனியாவது அந்த ஆளைச் சாப்பிடச் சொல்லுங்க' என சமையற்காரர் வந்து சொல்ல... சாப்பிடுவதை நிறுத்திவிட்டார் எம்.ஜி.ஆர்.

பத்மநாபனுக்கு வந்ததே கோபம்... 'பளார்' என சமையற்காரரின் கன்னத்தில் ஒரு அறை அறைந்துவிட்டு, "எந்த நேரத்துல எதைச் சொல்றதுன்னு அறிவில்லையா? அந்த தெய்வம் எங்கெல்லாம் அலைந்து சென்று பிரச்சாரம் செய்து, உடம்பை வருத்தி வந்திருக்கார் தெரியுமா? நான் சாப்பிடலேன்னா செத்தா போயிடுவேன்? அந்த தெய்வம் ஆவலா சாப்பிடும்போது இப்படிச் செய்திட்டியே?" எனச் சொல்லியபடி, கண்ணீரை உகுத்தார் பத்மநாபன்.

எம்.ஜி.ஆர், பத்மநாபனையே பார்த்தார்.

முதல்நாள் தாம் கிளம்பிப்போய், இப்போது திரும்பி வரும்வரை பத்மநாபன் எதுவும் சாப்பிடாமல் இருந்திருப்பதை உணர்ந்துகொண்டார்.

"பத்மநாபா... முதலில் நீ அந்த நண்பரை அடித்ததற்காக அவரிடம் மன்னிப்புக் கேள். நீ உன் கண்ணீரைத் துடைத்தால்தானே நான் சாப்பிடமுடியும்" என எம்.ஜி.ஆர். சொல்ல... அவசர அவசரமாக கண்ணீரைத் துடைக்கிறார் பத்மநாபன். ஆனால் கண்ணீர் நிற்கவில்லை. எம்.ஜி.ஆர்., எழுந்துவந்து கண்ணீரைத் துடைத்துவிட்டு, "நீ இப்போ எனக்கு சிரித்த முகத்தோட பரிமாறினால்தான் சாப்பிடுவேன்" எனச் சொல்ல...

தலையை பலமாக ஆட்டிய பத்மநாபன் வலுக்கட்டாய மாக சிரிப்பை வரவழைத்து சிரிப்பதைப் பார்த்த எம்.ஜி.ஆர் வாய்விட்டுச் சிரித்து, பத்மநாபனைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டார்.

நிலமை சகஜமானது. அதன்பிறகு எம்.ஜி.ஆர். ஏதோ கொஞ்சம் சாப்பிட்டுவிட்டு தூங்கப் போனார்.

படுக்கையில் இருந்தபடி பத்மநாபனை எட்டி எட்டிப் பார்க்க... பத்மநாபன் தூங்கவேயில்லை.

"பத்மநாபா... நீ தூங்கினால்தானே நான் தூங்க முடியும்?" என்றார்.

"இதோ... தூங்குறேன் பாருங்க" என கண்களை மூடிமூடிப் பார்க்கிறார் பத்மநாபன். ஆனால் மூட மறுக்கிறது.

அந்த செய்கையைப் பார்த்த எம்.ஜி.ஆர் அந்த கெஸ்ட்ஹவுஸே அதிரும்படி சிரிக்க, பத்மநாபன் எழுந்து நின்றுவிட்டார்.

"ஏன் இப்படி உன் உடம்பை வருத்திக்கிற? நிம்மதியா தூங்கு" என்றார் எம்.ஜி.ஆர்.

"நான் அசந்து தூங்கிட்டா... நம்ம எதிரிங்க வந்தா எப்படி உங்களை காப்பாத்துறது?" எனக் கேட்டார் பத்மநாபன்.

எம்.ஜி.ஆரின் கண்கள் கசிந்துவிட்டன. அன்று எம்.ஜி.ஆருக்கு வெகுநேரம் உறக்கம் வரவில்லை.

இதையெல்லாம் ஒருநாள் ஜானகியம்மாளிடம் தெரிவித்த எம்.ஜி.ஆர்., "இந்த நாய்க்கு என்ன செய்றதுனு தெரியல" என உணர்ச்சிவசப்பட்டிருக்கிறார் எம்.ஜி.ஆர்.

ஒரு சந்தர்ப்பத்தில்...

சத்யா ஸ்டுடியோ நன்றாக நடந்துகொண்டிருந்த நேரத்தில், அரசியல் எதிரிகளின் தூண்டுதலால் அடிக்கடி தொழிலாளர்கள் சிலர் ஸ்டிரைக்

செய்தனர். எம்.ஜி.ஆர்., எவ்வளவோ சொல்லியும் கேட்கவில்லை. உடனே பத்மநாபனை அழைத்து "ஸ்டுடியோவை விற்றுவிடலாம்" என்றாராம்.

"கொஞ்சம் பொறுத்திருங்க. நான் ஒவ்வொரு தொழிலாளி யையும் தனித்தனியே சந்திச்சுப் பேசி, எப்படியாவது சுமுகமான சூழலை ஏற்படுத்துறேன்" என பத்மநாபன் சொல்ல... 'உன் இஷ்டம்' எனச் சொல்லிவிட்டு எம்.ஜி.ஆர்., சென்றுவிட்டார்.

சொன்னபடியே எல்லாரிடமும், தனித்தனியாகப் பேசி, ஸ்டிரைக்கை வாபஸ் பெற வைத்துவிட்டார் பத்மநாபன்.

"பத்மநாபா... இனிமே ஸ்டுடியோவை நீயே உன் பெயரில் நடத்து"

"நான் ஒரு யோசனை சொல்லலாமா?"

"சொல்"

"நம்ம தொழிலாளிங்கள்ல சிலர் உங்கமேல உயிரையே வச்சிருக்காங்க. அவங்களையெல்லாம் நிர்வாக பங்குதாரர்களாக்கி ஸ்டுடியோவை நடத்தலாமே?"

"அப்படியா?"

"உங்களுக்கு ராசியான நம்பர் 17. அதன்படி 17 பேர்களைச் சேர்த்து நடத்தலாம்'"என பத்மநாபன் சொல்ல...

அவரையே கூர்ந்து பார்த்த எம்.ஜி.ஆர்., "பத்மநாபா... உனக்கு பொழைக்க வழி சொன்னா, நீ பொதுநலத்துக்குப் போயிட்ட. உன் அப்பாவித்தனத்தை நான் என்ன சொல்றது?" என அனுதாபப்பட்ட எம்.ஜி.ஆர்., பத்மநாபன் சொன்ன யோசனைக்கு சம்மதித்தார்.

அதன்படி 17 பேர்களைச் சேர்த்து "வொர்க்கர்ஸ் கம்பைன்ஸ்"ஆரம்பிக்கப்பட்டது. மேனேஜிங் டைரக்டராக பத்மநாபனும், பீதாம்பரம், குஞ்சப்பன், சந்திரன், ஹரி போன்றவர்கள் உட்பட 17 பேர்கள் பார்ட்னர்களாக்கப்பட்டனர்.

உடல்நலக் குறைவால் சிகிச்சைக்காக எம்.ஜி.ஆர். அமெரிக்கா சென்றபோது, பத்மநாபனுக்கு பைத்தியமே பிடித்தது போல ஆகிவிட்டது. சாமியார் போல தாடியை வளர்த்துக் கொண்டு உண்ணாமல், உறங்காமல் கசிந்த கண்ணீருடன் வாழ்ந்து வந்தார்.

'சிகிச்சை முடிந்து எம்.ஜி.ஆர். நாளை சென்னை திரும்புகிறார்... மைதானத்தில் மக்களைச் சந்திக்கிறார்...' என்றதும் முதல்நாளே சென்று

அந்த மைதானத்தில் உட்கார்ந்து கொண்டார்.

மறுநாள்...லட்சோப லட்சம் மக்கள் கூட்டத்தில்... வேனில் நின்றபடி வந்த எம்.ஜி.ஆரின் கண்கள் பத்மநாபனைத் தேடின.

பத்மநாபன், தன் கைகள் இரண்டையும் தலைக்கு மேல் கூப்பி, அழுதவாறு நின்றிருப்பதை பார்த்துவிட்ட எம்.ஜி.ஆர்., 'அதான்... நான் வந்திட்டேனே' என கையை ஆட்ட, பத்ம நாபன் கதறித் தீர்த்துவிட்டார்.

மறுபடி எம்.ஜி.ஆருக்கு உடல்நலக் குறைபாடு ஏற்பட்ட சமயம்... முக்கியமானவர்கள் எம்.ஜி.ஆரைச் சந்தித்து பண உதவிகள் பெற்று வந்த நேரமது...எம்.ஜி.ஆரைப் பார்க்கச் சென்றார் பத்மநாபன்.

பத்மநாபன் வந்திருப்பதை அறிந்த எம்.ஜி.ஆர்., ஜானகிஅம்மாளிடம் சைகை மூலம் ஒரு கோடி ரூபாயை பெட்டியில் எடுத்து வைக்கச் சொன்னார்.

அதன்பிறகு... பத்மநாபனை அழைத்து பணப்பெட்டியைச் சுட்டிக்காட்டிய எம்.ஜி.ஆர்., சைகையில் ஏதோ சொன்னார்.

"உனக்குத் தேவையான பணம் பெட்டியில் இருக்கு. நீ இதை எடுத்துச் சென்று, உன் குடும்பத்திற்கும், உன் மகள்களின் கல்யாணச் செலவுகளுக்கும் பயன்படுத்திக்கொள்ளும்படி சொல்றார்" என ஜானகி யம்மாள் விளக்கம் சொன்னதும்..

"தெய்வமே...!" என கதறியபடி எம்.ஜி.ஆர். முன்பு நெடுஞ்சாண்கிடையாக விழுந்தார் பத்மநாபன்.

# எம்.ஜி.ஆர். பக்தனுக்கு உதவிய ரஜினி!

இன்றைய ஒரு கோடி ரூபாய் மதிப்பிற்கும் அதிகமான பணத்தை சூட்கேஸில் வைத்து, பத்மநாபனிடம் அந்த சூட்கேஸைக் காட்டி சைகையால் எம்.ஜி.ஆர் ஏதோ சொல்ல...
"உனக்குத் தேவையான பணத்தை எடுத்து வைத்திருக் கிறார். நீ இதை எடுத்துச் சென்று, உன் குடும்பத்திற்கும், உன் மகள்களின் திருமணத்திற்கும் பயன்படுத்திக்கொள்ளும்படி சொல்கிறார்" என ஜானகி அம்மாள் விளக்கிச் சொல்ல...

'தெய்வமே' என அரற்றியபடி எம்.ஜி.ஆரின் முன்பாக நெடுஞ்சாண்கிடையாக விழுந்த பத்மநாபன், "எனக்குப் பணம் வேண்டவே வேண்டாம். நீங்கள் நல்லபடியா இருக்கணும் தெய்வமே. உங்களுக்கு ஏதாவது ஆச்சுன்னா நான் மட்டுமில்ல... என் குடும்பமே செத்து ஒழியும்" எனக் கதறி, அழுத வாய் மூடாமல் வெளியேறிவிட்டார் பத்மநாபன்.

இவ்வளவு பணத்தை எம்.ஜி.ஆரே தர முன்வந்தும், ஏழு பெண்பிள்ளைகளைப் பெற்ற பத்மநாபன், 'பணமே வேண்டாம்' என்று சொல்லி எம்.ஜி.ஆர். மீது தான் வைத்திருக்கும் பக்தியையும், விசுவாசத்தையும் காட்டினார்.

எம்.ஜி.ஆரை, மக்கள் மனதில் வைத்து பூஜிக்கிறார்கள். எம்.ஜி.ஆர் தன் உள்ளத்தில் சிலரை வைத்து பாதுகாத்து வந்தார். அவர்களில் முதன்மையானவர்... இந்த பத்மநாபன்.



நான் சினிமா தயாரித்து வந்த நேரங்களில் சத்யா ஸ்டுடியோவில் சில காட்சிகளை எடுப்பதுண்டு. அப்போது பத்மநாபன் என்னிடம் பல விஷயங்களை சொல்வ துண்டு. அதற்குக் காரணம்.... என்.எஸ்.கே.வின் நாடகக் கம்பெனியில் பத்மநாபன் வேலை செய்த போது, பத்மநாபனின் நேர்மையை, உழைப்பை, 'பராசக்தி பூசாரி' கவி.கே.பி.காமாட்சி சுந்தரம் அடிக்கடி பாராட்டுவ துடன் 'நீ ஒரு காலத்தில் நன்றாக வருவாய்' என்று வாழ்த்துவாராம். நான், காமாட்சியின் ஒன்று விட்ட தம்பி என்பதால், என்னிடம் நெருக்கமாக பழகிவந்த பத்மநாபன்... பல விஷயங்களை... குறிப்பாக எம்.ஜி.ஆர். மீது தான் கொண்டிருக்கும் விசுவாசம் குறித்து நிறையவே சொல்லி யிருக்கிறார்.



ஒருசமயம்....

எம்.ஜி.ஆருக்கும், ரஜினிக்கும் இடையே சிறு பிளவு ஏற்பட்டது. அதன் காரண காரியங்களை ஆராய்ந்து, ரஜினிக்காக எம்.ஜி.ஆரிடம் பேசி... பிரச்சினை தீர உதவினார் பத்மநாபன். இதனால் ரஜினிக்கு, பத்மநாபன் மீது நல்ல மதிப்பு.

குடும்பத்தையும், ஏழு பெண் குழந்தைகளையும் தவிக்க விட்டுவிட்டு பத்மநாபன் காலமானார்.

'லாபம் கருதியே பழகிவரும் இந்தக் காலத்தில், எம்.ஜி. ஆரின் உண்மை ஊழியனாக, பணத்திற்கு ஆசைப்படாமல் நன்றியுள்ளவனாகவே வாழ்ந்து மறைந்திருக்கிறாரே' என்கிற அனுதாபத்திலும், எம்.ஜி.ஆருக்கும், தனக்கும் இடையே இருந்த பிளவை சரிசெய்த நல்ல உள்ளத்தையும் நினைத்துத்தான், ‘அருணாசலம்' படத்தின் பார்ட்னர்களில் ஒருவராக பத்ம நாபன் குடும்பத்தையும் சேர்த்து, பங்குத் தொகை கொடுத்தார் ரஜினி.

'அருணாசலம்' படம் தொடங்கும்போது எட்டு பங்குதாரர் களுக்கும் கொடுப்பதாகச் சொன்ன தொகையைவிட, கூடுதலாகவே கொடுத்து மகிழ்ந்தார் ரஜினி. அப்போது ரஜினி எந்த பிரச்சினையும் இல்லாமல் மகிழ்ச்சியோடு வாழ்ந்துவந்தார். 'பணம் உதிர் சோலை'யில் அவர் குடியிருந்த நேரம். அதனால் வள்ளல் தன்மையில் ஈடு இணையின்றி ரஜினிகாந்த் வாழ்ந்து காட்டினார்.

அது அந்தக் காலம்.

நான் எதிர்பாராத நேரத்தில்... அதுவும் இரவில்... ரஜினியிடமிருந்து போன் வந்தது.

''கலைஞானம் சார்... நாளைக்கு காலைல ஏவி.எம். பிள்ளையார் கோயில்ல 'முத்து' படத்தோட பூஜை. அவசியம் வந்திடுங்க'' என்றார்.

அதன்படி மறுநாள் காலையில் அங்கு சென்றேன்.

படத்தின் டைரக்டரான கே.எஸ்.ரவிக்குமார், பிள்ளையா ருக்கு சரியாக அலங்காரம் செய்யப்பட்டிருக்கிறதா... என்பதைக் கவனித்துக்கொண்டிருந்தார். இது பாலசந்தரின் தயாரிப்பு. பாலசந்தர் சிலருடன் பேசிக் கொண்டிருந்தார். ரஜினி, தன் சிகை அலங்காரத்தை சரி செய்துகொண்டிருந்தார். (ரஜினி தன் தலைமுடியை சரி செய்கிறாரென்றால்... அதை கலைத்துவிட்டுக் கொண்டிருக்கிறார் என்றுதானே அர்த்தம். அதுதானே அவரின் ஸ்டைல்.)

யாரோ ஒரு நபரை எதிர்பார்த்திருந்து... அந்த நபர் வரவில்லை போலும். ஒரு ஓரமாக நின்றிருந்த என்னைப் பார்த்ததும் சிரித்த முகத்துடன் என்னிடம் வந்தார் பாலசந்தர்.

''கலைஞானம்... நீங்கதான் கேமரா சுவிட்ச் ஆன் பண்ணிவைக்கணும்'' என்றார்.

''நானா?'' என கூச்சத்தோடு தயங்கிய நான்... ''என்ன சார்... நீங்க பெரியவங்க... என்னப்போயி...'' என்று இழுத்தேன். தொடர்ந்து ''சார்... புஷ்பாவை சுவிட்ச் ஆன் பண்ணச் சொல்லுங்க. ராசியான பொண்ணு'' என்றபடி பாலசந்தரின் மகள் புஷ்பாவைத் தேடினேன்.

''உங்க கைதான் ராசியான கை. ரஜினியை அறிமுகப்படுத்தின எனக்கு, அவரை ஹீரோவா போட துணிச்சல் வரலை. ஆனா நீங்க துணிஞ்சு அவரை ஹீரோவா போட்டதால... சூப்பர்ஸ்டார் ஆகிட்டாரு. சூப்பர்ஸ்டார் ஆகி ஓய்வில்லாம நடிக்கிறாரு, சம்பாதிக்கிறாரு.. அவரால பலரும் சம்பாதிச்சு நல்லா இருக்காங்க. உங்களைவிடவா கைராசி வேணும்?'' என்றார் பாலசந்தர்.

''சார்... எனக்கு என்னமோ ஒருமாதிரியா இருக்கு. வேற யாரையாவது வச்சு...'' என்று நான் சொல்லி முடிக்கும்முன், நேராக ரஜினியிடம் போனார் பாலசந்தர். ஏதோ சொன்னார்.

ரஜினியின் நடைதான் நமக்குத் தெரியுமே. பரபரப்பாக நடந்துவந்து என்னிடம் ''கலைஞானம் சார்... உங்களை டைரக்டர் சுவிட்ச் ஆன் பண்ணச் சொன்னார்... வாங்க...'' எனச் சொல்லிவிட்டு, அதே ஸ்பீடு நடையில் சென்று கேமரா முன் நின்றுவிட்டார்.

நான் சென்று சுவிட்ச் ஆன் செய்தேன். படப்பிடிப்பு தொடங்கியது.

அந்த 'முத்து' படம்தான் ஜப்பான் நாட்டிலும் வெளியாகி, அங்கே சக்கைப்போடு போட்டதுடன், ரஜினிக்கு ஜப்பானிலும் ரசிகர்கள் கூட்டத்தை உருவாக்கியது.

அதை நான் அவ்வப்போது பெருமையாக நினைத்து, எனது இல்லாத மீசையை முறுக்கிவிட்டுக் கொள்கிறேன். இது மாதிரி சின்னச் சின்ன அசட்டு சந்தோஷத்திலேயே வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருக்கிறேன். சம்பாதிக்கத் தான் தெரியலையே...

மண்ணுக்குள் மறைந்திருந்து மரங்களையும், செடி களையும் பாதுகாத்து வரும் வேர்கள்போல... திரை மறைவிலிருந்து சில கலைஞர்கள் பிறரின் வளர்ச்சிக்கு தோணியாக, ஏணியாக பயன்பட்டு வருகிறார்கள். அவர்களில் நானும் ஒருவன். ஆனாலும் உண்மையான நல்ல உள்ளம் உள்ள நண்பர்கள் எனக்குக் கிடைத்திருப்பதால் வெளிப்படையாக தொழில் உறவை எழுதும் பாக்யம் பெற்றிருக்கிறேன்.

நான் சுமார் நூறு படங்களுக்கு மேல் திரைக்கதைகளில் ஒத்துழைப்புச் செய்திருக்கிறேன். அதில் முக்கியமான சிலவற்றை ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். இப்போது ஒருசிலவற்றைச் சொல்கிறேன்.

ரஜினி எனக்கு முழுமையாக ஒரு படம் எடுத்துக் கொடுக்கவில்லை என்றாலும், அவர் நடித்த நான்கு முக்கியமான படங்களில் என் உழைப்பு இருக்கிறது.

முத்துராமன்-ஜெயலலிதா நடித்து, நான் கதை எழுதிய 'கணவன் மனைவி' படத்தை தழுவியதுதான் ரஜினியின் 'மன்னன்' படம் என்பதையும், அதற்காக டைரக்டர் பி.வாசு எனக்கு பணம் கொடுத்து கௌரவித்ததையும் ஏற்கனவே விரிவாக தொடரில் சொல்லியிருக்கிறேன்.

'எஜமான்' படத்தில் துப்பாக்கி முனையில் பரிவட்ட மரியாதையைப் பெற்று, ரோஜா மாலையுடன் ரஜினி வரும் காட்சியையும், அதைச் சொன்னதற்காக தம்பி ஆர்.வி.உதயகுமார் ஒரு நல்லதொகை கொடுத்து என்னை கௌரவித்ததையும் சொல்லியிருக்கிறேன்.

'உழைப்பாளி' படத்தில் என் பங்கு என்ன?

'சந்திரமுகி' படம் உருவான சூழல்...

'சந்திரமுகி' படப்பிடிப்பின்போது எனக்கு ஏற்பட்ட சங்கடம்...

## *எம்.ஜி.ஆர். என்றால் உயிர்!*



எம்.ஜி.ஆருக்கு விசுவாசமான வேலைக்காரராக இருந்த பத்மநாபன் பற்றி இத்தொடரில் நான் எழுதியதைப் படித்த ரசிகர்கள், தமிழகம் முழுக்க இருந்து என்னை செல்போனில் தொடர்புகொண்டு நெகிழ்ச்சியுடன் பேசிவருகிறார்கள். பத்மநாபனின் ஏழு மகள்களில் இரண்டாவது மகள் விஜயலட்சுமியும், மூன்றாவது மகள் கீதாவும் என் வீட்டிற்கே வந்துவிட்டனர்.

"அப்பாவைப் பற்றி நீங்கள் எழுதியதைப் படித்தபோது எங்களால் கண்ணீரை கட்டுப்படுத்த முடியவில்லை ஐயா" எனச் சொன்னார்கள்.

அப்போது கீதா உருக்கமான ஒரு தகவலை என்னிடம் பகிர்ந்துகொண்டார்.

''எம்.ஜி.ஆர். இறந்த அன்று••• எங்க வீட்டுக்கு ஒரு ஜீப் பில் நாலைந்து போலீஸார் வந்தனர். எம்.ஜி.ஆர். இறந்து போன தகவலை உடனே அப்பாகிட்ட சொன்னால், அப்பா தன் உயிரை மாய்ச்சுக்குவார் என்பதால் ''சி.எம்.க்கு உடம்பு முடியல. வீட்டு வரைக்கும் வாங்க''என்று சொல்லித்தான் அப்பவை ஜீப்பில் கூட்டிட்டுப் போனாங்க. எம்.ஜி.ஆரின் வீட்டை நெருங்க நெருங்க••• பந்தல் போடும் வேலைகளும், ஒரு இறுக்கமான சூழலும் இருப்பதைப் பார்த்த அப்பா••• விஷயத்தை ஊகித்து... ஜீப்பிலேயே முட்டி முட்டி அழுது, மூர்ச்சையாகிவிட்டாராம். கண்ணீர்விட்டபடியே இருந்த அப்பா, எம்.ஜி.ஆரின் உடல் இருந்த பெட்டியை சமாதிக்குள் இறக்கி வைக்கும்போது, கூட்டத்தை முட்டித் தள்ளிக்கிட்டு வந்து••• ஒரு மகன் மாதிரி, சடலத்தை தாங்கி குழிக்குள் இறக்கினார். எம்.ஜி.ஆர். இறந்து ஒரு வருஷம் ஆகியும், எம்.ஜி.ஆரின் சமாதியையே சுத்திச் சுத்தி வந்தார். வீட்டுக்கே வரமாட்டார். நாங்க தேடிப்பிடிச்சு அப்பாவை வீட்டுக்கு கூட்டிவருவோம். மறுநாளே••• அதிகாலையில் எங்களுக்கு முன்பாக எழுந்து சமாதிக்கு ஓடிவிடுவார். இப்படியே மனது ரொம்பப் பாதிக்கப்பட்டார் அப்பா. எம்.ஜி.ஆர் மீதான ஏக்கத்திலேயே அடுத்த சில வருடங்களில் அப்பா இறந்துபோனார்'' எனச் சொல்லிவிட்டு கீதா அழ...••• அதைப் பார்த்து விஜயலட்சுமியும் கதறி அழ••• நான் கண்ணீரை கட்டுப்படுத்திக் கொண்டு அவர்களை சமாதானப்படுத்தி அனுப்பினேன்.

# கனல் கக்கிய ரஜினி!

ரஜினியின் 'உழைப்பாளி' படத்தில் என் பங்கு என்ன? ஒரேயொரு சம்பவம்...

எலும்பும் தோலுமாக ஒரு எழுபது வயது கிழவர் வேகாத வெயிலில் அதிக பாரம் ஏற்றப்பட்ட கைவண்டியை இழுத்து வருவார். அப்போது தொழிலாளியான ரஜினி, கிழவர் படும்பாட்டைப் பார்த்து ஓடிவந்து, தானும் அவருடன் வண்டியை இழுத்தபடியே...'தாத்தா..! நீ ஏன் இந்த வயதில் இப்படி உழைக்கணும்?' எனக் கேட்பார்.

"என்ன செய்றது? எனக்குனு யாருமே இல்லியே. இந்த வயத்தைப் பட்டினி போடலாமா? அதுக்காகத்தான் இத்தனைப் பாடு"

"உனக்கு நான் ஒரு நல்ல ஏற்பாடு செய்றேன். எனக்குத் தெரிஞ்ச இடத்துல சேர்த்துவிடுறேன். அங்கே வீட்டைப் பார்த்துக்கிட்டிருந்தா போதும். சும்மா... ஜாம் ஜாம்னு சாப்பிட்டுக்கிட்டே நிம்மதியா இருக்கலாம்"

"தம்பி... புள்ளையாண்டா,...கடவுள் எனக்கு கையையும், காலையும் கொடுத்திருக்கது உழைச்சு சாப்பிடத்தானே. அதை விட்டுட்டு சோம்பேறியா சோறு தின்னு வாழணுமா?" எனக் கேட்பார் தாத்தா.

தாத்தாவை வியப்புடன் விழித்துப் பார்த்த ரஜினி "அப்பனே... சாமீ! நான் சொன்னது தப்பு......தப்பு" என கன்னத்தில் போட்டுக் கொள்வார். அதைப் பார்த்த கிழவர் வாய்விட்டுச் சிரிப்பார்... சிரிக்க முடியாமல்.



மற்றொரு நாள். அதே கிழவர், கூலியை வாங்கியபின், இடுப்பில் தொங்கவிட்டிருக்கும் சுருக்குப் பையில் ஒரு ரூபாயை மட்டும் போட்டுவிட்டு, பாக்கியை இடுப்பில் சொருகுவார். இதைக் கவனித்த ரஜினி... "அது என்ன தாத்தா... அந்தப் பையில தனியா போட்டு வைக்கிற? காதலிக்காகவா?" எனக் கேட்பார்.

"அடப் போப்பா... இது சாவு முதலு. திடீர்னு நான் செத்துப்போயிட்டா 'இது அனாதைப் பொணமில்ல. பையில பணம் வச்சிருக்காரு'னு யாரோ ஒரு புண்ணியவான் தூக்கிட்டுப் போய் இந்த காசை செலவுபண்ணி என்னை பொதைக்கலாமில்ல" என பொக்கை வாயால் ஜீவனற்று சிரித்தார்.

சில நாட்களுக்குப் பிறகு... வேலையில் உயர்வுபெற்று, விலையுயர்ந்த ஏ.சி.காரை ஓட்டிக்கொண்டு வருவார் ரஜினி. ரோட்டில் அதே தாத்தா வேர்க்க விறுவிறுக்க நடந்து வருவதைப் பார்த்த ரஜினி காரை நிறுத்தி

"தாத்தா நீ எங்க போகணுமோ... அங்க இறக்கி விடுறேன், வா கார்ல ஏறு" எனச்சொல்லி முன்பக்க கதவைத் திறந்துவிட,... தாத்தாவும் ஏறி அமர்வார். கார் செல்லும்போது "அடேயப்பா... என்னப்பா இப்படி ஒரு குளிர்ச்சி. இதுதான் ஏ.சி.யா? ஆஹா... ...ஆஹா..."...என அனுபவித்த தாத்தாவின் உயிர் பொசுக்கென்று போய்விட்டது.

அதிர்ச்சியடைந்த ரஜினி, 'தாத்தா...... தாத்தா...'...என்று கத்துவார். பயனில்லை. காரை நிறுத்திவிட்டு தாத்தாவின் இடுப்பில் தொங்கிக்கொண்டிருந்த சுருக்குப்பை மட்டும் அசைந்து கொண்டிருப்பதைப் பார்த்தார். தாத்தா சொன்னது நினைவுக்கு வந்தது. "இது சாவு முதலு. திடீர்னு நான் செத்துட்டா...அனாதைப் பொணமில்ல, ... பையில பணம் வச்சிருக்காருனு யாரோ ஒரு புண்ணியவான் தூக்கிப்போட்டு பொதைக்கலாம்ல'... "

ரஜினி கண்ணீரைத் துடைத்துக்கொண்டார். அவர் மனம் பேசியது. ...'ஒவ்வொரு மனிதனுக்கும் சேமிப்புங்கிறது எவ்வளவு முக்கியம்கிறதை தாத்தா நமக்கெல்லாம் உணர்த்துகிறார்' என ரஜினியின் குரல் ஒலித்தது. தாத்தாவை, தன் தந்தையாக நினைத்து தகனம் செய்து முடித்தார்.

இப்படி ஒரு காட்சியை நான் சொன்னதும், தம்பி பி.வாசு அதனை ரசித்தார். படத்திலும் அதேபோல் எடுத்துக் காட்டி கண்களை கலங்க வைத்தார்.

ஒருநாள் தம்பி வாசு என்னை அழைத்து 'மணிச்சித்ரதாழ்' என்ற மலையாளப் படத்தின் சி.டி.யைக் கொடுத்து "இதை நீங்கள் பார்த்துவிட்டு வாருங்கள்" என்றார்.

என் குடும்பத்தினருடன் டி.வியில் அந்தப் படத்தைப் போட்டுப் பார்த்தேன். அப்போது என் மனைவி, "இந்தப் படத்தை நான் ரெண்டு முறை பார்த்துட்டேன். மோகன்லால் ரொம்ப பிரம்மாதமா நடிச்சிருப்பாரே... ரொம்ப நல்ல படம்" என்றார்.

எனக்கும் இந்தப் படம் மிகவும் பிடித்தது. வாசுவிடம் சென்று "படம் ரொம்ப நல்லாருக்கு. இதை ஏன் பார்க்கச் சொன்னீங்க?" என கேட்டேன்.

"கன்னட சூப்பர்ஸ்டார் விஷ்ணுவர்தனுக்கு ஒரு படம் எடுக்கணும். இந்த 'மணிச்சித்ரதாழ்' படத்தில் மோகன்லால் கேரக்டர் இடைவேளைக்குப் பிறகுதான் வருகிறது. இதேபோல் விஷ்ணுவர்தனை இடைவேளைவரை காட்டாமல் இருந்தால் கன்னட மக்கள் பொறுமையிழந்துவிடுவார்கள். திரை கிழிந்து விடும். அதனால் விஷ்ணுவர்தன் ஆரம்பத்திலிருந்தே

கதையில் இருக்க வேண்டும். அதற்கேற்ப நாம் திரைக்கதை எழுதவேண்டும்'' என்றார்.

அதன்படி ஆளாளுக்கு ஸீன்கள் சொன்னோம். தேவைப்பட்டதை எடுத்துக்கொண்டு வாசு தனக்கேயுரிய பாணியில் அரும்பாடு பட்டு திரைக்கதை அமைத்து, வசனம் எழுதி இயக்கினார்.

'ஆப்த மித்ரா' என்ற பெயரில் கன்னடத்தில் வெளிவந்த படம் சூப்பர் ஹிட். இந்தப் படத்தை ரஜினிகாந்த், முதல் காட்சியே பார்த்து பிரமித்துவிட்டார். உடனே அண்ணன் சிவாஜியின் மகன் ராம்குமாருக்கு போன் செய்து ''நம்ம வாசு எழுதி இயக்கிய 'ஆப்த மித்ரா' படம் கன்னடத்தில் சூப்பர் ஹிட். உடனே நாம இதை தமிழில் எடுக்க வேண்டும். வாசுவிடம் சொல்லி, ஏற்பாடு செய்யுங்கள்'' என்றார் ரஜினி.

அப்படி எடுத்த படம்தான் 'சந்திரமுகி'. தமிழ் சினிமா வரலாற்றில் பாகவதரின் 'ஹரிதாஸ்' படத்திற்குப் பிறகு மூன்றாண்டுகள் ஓடி சாதனை படைத்தது ''சந்திரமுகி'.

சென்னை பச்சையப்பன் கல்லூரி எதிரில் ''சந்திரமுகி' ஷூட்டிங் நடந்துகொண்டிருந்தது. 'எந்த ஸீன் எடுக்கிறாங்கன்னு நாம போய் பார்க்கலாமே?' என அங்கு சென்றேன். படப்பிடிப்பு நிலையத்திற்குள் போனபோது ரஜினி கேமரா முன் நின்று ஒத்திகை பார்த்துக்கொண்டிருந்தார். ராம்குமாரும் அவருடன் இருவரும் உட்கார்ந்திருந்தார்கள். நான் சென்றதும், 'வாங்க கலைஞானம் சார்' என்றார் ராம்குமார். நான் அவருக்கு வணக்கம் தெரிவித்துவிட்டு உட்காரும் முன்பே என்னை ரஜினி பார்த்துவிட்டார். பெட்ரோல் தீப்பற்றி பறந்து வருவதுபோல் என்னிடம் விரைந்து வந்தார் ரஜினி. கண்களில் கனல் கக்க மிகுந்த கோபத்துடன்... ரஜினி அந்த வார்த்தைகளை என்னிடம் கொட்டினார்.

''கலைஞானம் சார்... நீங்க என்னை ஹீரோவா ஆக்கி என் வாழ்க்கையை பாழாக்கிட்டீங்க''

# ரசிகர்களுக்காக...!

சென்னை பச்சையப்பன் கல்லூரி எதிர்ப்புறத்தில் 'சந்திரமுகி' படப்பிடிப்பு ஸ்பாட்டுக்குப் போனேன். கேமரா முன் ஒத்திகையில் ஈடுபட்டிருந்த ரஜினி, என்னைப் பார்த்ததும் பெட்ரோல் தீப்பற்றி பறந்து வருவதுபோல என்னை நோக்கி விரைந்து வந்தார்.
கண்களில் கனல் கக்க மிகுந்த கோபத்துடன் பார்த்தபடி... ''கலைஞானம் சார்... நீங்க என்னை ஹீரோவாப் போட்டு, என் வாழ்க்கையைப் பாழாக்கிட்டீங்க'' என்றார்.

எனக்கு அதிர்ச்சியாக இருந்தாலும் சமாளித்துக்கொண்டு... ''உங்களால் பலரும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். அதில் நீங்கள் பங்கெடுத்துக்கொள்ளுங்கள்'' என்றேன்.

மறுபக்கமாக திரும்பியவாறு சினத்தில் மூழ்கியிருந்தார் ரஜினி. நான் அவரையே பார்த்துக்கொண்டிருந்தேன். அதற்குள் 'ஷாட் ரெடி' என்கிற அறிகுறியுடன் உதவி இயக்குநர் வந்து நிற்க... ரஜினி விரைந்து சென்று நடிக்க ஆரம்பித்துவிட்டார்.

எனக்கு ஒரே குழப்பம். ''ஏன் இப்படிச் சொன்னார் ரஜினி? கோடி கோடியா சொத்து குவிஞ்சு கிடக்குது. உலகெங்கும் இவரின் புகழ் பரவிக்கிடக்கு. இப்படி இருக்கும்போது 'என் வாழ்க்கையைப் பாழாக்கிட்டீங்களே'னு சொல்லீட்டாரே... நாம இவரைப்பத்தி எங்கேயாவது தவறா பேசிட்டோமா? இவரின் புகழ் பாடுவதைத் தவிர வேறேதும் பேசியது இல்லையே? இன்னைக்கு அவரோட வீட்டில் ஏதேனும் தாங்க முடியாத பிரச்சினை ஏற்பட்டுவிட்டதோ? இருக்கட்டும்... என்னதான் பிரச்சினையாக இருந்தாலும், அரும்பாடுபட்டு வளர்த்த தாயைப் பார்த்து 'ஏண்டி என்னை வளர்த்துவிட்ட... பொறுக்கி நாயே' என்று சொல்ல முடியுமா? அப்படித்தானே ரஜினி என்னிடம் பேசிவிட்டார்.



'பைரவி' படம் மூலம் முதன்முதலா தயாரிப்பாளரா ஆகப்போவதையும், ரஜினியை ஹீரோவா அறிமுகப்படுத்தப் போவதையும் தேவர்கிட்ட சொன்னபோது... அன்னைக்கே தேவர்... 'அடே ரஜினிகாந்த்தை வில்லனா போடு. ஹீரோவா போடதே'னு சொன்னாரே. தேவர் பேச்சை மீறி ரஜினியை ஹீரோவாக்கினதால் தேவர் ஃபைனான்ஸ் ஏற்பாடு செய்து தர மறுத்திட்டாரே. இப்போ ரஜினி வில்லன் மாதிரியே பேசிட்டாரே. 'பைரவி'யில் நடிக்க, முதல்நாள் ரஜினி என்னிடம் 25 ஆயிரம் ரூபாய் சம்பளமும், ஆயிரம் ரூபாய் அட்வான்ஸும் கேட்டார். எப்படியோ உருட்டிப் புரட்டி ஆயிரம் ரூபாய் ரெடி செய்துவிட்டு போனபோது, திடீர்னு பேச்சுமாறி 'ஐம்பதாயிரம் சம்பளமும், ஐயாயிரம் அட்வான்ஸும் அவரின் நண்பர் நட்ராஜ் மூலம் கேட்டுவிட்டாரே... என்ன செய்வதுனு தெரியாமல், மனைவியின் தாலியையும் தாலியின் இரு பக்கமும் இருந்த இரண்டு தங்கக் குண்டுமணிகளை... விற்கக்கூடாததை விற்று ஐந்தாயிரம் கொடுத்தவனைப் பார்த்து இப்படி ஒரு சொல் சொல்லலாமா?' என வேதனைப்பட்டேன். 'இப்படி ஒரே நிமிஷத்தில் பழைய நினைவுகள் எல்லாம் வந்துவிட்டதே' என மனம் நொந்து, நிலைகுலைந்து போனேன்.

மதியம்...ஷூட்டிங் முடிந்து புறப்பட்டார் ரஜினி. காரில் ஏறப்போகும் முன்பு, அவரின் கண்கள் என்னைத் தேடிப் பிடித்தன.

''கலைஞானம் சார்'' என அழைத்தார்.

அருகில் சென்றேன்.

மலர்ந்த முகத்துடன் கேட்டார். "நீங்க வீட்டுக்குப் போக கார் இருக்கிறதா?"

என்னிடம் கார் இல்லை. ஆனாலும் "கார் இருக்கு" என்றேன்.

"வரட்டுமா?" என ஒரு சிறு புன்னகையுடன் புறப்பட்டுப் போனார் ரஜினி.

இவரைப் பற்றி என்ன சொல்வதென்றே புரியவில்லை.

"அன்னைக்கி 'முத்து' பட பூஜையின்போது பாலசந்தர் என்னை கேமராவின் சுவிட்ச்சை ஆன் பண்ணி படப்பிடிப்பை துவங்கி வைக்கச் சொன்னார். நான் மறுத்தபோது 'உங்க கைதான் ராசியான கை. ரஜினியை நடிகராக அறிமுகப்படுத்திய என்னால் அவரை ஹீரோவா போட்டு படம் எடுக்கத் துணிச்சல் வரலை. ஆனா நீங்க துணிஞ்சு ஹீரோவா போட்டதால், அவரு சூப்பர் ஸ்டார் ஆனாரு. ஓய்வில்லாம நடிக்கிறாரு, சம்பாதிக்கிறாரு, அவரால பலபேரும் சம்பாதிச்சு சந்தோஷமா இருக்காங்க. உங்களைவிட கைராசி வேணுமா?'னு பாலசந்தர் என்னைப் பற்றி அப்படிச் சொன்னார். இன்னைக்கி இவரு... 'என் வாழ்க்கையைப் பாழாக்கிட்டீங்க'னு சொல்றாரு.

'சரி... வசதி உள்ளவங்க வாய் எப்படி வேணும்னாலும் பேசும். இதுல ரஜினிகாந்த் மட்டும் விதிவிலக்கா என்ன? இப்போ நாம பிழைக்கிற பிழைப்பைத் தேடி பொடிநடையா போவோம்' என என்னை சமாதானப்படுத்திக்கொண்டேன்.

இந்த நேரம்... திடீர் என என் புத்தியில் ஒரு உதயம்...

என்னதான் இருந்தாலும் ரஜினி என்னோட ஹீரோ. அவரு சீரும் சிறப்புமா இருந்தாத்தானே எனக்குப் பெருமை. நிறை, குறைகள் யார்கிட்டத்தான் இல்லை?

இருப்பினும் இதையெல்லாம் தாண்டி, ரஜினிக்கு சில உண்மைகளைச் சொல்ல ஆசைப்படுறேன்.

ரஜினி, தனக்கு வாழ்வளித்த தமிழகத்தை ஏனோ தானோனு பாராமுகமாக இருப்பது, தமிழ் ரசிகப் பெருமக்களின் சந்திப்பைத் தவிர்ப்பது, ஏற்றி விட்டவர்களை ஏறிட்டுப் பார்க்கவே கூசுவது... இப்படிப்பட்ட குணம் கூடவே கூடாது என்பதே என் கவலை. ரஜினி ரசிகர் மன்றத்தினரின் வீட்டு கல்யாணம், காது குத்து, சடங்கு, கிரஹப்பிரவேசம்... இப்படி பல நிகழ்ச்சிகளுக்கு, பல ஊர்களுக்கு ரஜினி ரசிகர்கள் என்னை சிறப்பு விருந்தினராக அழைத்துச் சென்றுள்ளனர். ரஜினியை முதலில்

ஹீரோவாக்கிய என்மீதே அவர்களுக்கு இவ்வளவு மரியாதை என்றால்... ரஜினி மீது எவ்வளவு மரியாதை வைத்திருப்பார்கள்.

'கல்யாணம் உள்ளிட்ட விசேஷங்களுக்கு பத்திரிகை அனுப்பி வைத்தால் பிரிண்ட் செய்யப்பட்ட ரெடிமேட் கார்டில் தலைவர் கையெழுத்துப் போட்டு அனுப்பினாலும் போதும். ஆனால் அதைக்கூட செய்வதில்லை' என என்னிடம் வருந்தியிருக்கிறார்கள்.

இது ஒருபக்கம் இருக்கட்டும்...

என்னுடைய இருபது வயதில் எனக்கொரு திருமணம் நடந்தது. கர்ப்பமான நிலையில் என் மனைவி இறந்துவிட்டார். கர்ப்பத்திலேயே சிசுவும் செத்துவிட்டது. அந்தக் குழந்தை ஒரு வேளை சாகாமல் இருந்திருந்தால்... இன்று அந்தப் பிள்ளைக்கு ரஜினி வயதிருக்கும். இப்போது எனக்கு 85 வயது நிறைவுறுகிறது. இதன்படி பார்த்தால் ரஜினி என் மகன் மாதிரிதானே. அவர் நன்றாக இருந்தால் போதும்.

நடிகர்களில் எம்.ஜி.ஆருக்கும், மற்றவர்களுக்கும் பெரிய வித்தியாசம் இருக்கிறது. எம்.ஜி.ஆரைப் பார்க்க அவரின் ரசிகர்கள் ஒரேநாளில் ஆயிரம் பேர்கள் வந்தாலும், உடனே அவர்களுக்கு உணவு ஏற்பாடு செய்யும்படி ஆர்.எம்.வீரப்பனிடமும், பத்மநாபனிடமும் சொல்லிவிடுவார் எம்.ஜி.ஆர்.

ரசிகர்கள் சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போது... கைகூப்பி வணங்கியவாறு அந்த இடத்துக்கு வரும் எம்.ஜி.ஆர்., 'என்னை வாழவைக்கும் தெய்வங்களே... வயிறார உணவு உண்ணுங்கள்' என்பார்.

ரசிகர்கள் அன்பு மிகுதியால் உண்ணும் குரலோடு 'எம்.ஜி.ஆர். வாழ்க' என உரக்க வாழ்த்து வார்கள். இருபுறமும் ரசிகர்கள் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருக்க... நடுவில் நடந்துவரும் எம்.ஜி.ஆர்., யாரோ ஒரு ரசிகரின் இலையில் இருந்து சிறிது உணவை எடுத்துச் சாப்பிட்டு, ரசிகர்களுக்கு பெரும் மகிழ்ச்சியை சேர்ப்பார்.

தமிழ்நாட்டில் இயற்கை கொடுமையால் மக்கள் பாதிக்கப் படும்போது உதவும் முதல் கரம் எம்.ஜி.ஆருடைய தாகத்தான் இருக்கும்.

அவரைப்போலவே என்னுடைய சூப்பர்ஸ்டாரும் வாழவேண்டும் என்பது என் ஆசை. அதிலே உள்ள மன அமைதியும், வாழ்வின் சுகமும் வேறு எதிலும் கிடைக்கவே கிடைக்காது.

ரஜினியின் குணம்... கணப்பித்தம், கணச்சித்தம். 'என் வழி தனி வழி' என ரஜினி டயலாக் உண்டே. அதுபோல... 'சித்தன் போக்கு... சிவன் போக்கு...' என்பது மாதிரி ரஜினியின் போக்கே ஒரு தனி போக்குதான். இவரை அனுசரித்து குடும்பம் நடத்திவரும் திருமதி லதா ரஜினியின் தியாக உள்ளத்தை என் வாழ்நாள் முழுமையும் வாழ்த்திக்கொண்டே இருப்பேன்.

நான் ரஜினியைப் பார்ப்பதற்காக அவரின் வீட்டுக்குச் செல்லும்போதெல்லாம் சொல்லி வைத்தாற்போல வெள்ளி டம்ளரில் காபி கொண்டுவந்து கொடுத்து, மகிழ்ச்சியை தவறாமல் தெரிவிப்பார் லதா.

சிவாஜிராவிற்கு 'ரஜினிகாந்த்' என்ற பெயரை பாலசந்தர் சூட்டிய மார்ச் 11-ஆம் தேதியை ஆண்டுதோறும் கொண்டாடி வருவது லதாரஜினியின் வழக்கம். அப்படி அந்த விழா நாளில் தயாரிப் பாளர்களையும், இயக்குநர்களையும் அழைத்து வீட்டில் விருந்து கொடுத்தபோது... என்னையும் போன் செய்து அழைத்திருந்தார். நான் போனபோது என் கைகளைப் பிடித்து வீட்டிற்குள் அழைத்துச் சென்றபோது, என் மகள் என்னை அழைத்துச் செல்லும் மகிழ்ச்சிப் பெருக்கு எனக்கு ஏற்பட்டது. அதேபோல ரஜினி வீட்டில் விசேஷங்கள் நடக்கும் போதெல்லாம் என்னை தவறாமல் அழைத்து கௌரவிப்பார்கள். சௌந்தர்யா ரஜினியின் திருமணத்தின்போது.. அத்தனைக் கூட்டத்திலும் 'சௌந்தர்யா... இவர்தான் உன் அப்பாவை ஹீரோவாக அறிமுகம் செய்தவர்' என்று சொல்லி, அகம் மகிழ்ந்த அன்புமகள் லதாவை எப்போதும் வாழ்த்திக் கொண்டேயிருக்கும் என் உள்ளம்.

ரஜினி போன்செய்து "நீங்க 'ராணா' பட பூஜைக்கு அவசியம் வரணும்" என அழைத்ததால். சென்றேன். மேக்-அப் அறையில் இருந்த ரஜினிக்கு மலர்க் கிரீடம் சூட்டி, மாலை அணிவித்து மகிழ்ந்தேன். அன்றுதான் பூஜை முடிந்ததும், நேராக ஆஸ்பத்திரிக்குச் சென்றார் ரஜினி. அதன்பின் சிகிச்சைக்காக சிங்கப்பூர் சென்றார். ரஜினி குணமடைய ரசிகர்கள் நடைபயணம் சென்று பிரார்த்தனை செய்தார்கள், தீ மிதித்தார்கள், அவர் நலமுடன் திரும்பி படங்களில் நடிக்க வேண்டும்' என கோயில்களில் வேண்டுதலை காணிக்கையாக்கினார்கள் என்பது அறிந்ததே. என்னுடைய குடும்பத்தினர் திருப்பதி சென்று, ரஜினி நலம்பெற வேண்டிக்கொண்டு, லட்டு பிரசாதம் வாங்கி வந்து, ரஜினியின் வீட்டுக்கு அனுப்பி வைத்தார்கள்.

இப்போதெல்லாம் ரஜினி அப்படியும், இப்படியுமாக இருக்கிறார். நானோ... எப்படியும் ஒரு படம் எடுக்க முடியும் என்று இருக்கிறேன். எத்தனையோ புதுமுகங்களை அறிமுகப்படுத்திய நான் எடுக்கப்போகிற படத்திலும் புதுமுகத்தைப் போடப்போகிறேன்.

எங்கேயோ பாட்டுக் கேட்கிறது.

'நினைத்ததை நடத்தியே முடிப்பவன் நான்... நான்... நான்...'

எம்.ஜி.ஆர். பாட்டு... அட நல்ல சகுனம்தான்.

# கதவு ஓட்டையில் கதை!

தமிழ், இந்தி, தெலுங்கு, கன்னடம் ஆகிய நான்கு மொழி சினிமாவிலும், மிகப்பெரிய வெற்றிப் படங்களை கொடுத்துக்கொண்டிருக்கும் டைரக்டர் பி.வாசுவுக்கு இதுவரை சுமார் 20 படங்களில் ஒத்துழைப்பு தந்திருக்கிறேன். வாசுவால் நல்ல பயனும் பெற்றிருக்கிறேன். இவருடன் பணிபுரிந்ததில் சில முக்கியமானதை குறிப்பிடுகிறேன்.

'வால்டர் வெற்றிவேல்' படத்திற்கான கதை விவாதம் நடந்துகொண்டிருந்தபோது... நான் அவரிடம் எனது பத்து வயதில் பார்த்த 'அசோக்குமார்' படத்தின் கதையைச் சொன்னேன்.

இளவரசன் தியாகராஜ பாகவதர், தன் மனைவி மற்றும் கைக்குழந்தையுடன் நல்லதொரு வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருப்பார். அரசரின் இரண்டாவது மனைவிக்கு... அதாவது சித்திக்கு, பாகவதரின் அழகின்மேல் ஆசை வந்து, கையைப் பிடித்து இழுக்க... அரசர் பார்த்துவிட... 'இவன்தான் என் கையைப் பிடித்து இழுத்தான்' என பழியை பாகவதர் மேல் போட்டுவிடுவாள்.

'இளவரசனின் காமக்கண்களை குருடாக்கி, நாட்டைவிட்டே துரத்திவிடுங்கள்' என தளபதியிடம், அரசர் கட்டளையிடுவார். தளபதியான எம்.ஜி.ஆர்., கண்களைக் குருடாக்கும் செயலைச் செய்ய தயங்குவார். பாகவதர் தானே சூட்டுக்கோலால் தன் கண்களைக் குருடாக்கிக் கொள்வார்.

மனைவி, குழந்தையுடன் நாட்டைவிட்டு வெளியேறும் பாகவதர்... ஊர் ஊராகச் சென்று பிச்சை எடுத்து பிழைப்பு நடத்துவார். ஒருநாள்... மூவருமே பட்டினி. கைக்குழந்தை பசி பொறுக்காமல் கதறி அழும். ஒரு மரக்கிளையில் தொட்டில் கட்டி குழந்தையை அதில் போட்ட மனைவி 'நீங்கள் தாலாட்டுப் பாடி குழந்தையை சமாதானப்படுத்திக் கொண்டிருங்கள். நான் எங்கேயாவது சென்று பிச்சை வாங்கி வருகிறேன்'

எனச் சொல்லிவிட்டுப் போக, பாகவதரும் தொட்டிலை ஆட்டியபடி பாடுவார். ரொம்ப நேரம் வீறிட்டு அழுத குழந்தையின் அழுகுரல் நின்றுவிடும். குழந்தை தூங்குவதாக நினைத்து 'தங்கமே... வைரமே...' என வர்ணித்துப் பாடிக் கொண்டிருப்பார்.

மனைவி திரும்பி வந்து குழந்தையைப் பார்த்தாள். குழந்தை வாயில் நுரை தள்ளி இறந்து கிடக்கிறது. குழந்தை இறந்தது தெரியாமல் கண் தெரியாத கணவர் வர்ணித்துப் பாடுவதை அறிந்து, அலறித் துடிக்க... இதையறிந்த பாகவதரும் கதறி அழுவார்.

கொட்டகையில் இந்தப் படக் காட்சியைப் பார்த்த மக்கள் கதறி அழுதார்கள். பத்து வயது சிறுவனான நானும் துயரம் தாங்காமல் அழுதேன்.

இதை நான் பி.வாசுவிடம் சொன்னபோது மௌனமாகக் கேட்டுக்கொண்ட அவர், மதிய சாப்பாட்டிற்காக வீட்டுக்குச் சென்றார்.

மாலை ஐந்து மணிக்கு மீண்டும், கதை விவாதத்திற்கு வந்த பி.வாசு, நான் சொன்ன படக் காட்சியை உந்துதலாக வைத்துக்கொண்டு, அவர் பாணியில் ஒரு காட்சியைச் சொன்னார் பாருங்கள்... அடேயப்பா... எங்கள் கண்களை குளமாக்கிவிட்டார்.

சத்யராஜ் நேர்மையான போலீஸ் ஆபீஸர். அவர் வீட்டில் இல்லாத நேரத்தில்... அவரின் மனைவி சுகன்யா குடிக்கவிருக்கும் பாலில் விஷம் கலக்க எதிரிகள் ஏற்பாடு செய்வார்கள். பணத்திற்கு ஆசைப்பட்டு, சத்யராஜின் தம்பியே பாலில் விஷத்தை கலந்துவிடுவான். சுகன்யா பாலைக் குடிக்க தயாராகும்போது... தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்த குழந்தை அழும். உடனே குழந்தையைத் தூக்கி மடியில் வைத்து ‘மன்னவா... மன்னவா.. மன்னாதி மன்னனல்லவா' என பாடியபடியே பாலைப் புகட்டுவார் சுகன்யா.

எதிரிகளின் சூழ்ச்சியறிந்த சத்யராஜ் அதைத் தடுக்க... வீட்டிற்கு விரைந்து வருவார்.

குழந்தை தன் மடியில் நுரைதள்ளி இறந்து கிடப்பது தெரியாமல் பார்வையற்ற சுகன்யா பாட்டுப் பாடிக் கொண்டிருப்பதைப் பார்த்து சத்யராஜின் இதயமே வெடித்து விடும். போலீஸ் அதிகாரி என்பதால் வாய்விட்டு கதறி அழாமலும், அதேநேரம் அடக்க முடியாத வேதனையும் படுவார்.

இந்தக் காட்சியில் நடிப்பின் உச்சத்திற்கே சென்று விட்டார் சத்யராஜ். அப்படி ஒரு நடிப்பு. சத்யராஜின் திறமைக்கு கிடைத்த படம் 'வால்டர் வெற்றிவேல்.' 200 நாட்கள் ஓடி விழா கொண்டாடியபோது... எனக்கு ஷீல்டு கொடுத்து, பொன்னாடை போர்த்தி, பொற்கிழியும் தந்து பாராட்டினார் தம்பி பி.வாசு. இந்தப் பெருந்தன்மையான உள்ளத்தை நான் என் வாழ்நாளில் மறக்கவேமாட்டேன்.

இதுவரை நான் பார்த்த சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட படங்களில் இடம்பெற்ற உயிரோட்டமான காட்சிகள் என் நினைவில் அப்படியே நின்றுவிடும்.

கதை விவாதங்களுக்குச் செல்லும்போது, எந்த டைரக்ட ரின் கதைக்கு எந்த ஸீன் பொருந்தும் என்பதை அறிந்து, இன்ஸ்பிரேஷனாக எடுத்துக்கொள்ளும்படி அந்தக் காட்சிகளைச் சொல்லுவேன். அதைப் பயன்படுத்தி மிகப்பெரிய பலன் அடைந்தவர்கள் உண்டு. அப்படி பயன்படுத்தி வெற்றி பெற்றவர்களில் ஒருவர்... மகாபுத்திசாலி... தம்பி பி.வாசு.

1967-ல் 'காதல் படுத்தும் பாடு', 1971-ல் 'வெகுளிப்பெண்', 1972-ல் 'குறத்திமகன்''என நான் கதை எழுதிய படங்கள் வெளிவந்ததால் என் பெயர் பிரபலமடைந்திருந்த நேரமது. எம்.ஜி.ஆரின் மேக்-அப்மேன் அண்ணன் பீதாம்பரம் (பி.வாசு வின் தந்தை) என்னைப்பற்றி கேள்விப்பட்டு, 'எம்.ஜி.ஆருக்காக ஒரு கதை வேண்டும்' என்று எனக்கு அழைப்புவிடுத்தார். கதை சொல்ல, அவரின் வீட்டுக்குச் சென்றேன். அங்கே நான்கு சிறுவர்கள் விளையாடிக்கொண்டிருந்தார்கள்.

என்னைப் பார்த்த பீதாம்பரம் ''டேய் பசங்களா... பெரிய கதாசிரியர் கதை சொல்ல வந்திருக்காரு. நீங்கள்லாம் உள்ள போயி விளையாடுங்க'' எனச் சொல்லி, சிறுவர்களை வீட்டின் உள் அறைக்குள் அனுப்பிவிட்டு, கதவைச் சாத்திக்கொண்டார்.

அண்ணன் பீதாம்பரத்திடம் ஒரு முழுக்கதையைச் சொன்னேன்.

''கொஞ்சநாள் கழித்து இன்னொரு கதையுடன் வாருங்கள்'' என அனுப்பிவைத்தார்.

1989-ல்... ''

'இது நம்ம ஆளு' படத்திற்குப் பிறகு... 'பவுனு பவுனுதான்' படப்பிடிப்பை மேட்டூரில் நடத்திக்கொண்டிருந்தார் தம்பி பாக்யராஜ்.

நானும் அந்தப் படக்கதையில் பங்களிப்பு செய்துவந்ததால் அங்கு இருந்தேன்.



'கதை, வசனம், நடிப்பு, டைரக்ஸன்... என தன் கணவர் கஷ்டப்படுவதைப் பார்த்து கவலையடைந்த பூர்ணிமா, "நான் ஒண்ணு சொல்றேன்... கேட்பீங்களா?" என்றார்.

"சொல்லும்மா" என்றார் பாக்யராஜ்.

"நீங்க எல்லாப் பொறுப்பையும் உங்க தலைமேல போட்டுக்காதீங்க. பி.வாசுவோட படங்களைப் பார்த்தேன். உங்களை மாதிரியே ரொம்ப நல்லா எடுக்கிறார். பொறுப்பை அவர்கிட்ட ஒப்படைச்சிட்டு, நீங்க ஹீரோவா மட்டும் நடிங்க" என்றார்.

பாக்யராஜ் என்னைப் பார்த்து "என்னண்ணே?" என்றார்.

"தங்கச்சி சொல்றது சரிதான்" என்றேன்.

"அப்படின்னா.. நீங்க பி.வாசுவைப் பார்த்து பேசிட்டு வாங்க" என்றார்.

படப்பிடிப்பு நடந்துகொண்டிருந்த இடத்திலிருந்து பத்து கி.மீ. தூரத்தில், டேம் மேலே உள்ள ஒரு கட்டிடத்தில் 'சின்னத்தம்பி' படப்பிடிப்பை நடத்திக்கொண்டிருந்தார் வாசு.

நான் போனபோது... பிரபு, குஷ்பு, ராதாரவி, வாசு ஆகியோர் மதிய உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். இந்தச் சமயம் நான் பிரபலமான தயாரிப்பாளராகவும் இருந்ததால்... என்னைப் பார்த்ததும் அனைவரும் சாப்பிடுவதை நிறுத்திவிட்டு எழுந்துநின்று வரவேற்றனர்.

''எல்லாரும் சாப்பிடுங்க. நான் தம்பி வாசுவைப் பார்க்க வந்தேன்'' என்றதும் ''என்ன சார்?'' என வாசு கேட்க.. ''சாப்பிட்டு வாங்க பேசிக்கலாம்'' என்றேன்.

சாப்பிட்டுவிட்டு வந்தார் வாசு.

''பாக்யராஜுக்கு ஒரு படம் பண்ணணும்'' என்றேன்.

''அவர்கூட ஒர்க் பண்ணணும்கிறது என்னோட பல வருஷ கனவு. அவருக்குப் பொருத்தமான கதையும் இருக்கு சார்''

''எப்போ கதை சொல்றீங்க? ஷூட்டிங்கை எப்போ ஆரம்பிக்கலாம்?''

''அடுத்த வாரம் நான் சென்னை வந்ததும் கதை சொல்றேன்'' என்றார்.

சொன்னதுபோல் ஒருவாரம் கழிந்ததும்... 'அம்மா வந்தாச்சு' கதையை பாக்யராஜிடம் சொல்லி ஓ.கே. வாங்கினார். ஷூட்டிங்கை உடனே ஆரம்பிக்கவும் தேதி கொடுத்தார்.

இந்தப் படத்தில் என்னையும் ஒரு பார்ட்னராக்கியிருந்தார் தம்பி பாக்யராஜ். அதனால் சம்பளம் பற்றிக் கேட்டதும், 'பாக்யராஜ் சார் என்ன கொடுத்தாலும் வாங்கிக்குவேன்' என்றார்.

ஒரு நல்ல தொகையை வாசுவிடம் அட்வான்ஸாக கொடுத்தேன்.

முதல்கட்ட படப்பிடிப்பு பாம்பேயில் தொடங்கியது. ஹோட்டல் ஹாலிடே-இன்-ல் தங்கியிருந்தோம். முதல்நாள் பாக்யராஜ்-குஷ்பு சம்பந்தப்பட்ட காட்சிகள் எடுக்கப்பட்டன.

அறைக்குத் திரும்பியதும் ''நான் ஒரு கதை சொல்லணும்'' என்றேன் வாசுவிடம்.

அப்போது வாசு... ''நான் என் வாழ்க்கையில் முதன்முதலாக ஒரு சினிமா கதாசிரியர் கதை சொல்வதைக் கேட்டேன். அந்த கதாசிரியர் நீங்கதான். அப்போ எனக்கு பத்து வயசு இருக்கும். என் அப்பாவிடம் நீங்க கதை சொல்வதை, கதவு ஓட்டை வழியாக பார்த்தபடியே சுமார் இரண்டு மணிநேரம் உங்க கதையைக் கேட்டேன்'' என்று அந்தப் பழைய சம்பவத்தை நினைவுபடுத்திவிட்டு 'கதையைச் சொல்லுங்க சார்' என்றார்.

முத்துராமன், ஜெயலலிதா நடித்து, நான் கதை எழுதிய ‘கணவன் மனைவி' படக்கதையைச் சொன்னேன்.

''சார்... இது 'மன்னன்' படக் கதையாச்சே''

''தெரியும். அதனால்தான் சொன்னேன்''

''இது ஒரு கன்னடப் படக்கதை. ரஜினி சார்தான் ‘நல்லாயிருக்கு கதை'ன்னு’ சொன்னார். அதனால் பணம் கொடுத்து ரைட்ஸ் வாங்கினோம். ‘கணவன் மனைவி' கதையே நல்லா இருக்கே. முதலிலேயே தெரிஞ்சிருந்தா 'கணவன் மனைவி' கதையை ரீ-மேக் செய்திருக்கலாமே'' என்றார் வாசு.

(சிலர் செய்த தவறால் எனக்கும், வாசுவுக்குமான நட்பில் களங்கம் வரக்கூடாது என்பதால் சில விஷயங்களை என்னுள்ளேயே அடக்கிக்கொண்டிருக்கிறேன்...)

'அம்மா வந்தாச்சு' கதை ரொம்ப சோகமயமாக இருந்ததால் நாங்கள் எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை.

என் கதை -பி.வாசு இயக்கம். அதிருப்தி தெரிவித்த இளையராஜா.

# காக்கைச் சிறகினிலே!

ஒரு சிறு கிராமம். அங்கே ஒத்தை வீட்டு அய்யர், தன் மனவியுடன் வசிக்கிறார். மகள் சென்னையில் கல்லூரியில் படித்துவருகிறாள். ஒரு ஓட்டு வீடு, ஒரு ஏக்கர் நிலம்தான் இவர்களின் சொத்து. காய்கறி விவசாயம் மூலம் கிடைக்கும் பணமே அய்யர் குடும்ப வருமானம். நிலத்தை பாதுகாப்பவன் யாருமற்ற ஒரு தலித் இளைஞனான மூக்கையன். அவனுக்கு அய்யரின் வீடுதான் ஆலயம். அய்யர் குடும்பத்தினர்தான் அவனுக்கு தெய்வம். சிறுவயதிலிருந்தே மூக்கையனை எந்த சாதிய பாகுபாடுமின்றி வளார்த்து வருகிறார் அய்யர். அதனால் அய்யர் குடும்பத்தை யாரும் கை நீட்டி பேசிவிடாதபடி கண்ணும் கருத்துமாக பாதுகாத்து வந்தான். கை நீட்டினால் உதைத்துவிடுவான்.
மூக்கையன் ஒருநாள்... தாகத்திற்கு தண்ணீர் குடிக்க அடுப்பங்கரை சென்றதை அய்யரின் மனைவி பார்த்து விட்டாள். "அடுப்பங்கரை வரை மூக்கையன் போறான். அதெல்லாம் கூடாதுனு லேசுபாசா அவனிடம் சொல்லி வையுங்க'' என அய்யரிடம் முறையிட...

"நீ ஒரு முட்டாள். இதோ பாரு... அறுபத்திமூன்று நாயன்மார்களில் ஒருவரான நந்தனார் ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்தவர். அவரை தில்லைவாழ் அந்தணர்களும், ஆன்மிகச் சான்றோர்களும் வணங்கி வழிபட்டு வர்றது உனக்குத் தெரியாதோ? பன்னிரு ஆழ்வார்களில் ஒருவர்... தலித் இனத்தில் பிறந்த திருப்பாணாழ்வார். அவரை திருவரங்கம்வாழ் அந்தணர்களும், ஆன்மிகச் சான்றோர்களும் வணங்கி வழிபட்டு வர்றதும் நோக்குத் தெரியாதோ? அதே இனத்தில் பிறந்த மூக்கையனை மட்டும் நீ ஏன் வித்தியாசமா நினைக்கிறே?

நம்ம வீட்டுக்கு அவன்தான் காவல் தெய்வம்கிறதை மறந்துராத. அதுமட்டுமில்ல... நம்ம கிராமத்துக்காரங்க என்கிட்ட பஞ்சாயத்து கொண்டுவந்து நியாயம் கேட்கிறாங்க. ‘என்ன சொல்றது?'னு நான் தெரியாம திண்டாடும்போது, 'அதை அப்படிச் சொல்லுங்க... இல்ல இப்படிச் சொல்லுங்க'னு சொல்லிட்டுப் போயிட்டே இருக்கான் மூகையன்.

அது நூத்துக்கு நூறு சரியாவே இருக்கு, பகவான் அவனுக்கு நன்றி விசுவாசத்தை மட்டும் கொடுக்கல. சிறந்த அறிவையும் கொடுத் திருக்கார். மூக்கையன் அடுப்பங்கரைக்குள் வர்றானேனு நீ கவலைப்படுற. ஆனா நான் அவனை என் இதயத்துக்குள்ள வச்சிருக்கேன். இது நோக்குத் தெரியாதோ?' என அய்யர் கேட்க...

'நேக்கும் தெரியும்' என அய்யர் மனைவி புன்னகைத்தாள்.

'டேய் மூக்கையா... பாப்பா நாளைக்கி சென்னையில இருந்து வர்றா. நீ ரெயில்வே ஸ்டேஷனுக்குப் போய் அழைச்சிண்டு வா' என்றார் அய்யர்.

மூக்கையனும் சென்று வரவேற்று, அவளின் பெட்டியை தலையில் தூக்கிக் கொள்ள... இருவரும் ஒத்தையடிப்பாதை வழியாக நடந்து வர... அவளுக்கு பழைய நினைவுகள் சிறகடித்தன. 'மூக்கையா... நாம சிறுவயதா இருந்தப்போ இந்த மரத்துல இருந்த பூவைப் பறித்துக் கொடுக்கச் சொன்னேன். நீ சரசரனு ஏறி, கால் சறுக்கி கீழ விழுந்த. நான் உன்னை தூக்கிவிட ஓடியாந்து உன் மேல விழுந்தேன். ரெண்டுபேரும் எழுந்திருக்க முடியாம, ஒருத்தர் கையை, ஒருத்தர் பிடிச்சு எழும்போது, ஏழுதடவை விழுந்துவிழுந்து எழுந்தோம்' எனச் சொல்லி வாய்விட்டு சிரித்தாள்.

"ஆமா... நீ அப்போதெல்லாம் கிச்சுகிச்சு மூட்டினா, சிரிப்பு தாங்கமுடியாம தரையில் விழுந்து உருண்டுக்கிட்டே ஆகாசம்முட்ட சிரிப்பியே. இப்பவும் அப்படித்தானா?' என கேட்டாள். இப்பவெல்லாம் கிச்சுகிச்சு மூட்டுறவங்களை கட்டிப் பிடிச்சுக்கிட்டு உருளுவேன்''என மூக்கையன் சொல்ல... இருவரும் சிரித்து மகிழ்ந்தனர்.

வீட்டுக்கு வந்தனர். மகளுக்கு ஹல்வா செய்து கொடுத் தாள் அம்மா. அந்த ஹல்வாவை இரவு நேரத்தில் யாருக்கும் தெரியாமல் மூக்கையனிடம் கொடுத்த அவள் 'மூக்கையா... இது நெய்யில செய்தது. உடம்புக்கு நல்லது... சாப்பிடு' என்று கொடுத்தாள். அவனும் ருசித்து சாப்பிட்டபோது... 'மூக்கையா உன்கிட்ட மட்டும் ஒரு விஷயம் சொல்லணும். நாளைக்கி காலைல தோட்டத்துக்கு போலாமா?' என அவள் கேட்க... அவனும் தலையாட்டினான்.

தோட்டத்திற்கு வந்த அவள் ஒரு இளநியை மூக்கையனிடம் கொடுத்து, 'இளநிக்குள் இருக்கும் சுவையான நீர் போல, என் மனதுக்குள் இருக்கும் சுகச் செய்தியை சொல்றேன். நீ முதலில் இளநியை ஓபன் பண்ணு. அதன்பிறகு என் மனதில் இருப்பதை நான் ஓபன் பண்றேன்' என்றாள்.

இளநியை சீவிக் கொடுத்தான். அவள் குடித்துக் கொண்டிருந்தாள்.

'பாப்பா... நீ சொல்லறதை சீக்கிரமா சொல்லு. எனக்கு ஏதோ... என்னமோனு இருக்கு'

''நான் சொல்லப்போறதை உன் மனசோட வச்சுக்க. விஷ யத்தை சொன்னபிறகு 'இது நடக்குமா? நடக்காதா?' என்பதைச் சொல்லு' என தயங்கித் தயங்கி விஷயத்தைச் சொன்னாள்.

''என்னை ரொம்ப கஷ்டப்பட்டு அப்பா படிக்க வைக்கிறார். அப்படிப்பட்ட நேரத்துல... நான் என் கூடப் படிக்கிற அய்யர் வீட்டுப் பையனை லவ் பண்ணீட்டேன்''

''இதுக்கு ஏன் இப்படி பயப்படுற? நல்ல செய்திதானே?''

''அந்தப் பையனோட அப்பா கோவில் அர்ச்சகர். பக்தர்கள் தட்டில் போடும் காசை வைத்துத்தான் குடும்பம் நடத்துறார். அந்த மாதிரி பிழைக்கிறவாளை அப்பாவுக்கு அறவே பிடிக்காது.'அது ஒரு சோம்பேறி வாழ்க்கை. நல்லா உழைச்சு சாப்பிடணும்' என்ற கொள்கை உடையவர். அதனால்தான் பட்டப்படிப்பு படிச்சிட்டு, கிராமத்துல விவசாயம் பண்றாரு''

'பாப்பா... இது அய்யாவோட கொள்கையா இருக்கலாம். அவரை சம்மதிக்க வைக்கிறது என்னோட பொறுப்பு' என்றான் மூக்கையன்.

மூக்கையன் பேச்சை மறுக்காத அய்யர், மகளின் காதலை ஏற்றுக்கொண்டார். நிச்சயதார்த்தம் நடந்தது. திருமண தேதியும் முடிவானது. வரதட்சணையாக தன்னிடமுள்ள ஓட்டு வீட்டையும், ஒரு ஏக்கர் நிலத்தையும் தர ஒப்புக்கொண்டார் அய்யர். சில நாட்கள் கடந்த நிலையில்... குடும்பச் செலவுக்காக வாங்கிய கடன் வட்டிக்கு மேல் வட்டி சேர்ந்து... வீடும், நிலமும் ஜப்தி ஆனது. இந்த அதிர்ச்சியில் அய்யர் மனைவி இறந்துபோக... அந்த சோகத்திலேயே மறுவாரமே அய்யரும் இறந்துபோனார்.

அய்யர் மகளுக்கு ஒரே ஆறுதலாக மூக்கையன் இருந்தான். புறம்போக்கு நிலத்தில் ஒரு ஓலைவீடு அமைத்து, அதில் அவளை தங்க வைத்தான்.

மாப்பிள்ளை வீட்டார் சார்பில் ஒருவர் அங்கு வந்தார். 'வீடும் நிலமும் இருந்ததால்தான் பொண்ணெடுக்க சம்மதிச் சாங்களாம். இப்போ... மாப்பிள்ளை வீட்டாருக்கு சம்மதம் இல்லை' என்றார்.

‘சாமீ… இந்த கிராமத்துல ஒரு ஓட்டு வீடும், ஒரு ஏக்கர் நிலமும் என்ன விலை போகும்' எனக் கேட்டான் மூக்கையன்.

'இந்த குக்கிராமத்துல விலை போறது ரொம்பவும் சிரமம். ஒரு தோராயமா சொல்லணும்னா… 25 ஆயிரம் போகலாம்'

'நான் எப்படியாவது சம்பாதிச்சு, அந்தத் தொகைக்கு பவுனா கொண்டு வந்து சத்தியமா தர்றேன். நீங்க கடவுள் மாதிரி. பெரிய மனசு பண்ணுங்க' என காலில் விழுந்து விம்மிய மூக்கையன் ‘பாப்பாவோட கல்யாணம் நடக்கலே… நான் செத்தே போயிடுவேன்'’என வாய்விட்டு கதற…

‘மூக்கையா… நீ மட்டும் சொன்னபடி ஏற்பாடு செய். அவாளை நான் பார்த்துக்கிறேன்' எனச் சொல்லிவிட்டுப் போனார்.

மூக்கையன் இரவெல்லாம் தூங்காமல் சிந்தித்தான். அவனின் தந்தை ஒரு காலத்தில் தப்பட்டை அடித்து, லாவணி பாடி மக்களிடையே புகழ்பெற்றவர். நல்ல வருமானம் வந்துகொண்டிருந்தபோது ஒரு விபத்தில் இறந்துவிட்டார். சின்ன வயதில் மூக்கையனும் அந்த வித்தையைக் கற்றிருந்தான் ஆனால் அய்யர் குடும்பத்தின் பாசத்தில் கட்டுப்பட்டு அதைச் செய்யவில்லை. இப்போது அந்த தொழிலைச் செய்து பாப்பாவின் கல்யாணத்தை நடத்த முடிவெடுத்து, தந்தை விட்டுச்சென்ற அந்த தப்பட்டையை எடுத்தான். ஓங்கி அடித்தான்.



அந்த இனிய ஓசை ஓயவே இல்லை...

ஊர் ஊராகச் சென்று எரிந்த கட்சி, எரியாத கட்சி போட்டியில் பாடி ஜெயித்தான். பணம் குவிந்தது. 30 பவுன் வாங்கி வந்து மாப்பிள்ளை வீட்டாரிடம் கொடுத்தான். அவர்களின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ஆனால் அங்கிருந்த ஒருவர் அரிஜனப் பையன் வரதட்சணை கொடுத்து அய்யர் பொண்ணுக்கு கல்யாணமா? பேஷ். இப்படி எங்கேயும் நடந்ததில்லை''என குதர்க்கமாக சிரிக்க...

'மூக்கையா அவர் சொல்றதுல என்ன அர்த்தம்னு நேக்கு புரியல. அது கிடக்கட்டும். நீ ஒரு உதவி செய்யணும். கல்யாணத்தில் நீ கலந்துக்கக் கூடாது' என்றார் மாப்பிள்ளையின் அப்பா.

மூக்கையன் சம்மதித்தான்.

திருமணம் நடைபெற்றது. திருப்பூட்டு முடிந்ததும், பெண்ணின் கண்கள் மூக்கையனின் முகம் தேடி நாலாபுறமும் அலைந்தது. ஒரு மூலையில்

ஆனந்தக்கண்ணீர் சிந்தியவாறு நின்றிருந்தான் மூக்கையன். ‘மூக்கையா' என பறந்துவந்து அவனின் கால்களைப் பற்றி அழுதாள்.’

இவ்வாறு கதையைச் சொன்ன நான் "இதற்கப்புறம் 'என்ன?’ என்பதை பிறகு முடிவு செய்யலாம்'' என்றேன் பி.வாசுவிடம்.

வாசுவுக்கு கதை பிடித்தது. தயாரிப்பாளரும் தயாராக இருந்தார். ஒத்தைவீட்டு அய்யர் தம்பதியாக டைரக்டர் 'சங்கராபரணம்' கே.விஸ்வநாத்தும், லட்சுமியும் நடித்தனர். அவர்களின் மகளாக பிரீத்தா விஜயகுமார், மூக்கையனாக பார்த்திபன் நடித்தனர். அதுதான் 'காக்கைச் சிறகினிலே' படம்.

படத்திற்கான பின்னணி இசை சேர்ப்பு நடந்து கொண்டிருந்தபோது, என்னை தனியாக அழைத்த இளைய ராஜா, 'என்னண்ணே... உங்க கதையை வாசு சொன்னபோது அற்புதமா இருந்தது. ஆனா படம் அப்படி இல்லையே?'' என்றார்..

# மீனா அம்மாவின் சிரிப்பு!
# ஸ்ரீதேவிஅம்மாவின் கோபம்!

எனது கதையில், பி.வாசுவின் இயக்கத்தில் உருவான ‘காக்கைச் சிறகினிலே’ படத்திற்கான பின்னணி இசைச் சேர்ப்பு நடந்துகொண்டிருந்தபோது, என்னை தனியாக அழைத்த இளையராஜா "என்னண்ணே... உங்க கதையை வாசு சொன்னபோது அற்புதமா இருந்தது. ஆனா படம் அப்படி இல்லையே?" என்றார்.

"தயாரிப்பாளருக்கு பணத் தட்டுப்பாடுனு கேள்விப்பட் டேன். அதனாலதான் சொன்ன மாதிரி எடுக்க முடியல போல. இது டைரக்டரோட தவறு இல்லை. இருந்தாலும் இந்தக் கதையில் ஜீவன் இருக்கில்ல?" எனக் கேட்டேன்.

"ஆமாம்' என்பதுபோல் தலையசைத்தார் ராஜா.

"ஒரு அஞ்சாறு வருஷம் கழிச்சு, மீண்டும் இதே கதையை எடுப்போம்" எனச் சொல்லிவிட்டு வந்துவிட்டேன்.

ஒரு சாதாரணக் கதை சில நேரங்களில் நன்றாக அமைந்து பெரிய வெற்றியைக் கொடுக்கும். ஒரு நல்ல கதை ஏதோ ஒரு காரணத்தால் சரியாக அமையாது. இது சகஜமான ஒன்றுதான். ஆனால் நல்ல கதைக்கு எப்போதும் மதிப்பு உண்டு. அதனால்தான் 2013-ல் 'காக்கைச் சிறகினிலே' கதையை கன்னடத்தில் எடுக்க ஜெயசங்கர் என்கிற தயாரிப்பாளர் 60ஆயிரம் ரூபாய் கொடுத்து ரைட்ஸ் வாங்கினார். திரைக்கதை அமைத்திருந்த வாசு, அதற்காக எதுவும் எடுத்துக் கொள்ளாமல், முழுப்பணத்தையும் என்னிடம் கொடுத்துவிட்டார். இது வாசுவின் பெருந்தன்மை.

தம்பி வாசுவுடனான எனது நட்பும், தொழில் உறவும் தொடர்ந்தபடியே இருக்கிறது. இப்போது கூட கன்னடத்தில் அவர் எடுக்கப்போகும் ஒரு பேய்க் கதைக்கு ஒத்துழைப்பு தந்துவருகிறேன்.



ஏவி.எம்.ஸ்டுடியோவில் ரஜினியின் 'வீரா' படத்தின் ஷூட்டிங்கின்போது செட்டுக்கு வெளியே ரஜினி, மீனா, மீனாவின் அம்மா அமர்ந்து பேசிக்கொண்டிருந்தனர். அங்கே சென்ற என்னை வரவேற்ற ரஜினி பக்கத்தில் இருந்த மீனாவிடம் 'கலைஞானம் சார்தான் என்னை முதலில் ஹீரோவாகப் போட்டு படம் எடுத்தவர்' என சொல்ல... மீனாவும், அவரின் அம்மாவும் ஒரு மௌனச் சிரிப்பை வெளிப்படுத்தினர். இந்தச் சிரிப்பிற்குப் பின்னால் இருந்த மீனா குறித்த ஒரு சுவாரஸ்யமான விஷயத்தை பிறகு சொல்கிறேன் எனச் சொல்லியிருந்தேனல்லவா?

மீனாவுக்கு எட்டு வயது இருக்கும். டைரக்டர் எம்.பாஸ்கர் ஆபீஸிற்கு மீனாவை அழைத்து வந்திருந்தார் அவரின் அம்மா.

மீனாவைப் பார்த்த நான் 'இந்தக் குழந்தை இவ்வளவு அழகாக, தெய்வீகமாக இருக்கிறாளே... சந்தர்ப்பம் அமையும்போது மீனாவை நமது படத்தில் நடிக்கவைக்க வேண்டும்' என்று ஆசைப்பட்டேன்.

அதன்பிறகு என் நண்பர் தூயவன் 'அன்புள்ள ரஜினிகாந்த்' படம் எடுத்தபோது 'மீனாவை நடிக்க வையுங்கள்' என வலியுறுத்தினேன். அதனை ஏற்றுக் கொண்டு நடிக்க வைத்தார்.

1990 வாக்கில்...

நான் ஒரு படம் எடுக்க முடிவு செய்தேன். அதாவது... விடலைப்பருவத்தில் உண்டாகும் இனம் புரியாத ஒருவித ஈர்ப்பு... காதல் என்று சொல்ல முடியாத ஒரு காதல் கதையை படமாக்க முடிவு செய்தேன். 17 வயது பையனாக இருந்த என் மகன் மணிகண்டன் என்கிற ஐயப்பனை ஹீரோவாகவும், 12 வயதான மீனாவை ஹீரோயினாகவும் நடிக்க வைக்க முடிவு செய்தேன்.

மீனாவை அழைத்து வர கார் அனுப்பினேன். மீனாவும், அவரின் அம்மாவும் வந்தார்கள்.

கதையைச் சொன்னேன்.

"டைரக்டர் யார்?" எனக் கேட்டார் மீனாவின் அம்மா.

"பாரதிராஜா" என்றேன்.

ஒப்புக்கொண்டார்கள்.

"மீனாவின் இந்த அழகான முழுநிலவு முகத்தின் அழகிற்கு இடைஞ்சலாக மீனாவின் முன் பற்கள் இரண்டும் ரொம்பப் பெரிதாக இருக்கு. திரையில் சிரிக்கும்போது இந்தப் பற்கள் ரொம்பவும் பெரிதாகத் தெரிந்து, மீனாவின் அழகை கெடுத்துவிடும். மைலாப்பூர் ராதாகிருஷ்ணன் சாலையில் நடிகை பத்மினி வீட்டுக்குப் பக்கத்தில் சிதம்பரம் என்கிற கைதேர்ந்த டாக்டர் இருக்கிறார். அவரிடம் போனால் பெரிய பற்களை அகற்றிவிட்டு, அழகான சிறிய பற்களை அமைத்து விடுவார். நான் சொல்வது உங்களுக்கு சரியாகப்பட்டால் அந்த டாக்டரைப் போய்ப் பாருங்கள்" என்றேன்.

மீனாவும், அவரின் அம்மாவும் கிளம்பினார்கள்.

நான் இந்த காதலல்லாத காதல் கதைக்கு 'கொஞ்சும் கிளிகள்' என டைட்டில் வைத்து அலுவலக பூஜையும் போட்டுவிட்டேன்.

மீனாவிடம் கால்ஷீட் பெறுவது சம்பந்தமாக பேசுவதற்கு ஆளனுப்பினேன்.

ஆனால்... மீனாவைக் கூட்டிக்கொண்டு அவரின் அம்மா ஆந்திரா போய்விட்டார் எனக் கேள்விப்பட்டேன்.

ஒருசில வருடங்களில்... மீனா கதாநாயகியாக நடித்த தெலுங்குப்படம் வெளியாகி அங்கே சூப்பர் ஹிட் ஆனது.

சில வருடங்களுக்குப் பின்... ராஜ்கிரணின் ‘என் ராசாவின் மனசிலே' படத்தைப் பார்த்து... மீனாவின் நடிப்பிலும், அழகிலும் அசந்துவிட்டேன். மீனாவின் முன்பற்கள் அரிசிப்பற்களாக மாறியிருந்தன. அவரின் சிரிப்பு மேலும் அழகாக இருந்தது.

ஆனால்... எனது ‘கொஞ்சும் கிளிகள்' படம்தான் பூஜையுடன்... பஞ்சாகப் பறந்துவிட்டது..

மீனாவின் கூடுதல் அழகிற்கான ஆலோசனையை நான் மீனாவின் அம்மாவிடம் சொன்னபோது... அதை ஏற்றுக் கொண்டனர். அந்த வகையில் எனக்கு ரொம்பவும் மகிழ்ச்சி தான். ஆனால்... ஸ்ரீதேவியின் கூடுதல் அழகிற்கான ஆலோசனையை நான் ஸ்ரீதேவியின் அம்மாவிடம் சொல்லி வாங்கிக் கட்டிக்கொண்டதுதான் மிச்சம்.

எப்படி?

பொதுவாக சினிமா படங்களில் வரும் கதாபாத்திரங்கள் வறுமைப்பட்டதாக இருந்தால், அதில் நடிக்கும் நட்சத்திரத்தின் முகம் ரொம்ப அழகாக இருக்குமானால், மேக்-அப்பில் அழகை குறைத்துவிடுவார்கள். அதேபோல் முகக் குறைபாடுகள் இருந்தால் அதையும் மேக்அப்பில் சரிசெய்வது காலங் காலமாக நடந்துவருகிறது. ஆக திரைக்கேற்ற முக லட்சணம் முக்கியம் என்பதால்தான் இப்படியான ஆலோசனைகளை நான் சொல்வது வழக்கம்.

நான் எனது முதல் தயாரிப்பாக 'பைரவி' படத்தை தொடங்க திட்டமிட்டு சின்னப்ப தேவரண்ணனிடம்தான் கதையைச் சொன்னேன்.

"அடே கலைஞானம்... கதை ரொம்ப நல்லா இருக்கு. ஹீரோவா ஜெய்சங்கரைப் போடு, தங்கச்சி கேரக்டர்ல ஸ்ரீதேவியைப் போடு. முதல்ல ஸ்ரீதேவியோட அம்மாகிட்ட இந்தக் கதையைச் சொல்லு. நான் சொல்லிவிட்டேன்னு சொல்லு" என்றார் தேவர்.

'சரிங்கண்ணே' எனச் சொல்லிவிட்டு வெளியில் வந்து யோசித்தேன்.

"ஸ்ரீதேவி நடிச்சு 'பதினாறு வயதினிலே' படம் வெளிவந்து சூப்பர் ஹிட்டா ஓடிக்கிட்டிருக்கே... இந்நேரம் தயாரிப்பாளர்கள் ஸ்ரீதேவி வீட்டைச் சுத்தி தவம் இருப்பாங்களே... நாம போனால் மதிப்பாங்களா?' என்ற குழப்பம் வந்துவிட்டது.

'சரி... தேவரண்ணனுக்கு இல்லாத மரியாதையா... அவர்தானே தன் பெயரைச் சொல்லிக்கச் சொன்னார். அப்படியே செய்வோம்' என

முடிவெடுத்தேன்.

ஸ்ரீதேவியின் தந்தையை எனக்கு முன்பே தெரியும். அத னால் அவரைச் சந்தித்து விஷயத்தைச் சொன்னேன். அவர் தன் மனைவியிடம் என்னை அறிமுகப்படுத்தி வைத்ததோடு, 'தேவரய்யா அனுப்பி வச்சிருக்கார்' எனச் சொல்லிவிட்டு, ஏதோ வேலையாக வெளியில் கிளம்பிச் சென்றார்.

ஸ்ரீதேவியின் அம்மா என்னை நல்ல முறையில் வரவேற்று, காபியும் கொண்டு வந்து கொடுத்தார்கள்.

காபி குடித்த ஜோரில் கதையைச் சொல்லி முடித்தேன். அவர்களுக்கு கதை பிடித்துவிட்டது. அவர்கள் கேட்ட சம்பளத்தைக் கொடுக்க நானும் ஒப்புக்கொண்டேன். எந்தெந்த தேதிகளில் ஸ்ரீதேவி நடிக்க வருவார் என்பதையும் என்னிடம் எழுதிக் கொடுத்தனர்.

அப்போது வீட்டின் உள்ளே இருந்த ஸ்ரீதேவியை அழைத்தார் அவரின் அம்மா. வந்ததும் விஷயத்தைச் சொன்னார். எனக்கு ஒரு வணக்கத்தைப் போட்டுவிட்டு கண்ணிமைக்கும் நேரத்தில் மீண்டும் உள்அறைக்குச் சென்றுவிட்டார் ஸ்ரீதேவி.

ஸ்ரீதேவியின் அழகைப் பார்த்ததும் எனக்கு தோன்றிய ஒரு ஆலோசனையை ஸ்ரீதேவியின் அம்மாவிடம் சொன்னேன்...

"ஸ்ரீதேவி போல ஒரு அழகி இப்போ யாரும் இல்லை. ஆனா... புரொபைலில் பார்க்கும்போது (ஒரு பக்கமாக முகம் திரும்பியிருக்கும்போது) மூக்கு கொஞ்சம் நீளமாக கிளி மூக்கு போல தெரிகிறது. இன்னைக்கி விஞ்ஞான ரீதியில் அதை குறைத்து அழகுபடுத்துற டாக்டர்கள் இருக்காங்க. அவங்க கிட்ட போய் பாருங்களேன்" என்றேன்.

அவ்வளவுதான்... ஸ்ரீதேவியின் அம்மாவுக்கு வந்ததே கோபம்... கண்கள் சிவந்து கோவைப்பழமாக ஆகிவிட்டது.

"நீங்க என் பொண்ணை நடிக்க வைக்கிறதுக்காக பார்க்க வந்தீங்களா? இல்ல... மூக்கு டாக்டரா வந்தீங்களா? இப்படித் தான் சிலபேர் வந்த வேலையை விட்டுட்டு, தன்னை பெரிய அறிவாளிமாதிரி நினைச்சு, வாய்க்கு வந்ததை உளறிக்கொட்டு வாங்க. முதல்ல இடத்தை காலிபண்ணுங்க. ரெண்டு வருஷத்துக்கு என் பொண்ணு பிஸி. உங்க படத்துக்கு கால்ஷீட் இல்லை. நானே தேவரய்யாகிட்ட பேசிக்கிறேன்"

எனச் சொல்லிவிட்டு, படக்கென எழுந்து படாரென கதவைச் சாத்தி உள்ளே சென்றுவிட்டார்.

நான் அதிர்ச்சியில் அப்படியே உறைந்து போய்விட்டேன்.

சில வருடங்களுக்குப் பிறகு...

# மாறியது ஸ்ரீதேவி மூக்கு!

எனது முதல் தயாரிப்பான 'பைரவி'யில் தங்கை கேரக்டரில் ஸ்ரீதேவியை நடிக்க வைப்பதற்காகப் போனபோது ''புரபைலில் பார்க்கும்போது ஸ்ரீதேவியின் மூக்கு பெரிதாக இருக்கு. அதனால் ஆபரேஷன் மூலம் சரி பண்ணிக்கொள்ளலாம்'' என நான் ஆலோசனை சொன்னதால் கோபமான ஸ்ரீதேவியின் அம்மா 'என் பொண்ணு ரொம்ப பிஸி. உங்க படத்தில் நடிக்க கால்ஷீட் இல்லை' என கடுமையாகப் பேசி, 'இடத்தைக் காலி பண்ணுங்க' எனச் சொல்லி, கதவை படாரென சாத்திவிட்டு வீட்டுக்குள் போய்விட்டார்.

வெந்நீரில் தூக்கிப் போட்டு எடுத்த கோழி மாதிரி வெளியேவந்தேன்நான். 'தவளை தன் வாயால் கெடும் என்பார்களே... அது நான்தான். பெரிய தப்புப் பண்ணீட்டமே... ஸ்ரீதேவி நடித்தால் நம்ம படத்துக்கு எவ்வளவு பெரிய அதிர்ஷ்டம். மோசம் போயிட்டியே கலைஞானம். புத்தி சொல்வதாக நினைத்து புழுதியை வாரி தலையில் போட்டுக்கிட்டாமே... முருகா! இனிமேலாவது யாருக்கும் புத்திசொல்லவே கூடாதுங்கிற புத்தியைக் கொடப்பா. என்கிட்டேயே ஆயிரம் குறைகள் இருக்கு. அடுத்தவங்க குறையைச் சொல்ல நான் யாரு?' என புலம்பித் தவித்தேன்.

அதற்கு அடுத்தநாள்தான் ரஜினியை ஹீரோவாக ஒப்பந் தம் செய்தேன். புதுமுகம் கீதாவை தங்கை கேரக்டரில் நடிக்க வைத்தேன். 'பைரவி' படத்திற்கு ஹீரோவாக ஜெய்சங்கரையும், தங்கையாக ஸ்ரீதேவியையும் போடச் சொல்லி தேவரண்ணன் சொன்னதை சில சூழ்நிலை காரணமாக செய்ய முடியவில்லை. (இது பற்றி நான் ஏற்கனவே விரிவாகச் சொல்லியிருக்கிறேன்)

சில ஆண்டுகள் உருண்டோடியது....

ஒரு இந்திப்படம் பார்த்தேன். அதில் ஸ்ரீதேவிதான் கதாநாயகி. ஓபனிங் ஸீனில் ஸ்ரீதேவியைப் பார்த்ததும் நான் என்னையே மறந்துவிட்டேன்.

வைத்த கண் வாங்காமல் ஸ்ரீதேவியை பார்த்துக் கொண்டிருந்தேன்.

'முன்பு நான் ஸ்ரீதேவியிடம் பார்த்த கிளி மூக்கைக் காணோமே? அப்படியே அச்சுருக்கி வார்த்த தங்கப் பழச்சுளை போல சும்மா ஜம்முனு ஜொலிக்குதே. அழகுக்கே அழகு சேர்க்குதே மூக்கழகு. இப்படி அழகு சேர்த்த டாக்டர் யாரோ... அவர் வாழ்க! வாழ்க!' என்று என் மனம் வாழ்த்தி மகிழ்ந்தது.

அன்றைக்கு நானும் இதையேதான்... 'ஸ்ரீதேவியின் மூக்கை மருத்துவர் மூலம் அழகுபடுத்துங்கள்' என்றுதான் சொன்னேன். ஸ்ரீதேவியின் அம்மா அதை ஏற்காமல், அனலாய் கொதித்து கோபப்பட்டாரே...''என எண்ணிய எனக்கு ஔவை சொன்னது நினைவுக்கு வந்தது.

கல்லானே யானாலுங் கைப்பொருள் ஒன்று உண்டாகின்

எல்லாருஞ் சென்று அங்கே எதிர்கொள்வர்

இல்லானை இல்லாளும் வேண்டாள் -மற்றும்

ஈன்றெடுத்த தாயும் வேண்டாள்

செல்லாது அவன் வாய்ச்சொல்

-என ஔவை சொன்னது போல ஏழையாய் இருந்ததால் என் வாய்ச்சொல் அன்று செல்லாமல் போய்விட்டது.

எது எப்படி இருந்தாலும் நான் அழகை ரசிக்கும் ஒரு கலைஞன் என்பதை நினைத்து பெருமைப்படுகிறேன்.

அழகான ஸ்ரீதேவி மேலும் அழகாகி, தேவலோக ரம்பை, ஊர்வசி என்பார்களே... அதுபோல பார்க்கவேண்டும் என ஆசைப்பட்டேன். இன்று அந்த ஆசை இந்தி சினிமா மூலம் நிறைவேறியது. மேலும்... மேலும் அழகு தேவதையாக வாழவேண்டும் என்று ஸ்ரீதேவியை, வாழ்க வாழ்கவென்று வாழ்த்துகிறேன்.

**1951-52க்கு இடைப்பட்ட காலத்தில்...**

தி.மு.க. தலைவர்களில் ஒருவரான ஏ.வி.பி.ஆசைத்தம்பி எழுதிய 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்கிற நாடகத்தை மதுரை மாவட்டத்தில் நடத்திவந்தேன்.

அப்போது... மலைகள் சூழ்ந்த ஒரு கிராமத்திலிருந்து எக்கச்சக்க நாய்க்கர் என்கிற ஒருவர் வந்து என்னைச் சந்தித்து, 'எங்க ஊர்ல நீங்க நாடகம்

நடத்தணும்' எனக் கேட்டு ஒப்பந்தம் செய்தார். அந்த ஊரில் நாடகம் நடத்தும் இட வசதி, நடிகர்கள் தங்கும் வசதியை முன்கூட்டியே அறிந்துவர விரும்பி, அந்த ஊருக்குச் சென்றேன். அந்த ஊருக்கு ஒரே பஸ்தான். அதில் சென்று இறங்கி ஊருக்குள் நடந்து சென்றபோது அதிர்ச்சி தரக்கூடிய சம்பவம் ஒன்றைப் பார்த்தேன்.

கிட்டத்தட்ட ஏழடி உயரம் கொண்ட ஒருவன், இடது தோளில் நாட்டுத் துப்பாக்கியை தொங்கவிட்டபடி, வலது கையில் நீளமான வீச்சரிவாள் பிடித்தபடி கடைவீதிக்குள் வந்தான். அவனுடன் நான்குபேர்களும் வந்தார்கள். ஒரு கடைமுன் நின்றான். அங்கிருந்தவர்கள் நடுநடுங்கியபடி எழுந்து நின்று கும்பிட்டார்கள். கடையில் இருந்த பொருட்களை நோக்கி கை நீட்டினான். அந்தப் பொருட்களையெல்லாம் எடுத்து ஒரு சாக்குப் பையில் போட்டு கட்டிக்கொடுத்தார்கள்.

பணம் கொடுக்கவில்லை அவன். இதேபோல அடுத்தடுத்த கடைகளிலும் தனக்கு தேவையான பொருட்களை வாங்கிக் கொண்டு சென்றான். அவன் வந்து செல்லும்வரை கடைவீதியே நிசப்தமாக இருந்தது.

பிரமித்துப் போன நான், எக்கச்சக்க நாய்க்கரிடம் "யார் இந்த ஆளு? ஏன் எல்லாரும் அந்த ஆளைப் பார்த்து இப்படி நடுநடுங்கிச் சாகுறாங்க?" எனக் கேட்டேன்.

"எல்லாம் விபரமாச் சொல்றேன். முதல்ல எங்க ஊரு அம்மன் கோவிலுக்குப் போய் ஒரு அர்ச்சனை பண்ணலாம்" என அழைத்துச் சென்றார்.

அப்போது... "கோபாலா...', 'ஏன் சார்?', 'எங்க போற?', 'மர்மயோகி' படம் பார்க்கப் போறேன்' என விளம்பரப் படுத்தியபடி சினிமா நோட்டீஸ் கொடுத்துக்கொண்டு போனார்கள்.

நானும் இப்படி ஒரு காலத்தில் நோட்டீஸ் கொடுத்த நினைவுகள் மின்னல்போல வந்து போனது.

"இங்க சினிமா கொட்டகை இருக்கிறதா நாய்க்கரே?" எனக் கேட்டேன்.

"கொஞ்சநாளாத்தான் இருக்கு. நாலு நாளைக்கி ஒரு படம் போடுறாங்க" என்றார்.

பேசிக்கொண்டே கோயிலுக்கு வந்தோம்.

தேங்காய், பழம் வாங்கிக்கொண்டு, பக்கத்துக் கடையில் பூ வாங்கினேன்.

நாய்க்கரைப் பார்த்த பூக்கடைக்காரன் 'வாங்க நாய்க்கரே' என்று கும்பிட்டான்.

அவனை என்னிடம் அறிமுகம் செய்துவைத்த நாய்க்கர், ''இவனோட பேரு பரமசிவம். உருவத்த வச்சு இவனை எல்லாரும் 'ஒல்லிக்குச்சி பரமசிவம்'னு கூப்பிடுவாங்க. இவங்க பரம்பரையே பூ கட்டித்தான் வாழ்றாங்க''என சொல்லிவிட்டு, ''பரமசிவம்... இவர்தான் நம்ம ஊர்ல நாடகம் போடப் போறாரு. இவரோட நடிப்பை ஏற்கனவே பார்த்துட்டேன். டி.எஸ்.பாலையா மாதிரி நடிப்பாரு'' எனச் சொல்ல... பரமசிவம் என்னைப்பார்த்து ''சும்மா சினிமா நடிகர் மாதிரி ஜம்முனு இருக்காரே'' எனச் சொல்லிக்கொண்டிருந்தபோது 'கணீர்' என்று ஒரு பெண்ணின் குரல் கேட்டது. ஒரு அழகிய பெண் சிறுவர்களுக்கு பாடம் சொல்லி கொடுத்துக் கொண்டிருந்தாள்.

''இவ பேரு மங்களம். ஒல்லிக்குச்சியோட பொண்டாட்டி. அழகான பொண்ணு மட்டுமில்ல... அறிவான பொண்ணும் கூட.நல்லா படிச்சபொண்ணு... விவேகமானவ'' என அவளை எனக்கு அறிமுகப்படுத்திய நாய்க்கர், அவளிடம் ''மங்களம்... நம்ம ஊர்ல ஒரு சமூக நாடகம் நடத்துறதுக்காக இவரைக் கூப்பிட்டு வந்திருக்கேன்'' என்றார்.

''நம்ம ஊருக்கு தகுந்த மாதிரி 'ராணி மங்கம்மா', 'வேலு நாச்சியார்', 'ஜான்ஸி ராணி' மாதிரியான நாடகங்களைப் போட்டா பெண்களுக்கு விழிப்புணர்ச்சியா இருக்கும். அப்படி ஒரு நாடகம் போடுங்க'''என்றாள்.

''நான் ஒண்ணும் பாய்ஸ் கம்பெனி நாடகக்காரன் இல்லம்மா. சினிமாவுல நடிக்க ஆசப்பட்டு பி.யு. சின்னப்பா வைப் பார்த்து சான்ஸ் கேட்டேன். 'நீ நாடகத்துல நடிச்சு அனுபவம் பெற்று வா'னு சொன்னாரு. அதுக்காகத்தான் இதுவரைக்கும் பத்து நாடகங்கள் போட்டிருக்கேன். கூடிய சீக்கிரம் அவரைப் பார்த்து, நாடக நோட்டீஸையெல்லாம் காட்டி சான்ஸ் கேட்கணும்'' என்றேன்.



"நீங்க சினிமாவுல நடிக்க பொருத்தமாத்தான் இருக்கீங்க. அம்மனை வேண்டிக்கங்க. நிச்சயமா சினிமாவுல சான்ஸ் கிடைக்கும்" என்றாள்.

அம்மனுக்கு அர்ச்சனை செய்துவிட்டு, எக்கச்சக்க நாய்க்கருக்குச் சொந்தமான ஓட்டலில் போய் உட்கார்ந்தோம்.

டீ வந்தது. குடித்துக்கொண்டே.... "எங்க ஊர் பத்ரகாளி யம்மன் ஆயிரம் வருஷத்துக்கு முன் பிரதிஷ்டை செய்ததாம். ரொம்ப சக்தியுள்ள தெய்வம். வருஷா, வருஷம் திருவிழாவில் பக்தி நாடகம்தான் போடுவோம். இந்த முறைதான் உங்க நாடகம் போடுறோம்" என்றார் நாய்க்கர்.

"அது சரிங்க எக்கச்சக்க நாய்க்கரே... உங்க பேரு மாதிரியே, நான் இங்கே வந்ததும் எக்கச்சக்கமா ஒரு சம்பவம் நடந்ததே... அதைப்பத்திச் சொல்லுங்க. அவன் யாரு?"

"அவன்பெயர் 'எறிகுண்டு' பெரியகருப்பன்.மூணுகொலை பண்ணீருக்கான். ஆனா... துப்புத் துலங்காம செய்துட்டு... அதோ... அந்த மலையின் நடுப்பகுதியில்தான் வாழ்ந்திட்டிருக்கான். இவனைச் சுட்டுப் பிடிக்கஆர்டர் வந்தும், போலீஸ் டிபார்ட்மெண்ட்டில் ரெண்டு பிரிவா இருப்பதால் இவனை எதுவும் பண்ணமுடியல. போலீஸ்காரங்க இவன்கிட்ட பணம் வாங்குறாங்கன்னா பார்த்துக்கங்க. இவனோட அட்டகாசம் தாங்காம, ஊர் மக்கள் அன்றாடம் செத்துச் செத்து வாழ்றாங்க. ராத்திரியில படம் பார்க்க வருவான். என் ஓட்டல்ல வேண்டியதை சாப்பிட்டுட்டுப் போவான். இந்தக் காளியம்மன் தான் இவனுக்கு ஒரு முடிவு கட்டணும்" என நாய்க்கர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே...

பூக்கடை பரமசிவத்தின் மனைவியின் அதிர்ச்சிக்குரல்...

"என்னைக் காப்பாத்துங்க... என்னைக் காப்பாத்துங்க..."

# சினிமாவை மிஞ்சிய நிஜம்!

'எறிகுண்டு' பெரியகருப்பனைப் பற்றியும், அவனின் அட்டகாசங்கள் பற்றியும் எக்கச்சக்க நாய்க்கர் என்னிடம் சொல்லிக் கொண்டிருக்கும்போதே...
பூக்கடை பரமசிவத்தின் மனைவி மங்களத்தின் 'என்னைக் காப்பாத்துங்க' என்கிற அதிர்ச்சிக் குரல் கேட்டது.

மங்களம் கதறக் கதற... அவளை தோளில் தூக்கிப் போட்டுக்கொண்டு சென்றான் பெரியகருப்பன்.

"ஐயா... என் மனைவியை விட்டுடுங்க" என பெரியகருப்ப னின் கால்களைக் கட்டிக்கொண்டு கெஞ்சினான் பரமசிவம். ஓங்கி ஒரு உதை விட்டதில் உயிர்போகும் வலியுடன் கத்தி சுருண்டு விழுந்தான் பரமசிவம்.

"டேய் பரமசிவம்... தேய்ஞ்சுபோன பல்லு மாதிரி இருக்கிற உனக்கு எதுக்குடா ரம்பை மாதிரி பொண்டாட்டி? இனிமே இந்த அழகி எனக்குத்தாண்டா பொண்டாட்டி. சினிமாவுக்கு வரும்போதெல்லாம் இவளைப்பாத்து ஏங்கித்தாண்டா இப்படி ஒரு முடிவுக்கு வந்தேன்" என பெரியகருப்பன் சொல்லிக் கொண்டிருக்க... அவனின் தோளில் கிடந்த மங்களம் தோளைக் கடித்துக் குதறினாள். உடனே அவள் தலையில் ஓங்கி அடிக்க... அவள் மயங்கினாள். அவளை தூக்கிக்கொண்டு சென்றான்.



இந்தக் கொடுமையைப் பார்த்த மக்கள்... "தாயே பத்ரகாளி... இந்தக் கொடுமைக்கு ஒரு முடிவு கட்டு. அதுவரைக்கும் உன்னை நாங்க கும்பிடப் போறதில்லை"என புலம்பித் தவித்தனர். சினிமாவில்கூட இப்படி ஒரு அராஜகம் மின்னல் வேகத்தில் நடக்காது. பொறி கலங்கிப் போனேன் நான். "எக்காரணம் கொண்டும் இந்த ஊரில் நாடகம் போடக்கூடாது" என முடிவு செய்தேன். ஆனாலும் 'இந்த அக்கிரமத்திற்கு ஏதேனும் முடிவு கிடைக்காதா?' என்கிற கேள்வியுடன் எக்கச்சக்க நாய்க்கர் வீட்டிலேயே தங்கினேன்.

தீப்பற்றி எரியும் கானகத்தில் மாட்டிக்கொண்டதுபோல மக்கள் அங்கும் இங்குமாக அலைந்தார்கள். இரண்டு நாட்களாகியும் எந்தத் தகவலும் கிடைக்கவில்லை.

பூக்கடை பரமசிவம் புலம்பிப் புலம்பி பைத்தியம் போல இருந்தான். எக்கச்சக்க நாய்க்கரும் எதையோ பறி கொடுத்தவர் போலிருக்க... நானும் துக்கத்தில் மூழ்கியிருந்தபோது...

பெரியகருப்பனின் கையாள் சிவன்காளை தன் கையில் ஏற்பட்ட காயத்திற்கு மருந்து போட வந்தவன் எக்கச்சக்க நாய்க்கரிடம் கதறிக் கதறி அழுதான்.

"சிவன்காளை... முதல்ல அழுகிறதை நிறுத்து. மங்களத்துக்கு என்னாச்சு?" என்று கேட்டார்.

தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டவன் நடந்ததைச் சொன்னான். "மங்களத்தை பெரியகருப்பன் பலாத்காரம் செய்ய முயன்றான். ஆனா மங்களம் இடம் கொடுக்கல. மங்களத்தின் கை, கால்களை கட்டிப் போட்டான். 'இப்பவே என் இஷ்டம் போல உன்னை அனுபவிக்க முடியும். ஆனா... பலநாளா நான் உன் அழகை ரசிச்சு, எனக்குள்ள ஊறிப்போன ஆசைகள் அரைவேக்காட்டுத்தனமா ஆகிப்போகும். நீ சம்மதிச்சா, உனக்கு எல்லா வசதியும் செய்துகொடுத்து, காலம் பூரா உன்னோட அடிமையா இருப்பேன்'னு சொன்னான்.

ஆனா மங்களம் "டேய் அறிவுகெட்ட நாயே... உன் வீரத்த என்கிட்ட காட்டாத. அத்துமீறின... என் பொணத்தைத்தான் தொடமுடியும்'னு சொல்லவும்... பச்சை மூங்கிலை எடுத்து, ‘சாவுடி'னு சொல்லி ராட்சசன் போல அடிச்சான். பாவம் மங்களம் சுயநினைவில்லாம மயங்கி விழுந்திருச்சு" என சிவன்காளை சொல்லிக் கொண்டிருக்கும்போதே "மங்களம்... மங்களம்..." என பரமசிவம் சுவற்றில் முட்டிமோதி அழுதான். அவனைச் சமாதானப்படுத்திய நாய்க்கர் “"அப்புறம் என்னாச்சு?" என கேட்டார்.

சோறுதண்ணி இல்லாம சாவுடினு சொல்லீட்டு பெரியகருப்பன் படுத்துட்டான். ‘காளியாத்தா’ பேரைச்சொல்லி மங்களம் ராத்திரியெல்லாம் புலம்பிக்கிட்டிருந்துச்சு.

பெரியகருப்பன் எப்பவும் தனிமையிலதான் படுப்பான். யாரையும் நம்பி பக்கத்தில் படுக்க வைக்கமாட்டான். நாங்கள்லாம் நூறடி, இருநூறடி தூரத்துலதான் இருக்கணும். ஏதாவது தேவைன்னா எறிகுண்ட எடுத்து வீசுவான். அது வெடிக்கிற சத்தம் கேட்டதும்தான் நாங்க அவன்கிட்ட போவோம். நான் மங்களத்து மேல பரிதாபப்பட்டபடியே படுத்துட்டேன். குண்டுவெடிச்ச மாதிரி சத்தம் கேட்டுச்சு. அதனால் நான் எழுந்து போனேன். 'நான் கூப்பிடாம ஏண்டா வந்தே?'னு கேட்டுக்கிட்டே கத்தியை வீசி எறிஞ்சான். அது என் கைல பட்டு சதையை அறுத்து எடுத்துருச்சு. "நான் கூப்பிடாம வந்தா... கொலை பண்ணீருவேன்'னு திட்டிக் கிட்டே, பெரியகருப்பனே ஒரு மூலிகையை எடுத்து எனக்கு கட்டுப்போட்டு விட்டான்.

விடிஞ்சதும்... மங்களத்தை வந்து பார்த்தான். மயங்கிக் கிடந்துச்சு. ''நீ சம்மதிக்கலேன்னா பட்டினி கிடந்து சாக வேண்டியதுதான்'' என எச்சரித்தான். அப்ப எங்க கூட்டத்து ஆள் ஒருத்தன் ஒரு 15 வயசுப் பொண்ண... பெரியகருப்பனோட காலடியில் போட்டான். அந்தப் பொண்ணு மிரண்டு கிடந்தது பயத்துல. அந்தப் பெண்ணை தூக்கி அணைச்சுக்கிட்டு, மங்களத்திடம் '''உன்மேல கண் வச்ச மாதிரியே இவ மேலயும் கண் வச்சேன். கொஞ்சம் பெரிசாகட்டும்னு பார்த்தேன். நீ கிடைக்கிறவரை இவளை வச்சுக்கலாம்னு தூக்கிட்டுவரச் சொன்னேன்'' எனச் சொல்லிவிட்டு அந்தப் பொண்ணோட கதறலை பொருட்படுத்தாம தூக்கிட்டுப் போனான்.

எதையோ யோசிச்ச மங்களம், என்னைக் கூப்பிட்டுச்சு. 'அவனை நான் கூப்பிட்டேன்னு கூப்பிடு'னு சொல்லிச்சு. ''இப்ப நான் அவன்கிட்டப் போனா என்னைக் கொன்னுபோட்ருவான்'னு சொன்னேன். உடனே 'டேய்... பெரியகருப்பா'னு அடி வயித்துலருந்து இடி மாதிரி கத்துச்சு. பெரியகருப்பன் வந்தான்.

'யாரு பெத்த பிள்ளையையோ ஏன் இப்படி நாசம் பண்ணப் போற?'னு கேட்டுச்சு. ''நாதியில்லாத புருஷன இழந்தவ மகதான். ஒன்னய நினைச்சுக்கிட்டே அவகிட்ட சந்தோஷ மா இருக்கப் போறேன். அவளுக்கு கைல பணம் குடுத்து அனுப்பிச்சிடுவேன்'னு சொன்னான். 'என்னய நினைச்சுக்கிட்டு அவள நாசம் பண்ணாத. உன் விருப்பம் போல என்னயவே எடுத்துக்க. ஆனா நான் சொல்றபடி செய்யணும்'னு மங்களம் சொல்ல.. 'உடனே சொல்லு. செய்றேன்' என்றான் பெரியகருப்பன்.

''முதல்ல அந்தச் சின்னப்பொண்ணை விட்டுடு. நான் உன் னோடவே வாழ முடிவெடுத்துட்டேன். என் முடிவை என் புருஷன் கேள்விப்பட்டா... தற்கொலை செஞ்சுக்குவான். அவனாலதான் என் அம்மா வயிறு வளக்குறா. அவ அனாதையாகிப் போவா. அதனால் முதல்ல என் அம்மாவுக்கு ஜீவனாம்சம் மாதிரி ஒரு தொகை குடு. நிலமையைச் சொல்லி, நாம சேர்ந்து வாழ்றதுக்கு அம்மாகிட்ட ஆசி வாங்குவோம். என் புருஷனைப் பார்த்து 'நீ வேற கல்யாணம் பண்ணிக்க'னு எடுத்துச் சொல்றேன். இதுக்கெல்லாம் நீ எப்ப ஏற்பாடு செஞ்சு முடிக்கிறியோ... அப்பவேநான் உன்னோட பொண்டாட்டி'னு சொல்லுச்சு. இதைக் கேட்டதும் பெரியகருப்பனுக்கு தலைகால் புரியாத சந்தோஷம். ''என்கிட்ட இருக்க பணத்தையெல்லாம் இப்பவே உன் அம்மாவைப் பார்த்து குடுத்துடலாம்... புறப்படு'ன்னான். 'என் உடம்பெல்லாம் காயமா இருக்கு.

ஒரு நாள் விட்டுப் போலாம்' என மங்களம் சொல்ல... பெரியகருப்பன் பழங்களை எடுத்து வந்து மங்களத்திடம் கொடுத்து, சாப்பிட்டு ஓய்வெடுக்கச் சொன்னான். அந்தச் சின்னப்பெண்ணையும் பாதுகாப்பா அனுப்பி வச்சான். சந்தோஷத்தில் இரண்டு பாட்டில் சாராயத்தைக் குடிச்சுட்டு பெரியகருப்பன் மட்டையானான்.

இரவானதும்... மங்களம் சுற்றும்முற்றும் நோட்டம் பார்த்துவிட்டு என்னை ஜாடையாக அழைத்தது.

# விஜய்க்காக எஸ்.ஏ.சந்திரசேகர் பட்ட பாடு!

'எறிகுண்டு' பெரியகருப்பன், பூக்கார பரமசிவத்தின் மனைவி மங்களத்தை தூக்கிச் சென்று மலை மீது வைத்திருந்தான். அங்கு நடந்தவைகளை பெரியகருப்பனின் கையாள் சிவன்காளை எங்களிடம் சொல்லிக்கொண்டிருந்தான்.

"மங்களம் சொன்னதை நம்பி உற்சாகமான பெரிய கருப்பன் இரண்டு பாட்டில் சாராயத்தைக் குடித்துவிட்டு மட்டையானான். இரவாகிவிட்டது. சுற்றும் முற்றும் நோட்டம் விட்ட மங்களம், ஜாடையாக என்னை அழைத்தது. 'சிவன் காளை... நான் உன்னை என் உடன்பிறப்பா நினைக்கிறேன்... என்னைக் காப்பாத்து'னு என் காலைப் பிடித்து அழுதது. என்னாலும் அழுகையை அடக்க முடியல. 'இந்தப் பாவிகிட்ட இருந்து நீ தப்பிக்க நான் என்ன உதவி வேணும்னாலும் செய்றேன்'னு சொன்னேன். மெதுவான குரலில்... 'நான் ஒரு கடிதம் எழுதணும்'னு சொன்னது. போலீஸ்காரர்களில் யார், யாருக்கு எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டதுங்கிற விபரத்தை ஒரு நோட்டில் பெரியகருப்பன் எழுதி வைத்திருப்பான். அந்த நோட்டிலிருந்து ரெண்டு தாளையும், பேனாவையும் எடுத்து மங்களத்திடம் குடுத்தேன். விடியுற நேரத்தில்... அந்த வெளிச்சத்தில் கடிதத்தை எழுதி என் கையில் கொடுத்து, 'இதை எப்படியாவது என் புருஷன்கிட்ட கொடுத்துடுண்ணே'னு சொல்லுச்சு. காயத்துக்கு மருந்து போட வைத்தியரைப் பார்க்கப் போறதா பெரியகருப்பன்கிட்ட சொல்லிட்டு வந்தேன். நேரமாச்சு... நான் கிளம்புறேன்" எனச் சொல்லி அந்தக் கடிதத்தை பரமசிவம் கையில் கொடுத்துவிட்டு கிளம்பினார் சிவன்காளை.

பெரியகருப்பன் ஒரு நல்ல ஆடையை அணிந்துகொண்டு வாசனைத் திரவியம் பூசிக்கொண்டான். திரும்பத் திரும்ப கண்ணாடியில் தன் அழகை ரசித்துவிட்டு, என்றுமில்லாத மகிழ்ச்சியுடன் மங்களத்தை வந்து பார்த்தான். "மங்களம்... நீ சொன்னபடி உங்க அம்மாவுக்குத் தேவையான

பணத்தை எடுத்து வச்சுட்டேன். முதல்ல நாம் கொட்டகையில் 'வேலைக்காரி' சினிமாப் படம் பார்ப்போம். ஊரு அடங்கின நேரமா உங்க அம்மாவப் பாத்து பணத்தைக் கொடுத்திட்டு, 'நாம சேர்ந்து வாழப்போறதைச் சொல்லி ஆசி வாங்குவோம். உன் புருஷன்கிட்ட நீ கறாராப் பேசிடு' என்றான். மங்களமும் தலையாட்டினாள்.

மலையிலிருந்து... துப்பாக்கியைச் சரி பார்த்தபடி பெரிய கருப்பன் முன்னே இறங்கி நடக்க... மங்களம் சிலஅடி தூரத்தில் பின்னாலேயே வந்தாள். கீழிருந்து மலைக்கு ஏறிக் கொண்டி ருந்தான் சிவன்காளை. ஒரு திருப்பத்தில் அவர்கள் சந்தித்துக் கொண்டனர்.

'உனக்கு அம்மா இருப்பதா நீ என்கிட்ட சொல்ல லியே' என சிவன்காளை கிசுகிசுப்பாக கேட்க... 'இருந்தாத்தானே சொல்றதுக்கு' என கமுக்கமாக பதில் சொன்னாள் மங்களம்.

திட்டமிட்டபடி சினிமா பார்த்துவிட்டு கொட்டகையை விட்டு வெளியே வந்தனர். அப்போது இரவு பத்து மணி.

'எங்க அம்மாவைப் பார்க்கப் போலாமா?' என கேட்டாள் மங்களம். தலையாட்டினான் பெரியகருப்பன்.

ஊருக்குள் நடந்தனர். பிள்ளையார் கோயில் வந்தது. "நான் எந்த காரியம் செய்றதா இருந்தாலும் பிள்ளையாரை கும்பிட்டுட்டு, காணிக்கை போட்ட பிறகுதான் செய்வேன்'' என்றாள்.

பூட்டப்பட்டிருந்த கோயிலுக்கு வெளியே நின்று பிள்ளையாரை வணங்கிவிட்டு, அவனிடமே காசு வாங்கி உண்டியலில் போட்டவள்... 'கோயிலை ஒரு சுத்து சுத்தி வரணும். நீ முன்னாலயும், நான் உனக்குப் பின்னாலயும் நடந்து கோயிலைச் சுத்தணும்' என்றாள். சதுர வடிவ கோயிலின் முன்வாசல் சுவரைக் கடந்து, பக்கவாட்டுச் சுவரைக் கடந்து, பின்பக்கச் சுவரை கடந்து... அடுத்த பக்கவாட்டுச் சுவரை பெரியகருப்பன் கடக்கையில், மூலையிலிருந்து ஒரு உருவம்...

'சதக்'என்கிற சத்தம் மட்டும்தான் கேட்டது.

கோயில் சுவரிலிருந்து சுமார் இருபதுஅடி தூரம்வரை முண்டம் மட்டும் ஓடிச் சரிந்தது. தலை மட்டும் தனியே கோயில் சுவரோரம் கிடந்தது.

வெறி பிடித்த கண்களுடன் முகமெல்லாம் ரத்தம் தெறிக்க, அரிவாளுடன் நின்றிருந்தான் பரமசிவம். மங்களம் ஓடி வந்தாள்... 'நீ சரியான

ஆம்பளைங்கிறதை நிரூபிச்சிட் டய்யா' என புருஷனைக் கட்டிக்கொண்டு அழுதாள்.

பரமசிவத்தின் உடம்பெங்கும் கொலை செய்த குரூரக் கனல் பற்றி எரிந்தது. பதட்டமும் இருந்தது. 'மங்களம்... நீ கடிதத்துல சொல்லீருந்தபடி செஞ்சுட்டேன். அடுத்து நான் என்ன செய்யணும்?' எனக் கேட்டான்.

''இப்ப நீ நேரா போலீஸுக்குப் போ. அந்த அரக்கன என் பொண்டாட்டிதான் கொல்லச் சொன்னாள்னு சொல்லி, நான் எழுதுன கடிதத்தையும் குடு. 'இனிமே இந்த ஊருக்கும், மங்களம் மாதிரி பொம்பளைங்களுக்கும் மங்களம் சுதந்திரம் வாங்கிக் கொடுத்திட்டாள்னு மார்தட்டிப் பேசு... சீக்கிரம் போ' என அனுப்பிவைத்தாள்.

மங்களம் பத்ரகாளியம்மன் கோயிலை நோக்கி ஓடினாள்.

'வா மகளே... நீ செய்ததே தர்மம். நீதிக்கே பெருமை தேடித் தந்துவிட்டாய்' என அம்மனின் அசரீரி ஒலிப்பதுபோல் இருந்தது அவளுக்கு. மகிழ்ச்சியும், துக்கமுமாக கண்ணீர் வழிந்தோட... 'அம்மா... தாயே' என அரற்றியபடி தரையில் புரண்டும், தலையில் அடித்தும் 'ஓ'வென்று கதறினாள்.

விஷயமறிந்து பெண்கள் சிலர் அங்கே வந்துவிட்டனர். வெறுப்போடும், மலைப்போடும் அவளைப் பார்த்தனர்.

'மங்களம்... உன்னைப் பார்த்தா எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியலம்மா. மனசு ரொம்ப வேதனைப்படுது. அந்தப் பாவிப்பயகிட்ட ரெண்டு நாளா இருந்தியே... என்ன பாடு படுத்தினானோ... சும்மா விடமாட்டானே அந்தச் சண்டாளன்' என கண் கலங்கினாள் ஒருத்தி.

அதைக்கேட்ட மங்களம் 'நீ மட்டுமில்ல... இனி என் வாழ்நாளெல்லாம் இப்படி ஒரு சந்தேகம் இந்த ஊர்ல இருந்துகிட்டுத்தான் இருக்கும். நான் சீதை மாதிரி தீக்குளிக்கமாட்டேன். நான் என்னோட கற்பை காப்பாத்திக்கிட்டுத்தான் வந்திருக்கேன். இதோ... இந்த தெய்வத்துக்கு தெரியும்' என்று சொல்லிவிட்டு... 'அம்மா' என கதறியபடி கோயில் கிணற்றில் விழுந்தாள். அம்மனின் திருவடி சேர்ந்தாள் மங்களம்.

கலையுலகப் பிரம்மாக்களில் தன்னிகரற்ற கலைஞன் எஸ்.ஏ.சந்திரசேகர். கதை, வசனம், இயக்கம், தயாரிப்பு என பன்முகம் கொண்டு பல வெற்றிப் படங்களைக் கொடுத்தவர். 'சட்டம் ஒரு இருட்டறை' படம்

மூலம் "யார், இந்த புரட்சிகரமான கலைஞன்?" என அனைவரையும் வியப்பில் ஆழ்த்திய மாபெரும் சிந்தனையாளன்.



எஸ்.ஏ.சந்திரசேகரும், நானும் ஒரே துறையில் பயணித் தாலும் அதுவரை நெருக்கமாக பழகியதில்லை. சில நிகழ்ச்சிகளில் எதிர்எதிரே சந்தித்தாலும்கூட, ஏதோ கடனுக்குச் சிரிப்பதுபோல கடவாய்ச் சிரிப்போடு போய்விடுவோம். ஆனாலும் 'இவருடன் சேர்ந்து தொழில் செய்ய வேண்டும்' என்கிற ஆசை மட்டும் என்னிடம் நீங்காதிருந்தது.

இந்த மாபெரும் கலைஞனுக்கு ஒரு நியாயமான ஆசை வந்தது. அது... தன் மகன் விஜய்யை ஹீரோவாக்கி அழகு பார்க்க வேண்டும்'என்பதுதான். 'இன்னிசை மழை' என்கிற படத்தை தயாரித்து நஷ்டப்பட்டிருந்த நிலையில்... விஜய்யை ஹீரோவாக்கி 'நாளைய தீர்ப்பு' படத்தை தயாரித்து கையைச் சுட்டுக்கொண்டார். அஞ்சாத நெஞ்சனாக இருந்த சந்திரசேகரை காலம் அச்சுறுத்தியது. அதனால் ஆழ்ந்து சிந்தித்து ஒரு முடிவெடுத்தார்.

'நாமே நம் மகனை வைத்து படமெடுப்பதைவிட, மற்ற தயாரிப்பாளர்களையும், எழுத்தாளர்களையும் அணுகி, எடுத்து வைத்திருக்கும் படத்தைக் காட்டி ஆலோசனை பெறுவது' என்கிற முடிவை எடுத்தார். இது புத்திசாலித்தனமான முடிவு.

அன்று... நான் வாடகைக்கு வேறு வீடு தேடி அலைந்துவிட்டு வீட்டுக்குத் திரும்பினேன். சந்திரசேகர் என் வீட்டில் உட்கார்ந்திருந்தார். என்னைப் பார்த்ததும் 'வணக்கமண்ணா' என எழுந்து கும்பிட்டார்.

'என்னது டைரக்டர் சந்திரசேகரா?' என அதிர்ச்சியும், வியப்புமாய் அவருக்கு வணக்கம் வைத்துவிட்டு "உட்காருங்க சார்... என்ன சார்.. திடீர்னு..." என்றேன்.

"உங்களிடம் முக்கியமான விஷயம் சொல்ல வந்தேன்" என்றவர்... விஜய்யை வைத்து படம் எடுத்ததையும், நஷ்டம் உண்டானதையும் விபரமாகச் சொல்லிவிட்டு "என் பையன் நடிச்ச படம் ஒண்ணு தயாரா இருக்கு. அதை நீங்க பார்த்திட்டு ஆலோசனை சொல்லணும். எம்.பாஸ்கரும் படம் பார்க்க வர்றார்" என்றார்.

"உடனே பார்க்கிறேன்" என்றேன்.

ஏற்பாடுகளைச் செய்வதாகச் சொல்லிவிட்டுப் போனார்.

அதன்படி நானும், எனது முதல் தயாரிப்பான 'பைரவி'யில் நான் டைரக்டராக அறிமுகப்படுத்திய பாஸ்கரும் படம் பார்த்தோம். அந்தப் படத்திற்கு டைட்டில் 'தேவா' என்று நினைக்கிறேன். படம் பார்த்து முடித்ததும் நிறை குறைகளைச் சொன்னேன். சந்திரசேகர் ஏற்றுக்கொண்டார்.

தொடர்ந்து படங்களைத் தயாரித்து வந்த பாஸ்கர், ஹீரோக்களின் கால்ஷீட் கிடைக்காதது உள்ளிட்ட காரணங்களால் படம் தயாரிக்காமல் இருந்த நேரமது.

படம் முடிந்ததும் என்னைத் தனியாக அழைத்த பாஸ்கர், "இந்தப் பையன் நல்லாத்தானே நடிச்சிருக்கான். இந்தப் பையனையே வச்சு நான் படம் ஆரம்பிக்கலாமா?" எனக் கேட்டார்.

"அருமையான யோசனை. இதையே நானும் நினைச்சேன். ஆனா நீங்க முந்திக்கிட்டீங்க பாஸ்கர். இது சம்பந்தமா நாம சந்திரசேகரை, அவரோட ஆபீஸ்ல சந்திச்சுப் பேசலாம்" என்றேன். அதன்படி சந்தித்துப் பேசினோம்.

விஜய், சந்திரசேகர், பாஸ்கர்... மூவருக்கும் பயனுள்ள லாபம் தந்த என் கதை. ஆனால் என்னை மட்டும் அம்போ என விட்ட கதை!

# படம் வெற்றி! நான் அம்போ!

"விஜய்யை வைத்து நான் படம் தயாரிக்கலாம்னு நினைக்கிறேன். நீங்க என்ன சொல்றீங்க?" என எம்.பாஸ்கர் கேட்டார்.

"அருமையான யோசனை. அதைத்தான் நானும் நினைத்தேன். நீங்க முந்திக்கிட்டீங்க. நாம் எஸ்.ஏ.சந்திரசேகரை அவரின் ஆபீஸில் சந்திச்சு, இது சம்பந்தமா பேசலாம்" என்றேன்.

அதன்படி சந்தித்தோம்.

சந்திரசேகர் டீ வரவழைத்துக் கொடுத்தார்.

"சார்... விஜய்யை வச்சு படம் எடுக்க பாஸ்கர் விரும்புறார்" என்றேன்.

"தாராளமா"

"விஜய் கால்ஷீட் எப்போ கிடைக்கும்?"

"இதோ... இப்பவே தர்றேன்" என்றபடி அடுத்தடுத்த மாதங்களில் தேதிகளை எழுதிக் கொடுத்தார்.

டைரக்ஸன் பண்ணுவதற்கான சந்திரசேகரின் சம்பளத்தையும், விஜய்யின் சம்பளத்தையும் நானே பேசி முடித்தேன். இதனால் பாஸ்கருக்கு ரொம்ப சந்தோஷம்.

"உடனே படம் பண்றதுக்கு ஒரு கதையும் இருக்கு. என் மனைவி ஷோபா சொன்ன ஒரு வரிக் கதை அது" என்று சொன்னார் சந்திரசேகர்.

"நீங்க சொன்ன மூலக்கதையை ஸ்கிரிப்ட்டா எழுதி முடிக்க நாளாகும். நான் ஒரு முழுக்கதை வச்சிருக்கேன்" என்று சொல்லி 'விஷ்ணு' கதையை முழுமையாகச் சொன்னேன்.

"ஷோபாவோட மூலக்கதையையும் உங்க கதையில் சேர்த்து எழுதிக் கொடுங்க. ஷோபாவின் பேனாவையும், உங்களோட பேனாவையும் சேர்த்துக்கொள்ளலாம்" என்றார் சந்திரசேகர்.

அதாவது... 'ஷோபாவும், கலைஞானமும் இணைந்து எழுதிய கதை' என டைட்டிலில் போடலாம் என்பதைத்தான் அப்படிச் சொன்னார்.

'பேரு கிடக்கட்டும்... சோறு முக்கியம். பணம் கிடைத்தால் நல்லது' என மனதிற்குள் நினைத்துக்கொண்ட நான்... "அப்படியெல்லாம் எதுக்கு? ஷோபா என் தங்கை மாதிரி. இந்தக் கதை அவருடைய கதையாகவே இருக்கட்டும்'' என மனப்பூர்வமாக ஒப்புக்கொண்டேன்.

சந்திரசேகரின் உதவியாளர்கள் சபா, ரெங்கநாதன் ஆகிய இருவரிடமும் 'விஷ்ணு' கதையை சுமார் இரண்டு மணிநேரம் முழுமையாகச் சொன்னேன். அவர்கள் அதை டேப் ரிக்கார்டரில் பதிவு செய்துகொண்டார்கள்.

நான் சொன்ன கதையை அப்படியே நாற்பது நாட்களில் படமாக எடுத்து வெளியிட்டார் சந்திரசேகர்.

படம் வெற்றி.

விஜய், சந்திரசேகர், பாஸ்கர் ஆகிய மூவருக்கும் பயனுள்ள லாபம் 'விஷ்ணு' படத்தால். ஆனால் இந்த படத்திற்காக அரும்பாடுபட்ட என்னை அம்போ என விட்டுவிட்டார்கள்.

'கலைஞானத்துக்கு என்ன குறை? சூப்பர் ஸ்டார் ரஜினி அவருக்கு அள்ளி அள்ளிக் கொடுக்கிறாரே' என்ற எண்ணம். அதுமட்டுமில்லை... 'கலைஞானத்துக்கு பாஸ்கர் பணம் கொடுப்பார்' என சந்திரசேகரும், "கலைஞானத்துக்கு சந்திரசேகர் பணம் கொடுப்பார்'' என பாஸ்கரும் மெத்தனமாக இருந்துவிட்டனர். ஆகமொத்தத்தில் நான் ரெண்டும் கெட்டவனாகப் போய்விட்டேன்.

என்னிடத்தில் கூடாத குணம் ஒன்று உண்டு. தயவு தாட்சண்யம் பார்த்துப் பார்த்து காரியத்தில் கோட்டை விட்டுவிடுவேன். இந்தப் புத்தி என்னைவிட்டுப் போக வில்லையே...

'விஷ்ணு' படத்தின் தெலுங்கு டப்பிங் ரைட்ஸ் 35 லட்ச ரூபாய்வரை விற்றதாகக் கேள்விப்பட்டேன். அப்போதாவது... "இந்தப் படம் உருவாக முழுக்காரணம் கலைஞானம்தானே... அவரோட உழைப்புக்கும், அவரோட கதைக்கும் நியாயமா ஒரு தொகை கொடுக்கலாமே'' என பாஸ்கர் நினைக்கவில்லை.

பாஸ்கரை'பைரவி'படத்தின்மூலம்நான்தான் டைரக்டராக அறிமுகப்படுத்தினேன். அவருக்கு ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களிலெல்லாம்

பங்கெடுத்து, பிரச்சனைகளைத் தீர்த்து வைத்தேன். அவரின் குடும்ப நிகழ்ச்சிகளுக்கும் உறுதுணையாக நின்றேன். பாஸ்கரின் மூத்தமகன் பாலாஜிபிரபுவுக்கும், பிரியதர்ஷினிக்கும் தாய்மாமனாக நின்று திருமணத்தை நடத்தி வைத்தேன். அவரின் மகள் ஜானகிபிரியாவுக்கும், ஆனந்த் மகாராஜாவுக்கும் தலைமை தாங்கி திருமணத்தை சிறப்பாக நடத்திவைத்தேன்.

2013-ல் பாஸ்கர் காலமானபோது... என் கடமையைச் செய்தேன். இனியும் அந்தக் குடும்பத்திற்கு என்னாலான உதவிகளைச் செய்வேன். காரணம்... என்னால் டைரக்டர் என்று அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டவரின் குடும்பம் அது. அவர்களின் நலம்தானே முக்கியம்.



திடீரென்று... எனக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டது. மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு... என் சக்திக்கு மேல் பணம் செலவாகிவிட்டது. வேறு வழியே தெரியாதபோது நினைவுக்கு வந்தார் அன்புத்தம்பி சந்திரசேகர். அவருக்கு ஒரு கடிதம் எழுதினேன்.

"உங்களுக்கு என் உதவி தேவை என்றபோது... என் வீடு தேடிவந்து... உங்கள் படங்கள் தோல்வியுற்றதையும், அதனால் கடன் ஏற்பட்டதையும் சொல்லியதோடு, விஜய்யை வைத்து எடுத்து வைத்திருக்கும் படத்தைப்

பார்த்து அபிப்ராயம் சொல்லச் சொன்னீர்கள். அதன்படி படத்தைப் பார்த்து நிறைகுறைகளைச் சொன்னதோடு, விஜய்யை வைத்து படம் எடுக்க பாஸ்கரை ஏற்பாடு செய்ததுடன், என் முழுக்கதையையும், உங்களின் ஒருவரி மூலக்கதைக்கு தியாகம் செய்து, நீங்கள் சொன்னதையெல்லாம் கேட்டேன். ஏன்? சந்திரசேகர் என்கிற கலைஞன் பிறரையும் தன்னைப்போல் நேசிக்கும் ஒரு தொழிலாளி என்பதால். அப்படிப்பட்ட நீங்கள் என் உழைப்பைக் கண்டுகொள்ளாமல் இருக்கலாமா?' என்கிற அர்த்தம்பட கடிதம் எழுதி, 'எனது மருத்துவச் செலவுகளுக்காக ஒரு லட்ச ரூபாய் கொடுத்து உதவுங்கள்' எனக் கேட்டும் எழுதினேன்.

கடிதம் கண்ட மறுநாள்... 50ஆயிரம் ரூபாய் கொடுத்தனுப்பினார்.

நான் கேட்டதில் மீதி 50 ஆயிரத்தை நான் எப்போது வேண்டுமானாலும் கேட்டால் அவர் கொடுப்பார் என்பது வேறு விஷயம்.

சந்திரசேகர் எப்போதும் என்னை 'அண்ணன்' என்றுதான் அழைப்பார். "அந்த அண்ணனை அணுகியபோது நல்ல கதையைக் கொடுத்து உதவினார். அவருக்கு ஒரு உதவி செய்" என விஜய்யிடம் சந்திரசேகர் எடுத்துச்சொன்னால் விஜய் பரிவுகாட்ட மறுத்துவிடுவாரா என்ன?

எது எப்படி இருந்தாலும் சந்திரசேகர் என்னை எப்போது 'அண்ணன்' என்று அழைத்தாரோ... அன்றுமுதல் இன்றுவரை, அவரை என் தம்பியாகவே இதயத்துள் வைத்து, அகலாத அன்பு செலுத்தி வருகிறேன். தயாரிப்பாளர் சங்கத் தேர்தலில்கூட சந்திரசேகர் என்ன சொன்னாரோ... அதைத்தான் செய்தேன். மேலும் விஜய்யை எங்கள் வீட்டின் பிள்ளையாகவே நினைத்து, கூடுதல் பற்று வைத்திருக்கிறேன். இது வெறும் புகழ்ச்சியல்ல.

நான் தொடர்ந்து படம் எடுத்துக்கொண்டிருந்த நேரம்.

1982 ஜனவரியில், விஜயகாந்த்தை வைத்து ஒரு படம் எடுக்க முடிவுசெய்து, அவரின் நண்பர் இப்ராஹிம் ராவுத்தரைச் சந்தித்து எனது நோக்கத்தைச் சொன்னேன்.

"அண்ணே... நாளைக்கே விஜியை, உங்களை வந்து பார்க்கச் சொல்றேன்" என்றார்.

அதன்படியே விஜயகாந்த் என்னை வந்து பார்த்தார். அந்தச் சந்திப்பில் இருவருக்கும் ஒரு அலாதி மகிழ்ச்சிதான். காரணம்... மண்வாசனை.

"தம்பி... இரண்டு ஹீரோ சப்ஜெக்ட் வைத்து படம் எடுக்கவிருக்கேன். அதில் நம்பர்ஒன் ஹீரோவாக நீங்க நடிக்கணும்'' என்றேன்.

"அண்ணே... இப்ப நான் ரெண்டு படங்கள்ல 'சோலோ' ஹீரோவா... (தனி கதாநாயகனாக) நடிக்கிறேன். நீங்களும் சோலோ ஹீரோ சப்ஜெக்ட்டில் என்னை நடிக்க வைங்கண்ணே'' என்று உரிமைக் குரலை உரக்க எழுப்பினார்.

விஜயகாந்த் சொன்னதில் இருந்த நியாயத்தை உணர்ந்து... "அப்படியே செய்துக்கலாம் தம்பி. நான் கதையை ரெடி பண்றேன்'' என்றேன்.

ஆனால்...

# வானத்தைப் போல மனசு!

''அண்ணே... இப்போ நான் சோலோ ஹீரோவா ரெண்டு படங்கள்ல நடிக்கிறேன். அதனால் சோலோ ஹீரோ சப்ஜெக்ட்ல படம் எடுங்க. நான் நடிக்கிறேன்'' என்றார் விஜயகாந்த்.
நானும் அவரின் விருப்பத்திற்கு சம்மதித்தேன்.

ஆனால்... சந்தர்ப்ப சூழ்நிலை அமையாததால் என் விருப்பம் நிறைவேறவில்லை. ஆனாலும் விஜயகாந்தின் 'சேதுபதி ஐ.பி.எஸ்.', 'கோவில் காளை', 'சொக்கத்தங்கம்', 'வானத்தைப் போல' ஆகிய நான்கு படங்களிலும் நான் திரைக்கதை ஒத்துழைப்பு செய்திருக்கிறேன்.

'கோவில்காளை' படத்தை என் அன்புத்தம்பி கங்கை அமரன் இயக்கினார். அவர் இயக்கிய '''சின்னவர்', 'அத்தை மகள் ரத்தினமே' படங்களிலும் என் சிந்தனை ஸீன்கள் உள்ளன.

'கோவில்காளை'யில் நான் சொன்ன காட்சிகளில் ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

''கதைப்படி விஜயகாந்த் ஒரு அனாதை. சிறுவயது முதலே தன் வாழ்க்கையை கோயிலுக்கு ஊழியம் செய்யவே அர்ப்பணித்து வருவார். கோயில் சொத்தை கொள்ளையடிக்கும் கும்பலை எதிர்த்துப் போராடி, அவர்களைத் தண்டிப்பார். இந்தக் கோயிலின் இந்து அறநிலையத்துறை அதிகாரியாக வரும் சுஜாதா, விஜயகாந்தின் நேர்மையைப் பாராட்டி ஆதரவு கொடுத்து வருவார். நேர்மையான அதிகாரியான சுஜாதாவுக்கு அரசும் பக்கபலமாக இருக்கிறது. சுஜாதாவுக்கு ஒரு மகள். பருவ மங்கையான அவள் ஒரு ஊமை. இதனால் அவளுக்கு வரன் கிடைப்பதில் தடங்கல் ஏற்பட்டு வருகிறது. இதனால் மனக்கவலையில் இருக்கும் சுஜாதாவிடம் ''உங்க பொண்ணு தினமும் கோயில் பூஜையின்போது ஆலயமணியை அடிக்கட்டும். அந்த ஓசை இறைவன், இறைவியின் செவிகளுக்குப் போய் ஒலிக்க ஒலிக்க... ஒருநாள்

தெய்வத்தின் கருணையால் பேச்சு வந்துவிடும்''என விஜயகாந்த் ஆறுதல் சொல்வார்.



அதேபோல அந்தப் பெண்ணும் அன்றாடம் ஆலயமணி எழுப்பி, இறைவனை வழிபட்டு வருவாள்.

ஒருநாள் அந்தப்பெண் இரவில் பூசாரியின் வீட்டுக்குப் போய்விட்டுத் திரும்புகையில் கோயில்மாடுகளை கொள்ளையர்கள் கடத்திச் செல்வதைப் பார்த்து விடுகிறாள்.

'டேய்... அதிகாரியம்மா மக நம்மை அடையாளம் பார்த்துட்டா. இவளைக் கடத்திக் கொண்டுபோய் கொன்னுப் போட்டுரணும்' எனச் சொல்லி துரத்த... அந்த இருட்டில் அங்குமிங்கும் ஓடி கோயிலுக்குள் நுழைந்து, ஊர் மக்களை வரவழைக்கும் விதமாக கோயில் மணியை பலமாக அடிக்க ஆரம்பித்துவிடுவாள். கொள்ளையர்கள் உள்ளே நுழைந்து இவளை நெருங்க... இன்னும் பலமாக தன் சக்தியையெல்லாம் திரட்டி மணியை ஓங்கி... ஓங்கி அடிப்பாள். விஜயகாந்த், சுஜாதா மற்றும் ஊர் மக்கள் பதட்டத்துடன் கோயிலுக்கு வருவார்கள்.

இவள் மணியை அடிக்கும் வேகத்தை தாக்குப் பிடிக்க முடியாமல், பிரமாண்ட மணியின் பெரிய நாவு அறுந்து இவளின் தலையில் விழ... வலி பொறுக்காமல் இவள் ‘அம்மா... அம்மா...’ என அலற, அவளுக்கு

பேச்சு வந்துவிட்டதையும், அம்மன் அருள்பாலிப்பதையும், விஜயகாந்த்தும், சுஜாதாவும் இவள் பேசுவதைப் பார்த்து ஆனந்தக்கண்ணீர் விடுவதையும் மாற்றி மாற்றிக் காட்டவேண்டும்''’ என காட்சியை கங்கை அமரனிடம் சொன்னேன்.

நான் சொன்னதும், என்மீது அளவற்ற பற்று வைத்திருக்கும் தம்பி கங்கைஅமரன் ஒரு நல்ல தொகை கொடுத்து என்னைப் பாராட்டினார். இதை நான் என்றுமே மறக்கமாட்டேன். அத்துடன் அந்தக் காட்சியை அற்புதமாக எடுத்து, பார்ப்பவர்கள் ஆனந்தக்கண்ணீர் விடும்படி செய்தார்.

எனது 'புதிய தோரணங்கள்' படத்தில் கங்கை அமரன் எழுதிய ‘தீர்த்தக்கர மாரியம்மா' பாடல் இன்றும் திருவிழாக் களில் தெய்வீகமாக ஒலித்துக்கொண்டிருப்பது குறிப்பிடத் தக்கது.

’புதுமைக்குப் புதுமை சேர்த்தவர் இயக்குநர் விக்ரமன். மேலும் மேலும் வெற்றிப்படங்களைக் கொடுத்து, நம்மை வியப்பின் உச்சிக்கே அழைத்துச் சென்றவர்.

விஜயகாந்த் நடிக்க, ஆஸ்கர் மூவீஸ் ரவிச்சந்திரன் தயாரிப்பில் 'வானத்தைப் போல' படம் எடுப்பதற்காக கதை விவாதம் நடத்திக்கொண்டிருந்தார் விக்ரமன்.

கதை விவாதத்தில் ஒரு கட்டத்திற்கு மேல் கதை நகராமல் தேக்க நிலை ஏற்பட்டிருக்கிறது. அப்போது... தன் உதவியாளர் ரவிசங்கரிடம் 'உனக்குத் தெரிந்த திறமையான சினிமா ரைட்டர் யாராவது இருந்தால், அவரிடம் நம் கதையைச் சொல்லி ஆலோசனை கேட்கலாமே' எனச் சொல்லியிருக்கிறார் விக்ரமன்.

''சார்... நான் பாக்யராஜிடம் உதவியாளராக இருந்தபோது கலைஞானம் சாரிடம் பழகியிருக்கேன். எந்தக் கதையைச் சொன்னாலும், அதற்குத் தகுந்தாற்போல ஸீன்களை மளமளனு சொல்லுவார் கலைஞானம். வேண்டுமானால் அவரை அழைச்சிக்கிட்டு வரட்டுமா?'' எனக் கேட்டாராம்.

''நானும் அவரைப்பத்தி கேள்விப்பட்டிருக்கேன். உடனே காரை எடுத்துக்கிட்டுப் போய் நான் அழைச்சிட்டு வரச் சொன்னதாச் சொல்லி கூட்டிவா'' எனச் சொல்லியிருக்கிறார் விக்ரமன்.

என் வீட்டுக்கு வந்து விஷயத்தைச் சொன்னார் ரவிசங்கர்.

நான் எப்போதும் நினைத்துப் பாராட்டும் இயக்குநர்களில் விக்ரமனும் ஒருவர்.'அவர் அழைக்கும்போது 'யோசிக்க நேரமில்லை, உடனே புறப்படு' என புறப்பட்டேன்.

ஆஸ்கர் ஃபிலிம்ஸ் அலுவலகத்தில் விக்ரமனைச் சந்தித்தேன்.

மகிழ்ச்சியோடு வரவேற்றவர், தன் குழுவினரை வெளியே இருக்கச் சொல்லிவிட்டு, என்னிடம் அண்ணன் -தம்பிகள் கதை ஒன்றைச் சொன்னார்.

"என்ன தம்பி? 'புதுவசந்தம்' மாதிரி ஒரு புதுமையான கதையைச் சொல்லுவீங்கனு எதிர்பார்த்து வந்தேன். பழையபாணி கதையைச் சொல்றீங்களே..." என்றேன்.

"இல்ல சார்... தயாரிப்பாளர் ரவி சாருக்கு இந்தக் கதை ரொம்பவும் பிடிச்சுப் போச்சு. அதனால் ஒரு பெரிய தொகையை என்னிடம் கொடுத்துவிட்டார். நானும் இந்தக் கதையையே செய்யணும்னு முடிவு பண்ணிட்டேன். கதையில் ஒரு தேக்கம் ஏற்பட்டிருக்கு. அதனால்தான் உங்களைக் கூட்டிவரச் சொன்னேன்" என்றார்.

"கதைமேல் அப்படி ஒரு நம்பிக்கையும், தைரியமும் இருந்தா நிச்சயம் இது ஜெயிக்கும். இதே மாதிரியான அண்ணன்-தம்பிகள் கதை அம்சத்துடன் ஏற்கனவே ரெண்டு படங்கள் வந்திருக்கு. 'பராசக்தி' படம் வெளியான சமயம் வந்த படம் 'குலதெய்வம்.' அதில் சகஸ்ரநாமம்தான் அண்ணன். அடுத்து, அண்ணனாக ரெங்காராவ் நடிச்சு 'அன்புச் சகோதரர்கள்' படம் வந்தது. இந்த ரெண்டு படங்களோட சி.டி.யும் மார்க்கெட்டில் கிடைக்குது. ரெண்டையும் வாங்கிப் போட்டுப் பாருங்க. அந்த படக்காட்சிகள்லருந்து உங்களுக்கு வேறு பல கற்பனைகள் உதயமாகும். ஏகப்பட்ட நல்ல ஸீன்கள் கிடைக்கும்" என்றேன்.

'பார்க்கிறேன்' என்பதுபோல தலையை மெல்ல அசைத்தார்.

நான் விடைபெற்று வரும்போது கண்ணாடி அறையில் உட்கார்ந்திருந்த ஆஸ்கர் ரவிச்சந்திரன் என்னைப் பார்த்தார். அவர் எனக்கு பழக்கமில்லாததால் பார்த்தும், பார்க்காதது போல் வந்துவிட்டேன்.

மறுநாள் மாலை... என் வீட்டுக்கு ரவிசங்கர் வந்தார். "சார்.. நீங்க சொன்னது போல ரெண்டு படங்களின் சி.டி.யையும் பார்த்துவிட்டார். அதனால் தேங்கியிருந்த கதை சூடு பிடித்துவிட்டது. மளமளனு டைரக்டர் எழுத ஆரம்பிச்சிட்டார். உங்களுக்கு நன்றி சொல்லச் சொல்லி இந்த

செக்கை உங்களிடம் கொடுக்கச் சொன்னார். படம் முடிஞ்சதும் கலைஞானம் சாருக்கு படம் போட்டுக் காட்டுவோம்'னு டைரக்டர் சொல்லியிருக்கார்'' எனச் சொல்லிவிட்டு கிளம்பினார்.

ஐயாயிரம் ரூபாய் தொகைக்கான செக் அது.

மறுநாள்... என் வீட்டுக்கு ஒரு கார் வந்தது.

'' 'ஆஸ்கர்' ரவிச்சந்திரன் சார் உங்களை அழைத்துவரச் சொன்னார்'' என வந்தவர் சொன்னார்.

நான் அவரைச் சந்தித்தேன்.

அவரின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

''கலைஞானம் அண்ணே... நீங்க வந்துபோனதை கண்ணாடி வழியா பார்த்துக்கிட்டுத்தான் இருந்தேன். நீங்க வந்துட்டுப் போன மறுநாளே... கதை பிரமாதமா வந்திருச்சு. 'ஆர்ட்டிஸ்ட் கால்ஷீட் வாங்கி ஷூட்டிங்கை ஆரம்பிச்சிடலாம்'னு விக்ரமன் சொன்னாரு. கொஞ்ச நாளாவே கதை தேக்கத்தில் இருந்தது. 'இது சரியா வருமா? வராதா?'னு சந்தேகம் எனக்கு. ஆனா...நீங்கவந்து போனதும் 'கதை ஓ.கே.னு விக்ரமன் சொல்லீட்டாரே. நீங்க என்ன சொன்னீங்கனு எனக்குத் தெரியாது. ஆனால் விக்ரமனோட சுறுசுறுப்பைப் பார்த்தா... நீங்க ஏதோ ஆலோசனையும், ஒத்துழைப்பும் தந்திருக்கணும். எதுவா இருந்தா என்ன... 'இதோ என்னோட அன்புப் பரிசு' எனச் சொல்லி 25 ஆயிரம் ரூபாய் கொடுத்தார் ரவிச்சந்திரன்.

இதை நான் எதிர்பார்க்கவே இல்லை.

'வானத்தைப் போல' வெளியாகி மிகப்பெரும் வெற்றி பெற்றது.

என் வீட்டுக்கு மீண்டும் கார் அனுப்பினார் ரவிச்சந்திரன். போய்ச் சந்தித்தேன். 'இதை வாங்கிக்கங்கண்ணே' என 25 ஆயிரம் ரூபாய் கொடுத்தார்.

அன்றிலிருந்து நாங்கள் இன்றுவரை சகோதரர்களாகவே பழகிவருகிறோம். தன் வளர்ச்சி குறித்து ஒளிவு மறை வில்லாமல் என்னிடம் சொல்லியிருக்கிறார் ரவி.

''பாக்யராஜ் கைவண்ணத்தில் நீங்க கூட இருந்து ஒரு படம் எடுத்துக் கொடுங்க'' என கேட்டார். இருவருக்கும் பாலமாக இருந்து 'பாரிஜாதம்' படத்தை முடித்துக் கொடுத்தேன். 'கான்வாய்' என்கிற என் கதையை

பி.வாசு இயக்கத்தில் படமாக்க முன்வந்தார் ரவி. ஆனால் அந்தச் சமயம் பி.வாசு, கேரளாவில் இருந்ததால் அந்தப் படத்திட்டம் தள்ளிப்போனது. பிறகு அப்படியே ஆரம்ப கட்டத்திலேயே நின்றும்விட்டது. இருப்பினும் நான் எப்போது சந்தித்தாலும், ஏதோ ஒரு தொகையை எனக்கு அன்பினால் கொடுப்பார். அப்படிப்பட்ட நல்ல உள்ளம், இன்று 'வியாபாரத்தில் அகலக் கால் வைத்ததால் நஷ்டத்திற்கு ஆளாகிவிட்டாரே...' என்கிற கவலை எனக்கு.

ஆஸ்கர் ரவிச்சந்திரன் மீண்டும் சாதனை படைப்பார் என்று நம்பிக்கையுடன் இருக்கிறேன் நான்.

கே.எஸ்.ரவிக்குமாருடனான எனது அனுபவம்.

# ஏவி.எம்.+ ரவிக்குமார் + நான்!

1993-ஆம் ஆண்டு... தயாரிப்பாளர் ஆர்.பி. சௌத்ரியின் ஸ்தாபனத்திற்கு தொடர்ந்து இரண்டு வெற்றிப் படங்களைத் தந்த டைரக்டர் கே.எஸ். ரவிக்குமாரை வைத்து ஒரு படம் தயாரிக்க முடிவு செய்தேன். எடிட்டிங் ரூம் ஒன்றில் அவரை சந்திக்கப் போனபோது என்னைப் பார்த்ததும் 'என்ன சார், என்னையா பார்க்க வந்தீங்க? சொல்லியனுப்பினால் நானே வந்திருப்பேனே?'' என்றார்.
''என் ஆபீசுக்கு வாங்க. அங்கே சென்று பேசுவோம்'' என்றேன்.

அதன்படியே வந்தார்.

''ரவிக்குமார்... உங்களை வைத்து ஒரு படம் எடுக்கவிருக்கிறேன். உங்கள் வசதி எப்படி?'' .

''சார்... நீங்க சொல்லுங்க, எப்போது வேண்டுமானாலும் படம் எடுத்துக் கொடுக்கிறேன்''

''என்ன சம்பளம் எதிர்பார்க்கிறீங்க?''

''நீங்கள் கொடுத்ததை வாங்கிக்கொள்கிறேன்''

''நல்லது. மற்ற விபரங்களை நாளை காலையில் பேசி முடிப்போம்'' என்றேன்.

மகிழ்ச்சியுடன் விடைபெற்றுச் சென்றார் ரவிக்குமார். அவரின் பணிவும் கனிவும் என்னை மிகவும் கவர்ந்தது.

மறுநாள் காலை... ஏவி.எம். ஸ்டுடியோவில் இருந்து போன் வந்தது.

''கலைஞானம் சார்... உங்களுடன் ஏவி.எம். சரவணன் சார் பேசவேண்டுமாம்''

''உடனே லைன் கொடுங்கள்''

''ஹலோ... நான் சரவணன் பேசுறேன்''

"வணக்கம் சார்..."

"வணக்கம். ஒரு கதை தேவைப்படுது. எப்போ உங்களை நான் சந்திக்க வேண்டும்?" என கேட்டார் சரவணன்.



எனக்கு இன்ப அதிர்ச்சி. "என்ன சார் இது... இப்பவே நான் உங்களை வந்து பார்க்கிறேன். இதோ புறப்பட்டு விட்டேன்" என்று சொல்லிவிட்டு என் காரை நானே ஓட்டிக்கொண்டு சென்றேன்.

அப்போது என் நினைவுகள் பின்னோக்கிச் சென்றன.

1953, என் ஒன்றுவிட்ட சகோதரர் கவி கே.பி.காமாட்சி சுந்தரம் 'பராசக்தி' பூசாரியாக நடித்து புகழ்பெற்றிருந்த நேரத்தில்... அவரைப் பார்ப்பதற்காக ஏவி.எம். ஸ்டுடியோவுக்கு நான் சென்றபோது வாட்ச்மேன் என்னை உள்ளே விடவில்லை. நான் கவியின் சகோதரன் என்பதை சொன்னபிறகு... கவி ரெகுலராக வந்து செல்லும் ஒரு பெட்டிக்கடையைக் குறிப்பிட்டு அங்கே விசாரித்துக்கொள்ளச் சொன்னார் வாட்ச்மேன். (இதுபற்றி நான் ஏற்கனவே விரிவாக எழுதியிருக்கிறேன்.)

இன்று 1993-ல் ஏவி.எம். அதிபர் சரவணன் அவர்களே என்னிடம் கதை கேட்டு அழைக்கிறார் என்றால் இதைவிட என் பிறவியில் வேறு என்ன பாக்கியம் வேண்டும்... என்ற மகிழ்ச்சிப் பெருக்கில் கார் ஓடவில்லை. விமானம் போல் பறந்தது.

வணங்கிய கரங்களுடன் சரவணனை சந்தித்தேன். "சார் வணக்கம்"

"வாங்க கலைஞானம். உக்காருங்க" என வரவேற்றவர், "கலைஞானம்... 'சம்சாரம் அது மின்சாரம்' போல் ஒரு பட்ஜெட் படம் எடுக்கணும்.

அதற்குத் தகுந்தாற்போல ஒரு கதை தேவை'' என்று சொல்லிக்கொண்டே அலாரம் அடித்தார். டீ வந்தது.

நான் டீ குடித்துக்கொண்டிருந்தபோதே... சரவணனின் தம்பி பாலசுப்ரமணியமும், 'எஜமான்' பட நிர்வாகி நாகராஜாராஜாவும் அங்கு வந்து உட்கார்ந்தனர். அவர்களுக்கும் வணக்கம் செலுத்திவிட்டு, எனக்கே உரிய பாணியில் தட்டுத் தடங்கலின்றி ஒரு கதையைச் சொல்லி முடித்தேன்.

சரவணன், தன் தம்பியைப் பார்த்தார். நாகராஜராஜா வையும் பார்த்தார். அவர்கள் 'ஓ.கே'. என்று முழுமனதுடன் சொன்னதும், ''இதற்கு யாரை டைரக்டராகப் போடலாம்'' என்றார் சரவணன்.

''கே.எஸ்.ரவிக்குமாரைப் போடலாம். சமீபத்தில் ஆர்.பி.சௌத்ரிக்கு இரண்டு படங்கள் இயக்கி, நல்லபேர் பெற்றிருக்கிறார்'' என்றேன்.

''நாளைக்கு அவரை ஏற்பாடு செய்கிறேன்'' என்றார்.

''நானே அழைத்து வருகிறேன்'' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டேன்.

மறுநாள். கே.எஸ்.ரவிக்குமாரை என் அலுவலகத்திற்கு அழைத்துவரச் செய்தேன். ''ரவி... உங்களுக்கு ஒரு பெரிய இடத்தில் வாய்ப்பு ஏற்படுத்தியிருக்கிறேன். நேற்று ஏவி.எம். சரவணன் சாரிடம் ஒரு கதை சொன்னேன். ஓ.கே. ஆகிவிட்டது. டைரக்ஸன் செய்ய உங்களை சிபாரிசு செய்தேன். அவரும் ஓ.கே. சொல்லிவிட்டார். இது உங்களுக்கு கிடைத்த மிகப்பெரிய அதிர்ஷ்டம். நீங்கள் 50நாள் படம் எடுத்துக் கொடுத்தாலும், விளம்பரம் மூலம் அதை100 நாள் படமாக நன்றாக ஓடவைப்பார்கள் ஏவி.எம். நிறுவனத்தார். அத்துடன் நீங்கள் ஏவி.எம். டைரக்டர் என்று பேர்பெற்றுவிட்டால்... அந்தப் பெருமை உங்களுக்கு கூடுதல் புகழைச் சேர்க்கும்'' என விஷயத்தைச் சொல்லிவிட்டு சரவணனிடம் சொன்ன கதையை, ரவிக்குமாரிடமும் சொன்னேன். அத்துடன் 'இது பட்ஜெட் படம்' என்கிற விபரத்தையும் வலியுறுத்திச் சொன்னேன்.

''சார்... என்னைவெச்சு நீங்க படமெடுக்கத்தானே பேசுனீங்க?'' என்றார் ரவிக்குமார்.

''அதுதான் உண்மை. ஆனாஎதிர்பாராதவிதமாஏவி.எம்.ல இருந்து அழைப்பு வந்தது. இது இருவருக்குமே நல்ல காலம். முதலில் ஏவி.எம்.முக்கு படம் செய்து கொடுத்துவிட்டு அப்புறம் எனக்கொரு படம் செய்து கொடுங்கள். நான் இப்போ உங்களை வைத்து படம் எடுப்பதை

விட ஏவி.எம். போன்ற பெரிய ஸ்தாபனத்தில் தொழில் செய்து வெற்றி கொடுப்பது தான் நமக்கு பேரும் புகழும் கிடைக்கச் செய்யும். அந்த ஜோரிலேயே நான் படம் எடுத்தால் அது வியாபார ரீதியாகவும் உதவியாக இருக்கும்'' என்றேன். அவரும் ஒப்புக்கொண்டார்.

இருவரும் சரவணனைச் சந்தித்தோம். அறிமுகங்கள் அரங்கேறின.

''இது பட்ஜெட் படம். 50 லட்சத்துக்குள்ள எடுக்கணும்னு கலைஞானத்திடம் சொல்லியிருக்கேன். அதற்குமேல் ஆகக்கூடாது. நீங்கள் என்ன பட்ஜெட்டில் எடுத்துக் கொடுப்பீர்கள்? தனியாக உட்கார்ந்து நன்றாக சிந்தித்து பட்ஜெட் எழுதிக்கொண்டு வாருங்கள்'' என ரவிக்குமாரிடம், சரவணன் சொன்னார்.

நானும் ரவியும் தனியாக உட்கார்ந்து ஆலோசித்தோம். ஹீரோ, ஹீரோயின், மற்ற நட்சத்திரங்கள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு என்ன சம்பளம் என்பதை எழுதினார். என்னுடைய கதைக்கு எனக்கு ஒரு லட்சம் சம்பளம் எழுதினார். கூட்டிப் பார்த்தபோது பட்ஜெட் தொகை 55 லட்சத்தைத் தாண்டி நின்றது.

''ரவி... '50 லட்சத்திற்கு மேல் ஒரு ரூபாய் கூட அதிகமாகக் கொடுக்கமாட்டேன். 50-க்குள் எடுத்துக்கொடுங்கள்' என்று சரவணன் சார் சொல்லிவிட்டார். அதனால் உங்கள் சம்பளத்தையும், என் சம்பளத்தையும் குறைப்போம். முதலில் என் கதைக்கு ஒரு லட்சம் என்பதை ஐம்பதாயிரமாக குறையுங்கள்'' என்றேன்.

ரவிக்குமாருக்கு ஒரே வியப்பு. ''என்ன சார்... பாதி சம்பளத்தை குறைத்துக்கொண்டீர்கள்?'' என்றார்.

''சம்பளம் என்பது நாமாகத்தானே எழுதிக்கொண்டோம். நான் சொல்வதை கவனத்தில் வையுங்கள். ஒரு பெரிய ஸ்தாபனம் நமக்கு ஒரு வாய்ப்பு கொடுத்திருக்கிறது. இங்கே பணத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது. நல்ல பெயர் வாங்க வேண்டும். அதுதான் நாம் சம்பாதிக்கும் செல்வம்'' என்றேன்.

''அதற்காக இப்படி பாதியாகக் குறைத்துக் கொண்டீர்களே?'' என சங்கடப்பட்ட ரவிக்குமார், ''சரிங்க சார்... நானும் என் சம்பளத்தில் குறைத்துக்கொள்கிறேன், அதேசமயம் ஒன்று சொல்கிறேன்... இந்தப் படத்தின் ரிலீஸின்போது என் சம்பளத்திலிருந்து 25 ஆயிரம் ரூபாய் உங்களுக்குக் கொடுக்கிறேன்'' என்றார்.

"அது உங்கள் இஷ்டம்'' என்றேன்.

நடிகர்கள் செல்வா, விஜயகுமார், மஞ்சுளா, கனகா ஆகியோர் நடிக்க... இளையராஜா இசையில் 'சக்திவேல்' என்ற தலைப்பில் படம் எடுத்து வெளியிடப்பட்டது. ஆனால் படம் சரியாகப் போகவில்லை. அதற்கு ஒரு காரணம் இருக்கிறது.

நான் சொன்ன கதையை மட்டும் எடுக்காமல், கிளைக் கதை ஒன்றை இந்தக் கதையில் ரவிக்குமார் சேர்த்துவிட்டார்.

அதென்ன கிளைக் கதை?

அது... கே.எஸ்.ரவிக்குமாரின் குடும்பத்தில் நடந்த ஒரு துயரக் கதை.

# அந்த பத்தாயிரம்!

ஏவி.எம். தயாரிப்பில், எனது கதையில் கே.எஸ்.ரவிக் குமார் இயக்கிய 'சக்திவேல்' படம் சரியாகப் போகவில்லை. அதற்கு ஒரு காரணம் உண்டு. நான் சொன்ன கதையை மட்டும் எடுக்காமல், கிளைக் கதை ஒன்றைச் சேர்த்தார் ரவிக்குமார். அது ரவிக்குமாரின் குடும்பத்தில் நடந்த சோகக் கதை.

ரவிக்குமாரின் குடும்பம், கிராமம் ஒன்றில் குடியிருந்தது. அந்த கிராமத்தில் அவர்களின் குலதெய்வமான அம்மன் கோயில் இருந்தது. ரவிக்குமாரின் சித்தப்பாதான் அந்தக் கோயிலின் பூசாரி.

ஒரு காலகட்டத்தில் ரவிக்குமாரின் குடும்பம் சென்னைக்கு இடம்பெற முடிவுசெய்து கிளம்பினார்கள். அப்போது பூசாரியான சித்தப்பா... "நீங்களெல்லாம் மெட்ராஸுக்கு போயிட்டா, நான் மட்டும் இந்த கிராமத்துல இந்த அம்மன் கோயிலே கதினு இருக்கணுமா? நானும் மெட்ராஸ் வருவேன்" எனச் சொல்லியபடி வேகமெடுத்த பஸ்ஸில் ஓடிவந்து ஏறினார்.

கால் தவறி கீழே விழுந்தார்.

பஸ்ஸின் பின்சக்கரம் அவரின் தொடையில் ஏறி இறங்கியது.

மருத்துவமனைக்கு தூக்கிக்கொண்டு ஓடினார்கள்.

அங்கே... அவரின் ஒருகால் தொடைக்குச் சற்று கீழிலிருந்து வெட்டி அகற்றப்பட்டது மருத்துவர்களால்.

கோயிலை விட்டுவிட்டு வர நினைத்ததால் அம்மன் கொடுத்த தண்டனை என முடிவு செய்து மீண்டும் அவரை கோயில் பூசாரியாக்கினார்கள்.



நடுத்தர வயதில் ஒரு காலை இழந்த தன் சித்தப்பாவின் சோகத்தை 'சக்திவேல்' படத்தில் காட்சிப்பூர்வமாக எடுத்துக்காட்டினார் ரவிக்குமார்.

'மயூரி' படத்தில் சுதாசந்திரன் தன் முறிந்த காலைக் காட்டியதுபோல், இந்தப் படத்தில் தன் சித்தப்பாவையே நடிக்க வைத்து, சித்தப்பாவின் முறிந்த கால்களைக் காட்டினார் ரவிக்குமார்.

இது மிகவும் உணர்ச்சிப்பூர்வமான உண்மைச் சம்பவம். முழுக்கதையும் அவரை வைத்துப் பயணிப்பதாக இருந்தால் இது பெரிய சோகச் சித்திரமாகியிருக்கலாம். ஆனால் நான் எழுதிய கதைக்குப் பொருத்தமாக இல்லாததால்... ரெண்டும் கெட்ட கதையாகிவிட்டது. 'சக்திவேல்' படம் சரியாகப் போகவில்லை.

படம் வெளியாகும்போது எனக்கு 25ஆயிரம் ரூபாய் தருவதாகச் சொல்லியிருந்த ரவிக்குமார், அதை மறந்தேவிட்டார்.

கிட்டத்தட்ட 15 வருடங்களுக்குப் பிறகு... ரவிக்குமார் பேரும் புகழும் பெற்றுவிட்ட நிலையில்...

எனக்குக் கொஞ்சம் பண நெருக்கடி ஏற்பட்டதால்... அது என் நினைவுக்கு வந்தது.

"ரவிக்குமார் இப்போது வசதியாகத்தானே இருக்கார். ஒரு தமாசுக்காகவாவது அவர் தருவதாகச் சொன்ன தொகையை கேட்டுப் பார்க்கலாம்'' என அவருக்கு போன் செய்தேன்.

"ரவிக்குமார், ஏவி.எம். படத்துக்காக எனக்கு 25 ஆயிரம் தர்றதாச் சொன்னீங்களே... என்ன ஆச்சு?" எனக் கேட்டு சிரித்தேன்.

மறுநாளே... 15 ஆயிரம் ரூபாய் கொடுத்து அனுப்பினார். அதிலும் ஒரு சிக்கனம்... பத்தாயிரம் ரூபாயை நிறுத்திக் கொண்டார்.

ஒருவேளை, 'எங்களுக்குள் உறவு தொடரவேண்டும்' என்ற பெருந்தன்மையாக இருக்கலாம்.

எப்படியோ... ஏவி.எம்.மில் இவரை நான் பரிந்துரைத்து அறிமுகம் செய்து வைத்தது இவர் பெரிய டைரக்டராக வரவேண்டும் என்கிற பேராசையில்தான். என் பேராசை நிறைவேறிவிட்டது.

அதன்பிறகு, எங்கேயாவது தப்பித் தவறி என்னைப் பார்த்தாலும், அங்கேயே நின்று ஒரு சிறு புன்னகையோடு நிறுத்திக்கொள்வார்.

சிந்தனையாளர்களெல்லாம் அப்படித்தான் இருப்பார்கள் என்று நானும் கையசைத்துச் சென்றுவிடுவேன்.

1970-71-ல்... 'வெகுளிப்பெண்' படத்திற்கு கதை எழுதியதுடன் கம்பெனி நிர்வாகியாகவும் வேலை பார்த்து வந்தேன். நடிகை தேவிகாவின் கணவர் தேவதாஸ் இயக்கினார். இருவரும் தயாரிப்பு பொறுப்பிலும் இருந்தார்கள். பாட்டெழுத வரும் கவியரசர் கண்ணதாசனுடன், அவரின் அண்ணன் மகன் பஞ்சு அருணாசலமும் வருவார். கவிஞரின் பாடலை பஞ்சுதான் காப்பி எடுப்பார். இதற்கு ஒரு பாடலுக்கு நூறு ரூபாய் வீதம் பஞ்சுவுக்கு பெற்றுத் தருவார் கவிஞர்.

"வெகுளிப்பெண்'' படத்தில் இரு பாடல்களை காப்பி எடுத்ததற்கு பணம் தரப்படவில்லை. அதைக்கேட்டு அடிக்கடி வருவார் பஞ்சு. அவர் எனக்கு அறிமுகமில்லை என்றாலும் ஒரு எழுத்தாளனை அலையவிடுவதை சக எழுத்தாளனான என்னால் பொறுக்க முடியாமல், கம்பெனி மேனேஜரை திட்டித் தீர்த்தேன். இதனால் மேனேஜர் என்னைப் பற்றி தேவிகாவிடம் வத்தி வைக்க, என்னை தயாரிப்பு நிர்வாக பொறுப்பிலிருந்து நீக்கிவிட்டார்கள்.

இதை நான் ஏற்கனவே விலாவாரியாக எழுதியிருக்கிறேன்.

**1974**-வாக்கில் பஞ்சு எழுதிய 'மயங்குகிறாள் ஒரு மாது' கதை விவாதம் ஒரு கட்டத்திற்கு மேல் தேங்கி நின்றது. ஒரு இந்திப் படத்தை உதாரணம் காட்டி அரைமணி நேரத்தில் தெளிவான திரைக்கதை அமைய, நான் காரணமாக இருந்தேன்.

இது குறித்தும் நான் விலாவாரியாக ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்.

சில ஆண்டுகளுக்குப் பின்... பஞ்சுஅருணாசலத்தை நான் சந்தித்தபோது...

''கலைஞானம், நான் தயாரிப்பாளர் விஜயபாஸ்கருக்கு 'மங்கம்மா சபதம்' என்கிற படத்திற்கு கதை-வசனம் எழுதியதும், அந்தப் படம் சூப்பர்ஹிட் ஆனதும் உங்களுக்குத் தெரியும். அந்தக் கதையின் உரிமையை விஜயபாஸ்கருக்கே கொடுத்துட்டேன். இப்போ அந்தக் கதையை கேயார் டைரக்ஸனில் மீண்டும் படமா எடுக்க முடிவு செஞ்சிருக்கேன். விஜய பாஸ்கருக்கும், எனக்கும் ஏற்கனவே கருத்து வேறுபாடு இருக்கு. அதனால் நான் கேட்டால் கதையைக் கொடுக்கமாட்டார். ஆனா நீங்க கேட்டா கொடுப்பார். இதுல பத்தாயிரம் ரூபாய் இருக்கு. இதை அவர்கிட்டக் குடுத்து எப்படியாவது, அந்தக் கதையை வாங்கிடுங்க. அந்தக் கதையை வச்சு நான் எடுக்கிற படத்தில் வரும் லாபத்தில் உங்களுக்கும் பங்கு தர்றேன்'' என்றார் பஞ்சு.

பணத்துடன் விஜயபாஸ்கரை சந்திக்க சென்றேன். என்னைப் பார்த்ததும் ஓடோடி வந்து வரவேற்று ''என்னண்ணே... இந்தப்பக்கம்'' என கேட்டார்.

''உங்ககிட்ட இருந்து ஒரு உதவி...''"

''சொல்லுங்கண்ணே செய்றேன்''’என்றார். அதற்குள் அவரின் மனைவி காபி கொண்டுவந்து கொடுத்து, வணக்கம் தெரிவித்தார்.

''பஞ்சு எழுதின ‘மங்கம்மா சபதம்' கதையை மறுபடி படம் எடுக்கலாம்னு இருக்கேன். ரைட்ஸ் உங்ககிட்ட இருக்கிறதா கேள்விப்பட்டேன்''

''நீங்க தயாரிக்கிறதா இருந்தா தாராளமா கதையைக் கொடுக்கிறேண்ணே'' என்றார்.

பத்தாயிரம் பணத்தைக் கொடுத்து, முறைப்படி எழுதி வாங்கிக்கொண்டு புறப்பட்டேன்.

கார் வரை வந்து வழியனுப்பி வைத்தார்.

விஜயபாஸ்கரிடம் எழுதி வாங்கிய பத்திரத்தை பஞ்சுவிடம் கொடுத்தேன். அதை வாங்கி பீரோவில் வைத்துவிட்டு, பத்தாயிரம் ரூபாய் கொண்ட நோட்டுக்கட்டு ஒன்றை என்னிடம் புன்முறுவலுடன் கொடுத்தார். 'இந்தப் பணம் எதற்கு?' என நானும் கேட்கவில்லை. பஞ்சுவும் சொல்லவில்லை. ஆனால் அதன் அர்த்தம் எனக்குத் தெரியும்.

லாபத்தில் உங்களுக்கு பங்கு தருவதாகச் சொன்ன பிறகு யோசித்துப் பார்த்தேன். 'சில பிரச்சனைகள் வரலாம் என்றுதான் முன்கூட்டியே பத்தாயிரம் கொடுக்கிறேன்' என்பதாக எடுத்துக்கொண்டு மகிழ்ச்சியுடன் பணத்தை வாங்கிக்கொண்டு புறப்பட்டேன்.

எனக்கு இது பழகிப்போன் ஒன்றுதானே.

'மங்கம்மா சபதம்' படக்கதை ‘வனஜா கிரிஜா' என்ற பெயரில் ரீ-மேக் செய்யப்பட்டு, ரிலீஸாகி சூப்பர்ஹிட் ஆனது.

எனக்கு அந்தப் படத்தில் சம்பந்தமில்லை என்பதை அறிந்த விஜயபாஸ்கர், 'இப்படிச் செஞ்சிட்டீங்களே? பஞ்சு அருணாசலத்துக்காகவா இப்படி பொய்சொல்லி என்னிடம் கதையை வாங்கணும்’ என ஏதேதோ சொல்லி வருத்தப்பட்டார். இப்படியெல்லாம் வரும் என்று எதிர்பார்த்ததுதான். ஆனால் பஞ்சுவின் மீது நான் வைத்திருந்த அன்பு மிகுதியானது. அதனால் விஜயபாஸ்கர் என் மீது கூறிய குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொண்டேன்.

பஞ்சு ஒரு ஜென்டில்மேன் என்பது யாவரும் அறிந்ததே. எப்போதும் சிரித்த முகத்துடன் இருப்பார். யாரிடமும் கோபித்துப் பேசியதே இல்லை. ஒருவேளை வீட்டில் எப்படியோ? அது எனக்குத் தெரியாது. அவர் எடுத்த படங்கள் சூப்பரான வெற்றியைப் பெற்றாலும் கர்வம் கொள்ளமாட்டார். தோல்வியடைந்தால் துவண்டும் போகமாட்டார். அவர் சிகரெட் பிடித்தபடி வரும் சிங்கம்... தயாள சிந்தனையில் தங்கம்.

இளையராஜா -பாக்யராஜ் கருத்து வேறுபாடால் நின்ற படம்... மீண்டும் உருவானது.

# ராசுக்குட்டி ரவுசு!

"கலைஞானம்... நீங்க ஒரு காரியம் பண்ணணும்" என்றார் பஞ்சு அருணாசலம்.

'சொல்லுங்க'

"ஒரு சந்தர்ப்பத்துல பாக்யராஜ் எனக்கொரு படம் செஞ்சுதர ஒப்புக்கொண்டிருந்தார். அந்த நேரத்துல இளையராஜாவுக்கும் பாக்யராஜுக்கும் ஒரு சிறு கருத்து வேறுபாடு. அதனால் பாக்யராஜ் படத்துக்கு இளையராஜா இசையமைக்க விரும்பலை. இளையராஜா இல்லாமல் நானும் படம் எடுக்க விரும்பல. அதனால் அந்தப்படத்தை எடுப்பதில் தடங்கல் ஏற்பட்டது. சில வருஷங்கள்ல... இளையராஜா-பாக்யராஜ் கருத்து வேறுபாடு காத்துல பறந்திருச்சு. எங்களுக்குள்ள மனமும் கனிந்துவிட்டது. அதனால் நீங்க பாக்யராஜிடம் பேசி... ஏற்கனவே எனக்கு அவர் எடுத்துத் தர ஒப்புக்கொண்ட படத்தை மறுபடி எடுக்க ஏற்பாடு செய்யுங்களேன்" என்றார்.

பாக்யராஜிடம் விஷயத்தைச் சொன்னேன்.

உடனடியாக 'ராசுக்குட்டி' படத்தை பஞ்சுவுக்காக ஆரம்பித்தார் பாக்யராஜ்.

பாக்யராஜ், லட்சுமி மகள் ஐஸ்வர்யா, கல்யாண்குமார், மனோரமா ஆகியோர் நடிப்பில் மேட்டூரில் படப்பிடிப்பு நடந்துவந்தது. கதைப்படி பாக்யராஜ் ஜாலி பேர்வழி. எந்த வேலையும் செய்யாமல் ஊர் சுற்றிக்கொண்டும், சீட்டாடிக் கொண்டும் இருப்பார். 'இப்படி உருப்படாத புள்ளையப் பெத்திட்டியே' என கல்யாண்குமார் தன் மனைவி மனோரமாவை கண்டிப்பார்.



''ஏண்டா இப்படி பொறுப்பில்லாம திரியுற? உன் ஐயன் பாராட்டுற மாதிரி... நம்ம தோட்டத்து வேலைகளை கவனிடா''என்பார் மனோரமா.

உடனே பாக்யராஜ் ஏரில் இரண்டு மாடுகளைப் பூட்டி ஒரு ஏக்கர் நிலத்தை அரை மணி நேரத்தில் உழுது முடிப்பார்.

அவர் உழுவதை ஒரு பெரியவர் பார்த்துக்கொண்டி ருப்பார்.

''என்ன பெரிசு... என்னயவே பார்க்குற? என் ஐயன் என்னய 'சோம்பேறி... ஒண்ணுக்கும் உதவாதவன்னு சொல்லி குத்திக் காட்டுறார். என் திறமையையும், புத்திசாலித்தனத்தையும் அவர்கிட்ட காட்டி பாராட்டு வாங்கத்தான் அரைமணி நேரம்கூட ஆகல... ஒரு ஏக்கர் நிலத்தை உழுது முடிச்சிட்டேன். எப்படி என் திறமை''எனக் கேட்பார் பாக்யராஜ்.

"உன்னோட திறமையை ஊருக்குள்ள போய் சொல்லீராத. பாவிப்பயலே நீ உழுத நிலம் என்னோட நிலம். நேத்துத்தான் பத்தாயிரம் ரூபாய் செலவுபண்ணி விதை விதைச்சேன். அதை இப்படி பாழ்படுத்தீட்டியே''என பெரியவர் திட்ட... விஷய மறிந்து மனோரமா ஓடிவந்து "அய்யா... அவனை ஒண்ணும் சொல்லாதீக. அவன் பொறந்ததிலருந்தே எங்கநிலத்துப் பக்கமே வராம செல்லமா வளர்த்துட்டேன். உங்களுக்கு ஏற்பட்ட நஷ்டத்தை நான் கொடுத்துடுறேன். இவனோட ஐயன்கிட்ட மட்டும் இதை சொல்லீடாதீங்க''என்பார்.

"இந்த மாதிரி புள்ளய பெத்ததுக்கு ஒரு அம்மிக்கல்லை பெத்துருக்கலாம்'' என்பது போல கடுப்பாக பார்ப்பார் பெரியவர்.

பாக்யராஜ் திக்குமுக்காடி திருட்டுமுழி முழிப்பார் பாருங்க... இந்தக் காட்சிக்கு தியேட்டர்களில் சிரிப்பும், கரவொலியும் ஓய வெகுநேரமாகும்.

"எதையாவது சாதிக்காமல் ஐயன் முகத்தில் முழிக்கக் கூடாது'' என முடிவு செய்த பாக்யராஜ், தோட்டத்துப் பக்கம் போவார். அங்கே புடலங்காய் பந்தலில் காய்கள் எல்லாம் குட்டையாக காய்த்துத் தொங்கும். "புடலங்காய் நுனியில் கல்லைக் கட்டிவிட்டா நீளமா வளரும்'' என யாரோ சொன்னது பாக்யராஜின் நினைவுக்கு வரும்.

கற்களைப் பொறுக்கி ஒவ்வொரு புடலங்காயிலும் கட்டுவார். தொங்குகிற ஐம்பது காய்களிலும் கல்லைக் கட்டி முடித்ததும் மீதமுள்ள ஒரு கல்லை கையில் வைத்துக்கொண்டு "இதை எதுல கட்டுறது?''என யோசனையாக சுற்றுமுற்றும் பார்ப்பார். அப்போது 'என்னண்ணே... எதையோ தேடுறீங்க?' என அங்கே வரும் பாக்யராஜின் அஸிஸ்டெண்ட் கேட்பார்.

'இந்தக் கல்லை எங்க கட்டுறதுனு தெரியல...' என்றபடி அவரை நோக்கி நடக்க... கயிறும் கல்லுமாக தன்னை நோக்கி வரும் பாக்யராஜைப் பார்த்து விபரீதமாக யோசித்து 'எதையோ செய்யப்போறாரே' என ஓட்டமெடுப்பார் அஸிஸ்டெண்ட். பாக்யராஜும் பின்னாலேயே துரத்தி ஓடுவார்.

இந்தக் காட்சியிலும் ரசிகர்களின் சிரிப்பு தியேட்டரை உலுக்கிவிட்டது. 'ராசுக்குட்டி' படத்திற்காக நான் சொன்ன பல காட்சிகளில், இரண்டு காட்சிகள் இவை. கோடிக்கணக்கான மக்களை சிரிக்க வைக்கும் பாக்யராஜை, நான் சிரிக்க வைக்கும்போது அதில் எனக்கு ஒரு அலாதி மகிழ்ச்சி ஏற்படும்.

'ராசுக்குட்டி' படப்பிடிப்பு மேட்டூரில் நடந்தபோது நாங்கள்லாம் ஒரு ஹோட்டலில் தங்கியிருந்தோம். பஞ்சு அருணாசலத்தின் கம்பெனி நிர்வாகிகள் குள்ளகோபால் மற்றும் நெடுமாறன் ஆகிய இருவரும் அதே ஹோட்டலில் எனது அறைக்குப் பக்கத்து அறையில் தங்கியிருந்தனர். இவர்கள் இருவரும் மிகச்சிறப்பாக நிர்வாகம் செய்வதோடு, அனைவரிடமும் அன்போடு பேசிப் பழகுவதில் தனித்திறன் கொண்டவர்கள்.

ஷூட்டிங் முடிந்து அறைக்குத் திரும்பியதும் இரவில் இருவரும் மது அருந்துவார்கள். இது அவர்களின் அன்றாட வழக்கம். அன்று நள்ளிரவுவரை குடித்துக் கொண்டே இருந்தார்கள். மது தீர்ந்துவிட்டது. குள்ள கோபாலுக்கு மதுபோதை தலைக்கு மேல் ஏறி, தாண்ட வமாடத் தொடங்கிவிட்டது. "எனக்கு இன்னும் ஒரு பாட்டில் வேணும்" என்றார்.

"இதுக்கு மேல குடிக்கிறது சரியா இருக்காது" என நெடுமாறன் சொல்ல... "பாட்டில் வரலேன்னா நான் மாடியிலருந்து குதிப்பேன்" என கோபால் கதவைத் திறந்து வெளியே வந்துவிட்டார்.

அவரைப்பிடித்து இழுத்து வந்து மெத்தையில் போட்டுவிட்டு 'ஏண்டா... இப்படி நாலடியில் இருந்துக்கிட்டு இம்புட்டு அநியாயம் பண்ற?. இந்த அர்த்த ராத்திரியில எங்க போய் பிராந்தி வாங்குறது?' எனச் சொல்லிவிட்டு, அவரை உள்ளே வைத்து வெளிப்புறமாக கதவைப் பூட்டிவிட்டு போதையோடு நெடுமாறன் வெளியே கிளம்பினார்.

நாலடி மனிதன் ஃபுல் போதையில் சிகரெட் பிடித்தபடி மெத்தையில் மல்லாந்து கிடந்தார்.

விரலிடுக்கில் இருந்த சிகரெட் நழுவி மெத்தையில் விழுந்திருக்கிறது. மெத்தை பற்றிக்கொண்டு உள்ளூர புகைந்து அப்படியே நாலடி மனிதரின் லுங்கியில் தீப்பிடிக்க....

தீப்பிழம்பும், புகையும் ஜன்னல் வழியே பரவ...

இதைக் கவனித்த ஹோட்டல் ஊழியர்கள் "தீ... தீ..." என்று கத்தினார்கள்.

இந்தக் களேபரத்தால் பக்கத்து அறையில் இருந்த நானும் எழுந்து வெளியே வந்தேன்.

ஹோட்டலே பரபரத்தது.

இந்த நேரம் வெளியே போயிருந்த நெடுமாறன் திரும்பி வந்தார். விபரீதம் உணர்ந்து பதட்டத்துடன் அறையின் ஜன்னல் வழியே பார்த்தார்.

எரிந்த மெத்தையில் கருகிச் சுருண்டு கரிக்கட்டையாய்....

"அடப்பாவி... எரிஞ்சு சாம்பலாயிட்டியா?" என தனக்குள் பதறிய நெடுமாறனுக்கு போதை போன திசை தெரியவில்லை. ஏரியாவை விட்டே எடுத்தார் ஓட்டம்.

நாங்கள் அறைக்கதவை உடைத்துத் திறந்து தண்ணீரை ஊற்றி தீயை அணைத்தோம்.

அறைக்குள் சென்று பார்த்தோம். கழிவறைக் கதவு திறந்திருந்தது. நிர்வாண நிலையில் கரும்புகை படிந்த உருவமாக கோபால் சரிந்து விழுந்தார்.

அவரைத் தூக்கிக்கொண்டு போய் மருத்துவமனையில் சேர்த்தோம். அவரின் வாய்க்குள் எதையோ விட்டு, புகையை எடுத்த டாக்டர்... "கொஞ்சம் தாமதிச்சிருந்தாலும் இந்த ஆளைக் காப்பாத்தியிருக்க முடியாது" என்றார்.

கண்விழித்த கோபால் திக்கித் திணறி நடந்ததைச் சொன்னார். அதாவது... கைலி வேட்டியில் தீப்பிடித்ததும் சுதாரித்த கோபால் கைலியை அவிழ்த்துப் போட்டுவிட்டு வெளிக்கதவு என நினைத்து கழிவறைக் கதவைத் திறந்து உள்ளே போயிருக்கிறார். அங்கே புகை குழுமி மூச்சுத் திணறி மயக்கமடைந்திருக்கிறார்.

நெடுமாறன் ஜன்னல் வழியே பார்த்தபோது... பெட்டில் இருந்த மிகப்பெரிய டன்லப் தலையணை எரிந்து சுருண்டு கிடக்க... குள்ளமான கோபால்தான் எரிந்து கிடப்பதாக நினைத்து, தன்னை போலீஸார் கைது செய்துவிடுவார்களோ... என்கிற பயத்தில் ஓடிய நெடுமாறன் ஒரு லாரி மூலம் வேறொரு ஊருக்குப் போய்விட்டார். அங்கே இருந்தபடி ஹோட்டலுக்கு போன் போட... 'கோபால் காப்பாற்றப்பட்டார்' என்கிற விபரம் தெரிந்ததும், மீண்டும் இங்கு வந்தார்.

புகையோ, பகையோ இல்லாமல் 'ராசுக்குட்டி' படம் வெளியாகி பெரும் வெற்றி பெற்றது. இதில் எனக்கு மிக்க மகிழ்ச்சிதான். காரணம்... பஞ்சு அருணாசலத்தின் கூடவே இருந்து ஒரு படம் எடுத்துக் கொடுக்க உதவினேன் என்பதே. பஞ்சுவின் குடும்பத்திற்கு என் வாழ்த்துகள் எப்போதும் நிறைவாக இருக்கும்.

# சைபர் ஆன மைனர்!

1960-61வாக்கில்... குன்னக்குடி வைத்தியநாதனும், நானும் மந்தைவெளியில் டி.எம்.சௌந்தர ராஜனுக்கு சொந்தமான வீட்டில் பக்கம் பக்கமாக குடியிருந்தோம். அப்போது நான் நாடகங்களுக்குப் பாட்டெழுதி வந்தேன். ஓய்வு நேரத்தில் கொல்கத்தா சென்று ஃபேக்டரியிலிருந்து புதிய அம்பாஸிடர் கார்களை சென்னைக்கு ஓட்டிவரும் வேலையைச் செய்து வந்தேன். (இந்த கார் ஓட்டிவரும் பணியில் எனக்கு ஏற்பட்ட த்ரில்லான அனுபவங்களை நான் ஏற்கனவே சொல்லி யிருக்கிறேன்)
சூலமங்கலம் ராஜலட்சுமி குழுவில் வயலின் வாசித்து வந்தார் குன்னக்குடி. அந்தச் சமயம் குன்னக்குடிக்கு தனியாக கச்சேரி செய்து வாசிக்க வேண்டும் என்கிற ஆசை. அதற்கு ஒரு பாட்டு எழுதித்தர வேண்டி என்னிடம் கேட்டார். நானும் அருணகிரிநாதர் மீது ஒரு பாடலை எழுதிக் கொடுத்தேன். அந்தப் பாடலை முதன்முதலில் தன் தனிக் கச்சேரியில் வாசித்து பெயர் பெற்றார். அன்று முதல் நானும், அவரும் நெருக்கமான நண்பர்களானோம்.

சில ஆண்டுகள் கடந்தள.

நான் சினிமாவில் கதாசிரியராக, வசனகர்த்தாவாக ஆகி விட்டேன். குன்னக்குடி திரைப்பட இசையமைப்பாளராகி விட்டார். அந்தசமயம் சொந்தப்படம் தயாரிக்க முடிவு செய்த குன்னக்குடி, விஜயா லேப் நிர்வாகி ரெங்கநாதனுடன் சேர்ந்து ஒரு ஃபைனான்ஸியரையும் ஏற்பாடு செய்துவிட்டார். இருவரும் என்னிடம் கதை கேட்டு வந்தனர்.

'மைனர் கெட்டா... மாமா' என்கிற பழமொழியை மையமாக வைத்து, ஒரு உண்மைக் கதையைச் சொன்னேன். அவர்களுக்கு கதை ரொம்பவே பிடித்துவிட்டது.



உடனடியாக படப்பிடிப்பையும் தொடங்கிவிட்டார்கள். கதாநாயகனாக தேங்காய் சீனிவாசன் நடித்தார். ஆறாயிரம் அடிவரை படம் எடுத்த நிலையில் பணம் கிடைக்காததால் படம் தடங்கலாகி நின்றது. 'நண்பர் கலைஞானம்தானே' என என் கதைக்கு அவர்கள் ஒருபைசா கூட அட்வான்ஸ் கொடுக்கவில்லை என்பது வேறு விஷயம்.

படம் பாதியில் நின்ற நிலையில் குன்னக்குடி என்னை வந்து பார்த்தார்.

"கலைஞானம்... உங்களுக்கு டைரக்டர் ஏ.பி.நாகராஜன் அறிமுகமா?"

"சினிமாவில் பார்த்ததுதான். ஆனால் நேரடி அறிமுக மில்லை. ஆனால் என்னோட பெரும் மதிப்பிற்குரியவர்" என்றேன்.

"உங்க'மைனர் மாமா' கதையை சிலர் வரவேற்கிறாங்க. சிலர் ராங் செண்ட்டிமெண்ட்டுனு சொல்றாங்க.படத்தை தொடர்ந்து எடுக்க முடியல. ஃபைனான்ஸ் பண்ணியவர் தான் இந்தப் படத்துக்கு முதலாளி. ஆனா அவரைப் பார்க்கவேமுடியல. நானும் லேப் ரெங்கநாதனும்படத்தின் வொர்க்கிங் பார்ட்னர் மட்டும்தான் என்பது உங்களுக்குத் தெரியும்ல. நானே கடன் வாங்கி படத்தை எடுத்து முடிக்கலாம்னு முடிவு பண்ணீட்டேன். அதனால இந்தக் கதையை தொடர்ந்து எடுக்கலாமா?னு ஏ.பி. நாகராஜன்கிட்ட இந்தக் கதையைச் சொல்லி, அவர் என்ன கருத்து சொல்றாருன்னு கேட்கலாமே"' என்றார்.

"உடனே... அவரைப் பார்த்து கதையைச் சொல்லு வோம்"'என்றேன்.

இருவரும் ஏ.பி.என். ஆபீஸுக்குப் புறப்பட்டோம்.

இந்தகாலகட்டத்தில்.,அதாவது **1973**-ல்ஏ.பி.நாகராஜன் இயக்கத்தில் 'ராஜராஜ சோழன்' படம் வெளியாகி நல்ல பெயருடன் ஓடிக் கொண்டிருந்தது. இந்தப் படத்திற்கு குன்னக்குடிதான் இசை. அதுமட்டுமல்ல... ஏற்கனவே ஏ.பி.என். படங்களில் இசையமைத்து குன்னக்குடியின் புகழ்க் கொடி பறந்துகொண்டிருந்தது.

ஏ.பி.என்.னைப் பார்க்கவேண்டும் என்பது என்னுடைய நீண்டநாள் ஆசை. அரிய பெரிய கலைஞன் அவர். கலை மகளின் அருந்தவப் புதல்வன். தமிழ்த் திரையுலகில் நமக்குக் கிடைத்த காமதேனு. என் மானசீகக்குரு. மானசீகக் குருவாக நான் வேறு யாரைச் சொல்லமுடியும்.

'திருவிளையாடல்', 'தில்லானா மோகனாம்பாள்', 'நவராத்திரி"என அற்புதப் படைப்புகள்... வேறு யாராலும் முடியாத படைப்புகள்... தந்தவர்.

கற்பனைக்கும் எட்டாத அற்புதப் படைப்பாளியான ஏ.பி.நாகராஜனை நான் பார்க்கும் பாக்கியம் கிடைத்திருக்கிறதென்றால்... அது இப்பிறவியியில் நான் பெற்ற பாக்கியம் அல்லவா... என்கிற பூரிப்புடன், அவரைச் சந்திக்கும் ஆசையை நிறைவேற்றி வைக்கும் குன்னக்குடிக்கு மனதார நன்றியுடன் சென்றேன்.

ஏ.பி.என்.னைப் பார்த்ததும் வணங்கி நின்றேன். ''உட்காருங்கள்'' என்றார். குன்னக்குடி என்னை அவருக்கு அறிமுகம் செய்துவைத்தார்.

''கவி கே.பி.காமாட்சி சுந்தரத்தின் ஒன்றுவிட்ட சகோதரன். நாலைந்து படங்களுக்கு கதை எழுதி வருகிறார். 'வெகுளிப் பெண்'. 'குறத்தி மகன்' இவர் எழுதிய கதைகள்தான்'' என்றார்.

''நான் அந்த ரெண்டு படங்களையும் பார்த்திருக்கேன். ரெண்டும் வித்தியாசமான கதைகள். எனக்கு ரொம்பப் பிடித்திருந்தது. அதற்காக என் வாழ்த்துக்கள்'' என்றார் ஏ.பி.என்.

அவ்வளவுதான்... நன்றாகச் சீவியிருந்த என் தலை மயிர்கள் எல்லாம் வானம் பார்த்து நின்றுவிட்டது. அப்படி ஒரு மகிழ்ச்சி. காரணம்... என்னை வாழ்த்தியது கலைமகளின் அருந்தவப் புதல்வனல்லவா...

குன்னக்குடி தன் குன்னக்குடி காவடியை எடுத்து ஆட ஆரம்பித்துவிட்டார். ''கலைஞானத்திடம் 'மைனர் மாமா' என்கிற கதையை வாங்கி, நாங்க மூணுபேர் சேர்ந்து எடுத்த படம் ஃபைனான்ஸ் சிக்கலால் நிக்குது. நானே எடுத்து முடிக்கலாம்னு இருக்கேன். நீங்க இந்தக் கதையைக் கேட்டு ஒப்பீனியன் சொன்னா நல்லா இருக்கும்''' என்றார்.

''கதையைச் சொல்லுங்க'' என்றார் ஏ.பி.என்.

''தென் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு செல்வந்தரின் மகன் மாதவன். ஒரு லட்சாதிபதியின் வீட்டுப் பெண் லட்சுமியை மகனுக்கு மணமுடித்து வைத்து, அவன் நல்லதொரு தொழில் செய்ய சில லட்சங்களையும் கொடுத்தார் செல்வந்தர்.

மாதவனோ... 'மெட்ராஸ் போய் நூறு பேர்கள் வேலை செய்யும் தொழில் கூடத்தை ஆரம்பிக்கலாம்' என்கிற ஆசையை மனைவியிடம் சொன்னான். அவளும் ஒப்புக் கொள்ள... மெட்ராஸ் வந்து வாடகை வீட்டில் குடியேறினார்கள்.

தொழிற்சாலை அமைக்க இடம் தேடி புரோக்கர் மாணிக்கத்தை அணுகினான் மாதவன். அவனோ விபச்சார புரோக்கர்.

அப்புறமென்ன...?

மாதவனை குடி, கூத்தி என்று சல்லாபத்தில் மூழ்கடித்துவிட்ட மாணிக்கம், "முதலாளி... உங்களுக்கு இருக்க வசதிக்கு 'மாதவன்' என்கிற பெயர் நல்லாயில்ல. இன்னைலருந்து உங்களை 'மைனர்'னு கூப்பிடுறேன்'' எனச் சொல்லி பெயரையும் மாற்றி விட்டான்.

ஒருநாள் மாணிக்கத்திடம் மைனர் பேசிக்கொண்டிருந்த போது குடிபோதையில் மைனரின் கை செயினிலிருந்த டாலர் அறுந்து கீழே விழ... மாணிக்கம் அதை எடுத்துக் கொடுக்க... 'மண்ல விழுந்தது பொன்னாக இருந்தாலும் அது எனக்குத் தேவையில்லை. நீயே வச்சுக்க' எனச் சொன்னான்.

இப்படி மது, மாது மயக்கத்தில் ஆழ்த்தி மைனரின் பணத்தை யெல்லாம் கையாடல் பண்ணிவிட்டான் மாணிக்கம்.

மைனர் இப்போது சைபர் ஆனான். 'சாப்பாடுஇல்லையே என்கிற கவலையைவிட குடிப்பதற்கு பணம்இல்லையே' என்பதுதான் அவனின் தீராத கவலையாக இருந்தது. அதற்காக எந்த வேலையையும் செய்யத் தயாராகிவிட்டான் மைனர்.

மைனரின் உத்தமமான மனைவியோ, கணவன் வேலைக்குப் போகிறானா? எங்கே போகிறான்? என எதையும் கேட்கவில்லை. சீதனமாகக் கொண்டுவந்த தன் நகையையெல்லாம் இழந்த அவள், அக்கம்பக்க வீடுகளில் வேலை செய்து காலத்தைக் கடத்தி வந்தாள்.

"ஆறுமாசமா வீட்டு வாடகை கொடுக்கல. நாளைக்கி மொத்தமா கொடுக்கலேன்னா... கழுத்தப்பிடிச்சு வெளிய தள்ளி, கதவைச் சாத்தி பூட்டுப் போட்டுருவேன்''என வீட்டு உரிமையாளர் எச்சரித்துவிட்டுப் போனான்.

மைனர் வீட்டைவிட்டு வெளியே வந்தான். புரோக்கர் மாணிக்கத்திடம் பணம் கேட்கலாம் என நினைத்து பாண்டிபஜார் வந்தான்.

குறிப்பிட்ட ஒரு இடத்தில் வந்து நின்றதும் மைனருக்கு பழைய ஞாபகம் வந்தது.

‘"மண்ணுல விழுந்தது பொன்னாக இருந்தாலும் எனக்குத் தேவையில்லை. நீயே வச்சுக்க'' என மாணிக்கத்திடம் தங்க டாலரை கொடுத்தது நினைவுக்கு வந்தது.

அந்த இடத்தில் இப்போது மாணிக்கம் வசதியான ஒரு அலுவலகம் போட்டிருந்தான்.உள்ளே போனான் மைனர். ஒரு ஆபீஸ் பையன் மட்டும் இருந்தன்.

"தம்பி... மாணிக்கம் எங்கப்பா?”

"அவரு எங்க போறம்னலாம் சொல்லீட்டுப் போகமாட்டார். நீங்க அவருக்குத் தெரிஞ்சவரா?”

"ஆமாம்ப்பா”

"கொஞ்சநேரம் ஆபீஸைப் பார்த்துக்கங்க. காலைலருந்து எதுவும் சாப்பிடல. பக்கத்துல ஹோட்டல்ல போய் சாப்பிட்டுட்டு வந்திடுறேன்'' எனச் சொல்லிவிட்டுக் கிளம்பினான்.

மைனர் உட்கார்ந்தான். அப்போது போன் ஒலித்தது. எடுத்தான்.

"ஹலோ... ரம்பா ஹோட்டல் ரூம் நம்பர் ஆறுக்கு லீலா, சரோ, உஷா, மீனா... நாலுபேரையும் உடனே அனுப்பி வை''எனச் சொல்லிவிட்டு வைத்தது எதிர்முனை"

இப்படி இடைவேளை வரையிலான கதையைச் சொல்லி நிறுத்தினேன்.

ஏ.பி.நாகராஜன் என்னையே பார்த்துக்கொண்டிருந்தார்.

# நாடக வாழ்வின் துயரங்கள்!

குன்னக்குடி வைத்தியநாதன் தயாரித்து வந்த 'மைனர் மாமா' படத்திற்கு நான் எழுதியிருந்த கதையை குன்னக்குடியின் விருப்பத்தின் பேரில் ஏ.பி.நாகராஜனிடம் விவரித்துக் கொண்டிருந்தேன். "ஃபேக்டரி வைப்பதற்காக ஊரிலிருந்து வந்த மாதவன், விபச்சார புரோக்கர் மாணிக்கத்திடம் சிக்கி, மது-மாதுவில் விழுந்து மைனராக மாறி... பணத்தையெல்லாம் இழந்து... ஆறு மாதமாக வீட்டு வாடகை கொடுக்க முடியாததால் வீட்டு உரிமையாளர் எச்சரிக்க... புரோக்கரிடம் பண உதவி கேட்பதற்காக வந்த இடத்தில்.. புரோக்கர் வெளியே போயிருந்ததால் புரோக்கரின் அலுவலகத்தில் காக்க வேண்டியிருந்தது.

அப்போது போன் வந்தது. மைனர் எடுத்தான்.

"ரம்பா ஹோட்டல் ரூம் நம்பர் ஆறுக்கு லீலா, சரோ, உஷா, மீனா... நாலு பேரையும் உடனே அனுப்பி வை" எனச் சொல்லிவிட்டு வைத்தது எதிர்முனை.

அந்தப் பெண்களிடமெல்லாம் சல்லாபித்தவன்தானே இந்த மைனர். அந்த நான்கு பேர்களுக்கும் போன் செய்து விஷயத்தைச் சொன்னான்.

ரம்பா ஹோட்டலுக்கு புரோக்கர் மாணிக்கம் எதேச்சையாகச் சென்றபோது... "நாலுபேரும் வந்துட்டாங்க. இந்தா உன்னோட கமிஷன்"எனக் கொடுத்தார்கள்.

மாணிக்கத்துக்கும் ஒன்றும் புரியவில்லை. கமிஷனை வாங்கிக்கொண்டு தன் ஆபீஸிற்கு வந்தான். அங்கே... பிச்சைக்காரனைவிட மோசமான நிலையில் மைனர் அமர்ந்திருப்பதைப் பார்த்தான்.




'மைனர்... நீங்களா?'

'ஆமாம் மாணிக்கம். ஹோட்டல்ல இருந்து உனக்கு போன் வந்தது. நானே நான்கு பெண்களுக்கும் போன் செய்து போகச் சொல்லீட்டேன்' என்றான் மைனர்.

அவனையே சற்றுநேரம் உற்றுப் பார்த்த மாணிக்கம், "மனுஷனோட நேரத்தைப் பார்த்தீங்களா... மைனரான நீங்க உங்களை அறியாமலேயே என்னோட மாமா தொழிலைச் செய்துட்டீங்க. இந்த கமிஷன் பணம் நியாயப்படி ஒங்களுக்குத் தான் சேரணும். வச்சுக்கங்க" என மைனரின் பாக்கெட்டில் பணத்தை வைத்தான்.

மைனரின் தலையில் இடிமேல் இடி விழுந்த மாதிரி இருந்தது.

அங்கிருந்து மைனர் வெளியேறினான். மனம் வலித்தது. பாட்டில் பாட்டிலாகக் குடித்தான்.

'மைனர் கெட்டா மாமானு சொல்வாங்களே... அதுதான் என் தலைவிதியா? சகவாச தோஷம் சர்வத்தையும் நாசமாக்கிவிட்டதே. லட்சாதிபதி வீட்டுப் பெண்ணான என் மனைவி இப்போ அடிமைபோல, வீட்டு வேலை செய்கிறாளே...' என வாய்விட்டுக் கதறி அழுது மனம் போன போக்கில் போய்க்கொண்டேயிருந்தான். பின்னணியில் ஜெமினி நிறுவனம் தயாரித்த 'சம்சாரம்' படத்தில் கொத்தமங்கலம் சுப்பு எழுதிய பாடல் ஒலிக்கிறது.

மாநிலத்தில் விதியை வென்ற

மனிதர் யாரும் இல்லையே

ஞானி என்ன மனிதன் என்ன

யாரும் விலக்கில்லையே

ஜானகி ரெகுராமனும் வனவாசம் போனது

விதியினால்

சந்திரமதியும் அரசு இழந்து தாதியானதும்

விதியினால்...

இந்தச் சமயத்தில் மைனரின் மனைவி லட்சுமி, வீடுகளில் பத்துப் பாத்திரம் தேய்ப்பது உள்ளிட்ட வேலைகளைச் செய்வதைக் காட்டவேண்டும். மைனரோ தள்ளாடித்... தள்ளாடி விழுந்து புரண்டு பரதேசிபோல வீதியில் போவதைக் காட்டவேண்டும்.

அந்தப் பாடல் பின்னணியில் தொடர்ந்து ஒலிக்கிறது.

ஒரு மின் கம்பத்தில் மோதி கீழே விழுகிறான் மைனர்.

அப்போது... விபச்சார விடுதியில் இவனுக்கு பழக்கமான ஒருவன் வந்து இவனை தூக்கிவிடுகிறான்.

"டேய் மைனர்... நீ ஏண்டா இப்படி ஆயிட்ட? இனிமே எதுக்கும் கவலப்படாத. நான் சொல்றதை மட்டும் செய்'' எனச் சொல்லியபடி மைனரை அழைத்து வந்து தன் காரில் உட்கார வைத்தான்.

"இன்னிக்கி ஒருத்திய பார்த்தேன். நிச்சயமா அவ இதுக்கு உடன்படுறவளாத்தான் இருப்பா. நீ அவளை எனக்கு கரெக்ட்பண்ணிக் குடு. நீ என்ன கேட்டாலும் தர்றேன்'' என்றான் அந்த நண்பன்.

'நீ முதல்ல எனக்கு பிராந்தி குடு' என்றான் மைனர். அவன் கொடுத்தான். முழுப்பாட்டிலையும் குடித்த மைனர், காருக்குள் சரிந்து படுத்தான் மிதமிஞ்சிய போதையில்.

கார் கிளம்பியது. சிறிது நேரத்தில் ஒரு வீட்டின் முன்பு நின்றது.

'இதுதான் அவ வீடு' என்றான் அவன்.

"நீ என்னை அந்த வீட்டுக்குள்ள கூட்டிட்டுப் போ. நீ இஷ்டம்போல உன்னோட காமப்பசியை தீர்த்துக்க. மத்ததை நான் பாத்...து...க்''எனச்

சொல்லியபடியே காருக்குள் மயங்கி விழுந்தான் மைனர்.

அவன் மட்டும் காரைவிட்டு இறங்கி அந்த வீட்டுக்குள் போனான். உட்புறமாக கதவைச் சாத்தினான்.

கூச்சல்... கதறல்... "என்னங்க..'' என பெண்ணின் குரல்.

அவ்வளவு போதையிலும் 'இது என் லட்சுமியோட குரல் மாதிரி இருக்கே' என தட்டுத் தடுமாறி வீட்டுக்குள் போனான் மைனர்.

தலைவிரி கோலமாய், பத்ரகாளியின் ஆவேசத்துடன், ரத்தம் வழியும் கத்தியுடன் நின்றிருந்தாள் லட்சுமி.

அந்தக் கயவன் தரையில் பிணமாகக் கிடந்தான்”

இப்படி கதையைச் சொல்லி முடித்தேன்.

"சினிமாப் படம் பார்ப்பதுபோல ரொம்ப அருமையா கதை சொல்லீட்டீங்க. அருமையான கதைதான். மக்கள் எந்தக் கேள்வியும் கேட்காதபடிக்கு திரைக்கதையை அமைக்க வேண்டும்'' என ஏ.பி.நாகராஜன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே...

"ஐயா... உங்க முதலாளி எழுதின கடிதத்தை காணோம்னு வருத்தப்பட்டுகிட்டு இருந்தீங்களே. அந்தக் கடிதம் இதுவானு பாருங்க'' என அலுவலக ஊழியர் கொடுக்க...

வாங்கிப் பார்த்த ஏ.பி.என். கண்களில் ஒரு பிரகாசம். கூடவே... கண்ணீர்க் கசிவு.

சிலநிமிட கனத்த மௌனத்திற்குப் பிறகு கசிந்தோடிய கண்ணீரைத் துடைத்துக்கொண்டவர், பெருமூச்சுவிட்டு தன்னை தளர்த்திக்கொண்டார்.

"இது... என்னை வாழவைத்த நாடகக் கம்பெனி முதலாளியோட கடிதம். சமீபத்துலதான் இறந்தார். என்னைப் பெத்தவங்க என்மேல அன்புகாட்டி வளர்த்ததைவிட... அதிகமான அன்புகாட்டி வளர்த்தவர்'' என்றார்.

ஏ.பி.என்.னின் மனநிலையை அறிந்த நான் "அண்ணே... நாடகக் கம்பெனியில் பட்ட துயரங்களை என் அண்ணன் கவி கே.பி.காமாட்சியும், மனோரமாவின் கணவர் ராமநாதனும் என்கிட்ட சொல்லீருக்காங்க. அது இன்னமும் என் மனசை விட்டு நீங்காம இருக்கு. ஒவ்வொரு நாடகக் கலைஞனும் தன் வாழ்க்கையை எப்படியெல்லாம் தியாகம் பண்ணீருக்காங்க என்பதை கேட்டபோது பிரமிப்பா இருக்கு'' என்றேன்.

"என் வாழ்க்கையும் அப்படித்தான் கலைஞானம். எப்பவும் ஒரே திகிலா இருக்கும். நாடகத்தில் நிரந்தர வருமானம் கிடையாதே... நீங்க காமாட்சியண்ணனின் தம்பிங்கிறதால் உங்ககிட்ட சில முக்கிய நிகழ்வுகளைச் சொல்றேன்'' என்றார்.

ஒருவித ஆர்வம் தொற்றிக்கொள்ள... 'சொல்லுங் கண்ணே' என்றேன்.

''எங்க குடும்பம் வசதியானதுதான். கலை மீதிருந்த ஆர்வத்தால் நாடகக் கம்பெனியில் சேர்ந்தேன். அந்தக் கம்பெனியின் முதலாளி ரெங்கசாமி ரெட்டியார். மதுரை மாவட்டத்தில் இருக்கும் லாலாபுரம் கிராமம்தான் அவரோட சொந்த ஊர். அவரும், அவரோட தம்பி ராமசாமி ரெட்டியாரும் சேர்ந்துதான் நாடகக் கம்பெனி ஆரம்பிச்சாங்க. ரெங்கசாமி ரெட்டியாருக்கு ஐந்து பிள்ளைகள். ராமசாமி ரெட்டியாருக்கு ஒரு ஆண்குழந்தை பிறந்தது. 'பாலமுருகன்' என பெயர் சூட்டினார்கள். ஆனா அந்தக் குழந்தை இறந்துபோச்சு. அதன்பிறகு ராமசாமி ரெட்டியார் தம்பதிக்கு குழந்தை பிறக்கவே இல்லை. அதனால் அந்தக் குழந்தையின் பெயரில் 'மதுரை ஸ்ரீ பாலமுருகன் பாய்ஸ் கம்பெனி' என்ற பெயரில் நாடகக் கம்பெனி ஆரம்பிச்சாங்க. அந்தக் கம்பெனியில் கிட்டத்தட்ட 60 நடிகர்கள் இருந்தாங்க. அதுல நானும் ஒருத்தன்.''

பின்னாளில் 'திருவிளையாடல்', 'நவராத்திரி', 'சரஸ்வதி சபதம்', 'திருவருட் செல்வர்', 'தில்லானா மோகனாம்பாள்', 'ராஜராஜ சோழன்'... இப்படி பல அற்புதப் படங்களைத் தந்த டைரக்டர், தயாரிப்பாளர், நடிகர்... ஏ.பி.நாகராஜனின் அந்நாளைய கண்ணீர் வாழ்க்கை.

# அன்னலட்சுமி வீட்டில் கம்மஞ்சோறு!

ரெங்கசாமி ரெட்டியாரின் 'மதுரை ஸ்ரீ பாலமுருகன் பாய்ஸ் கம்பெனி'யில் இருந்த தனது அனுபவங்களை டைரக்டர் ஏ.பி.நாகராஜன் சொல்லிக்கொண்டு வந்தார். நானும் குன்னக்குடி வைத்தியநாதனும் அவர் சொல்வதை உன்னிப்பாக கேட்டுக்கொண்டிருந்தோம்.

''நாடகக் கம்பெனியில் கிட்டத்தட்ட 60 நடிகர்கள் இருந்தோம். அதில் நானும் ஒருவன். இதில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியவர்கள்... பாடலாசிரியர் தஞ்சை ராமையாதாஸ், எஸ்.எஸ்.ராஜேந்திரன், சிவாஜிகணேசன் (சிவாஜி இரண்டு வருடங்கள் மட்டும் இங்கே இருந்தார்), தசரதன், ஷண்முகசுந்தரி உட்பட பலர். நாடக வருமானம் குறையும்போது யாராவது ஒரு சினிமா நடிகரை நாடகத்துக்கு தலைமை தாங்க வைப்பது கம்பெனி வழக்கம். அப்படி சிறப்பு விருந்தினராக வந்தவங்கள்ல முக்கியமானவர் டி.எஸ்.பாலையா.

'பொன்முடி', 'சரஸ்வதி சபதம்', 'பகடை பன்னிரெண்டு', 'நால்வர்', 'மச்சரேகை' ஆகிய நாடகங்களை நடத்திக்கிட்டு வந்தோம். 'மச்சரேகை' நாடகம் மட்டும் சேலத்தில் ஒரு வருஷம் நடந்தது. இதில் நானும், முதலாளி ரெங்கசாமியின் மகன் மூக்கனும் போட்டி போட்டுக்கிட்டு நடிப்போம். சின்ன வயசுலருந்தே நாங்க உயிருக்குயிரான நண்பர்களாவும் பழகிவந்தோம்.

எங்க கம்பெனி நாடகங்கள் சிங்கப்பூர், மலேசியா, இலங்கை, ரங்கோன் ஆகிய வெளிநாடுகள்லயும் நடந்து பல பரிசுகளையும் வாங்கியது.



ஆரோக்கியமா நடந்துக்கிட்டிருந்த கம்பெனி, கால மாற்றத்தால்... நாடகங்களுக்கு ஏற்பட்ட நலிவால்... மிகப்பெரிய நஷ்டத்துக்கு ஆளானது.

முதலாளி கடன்மேல் கடன்பட்டார். நாடகமே நடத்த முடியாத நிலை ஏற்பட்டது. 60 கலைஞர்களுக்கும் சோறு போட முடியல. எல்லாரையும் கூட்டிக்கிட்டு தன் சொந்த ஊரான லாலாபுரம் கிராமத்துக்கே வந்தார். எல்லாரையும் தன்னோட வீட்லயே தங்க வச்சார்.



முதலாளியோட மனைவி லட்சுமி அம்மாள் அத்தனை பேர்கள் மேலயும் சொந்தத் தாயா அன்பு காட்டினார். எல்லாருக்கும் சலிக்காம ஆக்கிப்போட்ட அன்னலட்சுமி, வீட்ல இருந்த பொருட்களையெல்லாம் ஒண்ணொண்ணா வித்து சோறாக்கிப் போட்டாங்க.

மூணுமாசம் வரைதான் தாக்குப் பிடிக்க முடிஞ்சது. ஒருநாள்... சமைக்கிறதுக்குப் பொருள் இல்ல. அதுக்குப் பிறகு முதலாளியோட காட்ல விளைஞ்ச கம்மங்கதிர்களை அறுத்து எடுத்திட்டு வர்றதுக்காக லட்சுமி அம்மா போனாங்க. கூடவே அவங்க மகன் மூக்கனும், நானும் போனோம். கதிர்களை அறுத்துக்கிட்டு வந்தோம். ராத்திரியோட ராத்திரியா அந்தம்மா கம்மஞ்சோறு ஆக்கிப்போட்டாங்க.

முதலாளி குடும்பம் வறுமையில் தள்ளாடுவதைப் பார்த்து மனம் சகிக்காம நடிகர்கள்லாம் ஒவ்வொருத்தரா வேற, வேற கம்பெனியில போய்ச் சேர்ந்தாங்க. அதில் முக்கியமானவங்க தஞ்சை ராமையாதாஸும், எஸ்.எஸ்.ராஜேந்திரனும். சிவாஜி ஏற்கனவே வேற கம்பெனியில் சேர்ந்திட்டார். ஆனா நான் மட்டும் முதலாளி குடும்பத்தோடவே தங்கிட்டேன். முதலாளி குடும்பத்தோட கஷ்டத்துல பங்குபெறணும்கிற உறுதியோட இருந்தேன். இன்னொரு காரணமும் இருக்கு. நானும் முதலாளியின் மூத்த மகன் மூக்கனும் கொண்ட நட்புதான் காரணம். சின்ன வயசுல இருந்தே நானும் மூக்கனும் ஒருத்தரை விட்டுட்டு ஒருத்தர் சாப்பிட்டதே இல்ல. ராத்திரியில் நாங்க எதிர்காலம் குறித்து நிறைய பேசுவோம்.

தந்தையைப்போல இருக்க முதலாளியின் கஷ்ட நஷ்டத்தை எப்படியாவதுதீர்த்து, மறுபடியும் நாடகக் கம்பெனியை நடத்த வைக்கணும்னு திட்டம் போட்டேன். முதலாளி தன்னோட பூர்வீக சொத்துக்களையெல்லாம் வித்து நாடகக் கம்பெனியில போட்டுட்டார். நடிகர்களுக்கு குறை வராம பாத்துக்கணும் என்கிறதிலயே எல்லாத்தையும் இழந்துட்டார்.

இப்போது நடிகர்களெல்லாம் போய்ட்டாங்க. ஆனா முதலாளியோட ஐந்து பிள்ளைகள்... பெரியவங்க ஐந்து பேர்கள், இவங்களோட ஜீவனத்துக்கு என்ன செய்றதுனு நானும் மூக்கனும் சிந்திச்சு ஒரு முடிவெடுத்தோம்.

அது உலக யுத்தம் நடந்த காலம். பெட்ரோல், மண்ணெண்ணெய்க்குப் பஞ்சம். மரங்களை வெட்டி எரித்து, கரித்துண்டுகளாக்கி வீடுகள்ல, ஹோட்டல்கள்ல மற்றும் பஸ்களுக்கு பயன்படுத்துவாங்க.

கிராமங்கள்லயிருந்து கரிமூட்டைகளை கை இழுவை வண்டியில் வைத்துக் கொண்டுபோய் விருதுநகரில் இறக்கினா, ஐந்து ரூபா கூலி கிடைக்கும். அந்த வேலையைச் செய்ய நானும், மூக்கனும் முடிவெடுத்தோம்.

மறுநாள்...

கரி மூட்டையை கை வண்டியில் வைத்துக்கொண்டு போய் விருதுநகரில் இறக்கினோம்.

கிடைத்த ஐந்து ரூபாயைக் கொண்டுவந்து லட்சுமி அம்மாளிடம் கொடுத்தோம்.

அறுபது நடிகர்களுக்கு தங்களின் ஆஸ்தியை விற்று அன்னமிட்ட அந்தத் தாய், நாங்கள் கொடுத்த அந்த ஐந்து ரூபாயை வாங்கி கண்ணில் ஒத்தியபடி தேம்பித் தேம்பி அழுதுட்டாங்க.

"நாகராஜா... நீதானப்பா நான் கும்பிடும் தெய்வம்'னு கண்ணீர் வழிய சொல்லிக்கிட்டே அந்தத் தாய் என்னை கட்டி அணைச்சிக்கிட்டாங்க"

எனச் சொன்ன ஏ.பி.என்., அதை நினைத்து இப்போது எங்கள்முன் கண்கலங்கினார்.

நீண்ட பெருமூச்சு விட்டபடி... "இனியும் இப்படி ஒரு தாயை என்னால் பார்க்க முடியாதே" என்றபோது அவருக்கு தொண்டை அடைத்துவிட்டது.

நானும், குன்னக்குடி வைத்தியநாதனும் மௌனமாக ஏ.பி.என்.னையே பார்த்துக் கொண்டிருந்தோம்.

"இதையெல்லாம்விடக் கொடுமை... ஒரு தீபாவளியன் னைக்கி முதலாளி வீட்டில் நடந்த சோக நிகழ்வுதான்" என மீண்டும் தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டு சொல்லத் தொடங்கினார்.

"ஊரே தீபாவளி கொண்டாட தயாராகிக்கிட்டிருக்கு. நானும், மூக்கனும் கரிமூட்டையை கைவண்டியில் ஏத்திக்கிட்டு விருதுநகர் கிளம்பினோம். கூலியாகக் கிடைக்கும் ஐந்து ரூபாயை வச்சுத்தான் முதலாளி வீட்டில் தீபாவளி கொண்டாட ஏற்பாடு.

விருதுநகரில் கரி மூட்டைகளை இறக்கி விட்டு, கூலியை வாங்கினோம். டீ கூட குடிக்காமல் வண்டியை இழுத்துக் கொண்டு ஊர் திரும்பிக் கொண்டிருந்தோம்.

இடையில் ஒரு ரயில்வே கேட். அதை அடைக்கும் முன்னாடி தாண்டிட்டா சீக்கிரமா வீடு போய்ச் சேரலாம் என்பதால், நான் பலம் கொண்ட மட்டும் வண்டியை இழுக்க... மூக்கன் பின்னாடியிருந்து வண்டியைத் தள்ள... ஒரு நொடியில்... இடதுபுற சக்கரம் பள்ளத்திற்குள் இறங்கிவிட்டது. 'படார்'னு சத்தத்தோட அச்சாணி முறிந்தது. வலதுபுற சக்கரம் சாய்ஞ்சுப் போச்சு. என்ன செய்றது?னு தெரியாம திகைச்சுப்போய் நின்னோம்.

கேட்டைப் பூட்டிவிட்டார்கள். ரெயில் கடக்குற வரைக்கும் காத்துக்கிடந்தோம்.

ரெயில் கடந்துச்சு. இருட்டும் வந்துருச்சு.

"ஆசாரிய வச்சுத்தான் சரிபண்ண முடியும். நீ வண்டியப் பார்த்துக்க. நான் அதோ தெரியிற கிராமத்துக்குள்ள போய் ஆசாரி யாராவது இருந்தா பார்த்து கூட்டிட்டு வர்றேன்'' எனச் சொல்லீட்டு ஓட்டமும் நடையுமா ஊருக்குள் போனேன். ஆசாரி வீட்டையும் கண்டுபிடிச்சேன். ஆனா அவர் விருதுநகர் போயிருப்பதாகவும், அநேகமா இப்ப வர்ற நேரந்தான்... என வீட்டில் இருந்தவர்கள் சொல்ல... அங்கேயே காத்திருந்தேன். வெகுநேரம் கழிந்த பின்னாடிதான் ஆசாரி வந்தார்.

அவரை வண்டி நிக்கிற இடத்துக்கு அழைச்சுக்கிட்டு வந்தேன்.

அந்த இருட்டுக்குள்ள என்ன செய்றதுன்னு ஆசாரிக்கும் தெரியல.

"அச்சாணி முறிஞ்சுப் போச்சு. இனிமே பட்டறையில் வச்சு காய்ச்சி அச்சாணியை சரி செய்ய நேரமில்ல. ஒண்ணு செய்றேன்... முறிஞ்ச அச்சாணியை ஒருமாதிரி தற்சமயத்துக்கு சரி பண்ணித் தர்றேன். ஒருஆளு வண்டிய இழுத்துக்கிட்டுப் போகும்போது, இன்னொருத்தர்... சக்கரம் விலகாம தட்டிக் குடுத்துக்கிட்டே மெதுவா ஊர்போய்ச் சேருங்க'' என்றார்.

அவர் சொன்ன மாதிரியே வண்டியை மெல்லமா உருட்டிக்கிட்டே ஊர் வந்து சேர்ந்தோம். விடிஞ்சுப் போச்சு. நாங்க கொண்டாடாமலே தீபாவளியும் முடிஞ்சுப் போச்சு.

பிள்ளைங்கல்லாம் தூங்கிக்கிட்டிருந்துச்சு. முதலாளியும், அம்மாவும் தூங்காம விடிய விடிய எங்களை எதிர்பார்த்து முழிச்சே இருந்தாங்க.

நானும், மூக்கனும் நடந்ததை திகிலோட சொல்லிக் கிட்டிருந்தோம்.

முதலாளி மனசொடிந்த குரலில் சொன்னார்... "எங்க குடும்பத்துல தீபாவளி கொண்டாடாம போனது இதுதான் முதல்முறை நாகா. வசதியா வாழ்ந்த காலத்துல, எங்க குடும்பத்தாருக்கு மட்டுமில்லாம, கிராமத்துல உள்ள ஏழைபாழைங்களுக்கெல்லாம் புதுத்துணி கொடுப்போம். சிலருக்கு பணமும் கொடுத்து, நாங்களும் தீபாவளியைக் கொண்டாடுவோம். இன்னைக்கி என் நிலமையைப் பார்த்தியா?''என நொந்துபோய் சொன்னவர்... 'இனிமே என்னோட ஆயுள் முழுக்க புத்தாடை உடுத்தவே மாட்டேன்' எனச் சொல்லிவிட்டு பூஜையறையில் போய் படுத்துக்கொண்டார். (சொன்னபடியே முதலாளி, தான் சாகும் வரைக்கும் தீபாவளிக்கு புத்தாடை உடுத்தவில்லை)

இரவெல்லாம் எனக்குத் தூக்கம் பிடிக்கல.

'முதலாளி குடும்பம் இப்படிக் கஷ்டப்படுதே...'ங்கிற துக்கம் என்னை வாட்டி வதைச்சது.

ஒரு முடிவெடுத்தேன்..."

# ஏ.பி.என்.னின் செஞ்சோற்றுக் கடன்!

'மதுரை ஸ்ரீ பாலமுருகன் பாய்ஸ் கம்பெனி' நாடக அனுபவத்தையும், தன்னை பெற்றோரைப் போல கவனித்துக் கொண்ட முதலாளியின் குடும்பக் கஷ்டத்தையும் என்னிடமும், குன்னக்குடி வைத்தியநாதனிடமும் சொல்லிக்கொண்டிருந்தார் மாபெரும் டைரக்டரான ஏ.பி.நாகராஜன்.
''தீபாவளியைக் கொண்டாட முடியாத முதலாளியின் குடும்பக் கஷ்டத்தை நினைச்சு எனக்கு இரவெலலம் தூக்கம் பிடிக்கல. ஒரு முடிவுக்கு வந்தேன்.

விடிந்ததும், ஒரு பையில் என் துணிமணிகளை எடுத்து வச்சேன். முதலாளி ரெங்கசாமி ரெட்டியாரும், லட்சுமி அம்மாளும் சோகமே உருவாக நின்னிருந்தாங்க. அவர்கள் முன்னாடி நின்னு வணங்கினேன்.

'முதலாளி... நான் மெட்ராஸுக்குப் போறேன். நம்ம நாடகங்களை சினிமாவா எடுக்க முயற்சி பண்றேன். எனக்கு ஒரு நல்ல நேரம் அமைஞ்சதும், உங்களைத் தேடி வர்றேன். ஏதாவது சுயமா தொழில் செய்ய ஏற்பாடு செய்றேன். எண்ணம் போல எல்லாம் நல்லபடியா நடக்கும்'னு சொன்னேன்.

முதலாளி என்னையே கூர்ந்து பார்த்திட்டு ''நாகராஜா... என்னோட குடும்பத்துக்கு ஏதாவது செய்யணும்கிற உன்னோட நல்ல மனசுக்கு இறைவனோட கருணை உனக்கு நிறைவா இருக்கும். நான் இப்போ உனக்கு கொடுத்தனுப்ப ஏதுமில்லாதவனா நிக்கிறேன். 'போய் வா மகனே'னு சொல்லியனுப்ப ஜீவன் மட்டும்தான் இருக்கு''எனச் சொல்லி வழியும் கண்ணீரைத் துடைத்தபடி என் தலையில் கைவச்சு மௌனமா ஆசிர்வாதம் செஞ்சார்.




முதலாளியை விட்டுப் பிரிவதை தாங்கிக்க முடியாம, எனக்கு கண்ணீர் பொங்கியது. அதை கட்டுப்படுத்திக்கிட்டு அவரின் காலில் விழுந்தேன். லட்சுமி அம்மாள் காலிலும் விழுந்து வணங்கி விடைபெற்றேன்.

முதலாளியின் மூத்த மகனான மூக்கன் 'நால்வர்', 'சரஸ்வதி சபதம்' நாடகக் கதைகள் அடங்கிய ஃபைலை எடுத்து வந்து என்னிடம் கொடுத்தான்.

கள்ளிக்குடி ரயில் நிலையத்துக்கு என்கூட வந்தான். அப் போது மூக்கன் ஒரு ரூபா நாணயத்தை ‘இதை வச்சுக்க நாகா’ என என்கிட்ட கொடுத்துவிட்டு தேம்பித் தேம்பி அழுதான்.



ரெயில் வந்துவிட்டது.

'நான் வரட்டுமா...'னு கேட்டபடி அவனோட கைகளைப் பிடித்தேன். அவன் தன்னோட கைகளால் என் கைகளை இறுகப் பிடித்துக்கொண்டான்.

''நாகா... உன் நிலமை என்னனு கடிதம் மூலம் தெரியப் படுத்து'' எனச் சொன்னபோதே துக்கத்தில் அவன் தொண்டை கம்மிப் போச்சு.

''மூக்கா... நான் உயிரோட இருந்தா உன்னையும், நம்ம பெற்றோரையும் வந்து பார்ப்பேன். அப்படி நான் வரலேன்னா... நான் செத்துப்போயிட்டதாத்தான் அர்த்தம்''என நானும் துக்கம் தாங்காமல் அழுதேன். அவனிடமிருந்து என் கைகளை விடுவிக்க முயற்சி பண்ணினேன். ஆனால் அவனோட பிடி மேலும் மேலும் இறுகியிருந்துச்சு.

ஒருவழியாக விடுவித்து, அவன் கரங்களில் முத்தமிட்டு விட்டு ரெயிலில் ஏறி உட்கார்ந்தேன்.

ரயில் கிளம்பும் வரை நானும், மூக்கனும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டே இருந்தோம்.

நாடகங்களில் நடிக்கும்போது நானும், மூக்கனும் போட்டிபோட்டு நடிச்சு ஒருத்தரை ஒருத்தர் ஜெயிக்கக் கத்துக் கிட்டோம். ஆனால் நட்பின் பிரிவை எப்படி ஜெயிக்கிறது என்று நாங்கள் கற்றுக் கொள்ளவில்லையே... அந்த வேதனையின் உச்சத்தில் விடை பெற்றேன்.

ரயில் கிளம்பியது.

மெட்ராஸ் வந்தேன்.

பலவாறு போராடி... சினிமாவில் எனக்கென்று ஒரு இடத்தைப் பிடிச்சேன். தொடர்ந்து வெற்றிபெற்றேன். அந்த வெற்றிகளுக்கு உச்சமாக அமைந்தது 'திருவிளையாடல்' படம். இந்தப் படம் வெளியாகி... இந்த நாகராஜனுக்கு பேரும் புகழும் வந்து குவிந்தது.

நான் வளர்ந்த என் தாய்வீட்டை நினைத்தேன். பணத்தையும், சில பொருள்களையும் எடுத்துக்கொண்டு என் காரில் லாலாபுரம் கிராமத்திற்கு வந்தேன்.

முதலாளி வீட்டு வாசல்ல காரை நிறுத்தி இறங்கினேன்.

முதலாளியோட காலில் விழுந்து வணங்கினேன்.

'நாகராஜா' என என்னைத் தூக்கி அணைத்து ஆனந்தக் கண்ணீர் விட்டார்.

'என் புள்ள வந்துட்டான்' என லட்சுமி அம்மாளும் ஓடிவந்து என் கன்னத்தில் மாறி மாறி முத்தமிட்டார்.

மூக்கன் ஓடி வந்தான். 'நாகா..'னு கட்டிப்பிடிச்சு அழுதான். அன்பை அடக்க முடியாமல் நானும் அழ... ரெண்டு பேரும் கொஞ்சநேரம் அழுதபடியே இருந்தோம். பேச்சு வரவில்லை. லட்சுமி அம்மா பால் கொண்டுவந்து கொடுத் தாங்க. 'மகனே... நீ எப்படியும் எங்களையெல்லாம் பார்க்க வருவேன்னு தினம், தினம் நினைச்சுக்கிட்டிருந்தேனப்பா' என நெகிழ்ந்துபோய் சொன்னார் அம்மா.

பிரிந்திருந்த காலத்தில் நடந்த விஷயங்களையெல்லாம் விலாவாரியாகப் பேசிக்கிட்டோம்.

'அய்யா... நீங்க என்ன தொழில் செய்ய விரும்புறீங்க?' எனக் கேட்டேன் முதலாளியிடம்.

'இந்தக் கூத்தாடிக்கு என்ன தெரியும்? ஏதாவது ஒரு தொழில் செய்ய ஏற்பாடு செய் நாகா' என்றார்.

"அய்யா... எனக்கு வேண்டப்பட்ட நண்பர் மூலம் ஆரணியில் ஒரு அசைவ ஓட்டல் வச்சுத் தர்றேன். அதுக்கு 'முனியாண்டி விலாஸ்'னு பேர் வைக்கலாமா?"

"உன் மனசுபோல செய் நாகா. உன் உதவிய என் பரம்பரையே மறக்காம இருக்கணும். அதனால் உன்னோட மகள் பேரையும் சேர்த்து 'மதுரை விஜயலட்சுமி முனியாண்டி விலாஸ்'னு பேர் வை" என்றார்.

அதன்படி ஆரணியில் ஓட்டல் ஆரம்பித்துக் கொடுத்தேன். நன்றாகவே நடந்துச்சு வியாபாரம். ஆனாலும் அந்த ஊரோட சீதோஷ்ண நிலை ஒத்துக்காம முதலாளிக்கு அடிக்கடி உடம்பு முடியாமப் போனது.

உடனே முதலாளியைப் போய்ப் பார்த்தேன்.

"அய்யா... கோயம்புத்தூர்ல ஓட்டல் வச்சுத் தர்றேன். அந்த ஊர் சீதோஷ்ண நிலை உங்களுக்கு ஒத்துவரும்''என்றேன். முதலாளியும் சம்மதித்தார்.

கோவை ஜி.டி.நாயுடு காம்பவுண்ட் அருகில் பழைய போஸ்ட் ஆபீஸ் ரோட்டில் "மதுரை விஜயலட்சுமி முனியாண்டி விலாஸ்' ஓட்டலை திறக்க ஏற்பாடு செய்தேன். இதையறிந்த சிவாஜி கணேசன்... முதலாளியின் நாடகக் கம்பெனியில் இரண்டு வருஷம் இருந்த பாசத்தில்... 'அதுக்கான செலவில் நானும் பங்கு கொடுக்கிறேன்' என என்னுடன் கோவை புறப்பட்டு வந்தார்.

ஓட்டலைத் திறந்து வைத்தோம்.

ஓட்டல் வியாபாரம் நன்றாக நடந்தது. முதலாளி... பிள்ளைகளையெல்லாம் நல்லபடியா படிக்க வச்சார். பிள்ளைகளை ஆசிரியர்களாவும் ஆக்கிட்டார்.

1972-ல் முதலாளி ரெங்கசாமி ரெட்டியார் இறந்து விட்டார். அதற்குமுன் முதலாளி என்னை ஆசிர்வதிச்சு எழுதின கடிதம்தான் இது..."

என ஏ.பி.நாகராஜன் சொல்லி முடித்தார்.

வியப்பிலிருந்து என்னால் விடுபட முடியவில்லை.

சிறுவயதில் தன்னை ஆதரித்து அன்பு காட்டிய முதலாளியை இதயத்தில் சிம்மாசனம் போட்டு பாதுகாத்து வரும் ஏ.பி.என்.னை பாராட்டுவதற்கு வார்த்தைகளே இல்லை.

முதலாளியின் குடும்பத்திற்கே வழிகாட்டி... வளமான வாழ்க்கையை அமைத்துக் கொடுத்த நன்றி மறவாத நாகராஜனைப் போல் யாரேனும் ஒருவர் உளரோ?

தேடிக்கொண்டே இருக்கிறேன்.

ரெங்கசாமியின் மூத்த மகன் மூக்கனின் மகன் மூக்கன் ரவி, சத்தியமங்கலம் பஸ் நிலையம் அருகில் மனநல ஆலோசகராக சிகிச்சை

மையம் வைத்திருக்கிறார். அவருடன் பிறந்தவர்களும் நல்ல நிலையில், நல்ல பதவிகளில் இருக்கிறார்கள்.

"ஏ.பி.நாகராஜனின் கருணை மழையில் வளர்ந்துவரும் பயிர்கள் நாங்கள்"'என்று என்னிடம் தற்போது கூறி பெருமைப்பட்ட ரவி, தன் தாத்தாவையும், அப்பாவையும், ஏ.பி.நாகராஜனையும் குறித்து பல தகவல்களை என்னிடம் சொன்னதுடன், புகைப்படங்களையும் கொடுத்து உதவினார்.

"எங்க குடும்பத்தில் எல்லாரும் அரசு ஊழியர்களாகி விட்டதால், தாத்தாவுக்குப் பின் அந்த ஓட்டலை நடத்த முடியவில்லை" என்றும் தெரிவித்தார் ரவி.

ரெங்கசாமி ரெட்டியாரின் குடும்பத்தினரும், ஏ.பி.நாக ராஜன் குடும்பத்தினரும் ஆல் போல் தழைத்து, அருகுபோல் வேரூன்றி வளமும், நலமும் பெற்று வாழ எல்லாம் வல்ல முருகப் பெருமானை வேண்டுகிறேன்.

# சின்னப்ப தேவரின் கனவுகள்!

சின்னப்ப தேவரின் ராமேஸ்வரம்-தனுஷ்கோடி அனுபவங்களை சொல்வதற்கு முன்...

ராமேஸ்வரம் என்றதும் கலாம் நினைவுதான் முன்னுக்கு வருகிறது. எல்லோருக்கும் நல்லவராக எவரும் வாழ முடியாது. ஆனால் அப்துல்கலாம் வாழ்ந்து காட்டினார். அவருடைய மறைவுக்கு இந்திய மக்கள் எல்லோரும் தாளா துயரத்தில் அழுது புலம்பி வடித்த கண்ணீர் அளவிட முடியாதது. சூரியனே அஸ்தமித்தது போல் இருந்தது நம் நாடெங்கும். அவருக்கு நம் வாழ்நாள் முழுவதும் மரியாதை செய்ய கடமைப்பட்டிருக்கிறோம்.

'காசிக்குச் செல்பவர்கள் ராமேஸ்வரமும் சென்றால்தான் புண்ணிய பலன் பூர்த்தியாகும்' என்பார்கள். இன்று நமது காலத்தில் மேலும் ஒரு புண்ணிய பலன் கிடைத்திருக்கிறது. ராமேஸ்வர யாத்திரை முடிந்ததும், தமிழ்த்தாய் பெற்றெடுத்த தவப்புதல்வன் அப்துல்கலாம் துயில் கொண்டிருக்கும் நினைவுச் சின்னத்தையும் வணங்கி வழிபட்டு வருவோருக்கு அவரின் ஆசி பல நன்மைகளைத் தந்து வழிகாட்டும் என்பது தர்மம் சொல்லும் தனிப்பெரும் உண்மை.

சின்னப்ப தேவரின் நிறைவேறாத சினிமா ஆசைகள் சில. பொய்யாமொழிப் புலவர் கதையை வைத்து தியாகராஜ பாகவதர் நடித்த படம் 'சிவகவி.' அதே கதையை நடிகர்திலகம் சிவாஜி கணேசனை வைத்து படமாக்க வேண்டும் என்பதுதான். இது பற்றிய விபரங்களை ஏற்கனவே விரிவாகக் கூறியிருக்கிறேன்.



இனி...

**23-12-1964** அன்று... தனுஷ்கோடியை கடல் விழுங்கியது. அந்த நிகழ்வு குறித்து தன் டைரியில் எழுதியிருந்ததை ரொம்ப வருடம் கழித்து 'ஆட்டுக்கார அலமேலு' சக்கைப்போடு போட்ட சமயத்தில் புரட்டிப் படித்துக்கொண்டிருந்த தேவர், எங்களைப் பார்த்து "டேய்... கதைக்காரனுங்களா... அழிஞ்சுக் கிடக்கிற தனுஷ்கோடியை பார்க்கணும்கிறது என்னோட நீண்ட நாள் ஆசை. அதைப் பார்த்திட்டு, அப்படியே நாம் எடுக்கப் போற இந்திப் படத்துக்கான லொகேஷனையும் பார்த்திட்டு வரலாம். உங்களுக்கெல்லாம் தோது எப்படி?" எனக் கேட்டார்.

"நாங்களும் வர்றோம்" என்றோம்.

மறுநாளே... ராமேஸ்வரம் போய்ச் சேர்ந்தோம். அங்கி ருந்து வழிகாட்டி ஒருவருடன் ஜீப்பில் தனுஷ்கோடி சென் றோம். ஒரு ஜீப் செல்லும் பாதையைவிட சற்று பெரிய ரோடு. இருபுறமும் கடல். ஓரிடத்தில் ஜீப் நின்றது. அனைவரும் இறங்கினோம்.

"இதுதான் தனுஷ்கோடி இருந்த இடம்'' என்றபடி கண்ணுக்கெட்டிய தூரம் வரை மணற்பரப்பைக் காட்டி விட்டு, "அங்க ஒரு சுவர் தெரியுதே... அதுக்கு கீழதான் ரெயில்வே ஸ்டேஷன் இருந்தது'' என்பது உட்பட பல முக்கியமான இடங்களின் சிதிலமான தடயங்களை எங்களுக்குச் சொல்லிக்கொண்டிருந்தார் வழிகாட்டி பெரியவர்.

"தனுஷ்கோடியில் வாழ்ந்த மக்கள் எல்லோரும் தூக்கத்தில் இருந்தபோதுதான் கடல் கொந்தளிப்பும், புயலும் தாக்கியது. மக்கள் மண்ணோடு மண்ணாக புதைஞ்சிட்டாங்க'' என்றவர்... "இந்த இடத்தில்தான் பிரயாணிகளோட ரயில் கடல்ல மூழ்கிச்சு. ரயிலில் 115 பேர்கள் பிரயாணம் செஞ்சதா செய்திகள் வந்தன. என்னைப் பொறுத்தவரைக்கும் அது தவறான கணக்கு. காரணம்... ராமேஸ்வரத்துலருந்து தனுஷ்கோடி பக்கமா இருக்கிறதால் பெரும்பாலானவங்க டிக்கெட் எடுக்காம பயணிப்பாங்க. அப்படி வந்தவங்க கணக்கு இதில் சேர்க்கப்படல. குஜராத்லருந்து டூரிஸ்ட்டா வந்த 40 மாணவர்களும் இந்த ரயிலில் பயணம் செஞ்சு இறந்து போனதா பேசிக்கிட்டாங்க. கடல்ல மிதந்து வந்த பிணங்கள் மட்டும் நூறு இருக்கும். மிதந்து வந்த பிணங்களை கரையில் இழுத்துப் போட்டவங்கள்ல நானும் ஒருத்தன். பிணங்களை கழுகுகள் கூட்டம் கொத்தித் தின்ன கொடுமையை எப்படிச் சொல்றது? மொத்தச் சாவு 1500னு பேப்பர்ல போட்டிருந்தாங்க. என்னோட கணக்குப்படி மூவாயிரத்த தாண்டும்'''என விபரமாகச் சொன்னார் அந்தப் பெரியவர்.

தேவர், தன் இடுப்பில் கைகளை வைத்துக்கொண்டு "என்னப்பாயிது'' என கரகரத்த குரலில் புலம்பியவர்... "இப்படி ஒரு நகரம் கடல்ல மூழ்கிய சம்பவமும், இம்புட்டு பயணிகளோட ரயில் மூழ்கிய சம்பவமும் வெளிநாட்டுல நடந்திருந்தா என்னா செஞ்சிருப்பான் தெரியுமா? அழிஞ்சுபோன நகரம் மாதிரியே ஒரு நகரத்தை உருவாக்கி, அதை செயற்கை மழை-புயல்ல மூழ்கடிச்சு, ரயிலையும் மூழ்கடிச்சு பிரமாதமான படமா எடுத்து உலகம் முழுக்க ரிலீஸ் பண்ணி பேரைத் தட்டிக்குவான். தங்கள் நாட்டுத் துயரத்தை அழுத்தமா பதிவும் செஞ்சிருவான்.

என் தெய்வம் எம்.ஜி.ஆர். இப்ப முதலமைச்சரா இருக்காரு. இல்லேன்னு வச்சுக்க.. அவரை ஹீரோவாப் போட்டு, கோடிக்கணக்குல செலவுபண்ணி, தனுஷ்கோடிய புதுசா உருவாக்கி, அது எப்படி புயல்ல அழியுது? மக்களை எம்.ஜி.ஆர். எப்படி காப்பாத்துறாரு? தனி மனிதனா ரயிலை எப்படி மீட்கிறாரு?னு படம் எடுத்து ஜெயிச்சிடுவேன். முருகனோட

கருணை இருந்தா நிச்சயமா தனுஷ்கோடியை படமா எடுக்குற பாக்கியம் எனக்குக் கிடைக்கும்'' என்றார் தேவர்.

ராமேஸ்வரம் கெஸ்ட்ஹவுஸிற்குத் திரும்பினோம்.

''ஐயா... இந்த கெஸ்ட்ஹவுஸ்லதான் ஜெமினிகணேசன், சாவித்திரி, அவங்க மகள் ஆகியோர் தங்கியிருந்தாங்க. அந்த ராத்திரியில் அடிச்ச புயலில் அவங்க மாட்டிக்கிட்டு ரொம்ப அவஸ்தைப்பட்டாங்க. புயல் ஓஞ்சதும் வெளிய வந்து பார்த்தாங்க. மக்கள் படும் துயரங்களையும், சீரழிஞ்சு கிடந்த குடிசைகளையும் பார்த்து வேதனைப்பட்டாங்க. வாழ்க்கையையே பறிகொடுத்துட்டு நின்ன மக்களுக்கு தங்களால முடிஞ்ச உதவியைச் செஞ்சிட்டு, மந்திரி கக்கன் வந்துட்டு புறப்பட்ட ரயில்லயே அவங்களும் கிளம்பிப் போனாங்க'' என வழிகாட்டி சொல்லிக்கொண்டிருந்தார்.

அப்போது அங்கு வந்த ஒருவர், தேவரின் காலில் விழுந்து வணங்கிவிட்டு...

''ஐயா நான் பழனிமுருகனோட அருமைபெருமைகளை சொல்லியே காலம் கடத்துறவன். நீங்க திருச்செந்தூர் முருகன் கோயிலுக்கு சுற்றுப்பிரகாரம் கட்டிக் கொடுத்தது மக்களுக்கு ரொம்ப வசதியா இருக்குதய்யா. உங்க படங்கள்ல வந்த ''மருதமலை மாமணியே முருகய்யா'' பாட்டும், ''திருச்செந்தூரின் கடலோரத்தில் செந்தில்நாதன் அரசாங்கம்'' பாட்டும் எப்பேர்ப்பட்ட வங்களோட மனசையும் உருக வைக்குதய்யா. காலா காலத்துக்கும் உங்க பேரைச் சொல்லுமய்யா'' என தேவரின் திருப்பணிகளை பாராட்டிய அந்த முருகனடிமை ''எங்க ஊரான பழநியில் இருந்த மாம்பழக் கவிராயர் உங்கள மாதிரித்தான் சிறந்த முருக பக்தர். முருகனோட அருளால், சின்ன வயசிலருந்தே முருகன் மீது பல பாடல்கள் எழுதி பெரும் புலவரானவர். அவரைப்பற்றி நீங்க எடுக்கிற படங்கள் மூலமா மக்களுக்கு எடுத்துச் சொன்னா புண்ணியமா போகுமய்யா'' எனச் சொல்லிவிட்டு விடைபெற்றுச் சென்றார் அந்த முருகனடிமை.

''ஏம்ப்பா... கலைஞானம்... மாம்பழக் கவியைப் பத்தி உனக்குத் தெரியுமா?'''எனக் கேட்டார் தேவர்.

''மாம்பழக் கவிராயரைப்பத்தி 1956-ல் மதுரை தெற்குமாசி வீதியில் அய்யா பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஆற்றிய சொற்பொழிவை

நான் கேட்டிருக்கேன். அவரு பேசினதிலிருந்து என் நினைவுல இருக்கிற விஷயங்களைச் சொல்றேன்'' என ஆரம்பித்தேன்.

''கம்மாளர் குலத்தில் பிறந்த முத்தையா ஆசாரி ஒரு சிறந்த முருக பக்தர். முத்தையா ஆசாரி -அம்மணி அம்மாள் தம்பதிக்கு 1836-ல் திருஞானசம்பந்தரைப் போல ஒரு ஞானக் குழந்தை பிறந்தது. ஒரு நல்லநாளில் ஜாதகம் பார்த்து 'பழநியப்பன்' என பெயர் சூட்டினர். குழந்தைக்கு மூன்று வயது இருக்கும்போது 'வைசூரி' எனப்படும் அம்மை நோய் ஏற்பட்டது. வேதனை தாங்காமல் குழந்தை படும் துயரத்தைப் பார்த்து மனம் வெந்துபோன முத்தையா ஆசாரி, குழந்தையைத் தூக்கிக்கொண்டு போய் நள்ளிரவில் பழநியாண்டவர் சன்னிதியில் கிடத்தினார்.

''முருகா... உன்னையே கதி என்று வாழ்ந்துவரும் என் வேதனை உனக்குத் தெரியாதா? நீ கொடுத்த செல்வம்தானே இந்தக் குழந்தைச் செல்வம். அந்தச் சிசுவுக்கு ஏன் இப்படி தாங்க முடியா தண்டனை? கருணைக்கடலே... ஆறுமுகமும், பன்னிரண்டு கண்களும் கொண்டவனே... அந்தக் கண்கள் அத்தனையும் கொண்டு நீ குழந்தையைப் பார்க்கவேண்டும் என்பதல்ல... ஒரு கண்... அதிலும் கடைக்கண் கொண்டு பாருமய்யா... குழந்தை சுகப்பட்டுவிடும். உன் திருவடியில் குழந்தையை விட்டுவிட்டுப் போகிறேன். உதயகாலத்தில் வருகிறேன். அப்போது அம்மை நீங்கி, மலரும் மலராக, மாசற்ற குழந்தையாக இருக்க அருள் புரியவேண்டும் என் தண்டபாணி தெய்வமே...'' என்று அழுது தொழுது குழந்தையை அங்கேயே விட்டுச் சென்றார்.

விடிந்ததும்... ஓடோடி வந்து பார்த்தார் முத்தையா ஆசாரி.

அம்மை நீங்கி அன்று மலர்ந்த மலராக இருந்தது குழந்தை. பேரானந்தம் கொண்ட முத்தையா ஆசாரி, குழந்தையைத் தூக்கி தோளில் வைத்து ஆடிப்பாடி, ஆனந்தக் கண்ணீர் வழிய வழிய... 'பழனிவேல் முருகனுக்கு அரோஹரா' என வான் முட்ட குரல் எழுப்பியவாறே வீடு வந்து சேர்ந்தார்.

புது வாழ்வு கண்டார்.

ஆனால் அடுத்து ஒரு அதிர்ச்சி காத்திருந்தது முத்தையா ஆசாரிக்கு.

முறிந்து தொங்கும் கிளைபோல் ஆகி... ''முருகா... இதென்ன கொடுமை?'' என்று வாய்விட்டு கதறி அழுதார். காரணம்... குழந்தைக்கு

இரண்டு கண்களிலும் பார்வை போய்விட்டது.

குழந்தைக்கு ஐந்து வயது ஆனபோது... "அப்பா நான் கல்வி கற்க வேண்டும்"என்றான்.

"மகனே... கண் பார்வையில்லாத நீ எப்படியப்பா கற்க முடியும்?" எனக் கேட்டார்.

அதற்கு குழந்தை ஒரு யோசனை சொன்னான்...

"தந்தையே... நீங்கள் என் முதுகில் எழுதுங்கள். அதை நான் மணலில் எழுதிக் காட்டுகிறேன். அது சரியாக இருந்தால் தொடர்ந்து என் முதுகில் எழுதி சொல்லிக் கொடுங்கள். நான் மணலில் எழுதியே கற்றுக்கொள்கிறேன்"என்றான்.

பிள்ளையின் ஆர்வத்திற்கு இணங்கி அவன் முதுகில் 'முருகா' எனச் சொல்லிக் கொண்டே எழுதினார். அவனும் மணலில் 'முருகா' என்று சொல்லிக்கொண்டே எழுதி னான்.

# சுபம்!

"கண் தெரியாத சிறுவனின் முதுகில் அப்பா எழுத்துக்களை எழுத, அதை மணலில் எழுதினான் சிறுவன். அழகுத் தமிழ் அழுத்தம் திருத்தமாக இருப்பதைப் பார்த்த முத்தையா ஆசாரி வியப்பின் உச்சத்தில் பெருமகிழ்ச்சி கொண்டு, தொடர்ந்து பிள்ளையின் முதுகில் எழுதினார். பிள்ளையோ தட்டுத் தடங்கலின்றி எழுதி... எழுதி பிறை வளர்வதுபோல வளர்ந்து கவிஞன் ஆனார்.
'பழனிப் பதிகம்', 'குமரகுரு பதிகம்', 'செந்திற் பதிகம்' முதலியவைகளை இயற்றினார். தென்னாடெங்கும் சென்று சிறப்புறப் பாடி மாம்பழக் கவிராயராக புகழ்பெற்று, தெய்வப் புலவரானார். ராமநாதபுரம் சென்று மன்னர் பொன்னுசாமி தேவரவர்களின் பேராதரவு பெற்று, சமஸ்தான வித்வான் ஆனார்.

பசும்பொன் ஐயாவின் பேச்சில் நான் மாம்பழக் கவிராயர் பற்றி அறிந்தது இதுதாண்ணே. கவிராயர் பிறந்த பழனியில் 'மாம்பழக் கவிராயர் சந்து' என்ற பெயரில் இப்போதும் ஒரு தெரு இருக்கு. 1836-ல் பிறந்த கவிராயர் 1884-ல் மறைந்தார். கவிராயரின் பரம்பரையில் நாலாவது பரம்பரையைச் சேர்ந்த எம்.பி.பாலசுப்பிரமணியன் என்பவரை எனக்கு சமீபத்தில்தான் தெரியும்''' என நான் சொல்ல...

சின்னப்ப தேவரண்ணன் புன்னகைத்தார்.

"கலைஞானம்... நானும்கூட மாம்பழக் கவிராயரைப் பத்தியும், மன்னர் பொன்னுசாமி தேவரைப் பத்தியும் கேள்விப்பட்டிருக்கேன்.



கம்பனுக்கு சடையப்ப வள்ளல் போல, மாம்பழக் கவிராயருக்கு, பொன்னுசாமி தேவர் பொன்னும், பொருளும் வாரி வழங்கி, ஆஸ்தான புலவராக அழகு பார்த்திருக்கிறார். முகக்கண் இழந்தாலும் அகக்கண் ஒளியால் அற்புத பாடல்களைப் படைத்திருக்கிறார். கவிராயரைப் பத்தி உனக்கு எந்தளவு தெரியும்னு தெரிஞ்சுக்கத்தான் கேட்டேன். கவிராயர் பரம்பரை இப்போதும் இருப்பதை நீ சொல்லித்தான் தெரிஞ்சுக்கிட்டேன்.

நான் படம் எடுப்பதா இருந்தா பழனியாண்டவர் மேல கதையை ஆரம்பிச்சு, மாம்பழக் கவிக்கும், மன்னர் பொன்னுசாமி தேவருக்கும் இருந்த நட்பு எப்படிப்பட்டது... என்பதை தமிழ்நாட்டு மக்கள் அறியும்படி செய்துவிடுவேன். முயற்சி என் கையில்... முடிவு முருகன் கையில்'' என்று தேவர் சொல்ல...

'டிபன் ரெடி' என்றார் ஓட்டல் ஊழியர்.

சென்றோம். வயிறார உண்டோம்.